www.padippakam.com

ஆகஸ்ட்
2005
ரூ.15

# புதிய கோடாங்கி



www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com


# புதிய கோடாங்கி

மலர் 5 - இதழ் 1
ஆகஸ்ட் 2005

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு ஓவியம்*
சரிதா

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம் - ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம் - ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ்: US $ 2

ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின்/உள் அட்டை ரூ. 20,000/-



*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டார்
கே.கே. நகர்
சென்னை 600078
Mobile : 98404 - 49204
puthiakodangi@yahoo.co.in


புதிய கோடாங்கி, தனது வாசகர் தளத்தை விரிவுபடுத்த கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. புதிய கோடாங்கியைப் படிக்கும் வாசகர்கள், தங்கள் நண்பர்களுக்கும், சக கிராமத்தாருக்கும் அறிமுகப்படுத்த கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பாக SC/ST அலுவலர் மற்றும் தொழிலாளர் நலச் சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களைச் சந்தாதாரராக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வேளையில், ஐந்து வருடங்கள் குறித்த நாளில் புதிய கோடாங்கியை வாசகர்களுக்கு அளிக்கும் விதமாக உதவி செய்த அனைத்து சந்தாதாரர் களுக்கும் வாசகர்களுக்கும் எமது நன்றியை உரித்தாக்குகிறோம்.

புதிய கோடாங்கியின் மக்கள் பகுதிக்கும், வெளிவரும் ஆய்வுக் கட்டுரை களுக்கும் வாசகர்களிடையேயிருக்கும் பரவலான வரவேற்பு, இதில் பங்கு பெறும் எழுத்தாளர்களுக்கு உற்சாகத்தை வழங்கியுள்ளது. ஆனால் தொலை பேசியிலும், நேரிலும் பாராட்டுக்களையும், விமரிசனங்களையும் தெரிவிக்கும் சகோதர சகோதரிகள் சுருக்கமாக எழுதுவது அவர்களை இன்னும் உற்சாகப் படுத்தும் என்பதை கவனத்தில் கொண்டு எழுதி பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்பாதவனின் அரவாணிகள் பற்றிய கதை நிகழ்வாகப் பதிவாகி யுள்ளது. அதேபோல் ஜுலை 14-ஆம் தேதி நடந்த கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட +2 ''மாணவர்களும்-கல்வி அரசியலும்'' என்ற கட்டுரையும், பேரா. பிரபா கல்வி மணி அவர்கள் சிதம்பரத்தில் நடந்த தகவல் நேரம் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையும் இடம்பெற்றுள்ளன. படித்துவிட்டு உங்கள் கருத்துக்களை எழுதுங் கள். நூல் விமர்சனத்துக்கு நூல்களின் இரண்டு பிரதி, நூலாசிரியரின் நிழற் படம் இவற்றுடன் எழுதுங்கள்.

தலித் நிலவுரிமை, விடுதலைக் கல்வி, தனிப் பஞ்சாயத்து, பட்ஜெட்டில் உரிய பங்கு, வளங்களில் தலித்துகளுக்கு பங்கீடு இவைகளை முதன்மைப் படுத்தி தொடர்ந்து புதிய கோடாங்கியில் கட்டுரைகள் வெளியிட்டு வருகிறோம். விவாதங்களை செழுமைப்படுத்தும் விதமாக ஆர்வத்துடன் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கிறோம். தி.க.சி. அவர்களிடமிருந்து தொடர்ந்து கடிதங்கள் வருகின்றன. அவருக்கு எம் நன்றி. ◆

படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...


| | | |
|---|---|---|
| +2 மாணவர்களும், கல்வி அரசியலும் | சிவகாமி | 3 |
| எங்கள் கடிவாளம் ஒரு நாள்......................கவிதை | அகவி | 10 |
| ரமணாசிரமத்திற்குச் சில கேள்விகள் | | 11 |
| மாறுவேசம் | குடியரசன் | 13 |
| அரிமாதோழனின் கடிதம் | | 18 |
| யார் பிரிவினைவாதிகள் | மா. வேலுச்சாமி | 20 |
| மாணவர்களின் நுழைவும் அரசின் ரத்தும் | ஐ. ஜா. ம. இன்பகுமார் | 21 |
| நுழைவுத்தேர்வு ரத்தினால் கிராமப்புற மாணவர்களுக்கு என்ன பயன்? | பேரா. கல்யாணி | 27 |
| மக்கள் இயக்கத்தின் பஞ்சமி நிலப் போராட்டம் | அ வேலுச்சாமி | 28 |
| பூர்வக்குடிகள் எப்படி அடிமையானார்கள் | சிவகாமி | 29 |
| கேள்வி பதில் | முனிமா | 35 |
| நிகழ்வுகள் | | 37 |
| தச்சூர் - சாதித் தேரோட்டம் | கௌதம சன்னா | 41 |
| அழகு | அன்பாதவன் | 45 |
| மக்கள் பகுதி | | 50 |
| வரலாறு யாரை விடுதலை செய்யும் - தொடர் | அ. ராமசாமி | 54 |
| மக்கள் அறியாத அம்பேத்கர் | சோபகன் | 56 |
| கணிதம் நம் உடைமை | சோபகன் | 60 |
| வரலாற்றை மொழிதல் | ஸ்டாலின் ராஜாங்கம் | 62 |


படிப்பகம்

www.padippakam.com

# +2 மாணவர்களும், கல்வி அரசியலும்

■ சிவகாமி

நுழைவுத்தேர்வு முதலில் ரத்து செய்யப்பட்டது. பிறகு நீதிமன்றம் மூலம் சேர்க்கப்பட்டது. நுழைவுத்தேர்வை ரத்து செய்வதன் மூலம் கிராமப்புற மாணவர்கள் பயனடைய மாட்டார்கள் என்று சிலரும் பயனடைவார்கள் என்று சிலரும் விவாதத்தில் இறங்கியுள்ளனர். சர்ச்சைகள் முடிவடையுமுன்னே, நுழைவுத்தேர்வு மதிப்பெண்களையும் கணக்கில் கொண்டு தொழில்நுட்பம் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்கள் சேர்க்கை தொடங்கிவிட்டது. இதன் மூலம் சர்ச்சைகள் முற்றுப்புள்ளியை நோக்கி விரைகின்றன. இப்போதாவது கிராமப்புற மாணவர்களின் உண்மை நிலை பற்றிய ஆய்வினை +2 மாணவர்கள் பற்றிய சில விவரங்களைக்கொண்டு தொடங்கலாமா?

### நகரமும் கிராமமும்

நகரம் எது, கிராமம் எது என்பதை நீதிமன்றத்தில் அரசு தரப்பால் வைக்கப்பட்ட ஆதாரங்கள் கொண்டு பார்க்கலாம். 2005-ஆம் ஆண்டில் 2059 பள்ளிகள் நகர்ப்புறங்களிலும், 2082 பள்ளிகள் கிராமப்புறங்களிலும் இயங்குவதாக கூறப்பட்டுள்ளது. இப்பள்ளிகளில் முறையே 2,79,485 மற்றும் 2,24,048 மாணவர்கள் நகர்ப்பள்ளிகளிலும், கிராமப்பள்ளிகளிலும் தேர்வெழுதியதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் 12.5.1977-இல் அரசின் உயர்கல்வித் துறை வெளியிட்ட அரசு ஆணை எண் 261-இன்படி கிராமப்புறப் பள்ளிகளின் அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 797 பள்ளிகள் மட்டுமே தேறுகின்றன. இது எப்படி?

### அரசு ஆணையில் திருத்தம்

பிறகு மேற்குறிப்பிட்ட ஆணை திருத்தப்பட்டு 29.5.1998-இல் அரசு ஆணை எண் 208 வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி பெரிய நகரங்கள் மற்றும் நகராட்சியை ஒட்டியுள்ள புறநகர்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகளைக் கழித்து 785 பள்ளிகள் மட்டுமே கிராமப்புறப் பள்ளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது. 2005-இல் நீதிமன்றத்தில் தரப்பட்ட விவரங்களுக்கும் அரசு ஆணையிலுள்ள விவரங்களுக்கும் பெருத்த வேறுபாடு நிலவுவதால் மக்களுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

### கிராமப்புற மாணவர்களுக்கு ஒதுக்கீடு

அரசு ஆணை 206-இன்படி, நகர்ப்புற மாணவர்களே பொறியியல் கல்லூரிகளில் கட்டணமில்லாது படிக்கும் வாய்ப்பினைத் தட்டிச் செல்கின்றனர். கிராமப்புற மாணவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டுமெனில் கிராமப்புற மாணவர்களுக்கென தனி ஒதுக்கீடு அவசியம் எனக் கருதப்பட்டு 15% ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது 797 பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு வகுப்புவாரியான ஒதுக்கீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தது. அரசு ஆணை எண் 206 இந்த ஒதுக்கீட்டை 25% என அதிகரித்து 785 பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் இது பொருந்தும் என ஆணை வெளியிட்டது. ஆனால் இந்த இரு அரசு ஆணைகளுமே உச்சநீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டு கிராமப்புற மாணவர்களுக்கான ஒதுக்கீடு பறிக்கப்பட்டது. இப்படிப்பட்ட சூழலில்தான் நுழைவுத் தேர்வை ரத்து செய்தால் கிராமப்புற மாணவர்கள் பயனடைவார்கள் என்ற நம்பிக்கையில் புதிய முறையில் கிராமப்புற மாணவர்களுக்கான ஒதுக்கீட்டுக்கு முயற்சி செய்தது அரசு. அதுவும் நீதிமன்றத்தால் முறியடிக்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற மாணவர்களுக்கு தனி ஒதுக்கீடு அவசியமா? சில புள்ளி விவரங்கள்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் நாம் ஆய்வுகளைத் தொடர்வோம். ஏனெனில் 2005-இல், அரசு ஆணையில் உள்ள 785 பள்ளிகளில் +2 தேர்வு எழுதிய மாணவர்கள், அவர்கள் தேர்ச்சி விகிதம் நமக்குக் கிடைக்கவில்லை.

அட்டவணை I

| 2005 | | | | |
|---|---|---|---|---|
| | பள்ளிகள் | தேர்வு எழுதிய மாணவர்கள் | தேர்ச்சி பெற்றவர்கள் | விகிதாச்சாரம் |
| கிராமம் | 2,082 | 2,24,048 | 1,62,853 | 72.69 |
| நகரம் | 2,059 | 2,79,485 | 2,23,991 | 80.14 |
| மொத்தம் | `4,141 | 5,03,533 | 3,86,844 | 76.82 |

www.padippakam.com

இவ்வட்டவணையின்படி கிராமப்புறப் பள்ளிகளில் அதிகமாக மாணவர்கள் பயின்றாலும் அவர்களது தேர்ச்சி விகிதம் நகர்ப்புறத்தைக் காட்டிலும் 7.45% குறைவாயுள்ளது.

• கிராமம் மற்றும் நகரங்களில் வகுப்புவாரியாக +2 மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அட்டவணை-IIஇன் துணைகொண்டு பார்ப்போம்.

அட்டவணை II

மார்ச் 2005

**வகுப்பு வாரியாக +2 மாணவர்கள் தேர்ச்சி விகிதம்**

| | OC | BC | MBC | DC | SC | SS* | SN* | ST |
|---|---|---|---|---|---|---|---|---|
| **நகரம்** | | | | | | | | |
| தேர்வு எழுதியவர் | 23,532 | 1,43,734 | 52,516 | 4,943 | 50,770 | 520 | 2,482 | 988 |
| தேறியவர் | 21,275 | 1,20,656 | 40,614 | 4,142 | 34,314 | 385 | 1,922 | 683 |
| விகிதம் | **90.41%** | **83.94%** | **77.34%** | **83.80%** | **67.59%** | **74.04%** | **77.44%** | **69.13%** |
| **கிராமம்** | | | | | | | | |
| தேர்வு எழுதியவர் | 7073 | 98,242 | 57,037 | 5,440 | 53,304 | 423 | 1,109 | 1,420 |
| தேறியவர் | 5,843 | 77,976 | 40,302 | 4,141 | 32,650 | 285 | 791 | 865 |
| விகிதம் | **82.61%** | **79.37%** | **70.66%** | **76.12%** | **61.25%** | **67.38%** | **71.33%** | **60.92%** |

* SS, SN - தலித்து கிறித்துவர்கள்

இதன்படி கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வரலாம்.

- எந்த சமூகத்தவராயிருப்பினும் கிராமப்புறப் பள்ளிகளில் படித்தால் தேர்ச்சி விகிதம் குறைகிறது.

- மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் கிராமங்களில் படிக்கின்றனர். இதனால் இவர்கள் தேர்ச்சி விகிதம் பாதிக்கப் பட்டுள்ளது.

- முற்பட்ட வகுப்பினரும், பிற்பட்ட வகுப்பினரிலும் அதிகம் பேர் நகர்ப்புறப் பள்ளிகளில் பயில்கின்றனர். இத னால் இவர்கள் தேர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது.

- குறிப்பாக முற்பட்ட வகுப்பில் 85 சதவிகிதத்தினர் நகர்ப் பள்ளிகளில் படிக்கின்றனர். அதற்கு எதிர்மறையாக தலித் மக்களிலும் பழங்குடி வகுப்பிலும் பெரும்பான்மையோர் கிராமப் பள்ளிகளில் படிக்கின்றனர். சாதிய அடுக்குமுறை இவ்வாறு நகரம் மற்றும் கிராமப் பிரிவுகள் மூலமாகவும் உறுதிசெய்யப்படுகிறது.

அடுத்து வகுப்புவாரியாக அரசு பள்ளிகளில் படித்த +2 மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தைப் பார்ப்போம்.

அட்டவணை III

மார்ச் 2005

**வகுப்பு வாரியாக அரசு பள்ளிகளில் படித்த +2 மாணவர்கள் தேர்ச்சி விகிதம்**

| | OC | BC | MBC | DC | SC | SS | SN | ST |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேர்வு எழுதியவர் | 4,626 | 82,289 | 58,526 | 4,356 | 55,304 | 292 | 832 | 1,015 |
| தேறியவர் | 3,340 | 58,712 | 38,227 | 2,960 | 30,792? | 165 | 524 | 580 |
| விகிதம் | **72.20%** | **71.35%** | **65.32%** | **67.95%** | **55.22%** | **56.51%** | **62.98%** | **57.14%** |


படிப்பகம்

www.padippakam.com

அட்டவணை IV
மார்ச் 2005

| மொத்த மாணவர்களின் (5,03,533 பேர்) வகுப்பு வாரியான விகிதாச்சாரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | OC | BC | MBC + DC | SC + SS + SN | ST |
| தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை | 30,605 | 2,41,976 | 1,19,936 | 1,08,608 | 2,408 |
| விகிதம் | **6.07%** | **48.05%** | **23.81%** | **21.56%** | |

அட்டவணை II, III மற்றும் IV துணைகொண்டு கீழ்க்கண்ட முடிவுகளுக்கு நாம் வருகிறோம்.

• முற்பட்ட வகுப்பினர் நகர்ப் பள்ளிகளில் படிக்கும்போது தேர்ச்சி விகிதம் 90.41% என்று இருந்தது. கிராமப்புறப் பள்ளிகள் என்று வரும்போது 82.61% ஆகவும், அரசுப் பள்ளிகள் என்று வரும்போது மேலும் குறைந்து 72.20% ஆகக் குறைந்துள்ளது. ஆகையால் எந்த வகுப்பார் என்பதைக் காட்டிலும் படிக்கின்ற பள்ளியே தேர்ச்சி விகிதத்தைக் கட்டுப்படுத்துவதைப் பார்க்கின்றோம்.

• மேற்கண்ட முடிவுகள் எல்லா வகுப்பாருக்கும் வேறுபாடின்றி பொருந்தி வருவதால் அரசு பள்ளிகளில் படித்தால் தேறும் வாய்ப்புகள் குறைவு என்ற முடிவுக்கும் வரவேண்டியுள்ளது.

• முற்பட்ட வகுப்பினர் மொத்த மாணவர் (+2) தொகையில் 6.07%. ஆனால் அவர்களில் அரசு பள்ளிகளில் படிப்பவர்களோ ஒரு விழுக்காட்டிற்கும் குறைவானவர். சமூகத்தில் அதற்கடுத்த நிலையில் உள்ள பிற்பட்ட வகுப் பினர் மொத்த +2 மாணவர் தொகையில் 48.05%. எனினும் அரசு பள்ளிகளில் படிப்பவர்கள் 16.3% மட்டுமே. மிகவும் பிற்பட்ட மற்றும் கள்ளர் சீர்மரபினர் மொத்த +2 மாணவர் தொகையில் 23.81%. அவர்களில் பேர் பாதியினர், அதாவது 12.48% அரசு பள்ளிகளில் படித்துள்ளனர். அதேபோல் தலித் மற்றும் தலித் கிறித்துவ மாணவர்கள் மொத்த +2 மாணவர் களில் 21.56% உள்ளனர். அவர்களிலும் பாதிக்கு மேற்பட்டவர்கள் அரசு பள்ளிகளில் படித்துள்ளனர். அவ்வாறே பழங்குடி மக்களும்.

• கிராமப் பள்ளிகள், அதிலும் அரசு பள்ளிகள் (1478 பள்ளிகள்) என்றாலே மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடிகள் படிக்கும் இடம் என்ற பொருள் உண்டாகின்றது.

மெட்ரிக்குலேஷன் பள்ளிகள்

அரசு பள்ளிகள் (1478) பற்றிய இவ்வித புரிதலுடன், அரசுப் பள்ளிகளுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையிலுள்ள 1237 பள்ளிகளிலும், அதற்கடுத்துள்ள 1082 அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளிலும். சமூக அடுக்குமுறை வாரியாக +2 மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தைப் பார்ப்போம்.

அட்டவணை V
மார்ச் 2005

**மெட்ரிக்குலேஷன் மற்றும் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் சமூக அடுக்குமுறை வாரியாக +2 மாணவர்கள் தேர்ச்சி விகிதம்**

| பள்ளிகளின் எண்ணிக்கை | OC | BC | MBC | DC | SC | SS | SN | ST |
|---|---|---|---|---|---|---|---|---|
| **மெட்ரிக்குலேஷன் (1237)** | | | | | | | | |
| தேர்வு எழுதியவர்கள் | 13,228 | 39,671 | 10,068 | 199 | 5,942 | 60 | 29 | 305 |
| தேறியவர்கள் | 12,508 | 36,576 | 9,071 | 186 | 5,039 | 45 | 29 | 252 |
| விகிதம் | **94.56%** | **92.20%** | **90.10%** | **93.47%** | **84.80%** | **75%** | **100%** | **82.62%** |
| **அரசு உதவி பெறும் பள்ளிகள் (1082)** | | | | | | | | |
| தேர்வு எழுதியவர்கள் | 9,721 | 99,953 | 33,385 | 5,072 | 32,178 | 517 | 2,571 | 590 |
| தேறியவர்கள் | 8,591 | 86,583 | 27,844 | 4,516 | 24,476 | 413 | 2,048 | 442 |
| விகிதம் | **88.38%** | **86.62%** | **83.40%** | **89.04%** | **76%** | **79.88%** | **79.66%** | **74.92%** |



படிப்பகம்

www.padippakam.com

இதன்படி பார்க்கையில் சமூக அடுக்குமுறை வாரியாக தேர்ச்சி பெற்றவர்கள் விகிதத்தில் பெருத்த வேறுபாடில்லை. ஆனாலும் முற்பட்ட வகுப்பாருக்கும்; தாழ்த்தப்பட்ட/பழங்குடி வகுப்பாருக்கும் இடையில் தேர்ச்சி விகிதத்தில 12 முதல 15 விழுக்காடு வரை வேறுபாடு உள்ளது. கல்வி முறையில் பள்ளிகள் முக்கியப் பங்கு வகுப்பினும் வேறு பல சமூகக் காரணங்கள் இருப்பதைத் தெளிவுபடுத்துகிறது.

### 1100-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்

அடுத்து சமூக அடுக்குமுறை வாரியாக 1200-க்கு 1100-க்கு மேல் மதிப்பெண்கள் பெற்ற +2 மாணவர்களின் விவரங்களைப் பார்ப்போம்.

அட்டவணை VI

**சமூக அடுக்குமுறை வாரியாக 1100-க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்களின் விகிதம்**

| | OC | BC | MBC | DC | SC | SS + SN | ST |
|---|---|---|---|---|---|---|---|
| தேர்வு எழுதிய மாணவர்கள் | 30,605 | 2,41,976 | 1,09,553 | 10,383 | 1,04,074 | 3,534 | 2,408 |
| 1100-க்கு மேல் மதிப்பெண் பெற்றவர்கள் | 4,171 | 9,136 | 1,752 | 122 | 632 | 24 | 21 |
| விகிதம் | **13.6%** | **3.7%** | **1.6%** | **1.1%** | **0.6%** | **0.5%** | **0.9%** |

அட்டவணை 6-இன்படி பார்க்கும்போது மதிப்பெண்கள் அடிப்படையில் சமூக அடுக்கு முறையின் மேலடுக்கில் உள்ளவர்களே அரசு தொழில்நுட்பம் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் அதிகப் படியான வாயப்புக்களை பெறும் நிலை உள்ளது. சமூக அடுக்குமுறையிலான ஒதுக்கீட்டின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

இந்த அட்டவணையை, அட்டவணை நான்கோடு பொருத்திப் பார்க்கையில் +2 தேர்வு எழுதிய மொத்த மாணவர் எண்ணிக்கையில் 6.07 விழுக்காடு மட்டுமே உள்ளவர்கள் ஒதுக்கீடு நீங்கலாக உள்ள (69 சதவிகிதம் ஒதுக்கீடு) 31 விழுக் காட்டில் பெருமளவு பயன்பெறுகின்றனர். அதற்கடுத்தபடியாக பிற்பட்ட வகுப்பினர் பயன்பெறுகின்றனர். ஆகையால் 25 விழுக்காடு கிராமப்புறத்துக்கு ஒதுக்கீடு செய் யப்பட்டால் பாதிக்கப்படுவது முற்பட்ட வகுப்பார் மட்டுமே. அவர்கள் கிராமப்புறப் பள்ளிகளில் படிப்ப தில்லை. எனவேதான் அவர்கள் கொந்தளித்து நீதிமன்றப் படியேறுகின்றார்கள்.

தற்போதைய அரசின் நடவடிக்கையான நுழைவுத்தேர்வு ரத்து செய்யப்பட்டாலும்கூட, +2 தேர்வில் 1100-க்கு மேல் மற்றும் 1000-க்கும் மேல் மதிப்பெண் பெற்றவர்கள் என்ற அடிப்படையிலும் முற்பட்ட வகுப்பாரே பயனடைவர். ஆகையால் கிராமப்புற மாணவர்கள் பயனடைவார்கள் என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். இதற்கு நகர்ப்புற, கிராமப்புற மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை ஒப் பிட்டுப் பார்த்தாலே ஓரளவு உண்மை விளங்கும். எனினும் நகர்ப்புறத்திற்கும், கிராமப்புறத்திற்கும் உள்ள வேற்றுமை மேலும் அதிகமாகும். நகரத்தில் படிப்பவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான சிறப்பு வகுப் புக்கள் உண்டு. கிராமப்புறங்களில் அந்த வசதியில்லை. ஆகையால் நுழைவுத் தேர்வு என்பது முற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினரை ஒப்பிடுகையில் open quota-வில் அதிகம் வாய்ப்புகள் பெறவும், அதே போல் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட/பழங்குடி வகுப்பினரைக் காட்டிலும் open quota-வில் அதிக வாய்ப்புக்கள் பெறவும் சாதகமாக உள்ளது. அதே சமயத்தில் 69 விழுக் காடு ஒதுக்கீட்டின் அடிப்படையில் சமூகநீதி கிடைத்தாலும், அந்தந்த சாதிக்குள்ளே நகரத் திலுள்ளவர்கள் வாய்ப்புக்களை பெறவும் கிராமப்புற மாணவர்கள் புறக்கணிக்கப்படவும் காரணமாக அமைகின்றது.

### சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சமூக நீதி

இனி சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் 2004-ஆம் ஆண்டில் சமூக அடுக்கு வாரியாக மாணவர்கள் சேர்க்கையைக் காண்போம்.

அட்டவணை VII

**சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சமூக அடுக்கு வாரியாக மாணவர்கள் சேர்க்கை விவரம்**
(மொத்த இடங்கள் 64,610; பூர்த்தி செய்யப்பட்டவை 45, 934)

| | OC | BC | MBC | SC | ST |
|---|---|---|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்ட இடங்களின்படி | 10,005 | 24,953 | 7,065 | 3,814 | 94 |
| விகிதம் | **21.78%** | **54.32%** | **15.39%** | **10.09%** | **0.2%** |


படிப்பகம்

www.padippakam.com

இந்த அட்டவணையின்படி பார்க்கும்போது 2004-இல் தேர்வு எழுதிய +2 மாணவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ளனர். (பிற மாநிலங்களிலிருந்து சேர்பவர்களும் இதில் அடக்கம்.) பெரும்பகுதியினர் அரசு தொழில்நுட்ப மற்றும் மருத்துவக் கல்லூரிகளிலும் மதிப்பெண்கள் அடிப்படையில் சேர்ந்து விடுகின்றனர். ஏறக்குறைய தேர்ச்சி பெற்றவர்களில் 90 விழுக்காடு தொழில்நுட்ப, மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுவிடுகின்றனர் என்பது உறுதி.

ஒதுக்கீடு இருந்தும், சுயநிதிக் கல்லூரிகளில் காலி இடங்கள் இருப்பினும் தாழ்த்தப்பட்டவர்களில் 10 விழுக்காடும், பழங்குடியினரில் 0.2 விழுக்காடும், பிற்படுத்தப்பட்ட வகுப்பாரில் 15 விழுக்காடும் மட்டுமே படிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

பொருளாதார வசதியின்மை, கல்வி அறிவு பெறுவதில் முற்பட்ட/பிற்பட்ட வகுப்பாருக்கும் இதரப் பிரிவினருக்கும் இடையில் தொடர்ந்து பெரும் பிளவை ஏற்படுத்துகிறது என்பதையே பொறியியல் கல்லூரியின் மாணவர் சேர்க்கை வெளிப்படுத்துகிறது.

கிராமம் X நகரம் என்றாலும் சரி, இருப்பவர் X இல்லாதவர் என்றாலும் சரி, சாதியின்பாற்பட்ட ஒடுக்குமுறையின் விகாரமான வெளிப்பாடாகவே கல்வி அரசியல் உள்ளது என்பது தெளிவாகிறது.

ஆனால் இக்கல்வி அரசியல் பலவகையிலும் பலரால் சாயம் பூசப்பட்டு, தனிப்பட்ட மாணவரின் ஆர்வம், கடின உழைப்பு அல்லது இடைவிடாத முயற்சி என்ற வகையில் முன்னிறுத்தப்பட்டு தகுதி அடிப்படையில் சில வகுப்பார் மட்டும் வாய்ப்புக்களைப் பெறுவதே நீதி என்ற வகையில் போற்றப்படுகிறது. தனிப்பட்டவரின் ஆர்வம் என்பது கல்வி முறையில் மிக முக்கியமான அம்சம் எனினும் அது மட்டுமே தகுதியைத் தீர்மானிப்பதில்லை என்பதைத்தான் நாம் புள்ளிவிவரங்கள் மூலம் அறிகிறோம். வேறு சில அடிப்படை விசயங்களும் உள்ளன.

### சில அடிப்படை விசயங்கள்

கல்வி சிறந்த முறையில் அமைய முக்கிய காரணிகள் நான்கு. அவை

- பள்ளி நிர்வாகம்
- பள்ளியின் அடிப்படை வசதிகள்
- ஆசிரியர்கள்
- மாணவர்/பெற்றோர்

தமிழ்நாட்டில் இந்நான்கு விசயங்களும் எப்படி அமைந்துள்ளன என்பதைப் பார்ப்போம்.

### பள்ளி நிர்வாகம்

தமிழகத்தில் பள்ளி நிர்வாகம் என்பது பல்வேறு துறையினரால் நடத்தப்படுகிறது. 2005-இல் உள்ள வெவ்வேறு பள்ளி நிர்வாகங்களும் அவர்களுக்குக் கீழ் இயங்கும் பள்ளிகளின் எண்ணிக்கையும் கீழ்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| அரசு பள்ளிகள் | 1,478 | காது கேளாதோர் மற்றும் ஊமைகள் நலத்துறை | 7 |
| கார்ப்பரேஷன் | 56 | வனத்துறை | 2 |
| முனிசிபாலிடி | 37 | அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் | 1,082 |
| டவுன்ஷிப் | 4 | சுயநிதிப் பள்ளிகள் | 108 |
| ஆதிதிராவிடர் | 67 | மெட்ரிகுலேஷன் | 1,237 |
| கள்ளர் | 14 | இதர கல்விக் குழுக்கள் | 21 |
| சமூகநலத் துறை | 3 | | |
| ஆங்கிலோ இந்தியன் | 25 | | |

14 வகையான நிறுவனங்கள் பள்ளிக் கல்வியை நிர்வாகம் செய்கின்றன. பாடத்திட்டங்களில் பெருத்த வேறுபாடு இல்லையெனினும், பயிற்று மொழி, தேர்வை நோக்கிய தயாரிப்பு இவைகளில் வேறுபாடு உண்டு. கல்விக் கட்டணம், பயிற்று முறை, வகுப்பில் உள்ள மாணவர் எண்ணிக்கை, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மீதான கண்காணிப்பு, சட்ட திட்டங்கள், இவைகளில் மாறுபாடு உண்டு. இதனால் குறிப்பிட்ட பள்ளி மாணவன் என்ற தனி முத்திரை + அந்தஸ்து என்று சொல்லுமளவு வேறுபாடுகள் உள்ளன. இது மாணவர்கள் மீது தாக்கத்தை நிகழ்த்தவே செய்கிறது. ஆதி-திராவிடர் பள்ளிகளில் ஆசிரியர்கள் மீதான கண்காணிப்பை பள்ளிக் கல்வித்துறை செய்வதில்லை. மாறாக வருவாய்த் துறையைச் சேர்ந்த மாவட்ட ஆதி-திராவிட நல அலுவலர்தான் செய்கிறார். அவர் கண்காணிப்பது பள்ளியில் இலவச சீருடை தரப்பட்டதா, சைக்கிள் தரப்பட்டதா என்பதே தவிர கல்வியின் தரம்பற்றி அல்ல. இப்படி பல உதாரணங்களைச் சொல்லலாம். சில பள்ளி நிர்வாகங்கள் சாதிக் குழுக்களால் நடத்தப்படுகின்றன. அப்பள்ளிகள் சாதிப்பெயரைத் தாங்கி உள்ளன.


படிப்பகம்

www.padippakam.com

**பள்ளியின் அடிப்படை வசதிகள்**

ஐந்து நட்சத்திர ஓட்டலைப்போல் வசதிமிக்க பள்ளிகளும் உண்டு. எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத மரத்தடி பள்ளிகளும் உண்டு. கும்பகோணத்தில் நூற்றுக்கு மேலான பள்ளி மாணவர்கள் இறந்தனர். வெறும் கீற்றுக் கொட்டகைகளிலும், காற்றோட்டமில்லாத, கழிவறைகள் இல்லாத, விளையாட்டு மைதானமில்லாத எத்தனையோ நகர்ப்புறப் பள்ளிகளுக்கு, கும்பகோர்ணம் பள்ளி ஒரு உதாரணம் மட்டுமே. பள்ளி மாணவர்களிடம் பன்மைத் திறமைகளை வளர்த்தெடுக்க ஏதுவாக வசதிகள் இல்லாத பள்ளிகளே அதிகம். நூலகங்கள், கணினி வசதிகள், கல்வி உபகரணங்கள் இவையும் பள்ளி சார்ந்த அடிப்படை வசதிகளாகும். கல்யாண மண்டபத்தை வாடகை பேசி ஆண்டு விழா கொண்டாடிவிட்டு, விளையாட்டு மைதானத்தை வாடகை பேசி விளையாட்டு விழா கொண்டாடி நிழற்படங்கள் எடுத்து வைத்துக்கொண்டு ஆண்டு முழுவதும் காற்றோட்டமில்லாத பள்ளிகளில் தலையணையில் பஞ்சைத் திணிப்பதுபோல் மாணவர்களைத் திணித்து நடத்தும் தனியார் பள்ளிகள் இன்றும் வட சென்னையில் ஏராளம் உள்ளன.

கிராமம் X நகரம்
என்றாலும் சரி,
இருப்பவர் X இல்லாதவர்
என்றாலும் சரி,
சாதியின்பாற்பட்ட
ஒடுக்குமுறையின்
விகாரமான
வெளிப்பாடாகவே
கல்வி அரசியல் உள்ளது
என்பது தெளிவாகிறது.

**ஆசிரியத் திறன்**

இது மிகவும் விவாதத்துக்குரிய பொருள் என்றாலும், தனியார் பள்ளிகளில் பெரும்பாலும் நிர்வாகமானது, நிர்வாகத் தினரின் மதம் அல்லது சாதி சார்ந்தவர்களையே நிர்வாகப் பொறுப்புகளிலும், ஆசிரியப் பணிகளிலும், மாணவர் சேர்க்கைக் குறித்தப் பிரிவிலும், முக்கியப் பாடப் பிரிவிலும் அமர்த்து கிறது. அரசு உதவிபெறும் பள்ளிகளில் அரசு சம்பளமும் (சிலருக்கு நிர்வாகம் சம்பளம் தரும்), தனியார் பள்ளிகளில் நிர்வாகத்தின் விருப்பத்தைப் பொறுத்து (பெரும்பாலும் குறைவான சம்பளமே) சம்பளமும் தரப்படுகிறது. ஆசிரியர்களுக்கான தொடர் பயிற்சிக்கும் சமீப காலம் வரை மிகுந்த முக்கியத்துவம் தரப்படவில்லை - குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு அவ்வப்போது பயிற்சி தருகிறது என்றாலும், அதை எல்லோருக்கும் கட்டாய மாக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்று மூலைக்கு மூலை ட்யூஷன் பள்ளிகளும், டுட்டோரியல் பள்ளிகளும் இருப்பதைப் பார்க்கும்போது, நமது ஆசிரியர்கள் முறையான பயிற்சியோடு, ஈடுபாட்டுடன் பாடம் நடத்து கிறார்களா அல்லது அதற்குரிய சூழல் நிலவுகிறதா என்பது கேள்விக்குறியே.

**மாணவர் / பெற்றோ**

மாணவரைப் போலவே பெற்றோரும் அவர்களின் கல்விக்கு பொறுப்பாவர். ஆனால் பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித்/பழங்குடி பெற்றோர்களின் வறுமை நிலையும், அறியாமையும் தங்களின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தை நுட்பமாக கவனித்து உதவி செய்ய இயலாத நிலையை ஏற்படுத்துகிறது. அரசு பள்ளிகளில் சிரமப்பட்டு சேர்த்துவிட்டு, அவர்களுக்கு கைச்செலவுக்கு கடன்பட்டு பணம் கொடுப்பதுடன் அவர்கள் கடமை முடிகிறது. படித்தவர்களும் வசதியுள்ளவர்களும் பெற்றோர் ஆசிரியர் கழகங்களை ஏற்படுத்தி மாணவர் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கின்றனர். அடுத்து மாணவருக்கு படிப்பின் மீதான ஆர்வம் பற்றியது. வறுமையும், அடிப்படை வசதிக்குறைவும் மாணவர்களை படிப்பில் கவனம் ஊன்றாது தடைசெய்யும். மேலும் மாணவர்களின் தனிப்பட்ட ஆர்வத்தைக் கண்டறிந்துகொள்ள ஏதுவாக கிராமப் பள்ளிகளும் இல்லை.

ஆகையால், மாணவரின் தகுதியை பெரும்பாலும் குடும்பச் சூழல், பள்ளிச் சூழல், பொருளாதாரம் இவையே தீர்மானிக்கும் பட்சத்தில் முற்பட்ட வகுப்பு மாணவர்கள் தகுதி என்பது சாதியமைப்பின் ஒருதலைப்பட்சமான சாய்வே தவிர, உண்மையான போட்டியில் பெறப்பட்ட தகுதியில்லை என்பது விளங்குகிறது.

**என்ன செய்யலாம்?**

இடைக்காலத் தீர்வாக வகுப்புவாரியான ஒதுக்கீடு ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்கு பலத்த எதிர்ப்பு வந்த வண்ணமுள்ளது. இத்தீர்வு உடனடியாக பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு ஆறுதலளிக்கக் கூடியது என்றாலும் படைப்பாக்கமிக்க ஆற்றலை இளைய சமுதாயத்தினரிடம் வளர்ப்பதில் தாமதத்தையே ஏற்படுத்தும். காலங்காலமாக சொத்துரிமை மூலம் பொருளாதார முன்னேற்றமும், அதன்மூலம் ஆற்றலையும் உரிய தகுதியையும் பெற்ற முற்பட்ட சமூகத்தினர், வகுப்புவாரி ஒதுக்கீட்டை எதிர்க்க தமக்குரிய வழிகளைக் கண்டுபிடிப்பார்கள். எப்படி பணம் படைத்தவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி மேன்மைக்காக தனியார் பள்ளிகளைத் தோற்றுவித்து அரசு பள்ளிகளைப் புறக்கணித்தார்களோ அதேபோல் உயர் கல்வி வாய்ப்புக்களையும் பெற்று விடுவார்கள்!


படிப்பகம்

www.padippakam.com

இவ்விடத்தில் சிந்திக்கக்கூடிய விசயம் ஒன்று உள்ளது. அதாவது பள்ளிக் கல்வி என்று வரும் போது அரசுப் பள்ளிகளை நிர்வாகக் கோளாறு + திறமையின்மை கருதி புறக்கணிக்க முடிந்தாலும், உயர்கல்வி என்று வரும்போது அரசின் தொழில்நுட்ப, மருத்துவக் கல்லூரிகளைப் புறக்கணிக்க முடியவில்லை. சுயநிதிக் கல்லூரிகளின் எண்ணிக்கைப் பெருக்கமும், வளர்ச்சியும் நாளடைவில் அண்ணா பல்கலைக் கழகத்தையும், REC போன்ற அரசு கல்லூரிகளையும் செயலிழக்க வைக்கலாம். மருத்துவக் கல்லூரிகள் தனியார் துறையில் போதுமான அளவில் இல்லை என்பதால் அக்கல்லூரிகளில் மாணவரின் சேர்க்கைக்காக முற்பட்ட வகுப்பினர் போட்டியிடுகின்றனர். இன்னொரு முக்கிய காரணம் கட்டண விகிதம்! அரசு நிர்வாகம் பள்ளிக் கல்வியில் திறமையற்றும், தொழில் நுட்பம் மற்றும் மருத்துவக் கல்லூரி என்றதும் மிகவும் திறமையுடனும் ஆற்றலுடனும் செயல்படுவதாக எண்ணிவிட முடியாது.

இங்கே சிக்கல் என்பது ஆரம்பக் கல்விக்கும் (நடுநிலை, மேல்நிலைப் பள்ளிகள் சேர்ந்தது), உயர் கல்விக்குமான போட்டி என்றே கருதலாம். ஆகையால் இவ்விசயத்தில் அரசு தன் கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டி உள்ளது.

**மேற்கத்திய மாடல்**

வளர்ச்சி அடைந்த ஜப்பான், ஜெர்மனி மற்றும் அமெரிக்க நாடுகளில் அரசுத் துறை ஆரம்பக் கல்வியை மிகவும் அடிப்படையானதாகக் கருதி அதிக முக்கியத்துவம் தருகின்றது. Public School என்ற முறையில் பள்ளிகளை ஒரே தரத்திலானதாக வைத்து, முழுவதையும் அரசே ஏற்று நடத்துகின்றது. நல்ல பள்ளி அல்லது மோசமான பள்ளி என்ற பேச்சுக்கே இடமில்லை. மக்கள் தொகை அடிப்படையில் பள்ளிகள் எண்ணிக்கை திட்ட மிடப்பட்டு ஒரே தரத்திலானதாக அமைக்கப்படுகின்றன. உதாரணமாக சென்னை அண்ணா நகர் வாசிகள் தங்கள் பிள்ளைகளை அந்த இடத்திலுள்ள அரசு பள்ளிக்குத்தான் அனுப்ப வேண்டும். இல்லை, என் பிள்ளைகளை நான் தி. நகரில் உள்ள பள்ளிக்குத்தான் அனுப்புவேன் என்றால், திநகரில் இடம் பார்த்து குடியேறிய பின்தான் அது சாத்தியம். இம் முறையில் இந்துப் பள்ளி, முக மதியர்-கிறித்துவப் பள்ளி என்ற பாகுபாடில்லை. ஆண், பெண், சாதி பாகுபாடின்றி அந்தந்த வசிப்பிடங்களுக்கான பள்ளி என்றாகிப் போகிறது. ஆசிரியர்கள் தகுந்த பயிற்சியளிக் கப்படுகின்றார் கள். கல்விச் செலவும் குறைவு. அமெரிக்காவில் கறுப்பர்கள் பகுதிகளில் கறுப்பர் களே பள்ளியாசிரியர் களாக பணியமர்த்தப்படுகின்றனர்.

ஆனால் உயர் கல்வி என்று வரும்பொழுது வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் தேவைக்கேற்ப வெவ்வேறு முறையைக் கையாளுகின்றன. சில நாடுகள் உயர் கல்வியை நெறிப்படுத்துவதோடு நின்று, தனியார் துறையை ஊக்கப்படுத்து கின்றன. சில நாடுகள் தனியார் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கு கின்றன; அரசும் சிலவற்றை நடத்துகின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள் பொதுமக்களின் நிதியோடு உயர் கல்வியை வளர்த்தெடுக்கின்றன. தனியார் கல்வி நிறுவனங்கள் பெரிய தொழிற்சாலைகளின் நிதி உதவியைப் பெற்று தொழில்நுட்பக் கல்வியை வளர்க்கின்றன. பெரும்பாலும் உயர்கல்வி என்பது கட்டணப் படிப்பே. மாணவர்களின் சமூகச் சூழல், பொருளாதார நிலை கருதி ஸ்காலர்ஷிப் வழங்கப் படுகிறது. இதனால் ஆர்வமுள்ள மாணவர்களே உயர் கல்வியில் சேருகின்றார்கள்.

ஏன் பள்ளிக் கல்வியோடு அந்நாடுகளில் அரசின் நேரடி ஈடுபாடு நின்று விடுகிறது என்பதற்கு, பள்ளிக் கல்விக்குப் பிறகு பெரும்பாலானோருக்கு தகுந்த சம்பளத்துடன் வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பது ஒரு காரணம். வேலையின்பாற்பட்ட இழிவு எதுவும் இல்லை. ஆகையால் எல்லாத் தொழில் களையும விரும்பிச் செய்யும் நிலை ஏற்படுவதோடு, டீசன்டான சம்பளமும் கிடைக்கிறது. மாணவர்கள் வேலை செய்துகொண்டே உயர் கல்வியைத் தொடர முடிகிறது.

**நம் நாடு**

ஆனால் நம் நாட்டிலோ உடலுழைப்பு இழிவானதாகவும், மதிப்புக் குறைவானதாகவும் உள்ளது. சாதி முறையிலான இழிவு தொழில்களில் உண்டு. சம்பளமும் மிக மிகக் குறைவு. ஆகையால் உயர் கல்வி பெற்றால்தான் ஓரளவு சுமாரான வாழ்க்கை நடத்த முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

மேலும் தனியார் பல்கலைக் கழகங்களும, கல்லூரிகளும் ஏறக்குறைய சாதியாளர் கைகளில் உள்ளன. செட்டியார்-நாடார்-நாயுடு என்று பெயர்களைத் தாங்கி பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் இயங்குகின்றன. இப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு பொதுமக்கள் எப்படி நிதி தருவார்கள். ஆகையால் அவை முழுதும் பணம் பறிக்கும் நிறுவனங்களாக இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது.

ஆரம்பக் கல்வி நிலையங்கள் 14 வகையான நிறுவனங்களின் பொறுப்பில் இயங்குவதால் மாணவர்கள் வெவ்வேறு மதிப்பீடுகளுடன் வெளிவருகின்றார்கள். இது ஒரு குறிப்பிட்ட நிலையில் சமதளப் போட்டியாக மாறும்போது முற்பட்ட வகுப்பு பயன்பெறுகின்றனர். எனவே ஆரம்பக் கல்வியை ஒருபடித்தானதாகவும் முழுதும் அரசே ஏற்று நடத்த முன்வர வேண்டும்.

**சமச்சீர் ஆரம்பக் கல்வி**

ஆரம்பக் கல்வியை அரசே முழுதும் ஏற்று நிர்வகிக்க வேண்டும் என்று கூறியாயிற்று. ஆனால், பிரச்சினை இங்குதான் ஆரம்பமாகிறது. சமச்சீரைக் குலைப்பது பயிற்று மொழி. ஒரேபடித்தான



படிப்பகம்

www.padippakam.com

ஆரம்பக் கல்வி எனும்போது பயிற்று மொழியும் எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும்.

தமிழ்வழிக் கல்வியா அல்லது ஆங்கிலமா என்ற முடிவுக்கு வரவேண்டும். அது சாதிச் சிக்கலைப் போல் அவிழ்க்க முடியாததாக உள்ளது அரசுக் கட்டில் ஏறுவோருக்கு. 5-ஆம் வகுப்புவரை தாய்மொழி வழிக் கல்வியும், ஆங்கிலம் மொழிப்பாடமாகவும் வைக்கலாம். 5-ஆம் வகுப்புக்குப் பிறகு வரலாறு, பூகோளம், சமூக விஞ்ஞானம் இவை தமிழிலும் கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்கள் ஆங்கிலத்திலும் இருக்கலாம். இப்படிப்பட்ட பல வழிகளை யோசித்து தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை, அதே சமயத்தில் படைப்பாக்கமிக்க கல்விக்கு முக்கியத்துவம் தரும் வகையில் சமச்சீர் கல்வி முறையை பரிசீலிக்கலாம்.

கிராமமானாலும் நகரமானாலும் ஒரே வகையான அடிப்படை வசதிகள் கொண்ட பள்ளிகளை அமைக்கலாம். இந்தப் பணியை நாம் கிராமத்திலிருந்து தொடங்க வேண்டியுள்ளது. தனியார் பள்ளிக் கல்வியை மெதுவாக படிப்படியாக விலக்கத் திட்டமிடலாம்.

அதே சமயத்தில் உயர் கல்வியில் தனியார் துறையை ஊக்கப்படுத்தலாம். சாதி, பொருளாதார அடிப்படையில் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கலாம். தனியார் துறையை சாதி அடிப்படையில் இயங்கா வண்ணம் சட்ட திட்டங்களை வகுத்துச் செயல்பட வாய்ப்புண்டு. கல்லூரிகளில் புதிய துறைகள் மற்றும் ஆய்வு நிறுவனங்களை மட்டும் அரசு உதவியுடனும், பெரிய தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நடத்துவதை பரிசீலிக்கலாம்.

என்றாலும் அடிப்படைப் பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் மாற்றி அமைக்காமல் சமச்சீர் கல்வி சாத்தியமில்லை என்பதால், அரசு நில சீர்திருத்தச் சட்டத்தைத் திருத்தி நலிந்தோருக்கு நிலப்பங்கீடு செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும். ■

## எங்கள் கடிவாளம் ஒரு நாள்...

■ அகவி

தேவாலயத்திற்குள் நுழைந்து
ஜெபம் செய்த
அந்த ஊர்
தலித் ஆன்மாவிற்கு
ஆசீர்வாத அப்பம்
மொட்டை வெயிலில்
முட்டி போட வைத்தல்

சாதி வெறிப் பிடித்த
சாக்கடை பயல்களை
குருமாராக்கியது
கிருத்துவத்தின் இழுக்கு

புலன்களை
புதுக்கென்றால்
சனங்களைப் பிரித்து
நசுக்குகின்றனர்
சண்டாள சாமியார்கள்!

மடித்துக் கட்டிய வேட்டிக்காரன்
எளிய சாதி என்றால்
அடுத்தடுத்துப் பொய்க் கூறி
மாட்ட நினைக்கும் வலிய சாதி

மாட்டுவண்டிச் சக்கரத்தில்
மலங்க விழிக்கக் கட்டி
ஓட்டிப் போகின்றான்
ரெட்டித் தாயோழி

நூறு முறை
புளிய விளாரால்
நொந்த உடல் துடிக்க
சாட்டை சொடுக்குவது
களைவதுதான் எப்போ?

ஆடாய் மாடாய்
அடிமைச் சாதியாய்
ஓடாய்த் தேய்ந்து
உழைத்தென்ன கண்டோம்!
வாழ்க்கை வயலுக்கு
நாட்டாமை எவனுமில்லை

வாழ்வைத் தின்ன
வழியில்லை என்றால்
மரணத்தைத் தின்போம்
உயிரின் செங்கோலை
உறுதியாய்ப் பிடித்து

கோட்டையே நடுநடுங்கும்
தலித்தர்
ஒன்றிணைந்து கோபத்தால்
திமிறி எழுந்தால்

மிளகாய்த் தூள் கரைத்து
மேனியிலே ஊற்றி
தடியால அடிக்கிறாய்

எங்கள் கடிவாளம் ஒருநாள்
கட்டறுந்து போகும்
உங்கள்
குலமும் கோத்திரமும்
விட்டொழிந்து சாகும்

**(துச்சூர் ரெட்டிகளின் சாதிவெறிக் கொடுமையை முன்வைத்து எழுதிய கவிதை)**


படிப்பகம்

www.padippakam.com

**ஊருக்குக் கொடுத்த வாக்குறுதியை மதிக்காமல், ஊரின் நலனில் அக்கறையின்றி, திருவண்ணாமலை மக்களின் நல்வாழ்விற்கு எதிராக ரமணாசிரமம் மறைமுகமாகச் செய்துவரும் நடவடிக்கைகள் "ஊரோடு பகை வேரோடு கெடும்" என்பதைத்தான் ஞாபகப்படுத்துகிறது**

# ரமணாசிரமத்திற்கு சில கேள்விகள்?

தென் தமிழகத்தின் ஒரு மூலையில் உள்ள திருச்சுழியில் பிறந்து, ஞானத்தைத் தேடி பல ஊர்களைக் கடந்து, இறுதியாக திருவண்ணாமலையை அடைந்து, கடைசியாக தனது கையில் இருந்த மூன்றரை ரூபாயையும் ஐயயங்குளத்தில் வீசி எறிந்துவிட்டு, சகலத்தையும் தலை முழுகி ஒற்றைக் கோமணத்தோடு ஞானத்தைத் தேடி திருவண்ணாமலையிலேயே தங்கிவிட்ட ரமணரின் பெயரால் தற்போது செங்கம் சாலையில் இயங்கிவரும் ரமணர் ஆசிரமத்தின் சொத்துக்கள் பல நூறு கோடியைத் தாண்டும். எல்லாவற்றையும் இழந்து ஞானத்தை அடையுங்கள் எனச் சொன்ன ரமணரின் பெயரைப் பயன்படுத்தி ஆசிரமம் நடத்துபவர்கள் எல்லாவித இகபர சௌபாக்கியங்களுடனும், நவீன விஞ்ஞானம் உருவாக்கிக் கொடுத்த எல்லா வசதிகளுடனும் வெளிநாட்டு கார்களில் உலா, ஏ.சி. அறையில் வாழ்க்கை, டாலர்களில் புரளும் கணக்கு, காலாவதியாகிப் போன பாஸ்போர்ட்டுகளுடன் இன்னமும் இங்கேயே சஞ்சரித்துக் கொண்டிருக்கும் வெள்ளைக்காரர்களுடன் சகவாசம் என ரமணரின் ஆசைகளுக்கு எதிரானவர்களாகவே செயல்பட்டு வருவதை திருவண்ணாமலையின் மக்கள் ரமணரின் மேல் இருக்கும் பக்தியைக் கருதி மௌனமாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆன்மீகம் பேசும் சாமியார்கள், ஆசையை விட்டொழிக்க போதிக்கும் இந்த காவி மனிதர்கள் எல்லா சுகத்திற்கும் (பெண்கள் உள்பட) ஆசைப்படுவதும், அனுபவிப்பதும், குட்டு வெளிப்பட்டு கம்பி எண்ணுவதும் தமிழக வரலாற்றிலும், ஆன்மீக வரலாற்றிலும் ஒன்றும் புதிதில்லைதான். அதனால்தானோ என்னவோ, நமக்கும் இதற்கும் தொடர்பில்லை எனக் கருதி ரமணாசிரமத்தை ஒரு கண்காட்சி அரங்கமாக, சுற்றுலாத் தலமாக பார்த்துவிட்டு தங்கள் போக்கில் மக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். மக்களின் இந்த பாரா முகத்தை தங்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் எனக் கருதிக்கொண்டு இந்த காவி மன்னர்கள் களியாட்ட ராஜ்ஜியம் நடத்திக்கொண்டிருப்பது தொடர்கதையாகவே உள்ளது.

இவர்களின் ஆட்டம் ஆசிரமத்திற்குள் இருக்கும் வரை நமக்கொன்றும் பெரிய கவலை இல்லை. ஆனால் ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது போல, திருவண்ணாமலை மக்களின் அமைதியான வாழ்வுக்கு இந்த ரமணர் ஆசிரமம் சத்தம் போடாமல் வேட்டு வைப்பதை இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது. மகாபார்த்தத்தில் ஒரு சூன்யப் புன்னகையோடு சகுனி உருட்டிப்போட்ட மாயக் கட்டைகளைப்போல, திருவண்ணாமலை நிலப்பரப்பில் ரமணர் ஆசிரமம் உருட்டி விட்டிருக்கும் மாய சதுரங்க விளையாட்டை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது. ஊரோடு பகை வேரோடு கெடும் என்பது தெரியாமல் இந்த ஆசிரமம் திருவண்ணாமலை மக்களின் வாழ்க்கை மீது தொடர்ந்து சாத்தான்களைப் போல கல்லெறிந்து கொண்டிருக்கிறது.

ஆசிரமங்களும், மடங்களும் நிறைந்த திருவண்ணாமலையில், 'பெரியண்ணன்' மனோபாவத்தோடு ரமணர் ஆசிரமம் செய்யும் உள்அடி வேலைகள் நமது வாழ்வின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்யும் அளவிற்கு விளைவுகளை ஏற்படுத்திவிட்டது.

திருவண்ணாமலை மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாக விளங்கிய ரமணரின் பெயரில் தற்போது ஆசிரமத்தை நடத்திவருபவர்கள் மக்களுக்கு எதிரானவர்களாக மாறி செய்து கொண்டிருக்கும் சதியை கலை இலக்கிய கூட்டமைப்பு உங்கள் முன் வைக்கிறது.

பெரிய தொழிற்சாலைகளும், நவீன வளர்ச்சிகளும் இல்லாத ஒரு மெகா சந்தையாக விளங்கும் திருவண்ணாமலையின் வாழ்வு, சமீப ஆண்டுகளாக அண்ணாமலையார் கோயிலையும், கிரிவலத்தையும் ஒட்டியே அமைந்திருப்பதை யாராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலையார் கோயிலை எடுத்துவிட்டுப் பார்த்தால் இந்த ஊர் ஒன்றுமில்லாத பெருங்காய டப்பா என்பது வாசனையில்லாமலேயே புரிந்துவிடும். இதைத்தான் ரமணாசிரமம் விரும்புகிறது என்பது அதனுடைய எட்டப்பன் நடவடிக்கைகளில் தெளிவாகி வருகிறது.

அண்ணாமலையார் கோயிலை கையகப்படுத்தப் போவதாக சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் தொல்லியல் துறை அறிவிப்பு வெளியிட்டதின் பின்னணியில் ரமணாசிரமத்தின் நெய் மணக்கும் கரங்கள் இருந்தது எல்லோருக்கும் தெரியும். கோயிலைச் சுற்றியுள்ள வீடுகளாலும், கடைகளாலும் அண்ணாமலையாரின் புனிதம் பாதிக்கப்பட்டுவிட்டதாக கதை பரப்பி, தனக்கு வேண்டப்பட்ட உயர்ஜாதி அதிகாரிகள் மூலம் மத்திய அரசை நம்ப வைத்து

www.padippakam.com

**ஆன்மீகம் பேசும் சாமியார்கள், ஆசையை விட்டொழிக்க போதிக்கும் இந்த காவி மனிதர்கள் எல்லா சுகத்திற்கும் (பெண்கள் உள்பட) ஆசைப்படுவதும், அனுபவிப்பதும், குட்டு வெளிப்பட்டு கம்பி எண்ணுவதும் தமிழக வரலாற்றிலும், ஆன்மீக வரலாற்றிலும் ஒன்றும் புதிதில்லைதான்.**

இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட வைத்ததில் யாரையும்விட ரமணாசிரமத்திற்குத்தான் அதிக பங்கு இருந்தது.

மத்திய தொல்லியல் துறையின் இந்த அறிவுப்புக்கு, திருவண்ணாமலை மக்கள் ஒரே குரலாக எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, காங்கிரஸ் அரசு மத்தியில் பதவி ஏற்றதும் இந்த அறிவிப்பை கைவிடுவதாக சமீபத்தில் நீதிமன்றத்தில் தெரிவித்தது. ஆனால் சாமி வரம் குடுத்தும் பூசாரி வரம் கொடுக்காத கதையாக, மத்திய அரசே கோயிலை எடுக்கும் முயற்சியை கைவிடுவதாக அறிவித்தபோதும் ரமணாசிரமத்தின் ஆசீர்வாதத்தோடு செயல்படும் கிரிவல பிரதக்ஷண் கமிட்டி, இவ்விவகாரத்தில் மீண்டும் மூக்கை நுழைத்து, குறுக்குசால் ஓட்டியதன் விளைவாக இருதரப்புக்கும் நீதிமன்றம் அவகாசம் கொடுத்துவிட்டதால், மீண்டும் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு துவங்கிய இடத்திலேயே வழக்கு போய் நின்று கொண்டது. இப்போழுது மத்திய அரசு பதில் கொடுத்து, கிரிவல பிரதக்ஷண் கமிட்டி அதற்கு பதில் கொடுத்து, அதில் நீதிபதிகள் கருத்துக் கேட்டு, ஆளாளுக்கு ஒரு கருத்து சொல்லி, ஜவ்வு மிட்டாய் மாதிரி அண்ணாமலையாரையும், வழக்கையும் இழுத்துவிட்டதில் ரமணாசிரமத்தின் கடைக்கண் பார்வையும், பூரண ஆசிகளும் உண்டு என்பது சின்ன குழந்தைக்கும் புரிந்துவிடும்.

இதே ரமணாசிரமம்தான் சில மாதங்களுக்கு முன்பு, திருவண்ணாமலையில் நடைபெறுவதாக இருந்த ரமணர் ரத யாத்திரைக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து பந்த் அறிவிப்பு வெளியிட்டபோது, "ஐயோ, எங்களைக் காப்பாத்துங்கோ, மன்னிச்சுடுங்கோ, இனிமேல் கோவில் விவகாரத்துல நேக்கு எந்த சம்பந்தமும் இல்ல. நாங்க தலையிட மாட்டோம். எங்கள் ஆதரவு பெற்ற அமைப்புகளின் வழக்கறிஞர்களையெல்லாம் கேசுல இருந்து வாபஸ் வாங்கிக்க சொல்றோம்" என்று ஊர்ப்பிரமுகர்கள், காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் முன்பு மண்டியிட்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். சுவாமிகள் கெஞ்சியதும் பக்தர்களுக்கு மனமிறங்கி, போனால் போகட்டும் என ரமணர் ரதத்திற்கு அனுமதி அளித்ததோடு, மகா பெரிய மனிதர்கள், அதிகாரிகள் என அனைவரும் போட்டி போட்டுக்கொண்டு ரதத்தோடு ஐக்கியமாகி வரவேற்பளித்ததையும் இந்த ஊர் கைகட்டி பார்த்துக் கொண்டுதான் இருந்தது.

ஆனால் ஊருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல், வேலை முடிந்ததும் வேட்டியைக் கட்டும் ஆசாமிகளைப்போல, ரமணாசிரமம் என்ற வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டது. பஞ்சாயத்தில் சொன்னபடி வழக்கு விசாரணையின்போது தங்கள் ஆதரவு பெற்ற கிரிவல பிரதக்ஷண் கமிட்டியின் வழக்கறிஞர்களை வாபஸ் பெறவும் இல்லை. கடந்த மாதம் நீதிமன்றத்தில் கோயிலை ஏற்கும் முடிவை கைவிடுவதாக [illegible] களான கிரிவல பிரதக்ஷண் கமிட்டி வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருந்தால், இந்நேரம் அண்ணாமலையார் எந்த அச்சமும் இல்லாமல் வசந்த உற்சவத்தில் ஜாலியாக இருந்திருப்பார். ஆனால் அதற்கும் வேட்டு வைத்து எப்போது வீடு பறிபோகுமோ என்று அவஸ்தையோடு அவரை வசந்த உற்சவத்தில் இருக்கும்படி செய்துவிட்டது இந்த ரமணாசிரமம்.

ஊருக்குக் கொடுத்த வாக்குறுதியை மதிக்காமல், ஊரின் நலனில் அக்கறையின்றி, திருவண்ணாமலை மக்களின் நல்வாழ்விற்கு எதிராக ரமணாசிரமம் மறைமுகமாக செய்து வரும் இந்த நடவடிக்கைகள் "ஊரோடு பகை வேரோடு கெடும்" என்பதைத்தான் ஞாபகப்படுத்துகிறது. ஏற்கனவே மக்களுக்குச் சொந்தமான விருப்பாட்சி குகை ஆசிரமத்தை நிர்வகிக்கிறோம் என்ற பெயரில் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது, செங்கம் சாலையில் உள்ள பொதுக்குளத்தை 'பார்ப்பனர் குளம்' என்று பெயர் சூட்டி மோட்டார்களை வைத்து தண்ணீர் எடுத்துக் கொள்வதுடன் அந்தக் குளத்தை மக்கள் பயன்படுத்தவும் தடை விதித்தது, நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து அதிகாரத்தைப் பயன்படுத்தி காம்பவுண்ட் சுவர் கட்டிக் கொண்டது, கிரிவலப் பாதையில் எந்தக் கட்டிடங்களும் கட்டக்கூடாது என நீதிமன்றங்கள் தடை விதித்தும் எங்கள் வழி தனிவழி என்று ரகசியமாக ஆசிரமத்திற்குள் கட்டிடங்களை கோர்ட் உத்திரவை மதிக்காமல் கட்டிக்கொண்டே போவது, ஆசிரமத்திற்கு வரும் உள்ளூர் பக்தர்கள் மற்றும் சாதாரண பக்தர்களை ஒரு மாதிரியாகவும், வசதிமிக்கவர்கள், வெளிநாட்டுப் பக்தர்களை வேறு மாதிரியாகவும் நடத்துவது மொத்தத்தில் திருவண்ணாமலையில் இருந்துகொண்டே திருவண்ணாமலை மக்களுக்கெதிரான எல்லாக் காரியங்களிலும் சத்தம் போடாமல் மூக்கை நுழைத்து செயல்பட்டுக்கொண்டிருக்கும் ரமணர் ஆசிரமும் அதன் நிர்வாகிகளும் திருந்துவது நல்லது. இல்லாவிட்டால் மக்கள் திருத்துவார்கள்.

மக்களைப் புறக்கணித்துவிட்டு எந்தக் கொம்பனும் வாழ்ந்ததில்லை என்பதுதான் வரலாறு. இது அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, ஆன்மீகவாதிகளுக்கும் பொருந்தும். மடங்களும், மதங்களும், சாமிகளும் உருவாக்கப்பட்டதெல்லாம் மக்கள் சந்தோஷமாக வாழத்தான். அந்த சந்தோஷத்திற்கு உலை வைப்பவர்கள் மக்கள் மன்றத்தில் குற்றவாளிகளாக நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்பதில் யாருக்கு மாற்றுக் கருத்து இருக்க முடியும்? இதை உணர்ந்து ஆசிரமம் ஊரோடு ஒத்துப் போகட்டும். இல்லையென்றால் ஊரை விட்டே ஒதுங்கி வாழட்டும்.

கலை இலக்கிய கூட்டமைப்பு
திருவண்ணாமலை
(தொலைபேசி 04175-251980)

படிப்பகம்

www.padippakam.com



குடியரசன்

# மாறுவேசம்

*நான் சிறு குழந்தையாக இருந்தபோது இந்த மரமும் சிறு செடியாக இருந்தது. இந்தச் செடியைச் சுற்றிச் சுற்றியே எனக்கு என் தாய் சோறு ஊட்டினார். இந்த மரமும் நானும் ஒன்றாகவே வளர்ந்தோம். ஆகவே இந்த மரம் எனது சகோதரி போல.*

எள் தன்னுடைய கருத்தில் தெளிவாக இருந்தான். வகுப்பில் எள் இப்பொழுதெல்லாம் அதிக கவனத்துடன் படித்தான். ஒவ்வொரு வாத்தியாரும் பாடம் நடத்தும் போதெல்லாம் எள் சம கவனம் தந்து கவனித்தான். முன் பெல்லாம் கடைசி வரிசையில் உட்கார்ந்த எள் இப் பொழுது முதல் வரிசைப் பையன்களிடம் நட்பு செய்து கொண்டான். அதன் பயனாக முதல் வரிசையில் நான் காவது இடம் எள்ளுக்குக் கிடைத்தது.

"எள், நீ ஏன் இப்போழுதெல்லாம் மற்ற மாணவர் களைப்போல் என்னுடன் டீ குடிக்க வர்ரதில்லை?"

முகிலின் கேள்வி எள்ளுக்கு வருத்தத்தைத் தந்தது. ஆனால் எவ்வித குற்ற உணர்வையும் தரவில்லை.

"நிறைய படிக்க வேண்டியது இருக்கு சார்"

"முன்பெல்லாம் இல்லாத படிப்பா இப்ப பாக்கி இருக்கு"

"சார், உங்க சப்ஜெக்ட் மட்டுமே படித்தால் போதுமா? மற்றதையும் படிக்கணும் சார்"

எள் சாரை மறுத்துப் பேசுவது இது முதல் முறை. குரல் கம்மியது. எதையோ மீறுவதுபோல இருந்தது. நாம் தவறு செய்கிறோம் என்று மட்டும் எள்ளுக்கு உணர்வு தொடர்ந்து உணர்த்திக் கொண்டே இருந்தது.

வழக்கமாக பாடம் என்று சொல்லும் எள் அன்று சப்ஜெக்ட் என்று சொன்னது முகிலுக்கு ஆச்சரியமாக இருந்தது. எல்லாம் அந்த முதல் பெஞ்ச் பசங்க சகவாசம்.

"எள்... இங்க பாரு... சமூக உணர்வே இல்லாம வெறுமனே படிப்பு, சம்பளம், குடும்பம்னு வாழும் அந்த முதல் வரிசை பெஞ்ச் பசங்க உனக்கு அவ்வளவு பாதிப்பு செய்துள்ளனர். நீ சமூகத்தின் அவலங்களை நேரில் கண்டவன். அனுபவிப்பவன். நீ போய் அந்த பசங்ககிட்ட சேர்ந்துகிட்டு... சுத்த சுயநலவாதியா மாறிப் போயிடாதே. என்னைப் பாரு. நான் கல்லூரி படிக்கும்போது பெரிய வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்ததால் வறுமை என்னவென்று தெரியாமல் வளர்ந்தேன். கம்யூனிச தோழர்களின் தொடர்பிற்குப் பிறகு என்னுடைய சிந்தனையில் ஒரு மாற்றம். நான் இந்த சமூகத்தை மிக வும் நேசிக்கிறேன். எனக்குத் தெரிந்த வழியில் தீர்வு சொல் கிறேன். அந்தத் தீர்வு சரியானதாக இருக்கலாம். அல்லது சரியல்லாத தீர்வாகக்கூட இருக்கலாம். எனக்கு சரி என்று புரிகிறபோது நான் என்னை மாற்றிக்கொள்ளப் போகிறேன். அதற்காக நம்மோடு முரண்படுகிறவர் களோடு தொடர்பை துண்டித்துக் கொள்வதென்பது சரியல்ல. தனி மனித உறவு எல்லாவற்றையும்விட மேலானது. நாம் இருவரும் முன்புபோலவே இருப்போம். ஒரு கட்டத்தில் யாராவது ஒருவர் மாறித்தான் ஆகணும். அது நானாகக்கூட இருக்க நான் தயார். ஆனால் அந்த காலம் வரை நீ என்னுடன் பேசுவதை தவிர்க்காதே. காரணம், நீ இதுநாள் வரை தெளிவில்லாமல் இருந்தாய். அதனால் என்னுடன் அன்பாக பழகினாய்; இன்று தெளிவாகி விட்டாய், அதனால் என்னை தவிர்க்கிறாய்; என்றால், நான் ஏன் மாணவர்கட்கு தெளிவைத் தரவேண்டும் என்று என் போன்ற ஆசிரியர்கள் முடிவிற்கு வந்துவிடக் கூடாது."

எள்ளுக்கு கோபம் வந்தது. 'மாணவர்கள் வேலை படிப்பது. சார் என்ன சாதி, அவர்களை எப்படி திருத்து வது என்று நாங்கள் பார்ப்பதில்லை. ஆனால் இந்த வாத்தியார்கள் மட்டும் ஏன் இப்படி தனக்கு தெரிந்ததை யெல்லாம் கொட்டும் குப்பைத் தொட்டிகளாக மாணவர்களின் மண்டையை நினைக்கிறார்கள்.' எள் மனதிற்குள் இதையெல்லாம் நினைத்துக் கொண்டான். முகம் இறுக்கம் காட்டினான். அமைதி அங்கு அழுத்த மாக நிலவியது.

"சரி எள்... நீ என்னவோ மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாய். நான் 20 ஆண்டுகள் வாத்தியாராய் இருக்கிறேன். உன்னைப்போல நூற்றுக்கணக்கான மாணவர்களைப் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு ஆண் டும் ஒவ்வொரு மாணவனையும் புதிய மாணவனைப் போல - முதல் வருடம், முதல் மாணவனைப் போலவே - நான் கையாளுகிறேன். அதே உற்சாகம். அதே உழைப்பு. அதே எதிர்பார்ப்பு." முகில் பேசிக்கொண்டிருக்கும் போதே எள் பேசினான்.

"சார், நான் வீட்டிற்குப் போகிறேன். இங்கிலீஷ் படிக்கணும். அடுத்த வாரம் எனக்கு தேர்வு சார்."

"டேய் எள்... நானும் இந்த கல்லூரி வாத்தியார் தாண்டா. எனக்கு இதெல்லாம் தெரியாதா? நீ வேண்டு மென்றே ஏதோ மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறாய். நான் உன் படிப்பிற்கு எதிராக இருப்பேனா. என்ன?"

எள் அமைதியாக இருந்தான். முகில் முகம் சுருங்கியது.

"எள் எனக்கு நீ பதில் சொல்லுடா"


படிப்பகம்

www.padippakam.com

எள் அமைதியாக, தனக்கு சம்பந்தம் இல்லாத ஒன்றை அங்கு முகில் செய்வதாக நினைத்தான்.

முகில் தொடர்ந்தார். "டேய், நான் உன் சார். எனக்கு உடனடியாக பதில் வேண்டும்."

"இங்கிலீஷ்ல நாலு பெரிய கொஸ்டினுக்கு பதில் தெரிந்தா நான் இந்த வருடம் நல்ல மார்க்ல பாஸ் செய்வேன். உங்க கேள்விக்கு பதில் தெரிந்தால், ம்... மீண்டும் இதே ரோட்டோர டீக் கடையில்...

முகிலின் முகம் கோபம் கொண்டது. "டேய் எள்... நான் உன்னுடைய சார்..."

"எனக்கும் அது தெரியும்."

"டேய் இங்க பாரு, தம்பி... இங்க என்னைப் பாரு. நான் மத்த வாத்தியாருங்க மாதிரி மாணவர்களைப் பற்றி கவலைப்படாத சார் இல்லை. ஒவ்வொரு மாண வனும் அறிவோட தெளிவா இருக்கனும்னு..."

"சார், எனக்கு நேரமாவுது. நான் போறேன்." எள் அசையத் துவங்கினான்.

முகில் எள்ளின் தோள்பட்டையை பிடித்து நிறுத்தினார். எள்ளுக்கு நாம் சார் வார்த்தையை மறுத் துப் பேசுகிறோம் என்ற உணர்வு மேலோங்கியது. அதைவிட தான் இதுவரை பாடங்களைப் படிக்காமல் வெட்டியாக பொழுதைப் போக்கியுள்ளோம்; அதற்கு இந்த முகில்தான் காரணம் என்று கோபம் வந்தது.

"சார், எங்கம்மா தேடுவாங்க. காலையில நான் காலேஜுக்குப் புறப்படும்போதே, காலேஜ் முடிச்சுட்டு நேரா வீட்டுக்கு வரனும்னு எங்க அப்பா கண்டிசனா சொன்னார். எனக்கு நேரமாவுது சார்."

அங்கிருந்து நகர எள்ளின் உடல் துடித்தாலும், அவனது பழகிய மனசு அவனை அங்கிருந்து நகர விடா மல் பிடித்து வைத்தது.

"சார், நான் உங்களை எடுத்தெறிந்து பேசுகிறேன். நான் உங்களை முன்புபோல... (எள்ளின் கன்னங்கள் கண்ணீரால் ஈரமானது) நான் யாரையும், குறிப்பாக உங்களை என்றைக்கும் என் வாழ்நாளில்அவமரியாதை செய்யக் கூடாது. என்னை விடுங்கள்."

முகில் பேசினார். "எள்... என்னாகி விட்டது இப்ப. கம்யூனிச தோழர்கள் துப்பாக்கி தோட்டாவை எல்லாம் மார்புல தாங்கி இருக்காங்க. நான் உன் கோப வார்த்தை களைக்கூட தாங்கலன்னா எப்படி... பேசுறதுக்கே நீ இப்படி உணர்ச்சிவயப்படுகிறாய். நாளைக்கேகூட நாம புரட்சிக்காக துப்பாக்கியின் வாய் மீது நிற்க வேண்டி வந்தாலும் அதற்கு நான் தயார்."

எள்ளின் அழுகை உள் இழுத்துக்கொண்டது. ஒரு டீக்கடைக்காரனை, ஒரு போலீஸ் கான்ஸ்டபிளை எதிர் கொள்ள இயலாத மனிதர்கள்தான் துப்பாக்கியின் முனைக்கு நெஞ்சை நிமிர்த்தப் போகிறார்களா? எள் மனதிற்குள் ஏளனமாக நினைத்தான். முகம் அதன் காரணமாக சிரிப்பது போல முகிலுக்குத் தெரிந்தது.

முகில் மகிழ்ச்சி அடைந்தார். தன்னுடைய சித்தாந் தம் வினைபுரிவதாக நினைத்து மேலும் தொடர்ந்தார். பிரஞ்ச் புரட்சி, ரஷ்யப் புரட்சி என்று வழக்கம்போல முகில் பேசினார்.

எள் மனதின் காதுகளை மூடிவிட்டு செயற்கை யான புன்முறுவலுடன் கேட்டான் "சார்... நான் நாளைக்கு வேண்டுமானால் உங்கள் வீட்டிற்கு வந்து மேலும் பேசலாம் சார். நான் போகிறேன்." எள் இடம் பெயர்ந்தான்.

முகில் 'ச்சே... என் தகுதியென்ன, படிப்பென்ன... இவனையெல்லாம் சரிசெய்து நான் பேசவேண்டியுள் ளது. ம்... தியாகம் செய்யாமல் புரட்சியை எப்படி நாம் பெறமுடியும்' என்று தன்னைத் தானே தேற்றிக் கொண் டார். 'ம்... நான் இவனுக்குச் சமமா இவன் ஊருக்குப் போயிருக்கக்கூடாது. அதனால்தான் இவன் என்னை மதிக்க மாட்டேன் என்கிறான். பெரிய தவறு நிகழ்ந்து விட்டது. அதை இவனால் புரிந்து கொள்ள முடியாது' என்று தன் மனதில் நினைத்துக் கொண்டார்.

முகிலுக்கு தூக்கம் பிடிக்கவில்லை. 'ஏன் எல்லா தோழர்களும் இப்படி இருக்கிறார்கள்! புரட்சியைப் பற்றி யாருக்கும் கவலை இல்லை. குறிப்பாக எள் துளியும் கவலை இல்லாமல் இருக்கிறான். நாளைக்கே எள்ளின் மற்ற நண்பர்கள்... இல்லை, இல்லை... என்னுடைய மற்ற மாணவர்களான சிவா, சிரஞ்சீவி, விமல் ஆகியோர்களை கூடுதலாக தயார் செய்யனும். அதைப்பார்த்து எள் திருந்தி விடுவான்' என்று முகிலின் மனம் மீண்டும் மீண்டும் சிந்தித்தது.

புரட்சி வந்தால்கூட முகில் அவ்வளவு மகிழ்ச்சி யடைய மாட்டார். எள் திரும்பி வந்தால் முகில் அவ் வளவு மகிழ்ச்சி அடைவார். புரட்சியின் விதையை எள் எங்கேயோ யாருக்கும் தெரியாமல் வைத்துள்ளான் என்பதுபோல் முகில் எள்ளை வழிக்குக் கொண்டு வருவதிலேயே குறியாக இருந்தார்.

அதனால் முகில் மற்றவர்களிடம், குறிப்பாக சிவா, சிரஞ்சீவி, விமல் ஆகியோருடன் சரியாக நேரம் செலவு செய்வதில்லை. அவர்களுக்கு வேறு வேலை இல்லாத தால் முகிலின் போக்கில் செல்லும் நிழல்போல சென்ற னர். முகில் ஆடுவதுபோல அவர் நிழல் மட்டும் ஆட வில்லை. கூடுதலாக இவர்களும் ஆடினார்கள்.

ஆனால் அன்றைக்கு "சார், நீங்க அந்த எள்ளுக்கு ரொம்ப இடம் தருகிறீர்கள்" என்று சிவா குறிப்பிட் டான்.

சிவா, சிரஞ்சீவி, விமல் ஆகிய இவர்கள் யாரிடமும் இல்லாத சிறப்பு எள்ளிடம் இருப்பதாக முகில் நினைத் தார்.

"டேய், இங்க பாருங்க... அந்த எள் அப்படி இப்படின்னு பேசாதீங்க. நம்ம எள்ளுன்னு சொல்லுங்க"

முகிலால் அவர்களை அதற்கு மேல் பயனுள்ளவர் களாகப் பார்க்க இயலவில்லை. "சரி... சரி... நான் வீட்டிற் குப் போகிறேன்" என்று அங்கிருந்து நகர்ந்தார். தன் வீடு வரைக்கும் எள்ளை ஒரு புரட்சிக்காரனாகவும், அவன் தன்னிடம் பழையபடி திரும்பி வந்தால் அவனுக்கு நல்லது என்றும் முடிவு செய்தார். தான் செய்த முடிவிற்கு ஆதாரமாக வாதங்களை மனதிற்குள் யோசித்தார்.

அன்றைக்கு முகிலின் வகுப்பு. எள் முதல் வரிசையில் இருந்தான். "இன்று வரதட்சணை கொடுமை களைப் பற்றி நான் பாடம் நடத்தப் போறேன்... வரதட் சணை கொடுமைகளை எப்படி போக்குவது? யாராவது சொல்லுங்க."



படிப்பகம்

www.padippakam.com

"வரதட்சணை தரக்கூடாது. வாங்குரவுங்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். அப்பத்தான் தீரும் சார்."

"எனக்கு பெண்கள் பக்கம் இருந்து பதில் வேண்டும்" முகில் ஒரு பெண்ணை எழுப்பி பேசச் சொன்னார்.

"சார், பெண்கள் காவல் நிலையங்கள் கூட்டப் படவேண்டும். அப்பதான் வரதட்சணை வழக்குகளை பெண்கள் தைரியமாக போலீஸ் ஸ்டேசனுக்கு வந்து புகார் தருவாங்க"

"நிலா சொல்றது ரொம்ப சரி" என்றார் முகில்.

சிவா எழுந்தான். "சார்... பல பொம்பள போலீஸுங்க கிட்டகூட வரதட்சணை வாங்குறாங்க சார்."

சிரஞ்சீவி எழுந்தான். "சார், இந்த பொம்பள போலீஸ் ஸ்டேசனே தப்பு சார். பொது போலீஸ் ஸ்டேசன்தான் இருக்கணும்."

"ஏண்டா..." இது முகில்.

"ஆம்பளங்க தப்பு பண்ணாட்டி கூட இந்த பொம்பள போலீஸுங்க அவங்க மேல பொய் கேசு போடுராங்க. வரதட்சணை கேசுன்னு பொம்பள போலீஸ் ஸ்டேசனுக்கு..."

"டேய், இனிமேல் நீ மகளிர் காவல் நிலையம்னுதான் சொல்லணும்".

"ம்... மகளிர் காவல் நிலையத்திற்கு ஒரு பெண் புகார் தந்தால், அங்க இருக்கிற மகளிர் காவலர்கள் ஆண்களை அநியாயமாக குற்றம் சுமத்தி வழக்குப் போடுறாங்க. பெரும்பாலும் பொய் கேசுதான்."

வகுப்பில் விவாதம் சூடாக நடைபெற்றது. முகில் விரும்பியது இதைத்தான். விவாதம் சூடானால் முகிலுக்கு புரட்சி நடக்கப்போவது போலத் தோன்றும். அவர் முகம் பளிச்சிடும். அன்றும் அப்படியே நடந்தது.

இந்தப் புரட்சியில் எள்ளையும் சேர்த்துக் கொண்டே ஆக வேண்டும் என்று முகிலின் மனது துடித்தது. போனால் போகட்டும், அவனை விட்டு விடு. நாம் புரட்சியை நடத்த வேண்டாம். அவனும் பங்கு பெறட் டும் என்ற முடிவிற்கு முகில் வந்தார்.

"அடுத்து தம்பி எள் தன் கருத்தை சொல்ல வேண்டும்"

எள் எழுந்தான். முகிலின் கோபம் அடங்கியது. "சார், பொம்பளங்க போலீசா இருந்தா, வழக்கு பூரா ஆம்பளங்களுக்கு எதிராத்தான் போடுவாங்கன்னு சிரஞ்சீவி சொன்னான்."

"அதுதான் வகுப்பிற்கே தெரியுமே. நீ உன்னுடைய கருத்தைச் சொல்" முகில் சத்தமாகப் பேசினார்.

"வரதட்சணை கேசுல பெண் காவலர்கள் ஆண்களுக்கு எதிரா வழக்கு போடுறது உண்மைனா அல்லது அதுக்குத்தான் அதிக வாய்ப்புன்னா, இதுவரை சாதியால் கொடுமைக்கு உள்ளாகும் தாழ்த்தப்பட்ட மக்கள் புகார் தந்தா அதை FIR கூட போட மாட்டேன்னு சொல்றாங்க. அதுக்குக் காரணம் அந்த போலீஸ்காரங்க SC இல்லை. அப்ப பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டவங்களுக்கு ஆதரவாக வழக்கு பதியணும்னா நமக்கு மகளிர் காவல் நிலையம்போல, தாழ்த்தப்பட்டவர்கள் காவல் நிலையம் வேணும் சார். ஏன்னா, எனக்குத் தெரிந்த ஒருத்தரை ஒரு டீக்கடைக்காரன் தீண்டாமை காரணமாக அடிச்சான். ஆனால் போலீஸ்ல FIR கூடப் போட..."

முகில் கோபத்தின் உச்சிக்கே போய்விட்டார். "உம்புத்தி ஏண்டா எப்பவுமே இப்படியே போகுது. நீ பொதுவாக சிந்திக்கவே மாட்டியா?" முகில் கத்தினார்.

எள் அமைதியாக உட்கார்ந்தான். முகில் வெளியேறினார்.

வழக்கத்துக்கு மாறாக அன்றைக்கு முகில் தன்னுடைய அறையில் அமர்ந்து உணவு உட்கொள்ள ஆரம்பித்தார். தமிழ் வாத்தியார் மாணிக்கவாசகம் அறைக்குள் நுழைந்தார். முகில் ஆசிரியர்கள் அறையில் தனியாக அமர்ந்து உணவு உண்பதை கவனித்த மாணிக்கவாசகம் "சார் என்ன நீங்ககூட தனியா சாப்பிடுறீங்க? உங்க புரட்சி ஓங்குக, உழைப்பாளர்கள் ஒற்றுமை ஓங்குக... எல்லாம் சிதறிப்போச்சா என்ன?"

"மாணிக்கவாசகம்... நீங்க வேற மனிதனின் நிலை தெரியாம பேசாதீங்க"

"சார் முகில், நீங்க அரை டிக்கட்டுகளுடன் சேர்ந்து ஏதோ புரட்சி பண்ணணும்னு நினைச்சீங்க. ஆனா நீங்க நம்ம நாட்டைப்பற்றி ஒன்று புரிஞ்சுக்கணும். நம்ம நாட்டுலதான் புரட்சிய ஆளாளுக்குப் பேசுறான். நம்ம நாட்டுலதான் புரட்சித் தலைவர் வந்தார். இன்னிக்கு புரட்சிக் கலைஞர் வேற வந்துட்டாரு. நீங்க என்னடான்னா லெனின், மார்க்ஸ், ஏங்கல்ஸ் புரட்சி இங்கும் வரும்னு சொல்றீங்க. புரட்சி அரசுக்கு எதிரானதுன்னு சொல்றீங்க. இந்த நாட்டிலே புரட்சித் தலைவர் அரசை கைப்பற்றி முதலமைச்சராக இருந்திருக்கிறாரு. வருங்கால முதல்வரா புரட்சிக் கலைஞர் வந்தாலும் வரலாம். இதையெல்லாம் மீறி நீங்க என்ன பெரிய புரட்சி செய்யப்போறீங்க? அதுதான் புரட்சி வந்திருச்சே."

"கொஞ்சம் சும்மா இருக்கிறீங்களா"

"என்னது இது, நீங்கதானே சும்மா இருக்கக் கூடாது. எல்லோரும் புரட்சி பண்ணணும்னு சொல்லிக் கிட்டே இருக்கறீங்க."

"சார் மாணிக்கவாசகம், நான் இப்ப அமைதியை விரும்புகிறேன். கொஞ்சம் நேரம் அமைதி வேண்டும்."

"உங்களுக்கு அமைதி வேண்டுமா? புரட்சி வேண்டுமா?"

முகிலால் தாங்க முடியவில்லை. சோற்றை அப்படியே மீதம் வைத்துவிட்டு கை கழுவ எழுந்தார். கை கழுவினார். அவருடைய மனம் சட்டென்று...

நேராக வகுப்பிற்குள் சென்றார். எள் தனியாக உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். முகிலைப் பார்த்ததும் பரபரப்புடன் எழுந்து நின்றான்.

"டேய், என் அறையில் கொஞ்சம் சாப்பாடு மீதி உள்ளது. நீ விரும்பினால்... நீ..."

"சார்... நான் என்றும் உங்கள் மாணவன்தான்." எள் சாரின் மீதம் உணவை காலி செய்து பாத்திரத்தை கழுவி அவருடைய பையில் வைத்தான். அதைக் கண்ட முகிலின் மனம் லேசானது.

"தம்பி எள்... நீ ஏன் இது மாதிரியெல்லாம் பேசு


படிப்பகம்

www.padippakam.com

கிறாய் என்று எனக்குப் புரியவில்லை. என்ன காரணம் சொல்." முகில் மீண்டும் மீண்டும் தவறு செய்யும் மாணவனை நெறிப்படுத்த விரும்பும் ஒரு வாத்தியாராக மாறினார்.

"சார்... என் வார்த்தைகள் உங்களை வருத்தப் படுத்தியிருந்தால் என்னை மன்னிச்சுடுங்க சார்."

"டேய், நீ யாரு? என் மாணவன். என்னுடைய பையன் மாதிரி."

"சார்... பையன் மாதிரி இல்லை சார். நான் உங்க பையன்தான் சார்."முகிலின் லேசான மனம் பறக்கத் துவங்கியது புரட்சியை நோக்கி.

"சார், நாளைக்கு காலையில் நான் உங்க வீட்டிற்கு சீக்கிரம் வரேன் சார். வரலாமா சார்?"

"என்னடா இப்படி கேட்கிறாய்? கண்டிப்பாக வா"

முகில் மிகவும் மகிழ்ச்சியாக வீடு சென்றார். தன்னுடைய வாதமாக நாளைக்கு எள்ளிடம் பேச வேண்டிய விசயங்களை மீண்டும் மீண்டும் யோசித்தார். பின்னர் ஒரு தாளில் குறிப்பெடுத்துக் கொண்டார். அதை பல முறை படித்தார். திருப்தியாக இருந்தது. அந்த தாளை புரட்சிக்கான அறிக்கை போல பத்திரமாக தன்னுடைய மேல் சட்டையில் மடித்து வைத்தார். பிறகு யாராவது கவனக் குறைவாக துணியை துவைக்கவோ அல்லது காகிதம்தானே என்று தூக்கி எறிந்துவிடக் கூடாது என்று தன்னுடைய மேஜை அறையில் வைத்து பூட்டினார். இவ்வாறாக ஒரு புரட்சி அறிக்கையை பாதுகாப்பாக வைத்தார்.

மணி இரவு எட்டு ஆனது. முகில் நேரத்திற்கு சாப்பிடுபவர் அல்ல. இருந்தாலும் தினமும் இரவு எட்டு மணிக்கு தவறாமல் சாப்பிட்டு விடுவார். காரணம் அவரது மகன், மனைவி அப்படி கட்டுப்பாடு. சாப்பாட்டு மேஜையில் அமர்ந்து சாப்பிடத் துவங்கினார்.

மாணிக்கவாசகம் வந்தார். "வாங்க... வாங்க..." முகிலின் முனைவி மற்றும் மகன் வரவேற்றனர். முகில் வேகமாக சாப்பிட்டுவிட்டு அவருடன் வாக்கிங் போனார். இரவு வாக்கிங் என்பதால் அன்றைய பகல் முழுவதும் நடந்தவைகளை தண்ணீரில்லாமல் அலசுவார்கள். அதாவது ஈரம் கொஞ்சம் கூட இல்லாமல் அலசுவார்கள்.

"சார்... இந்த எள் ரொம்ப வாய்"

"எல்லாம் நாளைக்குச் சரியாகிவிடும்" மனதில் அந்த அறிக்கையை நினைத்துக்கொண்டு முகில் சொன்னார்.

"நேற்று வகுப்பில் நான் தமிழ் சங்ககால இலக்கியம் நடத்திக் கொண்டிருந்தேன். அதில் ஒரு காதல் பாட்டை விளக்கிக் கொண்டிருந்தேன். அதை சொல்லட்டுமா" என்றார் மாணிக்கவாசகம்.

"சரி"

"தலைவன், தலைவியை ஒரு மரத்தடியில் துரத்தித் துரத்தி காதலிக்கிறான். தலைவி மிகவும் வெட்கப்பட்டு இங்கு வேண்டாம், வேறு மரத்தடியில் சென்று காதலிக்கலாம் என்கிறாள். தலைவன் காரணம் கேட்கிறான். நான் சிறு குழந்தையாக இருந்தபோது இந்த மரமும் சிறு செடியாக இருந்தது. இந்தச் செடியைச் சுற்றிச் சுற்றியே எனக்கு என் தாய் சோறு ஊட்டினார். இந்த மரமும் நானும் ஒன்றாகவே வளர்ந்தோம். ஆகவே இந்த மரம் எனது சகோதரி போல. இந்த மரத்தடியில் நீங்கள் என்னை தொடும்போது என் சகோதரி என்னை பார்ப்பதுபோல எனக்கு வெட்கமாக உள்ளது என்றாள்."

"ஆகா... எவ்வளவு நுட்பமாக உள்ளது" என்று முகில் மாணிக்கவாசகத்தைப் பாராட்டினார்.

உடனே மாணிக்கவாசகம் இடைமறித்து, "ஆனால் இந்த எள்ளுப் பயலைப் பாருங்கள். இந்தப் பாடம் நடத்தியபோது தேவையில்லாததையெல்லாம் பேசி என் அனுபவித்துப் பாடம் நடத்துவதையே கெடுத்து விட்டான்."

"என்ன செஞ்சான்?"

"ஏன் சார், இவ்வளவு நுட்பமான தமிழ் நாகரீக சங்க காலத்தில் அவர்களால் எப்படி கொடூரமாக சாதி அமைப்புடன் வாழ முடிந்தது" என்று வகுப்பில் பேசி விட்டான்.

"அப்புறம்..." என்று முகில் ஆர்வமிகுதியால் கேட்டார்.

"வகுப்பின் மென்மைத் தன்மையே போய் விட்டது. அனுபவித்த ரசம், இலக்கியச் சுவை, கவிதை இன்பம், எல்லாமே இவன் சாதியால் மண்ணாப் போச்சு. இவன்கிட்ட ரொம்ப careful ஆக இருங்க. இல்லாட்டி நம்ம நிம்மதியை கெடுத்திடுவான்."

ஏன் அவன் இப்படி இருக்கிறான். நாளைக்கு எல்லாம் சரியாயிடும் என்ற முகிலின் நம்பிக்கை கொஞ்சம் ஆட்டம் காணத் துவங்கியது.

நடந்த களைப்பின் காரணமாக முகில் ஓய்ந்து படுத்தார். மிகுந்த மன அயர்வின் காரணமாக தூக்கம் வரவில்லை. சிந்தனை பல்வேறாக ஓடிப் போனது. எள்ளிடம் பேசுவதற்காக தயாரித்து வைத்திருந்த அறிக்கை நாளைக்குப் பயன்படாது என்று முகில் முடிவு செய்தார். படுக்கையில் முகிலின் உடல் மட்டுமே சாய்ந்திருந்தது. சிந்தனை எங்கும் சாயாமால் அமைதியற்று அலை பாய்ந்து கொண்டிருந்தது. சிந்தனை உடலைப்போல உருவமுள்ள ஒரு திடப்பொருள் அல்ல. இடம்பெயர்வதால் சிந்தனைக்கு கால் வலிக்கப் போவதும் இல்லை. இங்கிருக்கும் அதே கணத்தில் அமெரிக்காவிற்கும் சென்றுவரும். இல்லாவிட்டால் பக்கத்தில் குடிசைகள் பற்றி எரியும்போது அங்கு சென்று நிவாரணப் பணியாற்ற துணியாத சிந்தனை, சர்வசாதாரணமாக ரஷ்ய, பிரஞ்சுப் புரட்சியை அந்த வீதிகளில் சென்று பார்த்து வருமா என்ன.

முகில் முடிவு செய்தார். எள்ளை அவன் போக்கில் போய்த்தான் திருப்ப முடியும். புதிய முடிவுகளை எடுத்தார். ஆம். மண்ணுக்கேற்ற மார்க்சியம் மட்டுமே சரியான தீர்வு என்று முடிவிற்கு வந்தார். அவரின் அமைதியற்ற மனது அவர் கண்டுபிடித்த தீர்வால் அமைதியானது.

எதிர்பார்த்தபடியே எள் அன்று அதிகாலை வந்தான். முகில் அவனை சிரித்துக்கொண்டே வரவேற்றார். குடிக்க சூடான பால் தந்தார். முகில் ஏதும் பேசவில்லை. எள் 'சார் ஏதேனும் பேசுவார். அதற்கு தான் பதில் தர


படிப்பகம்

www.padippakam.com

வேண்டியிருக்கும்' என்று இயல்பாகவே அமைதியாக இருப்பான். ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக எள் பேசத் துவங்கினான்.

"சார், நீங்க என்ன் படித்திருக்கிறீர்கள்...?"

எள்ளிடம் இருந்து முகில் இப்படி ஒரு கேள்வியை எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் அவர் மனதில் மண்ணுக்கேற்ற மார்க்சியம் திரையில் தோன்றியது.

"நானா... நான் விஞ்ஞானம் மற்றும் மொழியியலில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளேன். சமூக அறிவியலில் இளங்கலை பெற்றுள்ளேன். ஆங்கிலம் தற்கால தேவை என்பதால் முனைவர் பட்டம் பெற்றுள்ளேன். அதைத் தவிர இன்னும் எவ்வளவோ... எதுக்கு இப்ப அதெல் லாம்."

மற்ற சமயமாக இருந்திருந்தால் எள் வாய் பிளந்து பார்த்திருப்பான்.

"நீங்கள் இதெல்லாம் படித்திருக்கிறீர்கள். நான் இதெல்லாம் எப்போ படிக்கிறது. நீங்க எனக்கு டீ வாங்கித் தர்ரதுக்குப் பதிலாக, தினமும் காலையில் ஆங்கிலம் சொல்லித் தந்தீர்கள் என்றால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்."

எள்ளின் இந்தப் பதிலில் முகில் அதிர்ச்சியானார். இருந்தாலும் சமாளித்துக்கொண்டு தன்னுடைய மண் ணுக்கேற்ற மார்க்சிய வழி முறையில் பேசினார்.

"தம்பி, இங்க பாரு... நீ சொன்னதற்காக நான் உன் ஊரில் உன்னுடன் ஒரு தாழ்த்தப்பட்டவனா வாழ முன் வந்தேன். காரணம், வர்க்கம் மற்றும் சோசலிசம் பற்றி நீ உணருவதற்காக. இப்பொழுது நீ கும்பகோணத்தில் உள்ள என் வீட்டில் அதாவது பார்ப்பனர்கள் வாழும் என் தாயார் வீட்டில், ஒரு முற்போக்கு சிந்தனை கொண்ட, அதாவது என்னைப்போலவே கம்யூனிசத்தை நம்பும் ஒரு முற்போக்குவாதியாக நீ ஒரு வாரம் வாழ வேண்டும். ஒரு non-dalit-ஆக இருந்துகொண்டு தலித்து களிடம் பழகுவது, அவர்களை ஏற்றுக் கொள்ள வைப்பது போன்றவற்றில் நீ வெற்றி கண்டால் நான் கூடுதலாக புரிந்து கொள்வேன்."

முகில் தொடர்ந்தார். "சம்மதமா? நீ என்னுடன் ஒரு முற்போக்குவாதியாக வாழ்ந்து உன் தலித் சமூகத்தின் நிலையைப் பார்க்க சம்மதமா?"

எள் சிறிதும் அச்சம் கொள்ளாமல் "ஆகட்டும் சார்" என்றான்.

பருவம் II

இருவரும் அக்ரகாரத்தினுள் நுழைந்தனர். கும்பகோணம் வீதியை எள் அதிசயமாய்ப் பார்த்தான். தங்களின் சேரி வீடுகளில் நிலவும் சப்தம் மற்றும் தீய வாடை இங்கு இல்லை.

வீதிகள் நேர்த்தியாக தூய்மையாக இருந்தன. மாடுகள் கிட்டதட்ட எல்லோர் வீடுகளிலும் இருந்தன. பெருமாள் கோயில் ஒன்றும் இருந்தது. எள் இதுகண்டு புதுமையாக அதே நேரத்தில் தயங்கி தயங்கி நடந்தான். ஏதோ புனிதமான இடத்தினுள் அசிங்கம் செய்ய நுழை பவனைப் பார்ப்பது போல முகில் தன்னை பார்க்கிறாற் போல் அவன் உணர்ந்தான். அவன் நடை தளர்ந்தது.

"எள்... கம்பீரமாக நடந்து வாடா. பயப்படாதேடா."

'கம்பீரமாய் நடந்தால் நான் எப்படி பார்ப்பான் போல் இருப்பேன். பறையன் போலத்தான் இருப்பேன்' என்று எள் தன் மனதில் நினைத்துக் கொண்டான்.

முகிலின் வயதான தளதள தயிர் போன்ற தாயார். மஞ்சள் நிறத்தில் முகிலின் விதவை தமக்கை. 18 வயதில் சிட்டுக்குருவிபோல தென்றலில் படபடக்கும் தங்கை. இன்னும் சில பேர். முகில் வீட்டில் நாட்கள் இரண்டு கடந்தன. அங்கு எல்லோருக்கும் எள்ளைப் பிடித்துப் போய் விட்டது.

ஆ... சொல்ல மறந்து விட்டேன். நம்ம எள்ளின் பெயர் இங்கு கம்யூனிஸ்ட் தலைவரான பரதனின் பெயர்தான். எல்லோரும் நம்ம எள்ளை பாச்சு என்றே அழைத்தனர்.

"டேய் முகில், நம்ம கோகிலாவிற்கு பாச்சை முடித்தால் என்ன?" முகிலின் தளதள தயிர் தாயார்.

எள் அதிர்ந்தான்.

முகில் சிரித்துக்கொண்டே "பாத்தாப் போகிறது" என்று பின்வரும் ஆபத்தை உணர்ந்தே பதில் தந்தார்.

f


## புதிய கோடாங்கியின் எழுச்சி முகாம்

| இடம் : | நாள்: | நேரம் |
|---|---|---|
| அரக்கோணம் | 21-8-2005 | காலை 10.00 முதல் மாலை 5.00 வரை |

தொடர்புக்கு :

மு. வீர ராகவன் வழக்குரைஞர் தொலைபேசி : 9443106956



படிப்பகம்

www.padippakam.com

## கடிதங்கள்

*அனுப்புநர்*

அரிமாதோழன்
பொதுச் செயலாளர்
லெனின் தெரு
தேவகோட்டை 630302

*பெறுநர்*

மேதகு ஆளுநர் அவர்கள்
தமிழ்நாடு மாநிலம்
சென்னை

மதிப்பிற்குரியீர்,

பொருள்:
1. சிவகங்கை மாவட்டம் தேவகோட்டைப் பகுதியில் மன்னராட்சி முறையாக செயல்படும் நாடு அமைப்பை தடை செய்யக் கோருதல்.
2. நாடு அமைப்பின் மூலம் நடந்து வரும் தீண்டாமைக் கொடுமைகளை தடுத்து நிறுத்தக் கோருதல்.
3. கண்டதேவி கிராமத்தில் நடைபெறும் சொர்ணமூர்த்தீஸ்வரர் கோயில் தேரோட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் உட்பட அனைத்து பக்தர்களும் தேர்வடம் பிடித்து தங்களது வேண்டுதலை கடவுளுக்கு செலுத்த ஏற்பாடு செய்யுமாறு கோருதல்.

மாண்புமிகு பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும், மாண்புமிகு சர்தார் வல்லபாய் படேல் அவர்களும் பதவியில் இருந்த காலத்தில் மகாராஜாக்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டு சமஸ்தானங்கள் அனைத்தும் இந்திய அரசின் கீழ் இணைக்கப்பட்டன. ஆனால் மன்னராட்சியின் கிராமப்புற வடிவங்கள் இன்னமும் ஒழிக்கப்படவில்லை. இந்தியாவில் இந்த வடிவங்கள் இன்னும் அதிகார அமைப்புகளாக கிராமப்புறத்தில் ஆட்சி நடத்துகின்றன என்பதற்கு தேவகோட்டை பகுதி ஒரு உதாரணமாகும். பாராளுமன்ற ஆட்சியையும், சட்டத்தின் பயன்களையும் கிராமப்புற குடிமக்கள் அனுபவிக்காத வகையில் இவை சட்டத்தின் ஆட்சியை தடுத்து போட்டி அரசாங்கத்தை நடத்தி வருகின்றன.

'நாடு' என்ற தமிழ்ச் சொல் இந்திய எல்லையையும், தமிழ்நாடு மாநில எல்லையையும் குறித்து வழங்கப்படுகிறது. ஆனால் தேவகோட்டைப் பகுதியில் 'நாடு' என்பது சில கிராமங்களை உள்ளடக்கிய எல்லையை குறித்து வழங்கப்படுகிறது. 'நாடு' அமைப்பின் தலைவராக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த வர் வாரிசு அடிப்படையில் நியமிக்கப்படுகிறார். தேவகோட்டை 'இரவுசேரி நாடு' அம்பலமாக பெரிய கருப்பன் அம்பலம் இருந்து வருகிறார்.

இவர்கள் கோயிலை மையமாக வைத்து அவர்கள் எல்லைக்குள் வாழும் அனைத்து சாதியினர் மதத்தினருக்கும் குடிவரி போட்டு வசூல் செய்து அரசு நிர்வாகமாக செயல்படுகிறார்கள்.

அடியாட்களை வைத்தும், தனது சாதியினரை திரட்டியும் பலாத்காரமாக அனைவரது குடும்பப் பிரச்சினைகளிலும் தலையிடுகிறார்கள். வரி செலுத்தாமலிருப்பவர்கள், இவர்களின் அதிகாரத்தை ஏற்காதவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அபராதம், ஊர்க் கூட்டத்தில் கும்பிட்டு விழுதல் முதலியவற்றிற்கு கட்டுப்படாதவர்கள் அல்லது இவர்களுக்கு அரசியலிலோ தொழில் மற்றும் அந்தஸ்திலோ போட்டியாக வருபவர்கள் ரகசியமாக திட்டமிட்டு கொலை செய்யப்படுகிறார்கள்.

நாடு அம்பலம் குடும்பத்திலும் நீதிபதிகளாக செயல்பட்டு தீர்ப்பு வழங்கி வருகின்றனர். 26 ஆண்டுகளுக்கு முன் உஞ்சனை கிராமத்தில் ஐந்து தாழ்த்தப்பட்டோர் கொலை செய்யப்பட்டது, தாழ்த்தப்பட்டோர் கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப்பட்டது, மாடக்கோட்டை சுப்பு (விவசாய சங்கத் தலைவர்) கொலை, அனுமந்தங்குடி ரூசோ (தி.மு.க. இளைஞரணி செயலாளர்) கொலை, தேவகோட்டை சிவன் கோவில் பட்டுக் குருக்கள் கொலை உள்ளிட்ட பல்வேறு கொலைகளின் பின்னணியை பரிசீலித்தால் இந்த நாடு அமைப்பின் செயல்பாடு தெரியவரும்.



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் அமைப்புச் சட்டப்படி சனநாயகத்தின் அங்கமான பிரதிநிதிகள் சபை இயங்க முடிவதில்லை. உள்ளாட்சி அமைப்புகளும் இவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கினாலும் போலியாக அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்து சட்டப்படி இயங்குவதாக காட்டப்படுகின்றன.

தேவகோட்டை நகர்மன்றத் தலைவர் ரெ. சாந்தாள் அரிமா அவர்கள் மேதகு ஆளுநர், முதலமைச்சர், நகராட்சி அரசு செயலாளர் உள்ளிட்டோருக்கு 23.8.2004–இல் கொடுத்துள்ள அறிக்கையில் நாடு அமைப்பு எவ்வாறு பிரதிநிதித்துவ அமைப்பையும் நிர்வாகத்தையும் செயல்படவிடாமல் செய்கிறது என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்.

தேர்தலில் 'நாடு' அல்லது 'நாடு அம்பலம்' எடுக்கும் முடிவுப்படியே வாக்களிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு பல கிராமங்களில் இன்றும் இருந்து வருகிறது. வாக்காளர் சுதந்திரமாக வாக்களிக்க முடியாமல் உள்ளது.

நாடு எல்லைக்குள் தொழில் வியாபாரம் செய்வோர் இவர்களின் கட்டுப்பாடுகளை ஏற்க வேண்டும். இவர்கள் விதிக்கும் பணத்தை அவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

வீட்டு மனையிடம் வாங்குவோரும் விற்போரும் இவர்கள் தீர்மானிக்கும் விலைக்கு விற்று வாங்கி இவர்களுக்கும் பணம் கட்ட வேண்டும். புறம்போக்கு, குளக்கால், தரிசு நிலங்கள் இவர்களின் விருப்பப்படியே ஆக்கிரமிக்கப்படுகின்றன.

நகராட்சி விடும் ஏலங்கள் முன்கூட்டியே இரவுசேரி நாடு அம்பலமான பெரியகருப்பன் அம்பலம் வீட்டில்தான் நடக்கிறது. அவர் தீர்மானிப்பவர்தான் ஏலம் எடுக்க முடியும் என்ற நிலையே இருக்கிறது.

மன்னராட்சியிலும், ஜமீன்முறையிலும் இருந்த பொது இடங்கள் (மஞ்சு விரட்டுப் பொட்டல், நெல் அடிக்கும் களம், கூத்துப் பொட்டல் மற்றும் புறம்போக்கு நிலங்கள்) இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அல்லது இவர்கள் பங்குபோட்டு லஞ்சம் கொடுத்து பட்டாவும் பெற்றுள்ளனர்.

'நாடு' என்பதும், 'நாட்டார்' என்பதும் மன்னராட்சியில் கிராமங்கள் எல்லையை குறித்தன. ஆனால் இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக கொடுமைகள், கலகங்கள் செய்யும்போது மற்ற சாதியினரில் தமது விசுவாசிகளையும் சேர்த்து கூட்டம் நடத்தி நாட்டு முடிவு என்று அறிவிப்பார்கள்.

தேவகோட்டைக்குப் பக்கத்தில் உள்ள கண்டதேவியில் கோயில் மரியாதை பெறுவதும், மற்ற சாதியினரை தேர் வடம் பிடிக்க விடாமல் செய்வதும் ஆண்டு முழுமையும் ஆட்சி செய்வதற்கு இவர்களுக்கு அவசியமாக உள்ளது. எனவே இவர்கள் நிர்வாகத்தில் அதிகாரிகளையும், அரசியல் கட்சிக்குள் உள்ள தலைவர்களையும், அமைச்சரவையில் தங்களுக்கு சாதகமானவர்களையும் தமக்கு சாதகமாக செயல்பட வைத்து பெரும் பணம் லஞ்சமாகவும் கொடுத்து கண்டதேவியில் தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட பிற பக்தர்கள் எவரையும் வடம் பிடித்து இழுக்க விடாமல் செய்து வருகின்றனர்.

வேண்டுகோள்

1. தேவகோட்டை பகுதியில் மன்னராட்சி வடிவமாக செயல்பட்டு வரும் 'நாடு' அமைப்பு தடை செய்யப்பட வேண்டும்.
2. வாரிசு அடிப்படையில் 'நாடு அம்பலம்' நியமிக்கப்படுவதும், 'நாடு கூட்டம்', 'நாட்டார் கூட்டம்' 'நாடு – அம்பலங்கள்' கூட்டம் என்ற அடிப்படையில் கூட்டங்கள் கூட்டுவதும் தடை செய்யப்பட வேண்டும்.
3. தேர்தலில் பாலினை வைத்தும், சேவலை நறுக்கியும் வாக்காளர்களிடம் சத்தியம் வாங்கி நாடு முடிவு செய்யும் சின்னத்தில்தான் வாக்களிக்க வேண்டும் என்ற முறை தடை செய்யப்பட வேண்டும்.

இதன் மூலம் இப்பகுதியில் சட்டத்தின் ஆட்சி நடைபெற வழிவகை காணுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
அரிமாதோழன்


படிப்பகம்

www.padippakam.com

மா. வேலுசாமி

# யார் பிரிவினைவாதிகள்?

## தமிழக அரசின் தலித் விரோதப் போக்கு...

"எல்லோரும் தேசியம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் நடைமுறையில் பிரிவினைவாதிகளாகவே வாழ்கின்றனர். தேசியம் பேசும் யாரும் இதுவரையில், இந்த அவையில் தலித் மக்களின் நலனைப் பற்றிப் பேசுவதில்லை. ஆனால் நான் தலித் மக்களைப் பற்றியோ, அல்லது அவர்களது தேவைகளைப் பற்றியோ பேசினால் மட்டும் நீங்கள் அனைவரும் என்னை எதிர்க்கிறீர்கள். என்னை ஏதோ பிரிவினைவாதி போல பார்க்கிறீர்கள். ஆனால் வெளியில் மக்களை சந்திக்கும்போது ஒரு மாதிரியாகவும், உள்ளே அவர்களுக்கான நடவடிக்கைகளில் வேறொரு மாதிரியாகவும் நடிக்கும் நீங்கள்தான் உண்மையான பிரிவினைவாதிகள்".

*- டாக்டர் அம்பேத்கர்*

அகில உலகமே வியக்கும் வண்ணம் இந்திய அரசியலை உருவாக்கியவரான அண்ணல் அம்பேத்கருக்கே இந்நிலை என்றால் இவ்வரசில் உயர்மட்டத்தில் தொடங்கி கடைநிலை வரை உழைக்கும் அரசு ஊழியனின் நிலை பற்றி நினைக்கும் போது நெஞ்சம் பதறுகிறது.

சொந்தங்களெல்லாம் அரைவயிற்றுச் சோற்றுக்கு அல் லாடும் வேளையிலே, சொகுசு மாடி கட்டி தான் மட்டும் வாழ்ந் திடவா அவனுக்கு அரசு உத்தியோகம் தேவைப்பட்டது. தன் னைப்போல தன் குடும்பம், தன் சமூகம் உயர்ந்திட எண்ணுவதே SC/ST அரசு ஊழியனின் கௌரவம். அதற்காகவே அவனுக்கு இட ஒதுக்கீடு தேவைப்படுகிறது. ஆனால் இது அரசுக்கு விரோதமான தாக கருதப்பட்டால் அரசே தலித் மக்களுக்கு விரோதமானது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். ஏனென்றால் பசுத் தோல் போர்த்திய புலிபோல இன்று அரசு என்ற போர்வையில் சாதித்திமிர் பிடித்த உயரதிகாரர்களின் சாதிவெறி அடங்கியுள் ளது. சமூகம் சாதி அடுக்குகளை கொண்டிருப்பதைப் போலவே இன்று அரசு அலுவலகங்களும் காட்சியளிக்கின்றன. அந்த அமைப்பில் படிப்பின் திறமையின் காரணமாக ஒரு தலித் ஊழி யன் சிறப்பாக செயல்படும்போது சாதீய வரையறைக்குள் அவ னது திறமைகளை ஒடுக்க சாதி இந்துக்கள் முற்படுவதே மாபெரும் கொடுமை. ஆனால் அவற்றை எதிர்க்கொள்ளும் முயற்சிகளில் மட்டுமே தன் திறமைகளை செலவிடும் அந்த தலித் அரசு ஊழியன் ஏதோ அது தனக்கு விடப்படும் சவாலாக நினைத்துக் கொள்வதே சாதாரணமாக நிகழும் வரலாறு. ஆனால் அதை தனக்கு என கொள்ளாமல் தான் சேர்ந்த சமூகத் திற்கானதாக மாற்றவேண்டும். (இது தலித்பற்று இல்லாதவர் களுக்கு பொருந்தாது). அப்போது தலித் அரசு ஊழியன் திறம்பட சவால்களைத் தாண்டி பணியாற்றிட முடியும். எனவே அரசியலுக் குள் மட்டுமல்ல அரசு இயந்திரத்திற்குள்ளும் சாதி இருக்கிறது. அரசு இயந்திரத்தை கட்டுப்படுத்தும் சக்தி தலித் விரோதப் போக்கை மேற்கொள்ளும்போது, அந்த சாதிவெறிச் செயலை தலித் அரசு ஊழியர்கள் "சுனாமி" அலைகளாய் ஆர்ப்பரித்து அவர் களின் கொட்டத்தை அடக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல் படவேண்டும் என்று அனைத்து அரசு ஊழியர்களும் மனங்கொள்ளு தல் வேண்டும். தலித்துகள் நாகரீகமற்ற, கலாச்சாரமற்ற, பொருளாதாரமற்ற அன்றாடங்காய்ச்சிகள் என்றே பார்த்து பழகி விட்ட அரசு இயந்திரங்கள் அவர்களை நாகரீகமானவர்களாக, தங்களுக்கென ஒரு கலாச்சாரத்தைக் கொண்டவர்களாக, பொருளாதாரத்தை நியாயமான வழியில் அடைய உடலையே மூலதனமாக்கி உழைக்கும் மக்களாக பார்ப்பது மிகவும் கடினம்.

எனவே இந்தப் பார்வை தலித் அதிகாரிகள், அரசு ஊழியர்களை மட்டும் விட்டு வைக்குமா என்ன? இதன் பிரதி பலிப்பாகவே தலித்துகளுக்கு சமூகத்தில் நடைபெறும் சாதிக் கொடுமைகள் போலவே தலித் அதிகாரிகளுக்கும், தலித் ஊழியர்களுக்கும் அலுவலகங்களில் மறைமுக சாதிய ஒடுக்கு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவைகளில் சிலவற்றை காண்போம். அவை :

1. ஊதிய உயர்வு/பதவி உயர்வு; 2. வசதியான இடமாற்றம்; 3. தலித் மக்களின் நலனில் அக்கறை கொள்ளும் போது; 4. அரசு SC/ST ஊழியர் சங்கத்தில் முனைப்பாக ஈடு படும்போது; 5. திறமைகளை வெளிப்படுத்தும்போது.

இவைகளையெல்லாம் செய்யக்கூடாது/ கோரக்கூடாது/ நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்பதல்ல ஒரு ஜன நாயக அரசு ஊழியனின் கடமை. அரசு ஊழியன் என்ற பொறுப்பே அனைத்தும் செய்வதுதான். ஆனால் அதையெல்லாம் செய்தான் என்றால் அவனைப் பாராட்டாமல் ஒரு தலித் இனத்தைச் சேர்ந்த அதிகாரி இப்படிச் செய்தால் அது ஜனநாயகத்திற்கு எதிரானதாக புரிந்து கொள்ளப்படுவதும் அரசு இயந்திரங்களுக்குள்ளாக உயர் சாதிவெறி இருப்பதாகவே அறிய முடிகிறது.

இவற்றையெல்லாம் நிரூபிக்கும் வகையில் தமிழக அர சின் தலித் விரோதப் போக்கு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மேலும் தலித் அதிகாரிகள் என்பவர்கள் அடங்கிப் போக வேண்டும், அடக்கப்பட வேண்டும் என்ற பொதுவிதி எழுதப் படாமலேயே அரசு அலுவலகங்களுக்குள் இருப்பதை காண முடிகிறது. உதாரணமாக தலித் மக்களின் நிலையை உயர்த்த சிறிய முயற்சிகூட மேற்கொள்ளாத அரசும், ஆளுங்கட்சிகளும் (கடந்த 55 ஆண்டுகால வரலாற்றில்) தலித்துகளுக்காக உழைக் கும், அவர்களின் நலத்தை காப்பாற்ற முனையும் அதிகாரிகளை தலித்துகளுக்காக துணிந்து குரல் கொடுக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக காத்திருப்போர் பட்டியலில் வைத்திருப்பதை யும், அவர்களை பழிவாங்கும் நடவடிக்கைகளில் இறங்குவதை யும் தலித் விரோதப் போக்காக கருதாமல் வேறென்ன சொல்வது.

சமீபத்தில் தலித்துகளுக்காக அயராது உழைத்து வரும் திரு.கிறிஸ்துதாஸ் காந்தி I.A.S. போன்ற சீனியர் தலித் அதிகாரி களின் அதிகாரத்தை முடக்கும் வண்ணம் காத்திருப்போர் பட் டியலில் வைத்ததும், அவர்களுக்கு அதிகார வளையத்தினுள் ஏகப்பட்ட நெருக்கடிகளைத் தருவதும், ஒட்டுமொத்த இரண்டு லட்ச தலித் ஊழியர்களை மிரட்டுவதும், இரண்டு கோடி தலித் மக்களின் நலன்களை எதிர்ப்பதும் அவர்களின் உணர்வுகளை அவமதிப்பதேயாகும்.

ஒட்டுமொத்த தமிழக தலித் மக்களின் அரசு பிரதிநிதி களை அச்சுறுத்தும் இந்த பாசிச அரசு இயந்திரத்தை இயக்கும் அரசியல் ஒருநாள் தலித் வோட்டுக்களை பொறுக்கிச் செல்ல வீதியிலே உலா வரும் அன்று தெரியும் எங்களின் வலியின் ஆழம். முன்புபோல இல்லை நாங்கள் இன்று. எங்களுக்குத் தெரியும் தேர்தல் விளையாட்டு. வோட்டுக்கள் மூலம் ஏற்கனவே 40 சீட்டுக்களை இழந்த பின்பும் வரவில்லை தெளிவு எனில், பொறுத்திருங்கள்; தேர்தல் வரட்டும், நாங்கள் முடிவு செய்வோம் உண்மையான பிரிவினைவாதிகள் யாரென்று. ◆



படிப்பகம்

www.padippakam.com

# மாணவர்கள் நுழைவும் அரசின் ரத்தும்

■ ஐ.ஜா.ம. இன்பகுமார்
inbame@yahoo.co.in

**செய்தி**

பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், வேளாண்மை மற்றும் சட்டப் படிப்புகளில் மாணவர்களை சேர்ப்பதற்காக நடத்தப்பட்டு வந்த நுழைவுத் தேர்வு முறையும், மேல்நிலை கல்வியில் அதிக மதிப் பெண்கள் பெறுவதற்காக எழுதப்படும் இம்ப்ரூவ் மெண்ட் தேர்வு முறையும் 2004-ஆம் ஆண்டோடு ரத்து செய்வதாக முதலமைச்சர் ஜெயலலிதா 6.6.2005 அன்று உத்தரவு பிறப்பித்து, அறிக்கையும் வெளியிட்டார்.

**செய்தியின் விளைவுகள்**

* நுழைவுத் தேர்வு முறையையும், இம்ப்ரூவ் மெண்ட் தேர்வு முறையையும் ரத்து செய்திருப்பதை கல்வியாளர்களும், பெரும்பான்மையான கட்சிகளும், வரவேற்றுள்ளனர்.

* நுழைவுத் தேர்வு ரத்தை, ரத்து செய்யக் கோரி மாணவர்களின் சார்பாக (ஆதிக்க சாதி - மேட்டுக்குடி மாணவர்கள்) சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

* சென்னை உயர் நீதிமன்றமோ "நுழைவுத் தேர்வு தொடரும். ஆனால், இந்த ஆண்டு இம்ப்ரூவ்மெண்ட் தேர்வு செல்லும்" என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

* பா.ம.க. நிறுவனர் திரு. இராமதாஸ் அவர்கள், சென்னையில் போராட்டம் நடத்தியதோடு, நுழைவுத் தேர்வை இரத்து செய்ய அவசர சட்டம் கொண்டு வரவேண்டும் எனக் கூறியுள்ளார்.

**நுழைவுத் தேர்வு குறித்து முதலமைச்சர் வெளியிட்ட அறிக்கையும், உண்மை நிலவரமும்**

**அறிக்கை**

தொழிற் கல்லூரிகளில், மாணவர்கள் சேர்வதற் கான இடங்கள் நிறைவாகவும், அவற்றில் சேர விண்ணப் பிப்போர் எண்ணிக்கை அதிகமாகவும் இருந்தன. இதையடுத்து நுழைவுத் தேர்வு முறை கொண்டுவரப் பட்டது.

**நிலவரம்**

இது உண்மைதான். ஆனால் இது சரியா? தவறா? என்பதினை அரசு ஆராய்ந்து, தேவையான இடங்களை கூட்டியிருக்க வேண்டும். மேலும், கல்லூரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், இந்த யுக்தியை செயல்படுத்தாமல், மாணவர்களின் சேர்க்கையை வடிகட்டும் நோக்கத்தோடு நுழைவுத் தேர்வு முறையை கொண்டு வந்தது.

**அறிக்கை**

இப்போது நிலைமை பெரிய அளவில் மாறி விட்டது. தொழிற்படிப்புகளில், மாணவர்களுக்கான இடங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

**நிலவரம்**

உண்மைதான். அரசு இனிமேல், தொழிற்கல்லூரிகளை துவங்கப் போவதில்லை என்று கொள்கையளவில் எடுத்த முடிவின் அடிப்படையில், தனியார் கல்லூரியை யாரெல்லாம் துவக்கினார்கள் என்ற பட்டியலை காணும் போது, திடீர் பணக்காரர்களும், குறுக்கு வழியில் பணம் சம்பாதித்தவர்கள் மற்றும் அரசியல் பிணாமிகள்தான் அதிகம், இவர்கள் கல்லூரிகளை துவக்கும் போது இவர்களது தகுதி என்னவென்று கண்டால் அவமானம் தான். இதில் ஆறுதல் அளிக்கும் விஷயம், சமூக நோக்கங் களுக்காக சிறுபான்மை மதத்தவர்கள் துவக்கிய கல்வி நிறுவனங்கள் மட்டும் மேற்கண்ட விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவை.

இவர்கள் துவக்கிய பெரும்பாலான கல்லூரிகள், கிராமங்களிலும், நகர் சார்ந்த கிராம (Semi Urban) நஞ்சை, புஞ்சை நிலங்களில், பாதி சுவர் எழுப்பி, மூங்கில் தட்டியை தடுப்பு சுவராக வைத்து,கூரைக் கொட்டகைக் குள் இக்கல்லூரிகள் ஆரம்பமாயின.

90-களின் ஆரம்ப கட்டங்களில், இக்கல்லூரிகள் கவனம் பெறவில்லை. ஆனால் மீடியாக்களின் புண்ணியத்தால் இன்று இக்கல்லூரிகள் மக்களிடையே முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன.

**அறிக்கை**

பொறியியல் கல்லூரிகளில் போதிய அளவிற்கு இடங்களை நிரப்ப இயலவில்லை என்ற நிலை உருவாகி விட்டது.

**நிலவரம்**

நுழைவுத் தேர்வு நடத்தி மாணவர்களை வடிகட்டும்போது, மாணவர்கள் குறைவாகவே தேர் வாகின்றனர். அப்படியே நுழைவுத் தேர்வில் தேறுகின்ற மாணவர்களும், அரசுக் கல்லூரிகளில் படிப்பதையே விரும்பினார்களேயொழிய, தனியார் கல்லூரியைக் கண்டாலே பாம்பை மிதித்தவர்களைப் போலாகின் றனர். இது போதாதென்பதற்கு இவர்களின் கல்லூரி கட்டணமோ சொல்லவே தேவையில்லை.

**அறிக்கை**

+2 தேர்வு முடிந்ததுமே, நுழைவுத் தேர்வுகளை எழுத வேண்டியிருப்பதால், அது மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பெரும் அதிர்ச்சி - வேதனை அளிக்கிறது.

**நிலவரம்**

ஒரே பாடத்திட்டத்தில் அடுத்தடுத்து இரண்டு தேர்வுகள், பல கல்வி நிலையங்களுக்கு இதே அடிப் படையில் பல நுழைவுத் தேர்வுகள் என்ற வகையில்



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், இருந்த சுமையும், அழுத்தமும் நீங்கியுள்ளது என்ற கருத்து எனக்குப் புரியவில்லை. முன்னேற்றத் தேர்வு பயிற்சி மய்யங்கள், பயிற்றுவிக்கும் கடைகள் போல செயல்படுவதையும், தேர்வுகளுக்கு நடத்தப்படும் பயிற்சிக்கான கட்டணங்கள் அதிர்ச்சி தருபவையாக இருக்கிறதென்பதும் புரிகின்றது.

**அறிக்கை**

ஒட்டு மொத்த கிராமப்புற மாணவர்களின் கல்வி நலன்களுக்காக இந்த ரத்து உத்தரவு போடப்படுகின்றது.

**நிலவரம்**

நுழைவுத் தேர்வை ரத்து செய்ததால், தொழிற் படிப்புகளில் கிராமப்புற மாணவர்கள் தேர்வு அதிகரிக்கும் என்று கூறப்படுவது ஏற்பதற்கில்லை. மேலும், 12-ஆம் வகுப்பு இறுதித் தேர்வு மதிப்பெண் பட்டியலிலேயே சேர்க்கப்படும் என்பதும், தொழில் படிப்புகளில் கிராமப்புற மாணவர்கள் முன்பைவிட அதிக அளவில் சேருவதற்கான வாய்ப்பும் இல்லை.

* நுழைவுத்தேர்வு முறை 1984-இல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1985-இல் தனியார் மயம் கல்வித்துறையில் நுழைந்ததாலும், 90-களில் தனியார் மயமாக்கல் வேகமாக நடைபெற்றது. இதனால், சுயநிதிக் கல்லூரிகள் காளான்கள் போல முளைத்தன. மேலும் தனியார் மருத்துவ மனைகளும் அதிகரித்ததால், மருத்துவத் துறையில் மக்களின் ஈர்ப்பு அதிகரித்தது.

* பல்வேறு கல்வி நிறுவனங்கள் கட்சி சார்புடையவர்களால் துவங்கப்பட்டதால் இக்கூட்டங்களின் செல்வாக்கு கல்வித் துறையில் அதிகரித்ததாலும் இவர்கள் மீதான கண்காணிப்பு குறைந்தது. இதனால் நுழைவுத் தேர்வில் +2 இரண்டாம் ஆண்டு பாடத் திட்டத்தில் இருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்பட்டதால், +1 முதலாம் ஆண்டு பாடத்திட்டம் முக்கிய மற்றுப் போனது. இதனால், பெரும்பாலான சுயநிதி மற்றும் மெட்ரிக் பள்ளிகள் +1 பாடத்தை முதல் 3 மாதங்களுக்கு பெயருக்கு நடத்திவிட்டு, +2 பாடத்திட்டத்தை ஆரம்பித்தனர்.

* ஆனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் அவற்றை செய்ய முடியாததால் அரசு சார் பள்ளி மாணவர்களுக்கும், சுயநிதி பள்ளி மாணவர்களுக்கும் இடையே ஆரோக்கியமற்ற போட்டி எழுந்தது.

* சில பள்ளிகளில் பள்ளி நிர்வாகமே பார்த்து எழுதும் மோசடியை திட்டமிட்டு அரங்கேற்றுவதோடு, பள்ளித் தேர்வை கண்காணிக்கும் பறக்கும் படையையும் சரியான முறையில் கவனித்து விடுகின்றனர்.

## நுழைவுத் தேர்வு ரத்து – ஓர் அலசல்

ஒட்டுமொத்த கிராமப்புற மாணவர்களின் நலன்களுக்காக நுழைவுத் தேர்வு ரத்து என்பது நமக்கு எங்கேயோ இடிக்கிறது. ஏனெனில் கிராமப்புற நலன்களுக்காக இந்த அரசு செய்த திட்டங்கள் சில:

* கிராமங்களில், குறிப்பாக சேரிகளில், நடைபெற்றுவந்த ஓராசிரியர் மற்றும் ஈராசிரியர் பள்ளிகளை மூடியது.

* ஆசிரியர் பணி இடங்களை நிரப்பாமல் இழுத்தடித்துக்கொண்டு இருப்பது.

* பள்ளி நிர்வாகம், தங்களது பள்ளிகளில் போதுமான சுகாதார, இருப்பிட, அடிப்படை வசதி மற்றும் பம்மாத்து வேலைகள் செய்ய Annual Maintenance Grant தராமல் இருப்பது

* பெரும்பான்மையான பள்ளிகளில் கழிப்பிட வசதி இல்லாமல் இருப்பது (அய்யோ பாவம்... பெண் மாணவர்கள், பெண் ஆசிரியர்கள் மற்றும் பெண் ஊழியர்கள்)

* மத்திய அரசின் உலக வங்கி திட்டமான "சர்வ சிக்ஷ அபியான்" மூலம் ஆசிரியர்கள், ஆசிரிய வேலையை செய்கிறார்களோ இல்லையோ, வாக்காளர் பட்டியல், குடும்ப அட்டை பட்டியல், போலியோ அம்மை கணக்கெடுப்பு போன்ற வேலைகளில் கவனத்தை திருப்பியது.

* உடற்பயிற்சி, ஓவியம், கைவினை, நூலகம், Moral போன்ற வகுப்புகளை சுத்தமாக தூக்கியெறிந்தது.

* இப்படிப்பட்ட அலட்சியத்தின் காரணமாக, மெட்ரிக் பள்ளிகள் மீது மக்களுக்கான மோகத்தை உருவாக்கி, இப்பள்ளிகள் சாக்ஸ், டை, பெல்ட், வேன் என கொள்ளையடிக்க துணைபோனதென இருக்க, இப்போது ரத்து என்பதும், ஒரே பொதுப்போட்டி தேர்வு வைப்பதும் எவ்விதத்தில் சரியாகும். இந்த நுழைவுத் தேர்வு முறையை சமத்துவ அடிப்படையிலானது என்று புத்தி உள்ளவர்கள் யாரேனும் கூற முடியுமா?

* தொழிற் கல்விக்கான நுழைவுத் தேர்வு என்பது சட்டமும், விதிமுறையும் பொதுவில் கூறுகிறதேயொழிய, அதற்கான கல்வி மற்றும் அதிகார எல்லையை இதுவரையில் தீர்மானிக்கவில்லை. இதன் விளைவாக பல்கலைக் கழகங்கள், நிகர் நிலை பல்கலைக் கழகங்கள், சுயநிதிக் கல்லூரிகள் போன்றவை தனித்தனியாக நுழைவுத் தேர்வை நடத்துகின்றன.

* சமீப காலமாக நாமக்கல், இராசிபுரம், சேலம் போன்ற பகுதிகளில் சொல்லப்பட்டு வந்த "மதிப்பெண் பட்டறைகளில்" மாணவர்களை மதிப்பெண் குவிக்கும் எந்திரமாக மாற்றுகின்ற அவலம் கேலிக்குரியதாக உள்ளது.

* இடஒதுக்கீடு கொள்கையை எதிர்க்கும் ஆதிக்க சாதியினர் முன்பு கூறியதுபோலவே தகுதி, திறமை, தரம் என காரணங்களை முன்னிறுத்தி நுழைவுத்தேர்வு ரத்தினை கடுமையாக எதிர்க்கின்றனர்.

* ஒரு மாநிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கல்வித் திட்டங்கள், பல்கலைக் கழகங்கள் இருந்தால் சமநிலையை ஏற்படுத்தி பொதுவான நுழைவுத் தேர்வு நடத்தப்பட வேண்டும். இத்தேர்வின் மூலமாக தொழிற் கல்வி மாணவர்களுக்கான தரவரிசை நிர்ணயிக்கப்பட்ட பிறகு, அதனடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும். இவை அரசியல் சட்டம் 14-ஆவது பிரிவின்படி சமத்துவ அடிப்படையிலான விதிமுறையாகவும், சட்டமாகவும் 1999-இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தை தனக்கு துணையாக எடுத்துக் கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட சட்டத்திற்கு விரோதமாக தமிழக அரசு போட்ட உத்தரவு செல்லாது என தீர்ப்பளித்தது.

* இன்றைய யதார்த்தம் என்னவென்றால், ஆதிக்க



படிப்பகம்

www.padippakam.com

சாதி மற்றும் மேட்டுக்குடி மாணவர்கள் CBSE மற்றும் ISC பாடத்திட்டத்தில் கவனம் செலுத்துவதற்காக தனியார் மெட்ரிக் பள்ளிகளில் படிக்கும் இவர்கள், +2 முடித்தவுடன் தொழிற்கல்லூரி படிப்பதற்காக தனியார் கல்லூரிகளில் சேராமல், அரசுக் கல்லூரிகளில் சேர்கின்றனர். ஆனால், கிராமப்புற மாணவர்களோ, குறிப்பாக தலித்துகளோ CBSE மற்றும் ISC பாடத்திட்டம் படிக்க நினைத்தாலும், இங்கு வசூலிக்கப்படும் கட்டணங்கள் அவர்களுக்கு எட்டாக் கனியாக இருப்பதால், State Board பாடத் திட்டத்தையே எடுக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. இவ்வாறு அரசுப் பள்ளிகளில் கல்லூரிகளுக்கு செல்லும்பொழுது நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை என காரணம் காட்டி இடம் மறுக்கப்படுவதால், தனியார் கல்லூரி களில் அதிக கட்டணம் செலுத்தி படிக்க வேண்டிய நெருக்குதல் உண்டாக்கப்படுகிறது.

* ஒரு வாதத்திற்கு இப்படி வைத்துக் கொள்ளுவோம்; தொழிற்கல்வியில் மேற்படிப்பை அரசு கல்லூரிகளில் பயில்வதற்காக நடத்தப்படும் நுழைவுத் தேர்வில், முதல் வகுப்பிலிருந்து +2 வரை அரசு பள்ளியில் படிக்கின்ற கிராமப்புற மற்றும் கார்ப்ரேசன் பள்ளிக்கூட மாணவர்கள் தேர்ச்சி பெறாமல், மெட்ரிக் மற்றும் தனியார் பள்ளியில் படிக்கின்ற மாணவர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெறுவதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும்.

* அரசு பள்ளியில் படிக்கின்ற கிராமப்புற மாணவர்கள் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெறுவது குறைவாகவும், ஆனால் அதே பகுதியில் உள்ள மெட்ரிக் மற்றும் CBSE பள்ளி மாணவர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெறுவது என்பது மாணவர்களின் தகுதியின்மையா? அல்லது ஆசிரியர்களின் பாடம் நடத்துகின்ற திறமையா? என்பதும் விவாதத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

* வசதியும் வாய்ப்புமுடைய CBSE மற்றும் ISC பாடத்திட்டம் முடித்த மாணவர்கள், பொருளாதார சூழலால் State Board Syllabus மூலம் படித்து வரும் கிராமப்புற மாணவர்களுக்கும் நுழைவுத் தேர்வு ரத்தினால், குறிப்பாக கிராமப்புற மாணவர்களுக்கு பெரிதாக பயன் விளைவிக்கப் போவதில்லை என்றாலும், மெட்ரிக் பள்ளி மாணவர்களுக்கு அந்த சுமை நீங்கியுள்ளது.

* அனைத்திந்திய அளவில் ஒரே நுழைவுத் தேர்வு என இந்து 20.06.2005 செய்தித்தாளில் அதன் ஆசிரியர் ராம் கூறியதும் ஏற்புடையதல்ல. ஏனெனில் இது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டை வெட்டுகின்ற அபாயம் உள்ளது."

* ஒரே ஒரு ஆறுதல் என்னவெனில், இம்ப்ரூவ்மெண்ட் தேர்வை ரத்து செய்ததாகும். ஏனெனில் இது மிகப்பெரிய மோசடிக்கு மட்டுமே வழிவகுத்துள்ளது. கடந்த ஆண்டு புள்ளி விவரத்தை காணும்போது இந்த மோசடி வெட்ட வெளிச்சமாகும். கடந்த ஆண்டு மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தவர்களில் 50% இம்ப்ரூவ்மெண்ட் மாணவர்கள். மொத்தம் 5 லட்சம் மாணவர்களில் இம்ப்ரூவ்மெண்ட் தேர்வு எழுதியவர்கள் ஐந்தாயிரத்திற்கும் குறைவே. இதனையே, வேறு வகையில், சொல்வதாக இருந்தால் 1 விழுக்காடு உள்ள பிரிவினர் 50% விழுக்காடு மருத்துவக் கல்லூரி இடத்தை பிடித்துள்ளனர். இந்த ஆண்டு 2005-இல் தேர்வு பெற்ற +2 மாணவர்களில் மாநில அளவில் தேர்வு பெற்ற முதல் 10 மாணவர்களில் மூன்று மாணவர்கள் இம்ப்ரூவ் மெண்ட் மாணவர்கள் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

**நிறைவாக**

உண்மையில் கிராமப்புற மாணவர்கள் மீது இந்த அரசுக்கு அக்கறை இருக்குமெனில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

*பல்வேறு பாடத்திட்டங்களை (State Board, Matric, CBSE, ISC) நீக்கிவிட்டு பொதுவான பாடத்திட்டங்களை அமல்படுத்திவிட வேண்டும்.

* தொழிற்கல்விக்கான இடங்களில் கிராமப்புற மாணவர்களுக்கு குறைந்தது 25% ஒதுக்கீடு ஒதுக்கப்பட வேண்டும். இந்த ஒதுக்கீட்டில் கிராம நகர்ப்புற (semi urban), நகர்ப்புற (Urban/Town) மாணவர்களை கண்டிப்பாக தவிர்த்துவிட்டு, கிராமப்புற மாணவர்களுக்கு மட்டுமே இந்த ஒதுக்கீடு நிரப்பப்பட வேண்டும்.

*சுயநிதிக் கல்லூரிகள், நிகர் நிலை பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றை ஒழித்துவிட்டு, அரசே இக்கல்வி நிறுவனங்களை நடத்திட வேண்டும்.

*அவ்வாறு நடத்தும்பட்சத்தில், அரசியல்வாதிகள் தலையீடு அதிகரிக்கும் ஆபத்து உண்டு. இதனை கண்கானிக்க "மக்கள் கண்கானிப்பு குழு" ஒன்றை உருவாக்கி அரசியல்வாதிகளின் தலையீட்டை கண்கானித்து அவர்கள்மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இவை நடைபெறும்பட்சத்தில், ஏழை எளிய மக்கள், குறிப்பாக தலித் மக்கள் அனைவரும் கல்வி கற்க வாய்ப்புண்டு. ◆

**அம்பேத்கர் விழிப்புணர்வு பாசறை மற்றும் எல்.ஐ.சி. நிறுவனத்தின் SC/ST ஊழியர் சங்கமும், தலித் பன்னாட்டுக் கல்வி மையமும் இணைந்து நடத்தும்**

# நிலவுரிமை கருத்தரங்கு

இடம் : LIC கேண்டீன் ஹால், அண்ணா சாலை சென்னை-2

நாள் : 17-8-2005 (புதன் கிழமை)

நேரம் : மாலை 4.30 மணி

தொடர்புக்கு

*கோ. நீலமேகம்*
அம்பேத்கர் விழிப்புணர்வு பாசறை
[98414-65691]

*பாரதிதாசன்*, LIC
[94438-84814]


படிப்பகம்

www.padippakam.com

■ பேரா. பிரபா. கல்விமணி (எ) கல்யாணி

# நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டால் கிராமப்புற மாணவர்கள் பயன் அடைவார்களா?

**இடஒதுக்கீடு இல்லையென்றால் ஒரு கிராமப்புற மாணவனுக்குக் கூட, அவன் எந்தப் பிரிவாக இருந்தாலும் இடம் கிடைக்காது என்பதே உண்மை. எனவே கிராமப்புற மாணவர்களுக்கு இடஒதுக்கீடு இல்லையென்றால், நுழைவுத் தேர்வு இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களுக்கு தொழிற் கல்லூரிகளில் உரிய பிரதிநிதித்துவம் கிடைக்காது.**

மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட தொழிற் கல்லூரிகளில் சேர்வதற்கு நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டு 21 ஆண்டுகள் ஆகிறது. தொடக்கத்திலிருந்தே, நுழைவுத் தேர்வு ஒதுக்கப்பட்ட, கிராமப்புற ஏழை எளிய மாணவர்களுக்கு எதிரானது என்றும் எனவே அது ரத்து செய்யப்பட வேண்டும் என்று பல இயக்கங்கள் மற்றும் கட்சிகள் குரல் கொடுத்து வந்துள்ளன. அண்மையில் தமிழகத்தில் உள்ள அனைத்து எதிர்கட்சிகளும் அதிலும் குறிப்பாக பா.ம.க. நுழைவுத் தேர்வுக்கு எதிராக போராட்ட நடவடிக்கைகளிலும் இறங்கியது.

இதனையடுத்து தமிழக முதல்வர் கடந்த ஜுன் 9 அன்று நுழைவத் தேர்வையும், மதிப்பெண் மேம்பாட்டுத் தேர்வையும் **(Improvement examination)** ரத்து செய்து உத்திரவு பிறப்பித்தார். தமிழக முதல்வர் அவர்களும் கிராமப்புற மாணவர்களின் நலன் கருதியே மேற்படி இருதேர்வுகளும் ரத்து செய்துள்ளதாகவும், மேலும் இந்த ஆண்டு தொழிற் கல்லூரி சேர்க்கைக்குக்கூட அவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று அறிவித்தார்.

இவ்வாறு தமிழக அரசு நுழைவுத் தேர்வை ரத்து செய்தது செல்லாது என சென்னை உயர்நீதி மன்றம் 27-6-2005 அன்று தீர்ப்பளித்துள்ளது. இதனை எதிர்த்து தமிழக அரசு டெல்லி உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய இருப்பதாக அறிவிப்பு வந்துள்ளது. பேரவையைக் கூட்டி சட்டம் இயற்றி நுழைவுத் தேர்வு ரத்து செய்ததை பாதுகாக்க, தமிழக அரசு தவறிவிட்டது என்று கூறி 28.6.2005 அன்று சென்னையில் பா.ம.க. நிறுவனர் மாணவர்களுடன் உண்ணாநிலை போராட்டம் மேற் கொண்டார்.

இந்நிலையில் நுழைவுத் தேர்வு ரத்து சரியா? தவறா? என்ற விவாதத்திற்குள் போகாமல், நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டால் கிராமப்புற மாணவர்கள் பயன் அடைவார்களா? என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கிராமப்புற மாணவர்கள் என்பவர்கள் யார்?**

1996 இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், தொழிற் கல்லூரி சேர்க்கையில் கிராமப்புற மாணவர்களுக்கென்று 15ஶ இடஒதுக்கீடு அளித்தது. அப்போதுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் (1012), மாநகராட்சி மற்றும் நகராட்சி மே.நி.ப. (70), அரசு உதவி பெறும் பள்ளிகள் 674, ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் 29, அரசு உதவி பெறாத பள்ளிகள் (155), மைய அரசு பள்ளிகள் (126) மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் 668 ஆக மொத்தம் 2734 மேல்நிலைப்பள்ளிகளில், கட்டணம் கட்டிப் பயிலாத கிராமப்புற பள்ளிகள் என அறிவிக்கப்பட்டவை மொத்தம் 810 ஆகும். 27-6-2005 உயர்நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது போன்று, எவை எவை கிராமப்புற பள்ளிகள் என்பது சரியாக வரையறை செய்யப்படவில்லை என்ற கூற்று சரியானதல்ல. மேற்படி கிராமப்புற பள்ளிகளான 810 இல் பெரும்பாலானவை அரசு மேல் நிலைப் பள்ளிகளே ஆகும். அவற்றில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளும் அடங்கும். கட்டணம் கட்டிப் படித்து வரும் எந்தப் பள்ளியும் கிராமப்புறப் பள்ளி என்ற வரையறைக்குள் வராது.

மேற்படி கிராமப்புற பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கே மேற்படி கிராமப்புற ஒதுக்கீடு 15ஶ என்பது பொருந்தும். மேற்படி கிராமப்புற பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மொத்த மாணாக்கர்களில் 25ஶலிருந்து 30ஶ வரை இருப்பர். அ.தி.மு.க. ஆட்சிக்கு 2001 இல் வந்த போது, மேற்படி கிராமப்புற ஒதுக்கீடு 15ஶ என இருந்ததை 25ஶ ஆக உயர்த்தியது. இதனை எதிர்த்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தன.



படிப்பகம்

www.padippakam.com

சென்னை உயர்நீதிமன்றம் மேற்படி கிராமப்புற ஒதுக்கீட்டை ரத்து செய்தது. இதனை எதிர்த்து தமிழக அரசு டெல்லி உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.

தொழிற் கல்லூரிக்கு மாணவர்கள் எவ்விதம் தேர்வு செய்யப்படுகிறார்கள்?

மேல்நிலைக் கல்வி இரண்டாம் ஆண்டில் நடத்தப்படும் பொதுத் தேர்வில் குறிப்பிட்ட தொழிற்படிப்புக்கு தொடர்புடைய பாடங்களில் பெற்ற மதிப்பெண்களுக்கு 200 + நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களுக்கு 100 ஆக மொத்தம் 300 மதிப்பெண்களுக்கு, குறிப்பிட்ட மாணவர் பெறும் மதிப்பெண்ணைப் பொறுத்து இட ஒதுக்கீடு அடிப்படையில் பொதுப் போட்டி (OC)யில் 31ரு ம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு (BC) 30ரும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு (MBC) 20ரும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு (S.C.) 18ரும் பழங்குடியினருக்கு (S.T.) 1ரும் எனவும் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். இவையனைத்திலும் பெண்களுக்கு 33ரு-ம் தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதுதான் தற்சமயம் நிலவிவரும் சேர்க்கை முறையாகும்.

12-ஆம் வகுப்பு பொதுதேர்வு மதிப்பெண் அடிப்படையில் மட்டும் தேர்வு செய்தால் என்னவாகும்?

நகர்ப்புற கல்விச் சூழலுக்கும், கிராமப்புற கல்விச் சூழலுக்கும் இடையில் பெருத்த வேறுபாடு உள்ளது. ஒரு சோசலிச சமூக அமைப்பில் கூட கிராமத்திற்கும் நகர்ப்புறத்திற்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கும். இதனால் ஒப்பிட்டளவில் நகர்புற மாணவர்கள், கிராமப்புற மாணவர்களைக் காட்டிலும் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவர். விதிவிலக்காக எங்காவது ஒரு கிராமப்புற மாணவன் அதிக மதிப்பெண்கள் எடுக்கலாம். இதனை வைத்து கிராமப்புற மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்கள் என்று வாதிடுவது பொருந்தாது.

மேலும் தமிழகத்தில் +2 பொதுத் தேர்வில் நடைபெற்று வரும் மோசடி காரணமாக கிராமப்புற மரணவர்கள் மட்டுமின்றி நகர்ப்புறங்களில் அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று வரும் ஏழை எளிய மாணவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

1, 2, ..... 8, 9, 10 போன்று +2 என்பது ஒரு வகுப்பு அல்ல. +2 படிப்பு என்பது, பி.எஸ்.சி., எம்.எஸ்.சி. போன்று ஒரு தொடர்படிப்பு **(Course)** ஆகும். +2 பாடத் திட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, முதல் ஆண்டு பாடங்களுக்கு ஒரு பொதுத் தேர்வும், 2-வது ஆண்டு பாடங்களுக்கு இரண்டாவது ஆண்டு ஒரு பொதுத் தேர்வும் நடத்தப்பட்டு இவையிரண்டும் +2 பொதுத் தேர்வு மதிப்பெண்கள் ஆக கணக்கிடப்பட வேண்டும். இதே முறைதான் இன்றைக்கும் நமக்கு அருகில் உள்ள ஆந்திர மாநிலத்தில் பின்பற்றப்படுகிறது. தமிழகத்திலும், +2 அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்தே, நமது கல்வித்துறை இரண்டும் ஆண்டுகளும் பொதுத்தேர்வு நடத்த மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் சங்கத்தால் முறியடிக்கப்பட்டன.

இதன் காரணமாக தமிழகத்தில் +2வில் முதல் ஆண்டு பொதுத்தேர்வு எதுவும் கிடையாது. இரண்டாவது ஆண்டில் இரண்டாவது ஆண்டு பாடங்களுக்கு மட்டும் பொதுத தேர்வு நடத்தப்பட்டு அதில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்களையே +2 மதிப்பெண்களாக கருதப்படுகிறது.

**+2வில் முதல் ஆண்டில் பொதுத்தேர்வு இல்லாததால் கிட்டத்தட்ட எல்லா மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் முதல் ஆண்டிலேயே இரண்டாவது ஆண்டுக்கான பாடங்களை நடத்துகின்றனர். அதாவது இப்பள்ளிகளில் உள்ள மாணவர்கள் ஓராண்டு பாடத்தை இரண்டு ஆண்டுகள் படித்து எழுதுகின்றனர்.**

மேலும் நுழைவுத் தேர்விலும், +2 பாடத்திட்டத்தில் இரண்டாண்டுகளும் அனைத்துப் பாடங்களிலும் இருந்து கேள்விகள் கேட்கப்படாமல், +2, இரண்டாவது ஆண்டு பாடங்களிலிருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்பட்டு வருகின்றன. இது எப்படி இருக்கிறது என்றால், மூன்றாண்டு பட்டப்படிப்பில், முதல் இரண்டாண்டுகளுக்கு தேர்வு நடத்தாமல், 3-வது ஆண்டில் பயிலும் பாடங்களுக்கு மட்டும் தேர்வு நடத்தி பட்டம் வழங்குவதற்குச் சமமாகும். இது கல்வி அடிப்படையில் மிகவும் தவறானது ஆகும். நமது மனிதவள மேம்பாட்டுக்கு எதிரானதும் ஆகும்.

+2வில் முதல் ஆண்டில் பொதுத்தேர்வு இல்லாததால் கிட்டத்தட்ட எல்லா மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் முதல் ஆண்டிலேயே இரண்டாவது ஆண்டுக்கான பாடங்களை நடத்துகின்றனர். அதாவது இப்பள்ளிகளில் உள்ள மாணவர்கள் ஓராண்டு பாடத்தை இரண்டு ஆண்டுகள் படித்து எழுதுகின்றனர். ஆனால் கிராமப்புற பள்ளிகளில் ஏன் எல்லா அரசுப் பள்ளிகளிலும் +2 இரண்டாவது ஆண்டு பாடங்களை இரண்டாவது ஆண்டில்தான் பயில்கிறார்கள். அதாவது அரசுப் பள்ளி மாணாக்கர்கள் ஓராண்டு படித்து எழுதும் தேர்வை மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவர்கள் இரண்டாண்டுகள் படித்து எழுதுகிறார்கள். மேலும் அரசுப் பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லை என்பதும் முறையான கண்காணிப்பு கிடையாது என்பதுவும் கூடுதல் குறைகளாகும். இதுவே மெட்ரிகுலேஷன் மாணவர்கள் +2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுப்பதின் பரம ரகசியம் ஆகும்.

மேலும் பெரும்பாலான மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பொதுத் தேர்வுகளில் காப்பியடிக்க நிர்வாகமே திட்டமிட்டு உதவி வருகிறது. ஒவ்வொரு மெட்ரிகுலேஷன் பள்ளியும் தங்கள் பள்ளியில் பொதுத் தேர்வு மையங்களைப் பெறுவதில் குறியாக உள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள ரெட்டணை கிராமத்தில் ஒரு அரசு மேல் நிலைப்பள்ளியும் இரண்டு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. 12 மாணவர்கள் மட்டுமே +2 பொதுத் தேர்வு எழுதிய "ஹோலி ஏஞ்சல்ஸ்"க்கும், 27 பேர் தேர்வு எழுதிய "கென்னடிக்கும்" தனித்தனி தேர்வு மையங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. 250 மாணவர்களுக்கு மேல் தேர்வு எழுதிய ரெட்டணை அரசு மேல்நிலைப் பள்ளி


படிப்பகம்

www.padippakam.com

**கிராமப் புறத்தில் உள்ள திறமையான மாணவர்களுக்கு உரிய பிரதி நிதித்துவம் தொழிற் கல்லூரிகளில் கிடைக்காமல் போவது என்பது, சமூக நீதிக்கும் மட்டுமின்றி நமது நாட்டின் மனித வளமேம்பாட்டிற்கே ஏற்படும் பேரிழப்பாகும்.**

யிலேயே மேற்படி இரு மெட்ரிக்குலேசன் பள்ளி மாணவர்களான 39 பேரும் தேர்வு எழுதியிருக்க முடியும். அப்படி எழுதியிருந்தால் அவ்விரு பள்ளிகளும் நடந்து முடிந்த +2 பொதுத் தேர்வில் 100 / 100 தேர்ச்சி விழுக்காடு பெற்றிருகக முடியாதே!

மேலும், கல்வியில் அக்கறையுள்ள பெற்றோர்களின் மேற்பார்வை, போதாக்குறைக்கு கூடுதல் கட்டணத்தில் தனிப்பயிற்சி என இன்னும் பல காரணங்களால் தான் மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற முடிகிறது. ஒவ்வொரு ஆண்டும் +2 பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பெரும்பாலான மாணவர்கள் மெட்ரிகுலேசன் பள்ளிகளைச் சேர்ந்தவர்களே (உ.ம்) 1999-ஆம் ஆண்டு மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற 99 பேரில் 62 மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி பயின்றவர்கள் 2 பேர் மட்டுமே பரிசு பெற்றனர். அவர்களும் கிராமப்புற அரசுப்பள்ளிகளைச் சேர்ந்தவர்களா? என்பது கேள்விக்குறி.

எனவே நுழைவுத் தேர்வு ரத்துச் செய்யப்பட்டு, பொதுத் தேர்வு அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டாலும் கிராமப்புற மாணவர்கள் பயன் பெற முடியாது என்பது தெள்ளத் தெளிவாகிறது. கீழ்க்கண்ட தகவல், மேற்படிக் கூற்றை மேலும் உறுதி செய்யும்.

2000 - 2001இல் கிராமப்புற ஒதுக்கீடும் (25௬), நுழைவுத் தேர்வும் இருந்த போது, தொழிற் கல்லூரி மாணவர் சேர்க்கைக்காக கலந்தாலோசனைக் கூட்டத்திற்கு (Councilling)க்கு வருகைதரும்படி, பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை உற்றுக் கவனித்திருந்தால் ஒரு உண்மை நன்கு விளங்கும். கலந்தாலோசனைக் கூட்டத்திற்கு, கீழ்வெட்டு மதிப்பெண (Cutt-Off) அடிப்படையில் அழைக்கப்படுவர் அதில் பொதுப்போட்டிக்கும் (OC), பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்கும் (BC) இடையில் கட் ஆப் மதிப்பெண் வேறுபாடு, 0.5 லிருந்து 2 என மிகக் குறைவாகவே இருந்தது.

இதுபோலவே, பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்கும் இடையில் உள்ள கட் ஆப் மதிப்பெண் வேறுபாடு மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் கிராமப்புற பிற்படுத்தப்பட்ட வகுப்பிற்கும் பிறருக்கும் இடையிலான கட்ஆப் மதிப்பெண் வேறுபாடு 10- வரை இருந்தது. இதுபோலவே ஒவ்வொரு பிரிவிலும் கிராமப்புற மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே உள்ள கட்ஆப் வேறுபாடு மிகவும் அதிகமாக இருந்தது.

அதாவது இட ஒதுக்கீடு இல்லையென்றால் ஒரு கிராமப்புற மாணவனுக்குக் கூட, அவன் எந்தப் பிரிவாக இருந்தாலும் இடம் கிடைக்காது என்பதே உண்மை. எனவே கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு இல்லையென்றால், நுழைவுத் தேர்வு இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவர்களுக்கு தொழிற் கல்லூரிகளில் உரிய பிரதிநித்துவம் கிடைக்காது என்பது தெட்டத் தெளிவாகிறது.

**தவறான புள்ளி விவரங்கள்**

அண்மையில் உயர்நீதி மன்றத்தில் நுழைவுத் தேர்வு தொடர்பான வழக்கில், தமிழக அரசு சார்பில் சமர்பிக்கப்பட்ட புள்ளிவிவரப்படி கடந்த ஆண்டு தேர்வு எழுதிய 5 லட்சம் +2 மாணவர்களில் 2,10,000 பேர் கிராமப்புற மாணவர்கள் என்றும், மருத்துவப்படிப்பில் உள்ள மொத்த இடங்களான 1335 இல் 272 இடங்கள் கிராமபபுற மாணவர்களுக்கு கிடைத்துள்ளது என்று கூறியுள்ளது. 5 லட்சம் மாணவர்களில் 2 லட்சத்து 10 பேர் என்பது 42௬ அதாவது கிராமப்புற பள்ளி மாணவர்கள் 42௬ என ஆகிறது. கிராமப்புற பள்ளி மாணவர்கள் ஏற்கனவே பார்த்தது போல் 25லிருந்து 30௬க்கு மேல் இருக்க முடியாது. மேலும் இதில் 272 பேருக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது என்பதுவும் தவறான புள்ளி விபரம் ஆகும். ஒன்றிரண்டு கிராமப்புற மாணவர்களுக்கு மட்டுமே இடம் கிடைத்திருக்க முடியும்.

## கிராமப்புற மாணவர்களுக்கு தீர்வு தான் என்ன?

நிலவிவரும் பின்தங்கிய கல்விச் சூழல், தேர்வு முறைகளில் மோசடி.... போன்ற காரணங்களால் கிராமப் புறத்தில் உள்ள திறமையான மாணவர்களுக்கு உரிய பிரதி நிதித்துவம் தொழிற் கல்லூரிகளில் கிடைக்காமல் போவது என்பது, சமூக நீதிக்கும் மட்டுமின்றி நமது நாட்டின் மனித வளமேம்பாட்டிற்கே ஏற்படும் பேரிழப்பாகும். உயர்நீதி மன்றத்தில் நடந்த விவாதங்களையும், தீர்ப்பையும் பார்க்கும்போது, நுழைவுத் தேர்வை, பேரவையைக் கூட்டி சட்டம் இயற்றி சட்ட ரத்து செய்ய முடியுமா? என்பது கேள்விக்குறியே.

இச்சூழலில் +2 கல்வியில் இரண்டு ஆண்டுகளும் பொதுத் தேர்வுகள் நடத்துவதோடு, நுழைவுத் தேர்விலும், +2 படிப்பில் உள்ள இரண்டாண்டு பாடங்களிலும் இருந்து கேள்விகள் சமமாக கேட்கப்பட வேண்டும். மேலும் இத்தேர்வுகள் அனைத்திலும் காப்பி யடிக்கும் கலாச்சாரம் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும். மேலும் கிராமப்புற மாணவர்களுக்கு 25௬ இட ஒதுக்கீடு பெறுவதற்கு ஏற்றவாறு உரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும். மேலும் ஐ.ஐ.டி. போன்ற மத்திய அரசு நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கான சேர்கையிலும் கிராமப்புற மாணவர்களுக்கு தனி இட ஒதுக்கீடு கோருவதுடன், அவற்றிற்கான நுழைவுத் தேர்வுகளில் தமிழிலும் கேள்வித்தாள் இருக்க வேண்டும். இது போன்ற இன்னும் பல கோரிக்கைகளை, கல்வியிலும், சமூக மேம்பாட்டிலும் அக்கறையுள்ளவர்கள் ஆலோசித்து முன்வைப்பதுடன் அதற்கான வெகுசனப் போராட்டங்களிலும தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

*19.06.2005 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற தகவல் நேரம் நிகழ்ச்சியில் ஆற்றிய உரை*



படிப்பகம்

www.padippakam.com

■ அ. வேலுச்சாமி

# திருச்சி மாவட்ட மக்கள் இயக்கத்தின் பஞ்சமி நிலப் போராட்டம்



லால்குடி R.D.O அலுவலகம் முன்பு திரு. கருப்பன் இ.ஆ.ப.(ஓய்வு) தலைமையில் நடந்த நில உரிமை ஆர்ப்பாட்டம்

பஞ்சமி நில மீட்பு - மக்கள் இயக்கத்தின் தொடர்ச்சியான போராட்டத்தின் அடிப்படையில் வாழையூர் கிராம அரிசன கூட்டுப் பண்ணைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 240 ஏக்கர் நிலங்கள் சட்ட விரோதமாக ஆதி திராவிடர் அல்லாதோருக்கு கைமாறி உள்ளதை கண்டறிய தனி விசாரணை அலுவலரை நியமிக்கக் கோரியும், சனமங்கலம் கிராம பஞ்சமி நிலங்களை மீட்டெடுக்கக் கோரியும், பெரிய குறுக்கை அகரம் 90 ஏக்கர் நிலங்களுக்கு நிலமற்ற ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்கக் கோரியும், நிலமற்ற ஆதி திராவிடர் களுக்கு தலா 5 ஏக்கர் நிலம் வழங்கக் கோரியும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்கள் இயக்கம் 21-7-2005 அன்று பேரணி ஒன்றை நடத்தியது. லால்குடி நகரில் சந்தைப்பேட்டையில் தொடங்கி தாசில்தார் அலுவலகம் வழியாகச் சென்ற பேரணியினர் சுமார் 12 மணியளவில் லால்குடி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் சென்று அவ்வலுவலகம் முன்பாக மாபெரும் ஆர்ப் பாட்டம் செய்தனர்.

**நோக்கங்கள்**

- தலித் மக்கள் பஞ்சமி நிலம் குறித்து, தெளிவான விழிப்புணர்வு பெறச் செய்தல்.

- ஒவ்வொரு தலித் வெகுஜன பொதுமக்களையும் போராட்டம் செய்வதற்கு தயார்படுத்துதல்.

- சட்ட விரோத்மாகக் கைமாறியுள்ள பஞ்சமி நிலங்களை மீட்டு தலித்துகளுக்கே ஒப்படைக்கக் கோரும் அரசாணைகளையும், வருவாய் நிலையாணைகளையும், நில நிர்வாகத் துறை ஆணைகளையும், உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பாணைகளையும் அமல்படுத்தக் கோருதல்.

**பங்கேற்பாளர்கள்**

இந்த ஆர்ப்பாட்டத்தை தலித் நில உரிமை இயக்கத்தின் திருச்சி மாவட்ட தலைவர் P.K சண்முகசுந்தரம் திட்டமிட்டு, லீட் உதவியுடன் சுமார் 50 கிராமங்களிலிருந்து மக்களை ஒருங்கிணைத்திருந்தார்.

இந்த ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் C. மாசிலாமணி அவர்கள் தலைமை தாங்கினார்.

வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்த பெண்கள் போராட வீதிக்கு வந்து விட்டார்கள் என பேசிய கல்வி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (லீட்) நிர்வாக இயக்குநர் என். ராதா அவர்கள் பஞ்சமி நிலங்களை மீட்டெடுத்து பெண்கள் பெயரில் பட்டா வழங்கிட வேண்டும் என்று கூறினார்.

பஞ்சமி நில மீட்பு மக்கள் இயக்க மாநிலத் தலைவர் திரு V. கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் தனது கண்டன உரையில் "பஞ்சமி நிலங்கள் தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்டு பல்வேறு தீர்ப்புகள் பெறப்பட்டும், இன்றும் இம்மக்கள் இந்நிலங்களை பெறுவதற்காக போராட வேண்டிய சூழ்நிலையே ஏற்பட்டுள்ளது. பல்வேறு நலத்திட்டங்களுக்கு இந்த தலித் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியினை இம்மக்களே பெறுகின்ற வகையில் செலவிடுவது இல்லை. சமூக, பொருளாதார மேம்பாடு காண பெண்கள் அனைத்துப் போராட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள வேண்டும். ஆகவே நமக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களைப் பெறுவதற்கு நாம் ஒவ்வொரு நபரும் போராட தயங்கக்கூடாது" என்று கூறினார்.

மேற்படி கோரிக்கைகளை ஆதரித்து திரு பி.கே. சண்முகசுந்தரம், திரு எஸ். சந்திரன், திரு பு. கருப்பையா, திரு பி. தர்மராஜ், எஸ். முத்துசாமி, பழனிச்சாமி, எம். ஜெயசீலன், எஸ். முனியான்டி, விழுப்புரம் செல்வி, வழக்கறிஞர் லூசி, பேராசிரியர் பிரபா கல்விமணி மற்றும் பலர் பேசினார்கள். சுமார் 2000 ஆண்/பெண்கள் கலந்து கொண்டார்கள். மேற்படி கோரிக்கைகளை ஒரு மாத காலத்தில் நிறைவேற்றித் தருவதாக லால்குடி வருவாய் கோட்டாட்சியர் முத்தையா அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

போராட்ட குழுவினரிடம் கூறினார். இறுதியில் ஒருங்கிணைப்பாளர் அ. வேலுச்சாமி நன்றி கூறி ஆர்ப்பாட்டம் முடிந்தது.

**நமக்குக் கிடைத்த படிப்பினைகள்**

- ஒதுக்கீடு செய்யப்பட்ட பஞ்சமி நிலங்களை கண்டறிந்து பெறுவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் குழு அமைத்து (சங்கமாக) செயல்பட வழிவகை காண வேண்டும்.
- இதுபோன்ற நோக்கங்களை அடைவதற்கான பயிற்சிகள், விழிப்புணர்வு கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துதல் வேண்டும்.
- மக்கள் பங்கேற்பு மற்றும் பங்களிப்புடன் கிராம மற்றும் பொது நடவடிக்கைகளில் ஈடுபட வைப்பது அவசியமாகும்.
- கிராம அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, சமூக, பொருளாதார அரசியல் கலாச்சார மேம்பாடு காண்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கு தல் வேண்டும்.
- மாவட்டந்தோறும் தலித் வள ஆதார மையங்களை நிறுவி அவற்றின் மூலம் ஒவ்வொரு கிராமத் தேவைகள் மற்றும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அவைகளைப் பெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் வேண்டும்.
- அர்ப்பணிப்பு மிகுந்த தன்னார்வ ஆர்வலர்களை கண்டறிந்து அவர்களுக்கு தொண்டர் பயிற்சி (Cadre Building Training) வழங்குதல் வேண்டும்.
- கிராம மட்டத்திலிருந்து மாநில அளவிலான பணியினை குழுவாக (Team work) செயல்படுத்துதல் அவசியம் வேண்டும்.
- தனியாக அமைக்கப்பட்டு, வலுப்பெற்று, தமது செயல்பாடுகள் மூலம் மக்கள் இயக்கங்கள் சாதித்த வரலாறுகள் நிறைய உண்டு. கட்சிகளின் கூட்டு தவிர்ப்பது நல்லது.
- தனி நபர் வளர்வதை தடுத்திட வேண்டும். Team-ஆக செயல்பட வைக்க வேண்டும். பல்வேறு வேலைகளை பல்வேறு பொறுப்பு கமிட்டிகளை அமைத்து மக்கள் அனைவரும் பங்கேற்கவும் பங்களித்திடவும் செய்திடல் வேண்டும்.
- குழு வளர்ச்சி: மக்கள் அமைப்பு வளர்வதற்கு தாமதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. நாம் கால தாமதப்படுத்தி எதிர்வரும் காலங்களில் தலித் மக்கள் அமைப்பு மூலமே போராட்டங்களில் ஈடுபட உதவிகள் செய்யலாம்.
- சின்ன சின்ன பிரச்சினைகளில் மக்கள் அமைப்புக்களை ஈடுபட வைத்தல். இதன் மூலம் மக்கள் இயக்கங்கள் எதிர்காலத்தில் வலிமை பெற வாய்ப்புக்கள் இருக்கிறது.
- கிராமந்தோறும் நிதி ஆதாரங்களை உருவாக்கிட வேண்டும்.
- அரசு என்றால் என்ன? அதிகாரங்கள் எங்கு உள்ளது? பிரச்சினைகளுக்கு எங்கு, எப்படி, ஏன் செல்ல வேண்டும்? பொறுப்புக்களை எப்படி உணர வைப்பது? அதனை அவர்களிடமே பொறுப்புடன் செயல்பட வைப்பது எங்ஙனம்? என்பதை மக்களே அறிந்து கொண்டார்கள்.

**விளைவுகள்/தாக்கங்கள்**

- இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதன் மூலம் கல்வி மற்றும் மேம்பாட்டு (வீட்) அமைப்பின் பணி யாளர்கள் நல்லதொரு விழிப்புணர்வு பயிற்சி கிடைக்கப்பெற்றுள்ளார்கள். இது அந்தந்தப் பகுதியில் பணி புரியும் ஒவ்வொரு பகுதி பணியாளரும் அந்தந்த பகுதியில் உள்ள மக்களின் பிரச்சினைகளை/ தேவைகளை கண்டறியவும், அதனை மக்களுக்கு உணரச் செய்து அதன்மீது நடவடிக்கைகள் மக்களே எடுப்பதற்கும் வழி வகுக்கும்.
- தேர்தல் காலங்களில் மக்களின் கோரிக்கைகளாக தேர்தலில் முன் வைப்பதற்கு இது பயன்படும்.
- உள்ளாட்சி, கிராம சபை கூட்டங்களில் மக்கள் அதிகாரங்கள் வலுப்பெற இது உதவிடும்.
- சிறந்த லட்சியங்கள், கொள்கைகள், யுக்தி, தந்திரங்கள், வழிமுறைகள் கொண்ட பல தலைவர்களை உருவாக்கிட இது துணை புரியும்.
- பொதுவான நோக்கத்தின் அடிப்படையில் மக்கள் அனைவரும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்ற கருத்து அனைவருக்கும் எட்டியுள்ளது.
- போராட்ட அனுபவங்கள் புதிய போராட்டங்களை எடுத்துச் செய்திட மக்களை ஒருங்கிணைக்க மேலும் ஊக்கப்படுத்திட இது துணை செய்யும். ◆



படிப்பகம்

www.padippakam.com

■ சிவகாமி

# பூர்வக்குடிகள் எப்படி அடிமையானார்கள்

## அமெரிக்க அடிமை வரலாற்றிலிருந்து சில குறிப்புகள்

தலித்துகள் இந்நாட்டின் பூர்வக்குடிகள் என்று என் கல்லூரி வரலாற்றாசிரியர்கள் போதிக்கவில்லை. மொஹஞ்சாதாரோ நாட்களுக்கு முன்பிருந்தும் இன்று வரையிலும் அறுபடாத அவர்களின் வரலாற்றை எழுதிய வரில்லை. இருந்தும் அங்கங்கே வரலாற்றில் சில தெறிப்புகள் தலித்துகள் இந்நாட்டின் பூர்வக்குடிகள் என்பதை சொல்லியவாறு உள்ளன.

தலித்துகள் பௌத்தர்கள். எனவே கடவுள் மறுப்பாளர்களான அவர்கள் மீது தீண்டாமை கற்பிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டனர் என்று பிந்திய சோழர் கால வரலாற்றைக் கொண்டு சில வரலாற்றாளர்கள் எழுதுகின்றனர். இவர்கள் இப்படிக் கூறுவதற்குக் காரணங்கள் இல்லாமலில்லை.

■ முதன் முதலாக 1891-இல்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்கள் என்று அரசாங்கம் அறிவித்தது. எனினும் தொடர்ந்து அம்மக்கள் தாங்கள் இந்துக்கள் அல்ல என்று கூறிவருகிறார்கள்.

■ தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்கள் அல்ல என்றாலும் அவர்கள் சிறுதெய்வ வழிபாட்டாளர்கள் என்றும் கூறி வந்தனர் சிலர். ஆனால் தலித்துகளை பூர்வ பௌத்தர்கள் என்பவர்கள், அவர்கள் வணங்கும் சிறு தெய்வங்களையும் சாக்ய முனியான புத்தரே என்று சில ஆதாரங்களுடன் நிறுவுகிறார்கள். பிற்காலத்தில் புத்த விஹாரங்கள் நொறுக்கப்பட்டு, பௌத்தக் கோவில்கள் இடிக்கப்பட்டு அவ்விடங்களில் இந்துக் கோவில்கள் எழுப்பப்பட்டன என்றும், புத்த முனிவர்கள் கழுவிலேற்றிக் கொல்லப்பட்டதோடு சாக்கிய புலையர்கள் ஒடுக்கப்பட்டதுமான சான்றுகளுடன், தலித்துகள் பௌத்தர்கள் என்று நிறுவுகின்றனர்.

மேற்கண்ட காரணங்களைக் கொண்டு, இந்திய நாட்டின் தலித்துகள் யாவரும் பௌத்தர்கள்; அதனாலேயே அவர்கள் புறக்கணிக்கப்பட்டு, தீண்டாமைக்கு ஆட்படுத்தப்பட்டனர் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது போலிருப்பினும் கீழ்க்கண்ட வினாக்கள் எழுகின்றன.

■ பௌத்தத்துக்கு முந்திய காலத்தில் பூர்வக்குடிகள் என்னவாயிருந்தனர்?

■ புத்த பகவனோ அரசப் பரம்பரையில் வந்தவர்! பௌத்தத்தை ஏற்று அதை தனது சாம்ராஜ்யம் முழுவதிலும், அயல்நாடுகளிலும் பரப்பிய அசோகரோ அரசர்!! ஆகையால் பிராமண மதத்திலிருந்து விலகிய பலரும் பௌத்தத்தை ஏற்றுக் கொண்டிருந்திருப்பர் பூர்வக்குடிகளும் அவர்களில் ஒரு பகுதியினராயிருக்கக் கூடும். பௌத்தம் ஒடுக்குமுறைக்கான காரணம் என்னவென்றால், பௌத்தத்தை ஏற்றுக் கொண்ட அனைவரும் ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருக்க வேண்டும் ஆனால் பூர்வக்குடிகள் மட்டுமே ஒடுக்கப்பட்டுள்ளனர் என்பதால் பௌத்தத்திற்கு அப்பாற்பட்ட காரணம் ஒன்று இருந்திருக்க வேண்டும்! அது என்ன?

■ பௌத்த மதத்திற்கு முன் வர்ணாசிரம மதத்தாருடனும், பௌத்தம் தோன்றிய பிறகு பௌத்தர்களுடனும் பூர்வக்குடிகள் இரண்டறக் கலந்திருந்தால் இப்போது ஒடுக்கப்பட்ட வகுப்பாரை மட்டும் பூர்வக்குடிகள் என்று சொல்வது சரியானதாயிருக்க முடியுமா?

■ பிற்காலத்தில் பௌத்தம் மஹாயானம், ஹீனயானம் என்ற பிரிவுகளுக்கு உட்படுத்தப்பட்டது. மஹாயானத்தினர் புத்தரைக் கடவுளாக ஏற்றுக் கொண்டு, ஏற்றுக் கொள்ளாதாரை ஹீனயானர்களாகக் கூறினர். பௌத்தத்தில், பூர்வக்குடி அல்லாதவர் மஹாயானத்தையும், பூர்வக்குடிகள் ஹீனயானத்தையும் ஏற்றுக் கொண்டார்கள் என்று கறாராகக் கூறிவிட முடியுமா? அப்படிக் கூறுவதன் மூலம்தான் இன்றைய தலித்துகள் பௌத்தத்தை ஏற்றுக் கொண்ட பூர்வக் குடிகள் என்று கூற வாய்ப்புள்ளது. ஏனெனில் எல்லா பௌத்தர்களும் தீண்டாமைக்குட்படுத்தப்படவில்லை.

மேற்கண்ட வினாக்களுக்கு விடையளிக்க முயற்சிப்போம்.

பூர்வக்குடிகள் பௌத்தம் தழுவிய காரணத்தினால்தான் ஒடுக்கப்பட்டார்கள் என்பதன்றி அவர்கள் பூர்வக்குடிகள் என்பதாலேயே ஒடுக்கப்பட்டார்கள் என்ற முடிவுகளுக்கு வரவேண்டியுள்ளது. அதே சமயத்தில் பூர்வக்குடிகளும் பௌத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும். இக்கருத்து ஏற்புடையது என்பதோடு, இதில் எதுவும் முரண்பாடு இருப்பதாக தெரியவில்லை.

நாடு முழுவதும் பரவியிருந்த பூர்வக்குடிகள் அவ்வப்பகுதியில் ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டனர். அவர்கள் பௌத்தம் தழுவுவதற்கு முன்னும் பின்னும், தனித்த அடையாளங்களோடு வாழ்ந்திருப்ப



படிப்பகம்

www.padippakam.com

**தங்கம் கொண்டுவந்தவர்கள் கழுத்தில் செப்புத் தகடுகளைக் கட்டிவிடச் செய்தான். செப்புத் தகடு இல்லாத பூர்வக்குடிகளின் கைகளைத் துண்டிக்கச் செய்தான். தங்கம் கொண்டு வர இயலாத பூர்வக்குடிகள் காடுகளை நோக்கி ஒட்டம் பிடித்தனர். அவர்களை மோப்ப நாய்களை விட்டு விரட் டிப் பிடித்துக் கொண்டு வந்து கொன்று போட்டான்.**

தற்கு வாய்ப்புள்ளது. அதனாலேயே அவர்கள் அவர்ணர்களாக ஒதுக்கியும் வைக்கப்பட்டு வந்துள்ளனர் என்பதையும ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இனி பூர்வக் குடிகள் ஏன் அடிமைப்படுத்தப்பட்டார்கள், இந்தியா மட்டுமின்றி, உலக நாடுகள் பலவற்றிலும் பூர்வக் குடிகள் ஒரே மாதிரியாக ஒடுக்கப்பட்டுள்ளனர் என்பதை அமெரிக்க வரலாற்றின் சில குறிப்புகளிலிருந்து அறிய முற்படலாம்.

1492-ல் கொலம்பஸ் அமெரிக்காவில் காலடி வைத்ததிலிருந்து இன்று வரை உள்ள அமெரிக்காவின் சுமார் 550 ஆண்டு கால வரலாறு முழுவதும் எழுதப் பெற்றது என்பதுதான் அமெரிக்க வரலாற்றைத் தேர்வு செய்ததன் காரணம்.

எனினும் இது முழுமையான ஆய்வு அல்ல. இக்கட்டுரையின் முடிவுகளை, முன்வைக்கும் யூகங்களை, வெவ்வேறு வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டு யாரும் மறுக்கலாம், விமரிசிக்கலாம்.

இக்கட்டுரையில் நாம் காணப்போவது சில ஒற்றுமைகளை - அமெரிக்க பூர்வக்குடிகள் ஒடுக்கப்பட்ட விதத்தையும், இந்திய தலித்துகளும் பிற பழங்குடியினரும் ஒடுக்கப்பட்ட விதத்தையும், இன்றைய அவர்களின் வாழ்நிலைக்குமான ஒற்றுமைகளை.

அமெரிக்க பூர்வக்குடிகள் செவ்விந்தியர்கள் என்ற பொதுப்பெயரால் அழைக்கப்படுகின்றனர். எனினும் அரவாக்கர்கள், அஸ்டெக்குகள், பிக்கோ, இன்காஸ், ஈராக்குவோ, பௌஹாட்டன் என்று தனித்தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். பல்வேறு இனக்குழுக்கள் அடங்கிய அமெரிக்க இந்தியர்கள் 25,000 வருடங்களுக்கு முன்பாக ஆசியாவிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள். அப்போது பெர்ரிங் ஸ்ட்ரெயிட்ஸ் என்ற நிலப்பாலம் ஆசியாவையும், அமெரிக்க கண்டத்தையும் பிணைத்திருந்தது. அந்நிலப்பாலம் தகர்ந்ததும் அவர்கள் பிறரோடு முற்றிலும் தொடர்பற்றுப் போனார்கள். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அமெரிக்க கண்டம் முழுவதும் பரவினார்கள். கொலம்பஸ் வருகையின் போது அவர்கள் தொகை 750 லட்சமாக இருந்தது. வட அமெரிக்காவில் மட்டும் 250 லட்சம் பேர் வாழ்ந்திருந்தார்கள். 1635-இல் மேரிலேண்ட் பகுதியில் வாழ்ந்த இந்தியர்களால் ஒரு ஆங்கிலேயன் கொல்லப்பட்ட போது, அங்கு ஆதிக்கம் செலுத்திய ஆங்கில துரைக்கு பதிலளிக்கின்றான் இந்திய இனத் தலைவன். ஆங்கிலேய சட்டப்படி ஒரு இந்தியனைத் தண்டிக்க முடியாது. எங்கள் சமூகத்தில் இம்மாதிரியான விபத்து நேரும்போது நாங்களும் அவர்களை விசாரித்து முறையான தண்டனை அளிக்கிறோம்; நீங்கள் இந்த நாட்டுக்குப் புதியவர்கள்; ஆகையால் எங்கள் வழக்கத்திற்குத்தான் நீங்கள் உட்பட வேண்டும் என்று கூறியுள்ளான் அவன்.

ஆகையால் கொலம்பஸ் ஏதோ ஆளற்ற, நாகரீகமற்ற, அனாமதேயமான நிலத்தில் காலடி வைத்தார் என்று கூற முடியாது. மாறாக விவசாயத்தில் தேர்ந்த மனித மாண்புகளை மதித்த பூர்வக்குடிகள் அதிக எண்ணிக்கையில் வசித்த, அவர்களின் தேசத்திற்குத்தான் சென்றான்.

அமெரிக்காவின் பூர்வக்குடிகளில் ஒரு இனம் அரவாக்கர்கள். ஆணும் பெண்ணும் நிர்வாணமாக ஓடினார்கள் கடற்கரைக்கு! அங்கே வந்திருந்தது அவர்கள் இதுவரை பார்த்திராத பெரிய படகு! அதை விடவும் விநோதமாக இருந்தது, கப்பலிலிருந்து கத்திகளுடன் இறங்கிய கொலம்பஸும் அவனது சகாக்களும் பேசிக் கொண்ட மொழி. அவசரமாக ஓடிச்சென்று அவர்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் பரிசுப் பொருட்களைக் கொணர்ந்தார்கள்.

**கொலம்பஸ் எழுதுகிறான் இப்படி.**

"அவர்கள் கிளிகளை, பஞ்சு உருண்டைகளை, இன்னும் என்னென்னவோ கொண்டு வந்து நாங்கள் கொண்டு சென்ற கண்ணாடி மணிகள் இன்னும் சில பொருட்களுக்கு பண்டமாற்று செய்து கொண்டார்கள். அவர்கள் ஆயுதம் தரிக்கவில்லை. நான் எனது வாளை நீட்டியபோது, அதன் கூர்மையான நுனியைப் பற்றி வாங்கி தங்களது கைகளைக் கிழித்துக் கொண்டனர். அவர்கள் நல்ல உடற்கட்டுடன், அழகிய முகவெட்டுடன் விளங்கினார்கள். நல்ல வேலைக்காரர்களாக இருப்பதற்கு முற்றிலும் லாயக்கானவர்கள். நான் அவர்களில் 50 பேரை அடிமைப்படுத்தி என் விருப்பப்படி வேலைகளை செய்வித்தேன்."

போப்புகளாலும், மன்னர்களாலும் ஆளப்பட்டு, பணம் ஒன்றே நாகரீகச் சின்னம் என்று ஏற்றுக் கொண்ட மறுமலர்ச்சி ஐரோப்பாவிலிருந்து முதல் தூதுவனாகச் சென்ற கொலம்பஸுக்கு பாவம், இந்த எளிய மக்களின் அன்பிலும் விருந்திலும் ஈடுபாடு உண்டாகவில்லை.

"நான் வெஸ்ட் இன்டீஸ் சென்றதும், முதலில் இந்த அரவாக்கர்களை அடிமைகளாகப் பிடித்து வைத்துக் கொண்டேன். அவர்களை மிரட்டி அப்பகுதி யிலுள்ள அனைத்து சமாச்சாரங்களையும் தெரிந்துகொள்ள விரும்பினேன்" என்று எழுதியிருக்கின்றான்.

கொலம்பஸுக்கு முக்கியமாகத் தெரியவேண்டியது தங்கம் எங்கே கிடைக்கும் என்பதுதான். ஸ்பெயின் நாட்டு அரசனுக்கும் அரசிக்கும் கப்பல் நிறையத் தங்கமும், வாசனைத் திரவியங்களும் கொண்டு வருவதாகச் சொல்லித்தான் கொலம்பஸ் தன் கடற்பயணத்திற்கு கப்பலையும், ஆட்களையும் சம்பாதித்திருந்தான். அப்படி அவன் தங்கம் கொண்டு வந்தால், அவன் கொண்டு வந்ததில் 10 சதமும், புதிதாகக் கைப்பற்றிய நிலத்தின் அதிபதி பதவியும், சமுத்திரத்தின் தலைவன் என்ற பட்டமும் அளிப்பதாக ராஜா-ராணி வாக்குறுதி அளித்திருந்தனர்



படிப்பகம்

www.padippakam.com

அக்டோபர் 12, 1492-இல் விடியற்காலையில் ரோட்ரிகோ எனும் கடலாளி, தூரத்தில் தெரியும் மணற் திட்டைக் கண்டு கூவினான். அது கரிபியன் கடலில் உள்ள பஹாமா எனும் தீவு. யார் முதன் முதலில் நிலப் பரப்பை காண்கிறாரோ, அவனுக்கு ஆண்டொன்றுக்கு 10,000 மாரவேடி (ஸ்பானிய பணம்) வாழ்நாள் முழுதும் ஒய்வூதியமாக வழங்கப்படும் என்று ஸ்பெயின் அரசன் அறிவித்திருந்தான். தான்தான் முதன்முதலில் நிலப்பரப் பைக் கண்டதாகக் கூறி அதையும் பெற்றுக்கொண்டான் கொலம்பஸ்!

அரவாக்கர்கள் மக்காச்சோளம், சேம்பு, கஸாவா (மரவள்ளி வகையைச் சேர்ந்தது) பயிரிட்ட விவசாய மக் கள். நெசவு வேலையும் அவர்களுக்குத் தெரியும். விவ சாயத்திற்கு அவர்கள் மிருகங்களைப் பயன்படுத்த வில்லை. இரும்பின் உபயோகத்தையும் அவர்கள் அறிந் திருக்கவில்லை. ஆனால் மரவேலையில் சிறந்து விளங் கினார்கள். அவர்கள் காதுகளில் சிறிதளவு தங்கம் அணிந் திருந்தார்கள். அதுதான் அவர்களுக்கு வினையாகிப் போனது.

தங்கம் எங்கே என்று கேட்டு, அவர்களை அடிமைப்படுத்தி துன்புறுத்தி அழைத்துச் சென்று விட் டான் ஹைட்டி (க்யூபா) தீவுக்கு. அங்கே ஆற்றுப் படுகையில் தென்பட்ட சிறிதளவு தங்கமும், அங்கே உள்ள பூர்வக்குடியின் தலைவனால் பரிசாக அளிக்கப் பட்ட தங்கக் கிரீடமும் அவனுடைய பேராசைக்கு வித்திட்டன.

உடனேயே அம்மக்களிடமிருந்த அம்பு, வில்களை கைப்பற்றி அவர்களை நிராயுதபாணியாக்கத் திட்ட மிட்டு முதலில் அவைகளை பண்டமாற்றிக் கொள்ள தந்திரமாகக் கேட்டான். அவர்கள் மறுத்ததும் அவர் களில் இருவரை கத்தியால் இரண்டாகப் பிளந்து போட்டான். மீதிப்பேரை தான் கொண்டு வந்திருந்த நீனா, பின்ட்டா என்ற மற்ற இரு கப்பல்களில் அடிமை களாக ஏற்றிக் கொண்டான். அவன் வந்த சான்ட்டா மாரியா ஏற்கனவே பழுதடைந்திருந்தது. அதன் மரங் களைக் கொண்டு 'நேவிடாட்' என்று சிறு கோட்டையை நிறுவினான். அதுதான் அமெரிக்காவின் முதல் போர்த்த ளம். அங்கு தனதாட்கள் முப்பது பேரை நிறுத்தி தங்கம் தேடுங்கள், சேர்த்தவற்றை இங்கு கொண்டு சேமித்து வையுங்கள் என்று உத்தரவிட்டு பிறருடன் கிளம்பினான் ஸ்பெயினுக்கு. வழியில் பல அரவாக்கர்கள் கடுங்குளிரில் விறைத்து இறந்து போனார்கள்.

மாத்ரித் நகரில் அரசரைப் பார்த்த கொலம்பஸ் ஏகத்துக்கும் புளுகத் தொடங்கினான் - தான் ஆசியா சென்றடைந்து விட்டதாகவும், அங்கே ஆறுகளில் தங்கம் ஓடுவதாகவும், ஏராளமாக தங்கச் சுரங்கங்களும் வாசனைத் திரவியங்களும் உள்ளதாகவும். இவனது புளுகை நம்பிய அரசன் அவனது அடுத்த பயணத்திற்கு 17 கப்பல்களையும் 1200 கடல் வீரர்களையும் அளித் தான்.

திரும்பவும் ஹைட்டித் தீவுக்கு ஆட்களுடன் வந்திறங்கிய கொலம்பஸ், அத்தீவில் வசித்த அரவாக்கர் களில் பதினான்கு வயதுக்கு மேற்பட்டவரை அழைத்து, ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு தங்கம் கொண்டுவர உத்தரவிட்டான். கொண்டுவந்தவர்

○○

**பூர்வக்குடிகள் பௌத்தம் தழுவிய காரணத்தினால்தான் ஒடுக்கப்பட்டார்கள் என்பதன்றி அவர்கள் பூர்வக்குடிகள் என்பதாலேயே ஒடுக்கப்பட்டார்கள் என்ற முடிவுகளுக்கு வரவேண்டியுள்ளது. அதே சமயத் தில் பூர்வக்குடிகளும் பௌத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும்.**

○○

கள் கழுத்தில் செப்புத் தகடுகளைக் கட்டிவிடச் செ தான். செப்புத் தகடு இல்லாத பூர்வக்குடிகளின் கை ளைத் துண்டிக்கச் செய்தான். இதனால் தங்கம் கொண் வர இயலாத பூர்வக்குடிகள் காடுகளை நோக்கி ஓட்ட பிடித்தனர். அவர்களை மோப்ப நாய்களை விட்டு விர டிப் பிடித்துக் கொண்டு வந்து கொன்று போட்டான்.

இப்போது, தீவு மக்கள் சுதாரித்துக் கொண்டன ஒருங்கிணைந்து போரிடத் துவங்கினார்கள். கத் கேடயம் இத்தியாதி கொலைக் கருவிகளுடன் குதின களில் ஆரோகணித்து வந்த ஸ்பானியர்களை எதி கொள்ள முடியவில்லை பூர்வக்குடிகளால். அவர்க கைதிகளாக் சிறை பிடிக்கப்பட்டனர். தூக்கிலிடப்பட் னர் சிலர். பலர் உயிரோடு கொளுத்தப்பட்டனர். இதனா அரவாக்கர்கள் கைதிகளாவதை விட சாவது மே என்று துணிந்து கஸாவா விஷத்தை உண்டு கூட்டம் கூ டமாக மடியத் தொடங்கினர்.

இப்படியாக, ஹைட்டி தீவின் 'நல்ல உடற் கட்டு அழகிய முகவெட்டுடன் கூடிய' விருந்துபசாரத்தி சிறந்த எளிய விவசாயி அரவாக்கர்கள் 2,50,000 பேரி பாதிக்கு மேல் மறைந்தனர்.

இதற்குப் பிறகுதான் அப்பகுதியில் நிசமாலுமே தங்கம் கிடையாது என்ற உண்மை உறைத்தது கொலம் சுக்கு. பின் நிலத்தின் மீது கவனம் சென்றது. பெரிய எ டேட்டுகளை நிறுவி அதில் அடிமைகளாகப் பிடிக்க பட்டவர்களைக் கொண்டு கடின உழைப்பு செய்விக் தொடங்கினான். ஒய்வற்ற கடின உழைப்பால் 1515-இ 50,000 பேர்களாக இருந்த அரவாக்கர்கள் 1550-இ வெறும் 500 பேர்களாக மாறினார்கள். இதன் பிறகு 16 இல் எழுதப்பட்ட அதிகாரப் பூர்வமான அறிக்கை ஒன்று அரவாக்கர் அங்கு வாழ்ந்ததற்கான எந்த அ யாளத்தையும் காணவில்லை என்று கூறுகிறது.

ஸ்பெயின், க்யூபாவின் மீது படையெடுப்பு நிகழ் திய போது, அதில் முக்கிய அங்கம் வகித்தவர் பார்த் லோமியா லா காஸாஸ். அவர் தனது எஸ்டேட்டில் பூ வக்குடிகளை அடிமைகளாகக் கொண்டிருந்தார். அ பாதிரியார், ஒரு கட்டத்தில் தனது அடிமைகளை வி வித்துவிட்டு அமெரிக்க பூர்வக்குடிகளின் வரலாற்



படிப்பகம்

www.padippakam.com

இன்டீஸ் வரலாறு" என்ற தலைப்பில் வால்யூம் வால்யூமாக எழுதிக் குவித்தார். அவர் புத்தகத்தில்தான் மேற்கண்ட அனைத்துக் குறிப்புகளும், இனி வரப் போவதும் இடம் பெறுகின்றன.

அவர் அரவாக்கர் பெண்களைப் பற்றி எழுதுகிறார்,

"திருமணம் பற்றி எந்த விதிமுறைகளும் இருக்கவில்லை. அவர்கள் விருப்பப்படி தங்கள் துணைகளைத் தேர்வு செய்வதும், விட்டுவிடுவதும் நிகழ்ந்தது. பிரிவு நிகழ்ந்தபோது குற்றங் காணுவதும், கோபப்படுவதும், தனது துணை வேறொருவரைத் தேர்ந்தெடுத்தால் பொறாமை கொள்வதும் அவர்களது வழக்கமல்ல. அந்தப் பெண்கள் கணக்கு வழக்கில்லாமல் பெற்றுப் போட்டார்கள். பிரசவம் ஆகும் சற்று நேரத்திற்கு முன்பு கூட கடின உழைப்பில் ஈடுபட்டிருப்பார்கள். பிரசவம் ஆன மறுநாளே ஆற்றில் நீந்திக் குளித்து விட்டு வழக்க மான வேலைகளைச் செய்யத் துவங்கி விடுவார்கள். தாங்கள் உறவு கொண்ட ஆணிடமிருந்து பிரிய நேரிட்டால் கருக்கலைப்பு செய்து விடுவார்கள். அச்சமயங்களில் மட்டும் தங்களது பிறப்புறுப்பை இலையாடை அல்லது பருத்தித் துணிகள் கொண்டு மறைத்துக் கொள்வார்கள். பெரும்பாலும் நிர்வாணமாகத் திரியும் அவர்கள் ஆண்களைவிட நீச்சலில் மிகுந்த திறமை உடையவர்கள். அதிக தூரம் நீந்துவார்கள்?...."

லா காஸாஸ், ஸ்பானியர்கள் எவ்வாறு அரவாக்கர்களை நடத்தினர் என்பதைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

"ஸ்பானியர் நாளுக்கு நாள் சுகவாசிகளாக மாறி வந்தனர். கொஞ்ச தூரம் நடப்பதற்குக்கூட பயந்து, அரவாக்கர் முதுகில் ஏறிக்கொண்டு சவாரி சென்றார்கள். அவசரமாகப் போக வேண்டுமென்றால் 'ஹேம்மக்' எனப்படும் தொட்டிலில் படுத்துக் கொண்டு அரவாக்கர்களை தூக்கிக் கொண்டு ஓடச் செய்தார்கள். அவ்வாறு செல்லும்போது வெய்யில் படா வண்ணம், பெரிய இலையால் மறைத்துக் கொண்டு ஒரு அரவாக்கரும், பெரிய பறவை இறகால் விசிறிக் கொண்டு மற்றொரு அரவாக்கரும் ஓடிவர வேண்டும்!!

தங்கள் கத்திகளை அரவாக்கர்கள் உடலில் சொருகி அதும் பார்த்துக் கொண்டனர். இப்படிக் கொல்லப்பட்டவர்கள் ஏராளம். மேலும் கிறித்துவர்கள் என்று சொல்லப்பட்ட இருவர், வழியில் கிளிகளைக் கொன்டு சென்ற இரு அரவாக்கச் சிறுவர்களின் தலைகளைக் கொய்தனர். காரணம் என்ன என்று கேட்டதற்கு, சும்மா விளையாட்டுக்கு என்று பதிலிறுத்தினர்........"

இவ்வகையில் இறந்தவர்கள் கொஞ்சம் என்றால், சுரங்கங்களில் இறந்தவர்கள் அநேகம்! ஒரு சுரங்கத்தில் ஆறு அல்லது எட்டு மாதம் வேலை செய்தால் போதும். அதில் வேலை செய்யும் மூன்றில் ஒரு பகுதியினர் இறந்து விடுவது நிச்சயம். ஆண்கள் இப்படி என்றால், பெண்களோ கப்பக்கிழங்கு (கஸாவா) நடுவதற்காக ராவும் பகலும் சுரங்க மண்ணைக் கொண்டு சிறு சிறு மணற் குன்றுகள் உருவாக்கி இறந்தனர்.

"கணவனும் மனைவியும் எட்டு மாதம் அல்லது பத்து மாதத்திற்கு ஒரு முறைதான் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். அப்போது கடின உழைப்பினால் ஏற்பட்ட களைப்பும் தாங்கொணா தூக்கமும் பீடித்ததால் உடலுறவு கொள்ள முடிவதில்லை அவர்களால். இதனால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள இயலவில்லை. பிறந்த குழந்தைகள் தாய்ப்பால் இல்லாமல் இறந்தன. இடையராத வேலையினாலும், ஊட்ட உணவில்லாததாலும் தாய்மார்களுக்கு பால் சுரக்கவில்லை... மனித இனத்திற்கே இத்தகைய விசயங்கள் புதியவை.. இவற்றையெல்லாம் பார்த்த எனக்கு இதை எழுதும்போது கைகள் நடுங்குகின்றன..."

**உலகெங்கும் நடந்தது போலவே இங்கும் தலித்துகளும், பழங்குடிகளும் அடிமைகளாக்கப்பட்டனர். இதற்கு இந்து மதம். வர்ணாசிர தர்மம் மற்றும் சாதி ஒடுக்கு முறைகளை கற்பித்து வளர்த்து வருகிறது. பைபிள் போலவே கீதையிலிருந்தும், புராணங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி சாதி அடுக்கு முறைக்கு சமாதானம் கற்பித்தவாறு உள்ளனர்.**

ஹிஸ்பேனியோலாவுக்கு 1508-இல் லா காஸாஸ் வந்தபோது அவர் கூற்றுப்படி "அறுபதாயிரம் இந்தியப் பூர்வக்குடிகள் மட்டுமே இருந்தனர். 1494-க்கும் 1508-க்கும் இடையில் முப்பது லட்சம் பேர் சண்டைகளில் கொல்லப்பட்டும், சுரங்கவேலை செய்தும், அடிமைகளாகத் துன்புறுத்தப்பட்டும் இறந்தனர். இந்த இனப் படுகொலையைச் செய்தான் கொலம்பஸ் எனும் சாதாரண கடல் வீரன்!

பஹாமாவில் வசித்த அரவாக்கர்களுக்கு கொலம்பஸ் கையில் நேர்ந்த கதிதான், மெக்ஸிகோவின் 'அஸ்டெக்'குகளுக்கு கோர்த்தே என்ற கொடூரன் கையில் நேர்ந்தது. பெருவின் 'இன்காஸ்' இனத்தவரை 'பிஸாரோ' என்பவன் அழித்தான். 'பௌஹாட்டன்' மற்றும் 'பிக்கோ' இனத்தவரை வர்ஜீனியா மற்றும் மாஸசூசெட்ஸில் வந்திறங்கிய ஆங்கிலேயர்கள் கொன்றழித்தனர்.

அஸ்டெக் இனத்தவர் கட்டிடப் பிரியர்கள். கல்லாயுதங்கள் கொண்டே மிகப்பெரிய கட்டிடங்களைக் கட்டியவர்கள். எழுத்து முறையை வளர்த்தவர்கள். அவர்கள் தங்கள் தெய்வங்களுக்கு நரபலி கொடுத்தவர்கள் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் தங்களைக் கொல்ல வந்த ஸ்பானியக் கும்பல் தலைவனை, முன்னூறு ஆண்டுகளுக்கு முன் திரும்பி வருவேன் என்று சபதமிட்டு இறந்த தங்களினத் தலைவன் 'குயிட்ஸல்கோட்' தான் என்று நம்பி வரவேற்பளிக்குமளவுக்கு அப்பாவிகள் தான்! அவனை தங்கத் தாம்பாளத்தில் ஆரத்தி எடுக்காத



படிப்பகம்

www.padippakam.com

**பிக்கோ இனத்தவரையும் அவரது பயிர் நிலங்களையும் அழித்துக்கொண்டே கிராமம் கிராமமாக அவர்கள் முன்னேறியபோது, தாக்கி அழிக்கத்தான் வந்திருக்கிறார்கள் என்று அறியாது அவர்களை வரவேற்று உபசரித்தனர் பிக்கோக்கள்.**

குறையாக வரவேற்று உபசரித்தனர் அஸ்டெக்குகள். அவன் வேறு யாருமல்ல, கோர்த்தே தான்!

அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் மடிந்தார்கள் அவர்கள். திட்டமிட்டு காய்களை நகர்த்தினான். இப்போது தங்கம் பற்றி கவனமே இன்றி நிலப் பரப்பை வளைப்பதில் ஆர்வம் காட்டினார்கள் வந்தேறிகள்

உதாரணத்துக்கு ஒன்று. சோலுலு என்ற இடத்தின் அஸ்டெக் தலைவனை திரும்பி வந்த குயிட்ஸல் கோட் அழைக்கின்றான் என்று கூறி அவனைக் கூட்டத்தோடு வரச் செய்தான் கோர்த்தே. வந்ததும் அவர்களைச் சுற்றி வளைத்து பீரங்கிக் குண்டுகளால் சின்னாபின்னமாக்கினான். குதிரை மேலேறி தப்பித்தவர்களை கண்டந் துண்டமாக்கினான். பிறகு அவர்கள் நகரைச் சூறையாடி, அவர்கள் நிலப்பகுதிகளை தனதாக்கிக் கொண்டான்.

இதேபோல் 'பெரு'வில் பிஸாரோ அட்டகாசம் நிகழ்த்தினான். வர்ஜீனியா, மிஸிஸிப்பியில் ஆங்கிலேயர் களும் இப்படித்தான் நடந்து கொண்டார்கள்.

தங்களது காலனியை மாஸசூசெட்ஸில் அமைப்பதற்காக ஜான் வின்த்ராப் என்ற ஆங்கிலேய கவர்னர், அங்கே பூர்வக்குடிகள் ஆதிக்கம் செலுத்திய போதிலும், இவ்விடம் காலியாக இருக்கிறது வாருங்கள் என்று அழைப்பு விடுத்தான் தனது இனத்தவருக்கு.

அதற்கு அவர் கொடுத்த வியாக்கியானத்தைப் பாருங்கள்! பூர்வக்குடிகள் வேறு எவரையும் சண்டையில் வீழ்த்தி நிலத்தைப் பெறவில்லை. ஆகையால் அவர்களுக்கு நிலத்தில் இயற்கை உரிமை தான் உள்ளதே தவிர, 'சிவில் உரிமை' என்று சட்டத்தில் செல்லுபடியாகும் உரிமை இல்லை என்றார்.

இதற்கு ஒரு படி மேலேபோய் ஆங்கிலேய கிறித்துவர்கள் (ப்யூரிட்டன்கள்) கீழ்க்கண்ட பைபிள் வாசகங்களை மேற்கொள்காட்டி தங்களைச் சமாதானம் செய்து கொண்டனர்.

Psalm 2:8 "கேளுங்கள். உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள நிலத்தை உங்களுக்காக சுவாதீனப் படுத்துவேன்." Romans 13:2 "யார் சர்வ வல்லமை பெற்ற கடவுள் அதிகாரத்திற்குள் வர மறுக்கிறாரோ, அவர்தம் அழிவைத் தாமே தேடிக்கொள்கின்றவராவர்."

பிக்கோ இனத்தவரையும் அவரது பயிர் நிலங்களையும் அழித்துக்கொண்டே கிராமம் கிராமமாக அவர்கள் முன்னேறியபோது, தாக்கி அழிக்கத்தான் வந்திருக்கிறார்கள் என்று அறியாது அவர்களை வரவேற்று உபசரித்தனர் பிக்கோக்கள் என்று ஆங்கிலேயப் போர் வீரன் தனது டயரிக் குறிப்பில் எழுதியுள்ளான்.

கேப்டன் ஜான் மேசன் பிக்கோக்கள் மீது தொடுத்த தாக்குதலை வர்ணிக்கும் வரலாற்றாசிரியர் ஃப்ரான்ஸிஸ் ஜென்னிங் கூறுகிறார்: "மேசன் பிக்கோ வீரர்களுடன் நேரடியாகப் போரிடுவதைத் தவிர்த்தான். ஏனெனில் போர் என்பது எதிரியை அழிக்கும் ஒரு வழிதான். அது போரிடுபவருக்கும் இழப்பை உண்டாக்கும். மாறாக (குழந்தை குட்டிகள் என்ற) பாகுபாடின்றி தாக்கி அழிப்பது எதிரியை சுலபமாக அடக்கும்."

மேசன் மற்றொரு வழியையும் கையாண்டான். பிக்கோக்கள் தூங்கும் சமயம் பார்த்து அவர்கள் வசிப்பிடமான 'விக்வேம்' எனும் பெரிய குடில் அல்லது கூடாரங்களுக்கு (காய்ந்த மரப்பட்டைகள், தோலால் வேயப்பட்டது)த் தீயிட்டு அவர்களை உயிரோடு பொசுக்கினான். தப்பித்தவர்களை வாளால் துண்டாக்கினான். இப்படி ஒரே இரவில் 600 பிக்கோக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின் நோக்கம் வெறும் வெற்றியல்ல. அவர்கள் நிலப்பகுதியை சொந்தம் கொண்டாட எவரும் மிஞ்சக் கூடாது என்பதும், ஏனையோர் எதிர்க்கும் சக்தியை இழந்து பயத்தில் வாழவேண்டும் என்பதே.

"The Land was ours" (இந்த நிலம் எங்களுடையது) என்ற தனது புத்தகத்தில் 1972-இல் குறிப்பிடுகிறார் வர்ஜில் வோகல் என்னும் வரலாற்றாளர் "அரசு ஆவணப்படி கனெக்டிகட்டில் வாழும் பிக்கோக்கள் 21 பேர் மட்டுமே" என்று. இவ்வாறு லட்சக் கணக்கில் வாழ்ந்த பூர்வக்குடிகள் இரண்டுபடை எண்ணில் வந்து நின்றார்கள்.

இனி நாம் அமெரிக்க பூர்வக்குடிகளின் அடையாளங்களுக்கும், இந்திய தலித்துகளுக்கிடையே உள்ள ஒற்றுமைகளுக்கும் விளைவான விவாதங்களுக்கு வருவோம்.

* முதல் அடையாளம் தெளிவானது. இது மக்கள் தொகை பற்றியது. பூர்வக்குடிகள் அவ்வந்த நாடுகளில் குறைவாகவே உள்ளனர். (இந்த அடையாளம் இயற்கையானதல்ல. அவர்கள் தொகை கட்டுக்குள் வைக்கப்பட்டது.) மேலும் வறுமையிலும் அறியாமையிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

* இரண்டாவது பூர்வக்குடிகளுக்கும் வந்தேறிகளுக்குமான மோதல் நேரடியான போர் மட்டும் அல்ல. தந்திரமாக ஏமாற்றுதல், தீயிட்டு கொளுத்துதல், மேலும் மதச் சாயங்கள் பூசுதல் போன்றவையே பெரும்பான்மையானது.

* மூன்றாவது, பூர்வக்குடிகளின் நிலங்கள் அப


படிப்பகம்

www.padippakam.com

**தலித்துகளின் விடுதலை என்பதை, இந்நாட்டின் பூர்வக்குடிகள் என்ற அடிப்படையில், நிலவுரிமை மற்றும் வாழ்வாதாரங்களில் பங்கு என்ற நிலையிலிருந்து நாம் துவங்க வேண்டி உள்ளது.**

கரிக்கப்பட்டு அவர்களது உடைமைகள் சூறையாடப் படுதல்.

* நான்காவது அடையாளம், அவர்கள் அடிமை களாக்கப்படுதல், வாழ்வுரிமைகள் மறுக்கப்படுதல் என்பவை.

இந்த நான்கு அடையாளங்களும் உலகெங்கிலும் ஒரே மாதிரியாக உள்ளன. இனி இந்தியாவில் தலித்து களுக்கு இவ்வடையாளங்களை பொருத்திப் பார்ப் போம்.

* தாழ்த்தப்பட்டவர்கள் மக்கள் தொகை பிறரை விட குறைவாக உள்ளது. ஆங்கிலேயர் வந்திராவிடில் இது மிகவும் குறைவானதாகவே இருந்திருக்கும். வறு மைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களில் அறுபது சதத் துக்குமேல் தலித்துகள் உள்ளனர். கல்வி அறிவு பெறாத வர்களில் இவர்களே அதிகம் பேர்.

* அடுத்தது நிலம். ஆங்கிலேயர் வருகைக்கு முன்பு தலித்துகள் நிலம் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற சாதிச் சட்டம் இருந்து வந்தது. நிலம் மட்டுமல்ல, எந்தச் சொத்துமே வைத்துக் கொள்ளாத பண்ணை அடிமைகளாக இருந்தார்கள்.

கொள்ளையர்கள் ஓரிடம் செல்லும்போது தாங் கள் அடித்த கொள்ளையில் கூட்டாளிகளுக்கு மட் டுமே பங்கு தருவார்கள். அப்பொருளின் (அல்லது நிலம்) சொந்தக்காரருக்கல்ல. இல்லாவிடில் தாழ்த்தப் பட்டவர்கள் நிலம் வைத்துக்கொள்ளக் கூடாது என் பதற்கு என்ன முகாந்திரம் இருக்க முடியும்? தாழ்த்தப் பட்டவர்கள் நிலத்துக்குச் சொந்தக்காரர்கள் என்பதாலேயே அவர்களுக்கு நிலம் மறுக்கப்பட் டிருக்கவேண்டும். முகலாயர்கள் போரிட்டு வென்ற நிலங்களை யாரிடமிருந்து பெற்றார்களோ, அவர் களுக்கு விட்டு வைக்கவில்லை. தங்களது மன்சப்தா ருக்கே பங்கிட்டுக் கொடுத்தார்கள் என்பதையும் கவ னிக்க வேண்டியுள்ளது. அவ்வுதாரணங்கள் தனி யுடைமை சாசுவதமாக்கப்பட்ட இந்நாளில் நகைப் பூட்டுவதாகத் தோன்றலாம்.

ஆனால் 'காடர்' இனத்தவரைக் கவனியுங்கள். இவர்கள் பொள்ளாச்சியில் 'டாப் ஸ்லிப்' பகுதியில் இன்றும் வசிக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் வரும்வரை அவ்வனப்பகுதியின் சொந்தக்காரர்கள்! இன்றோ இவர்கள் இவ்வனப்பகுதி யிலிருந்து விரட்டியடிக்கப் பட்டு செட்டில்மென்ட் பகுதியில் குடியேற்றப்பட் டுள்ளார்கள்!! இவர்களின் வாழ்வாதாரமான காடு களில் இவர்கள் செல்லத் தடை உள்ளது - காடு அழிந்து விடும் என்ற பெயரில்! அவர்கள் சிறு வனப் பொருட் களாகிய இஞ்சி, மஞ்சள், கிழங்கு வகைகளை சேகரிக் கக்கூட காட்டுக்குள் நுழைய முடியாது. இவர்கள் மொத்தம் 800 பேர்தான். காட்டிலாகாவின் கெடு பிடிகளினால் அச்சத்துடன் வாழ்கிறார்கள். இந்நிலை தொடர்ந்தால் அப்பகுதியில் காடர் இனம் வாழ்ந்த தற்கான அறிகுறியே இல்லாமல் போய்விடும். நாமிருவர் நமக்கிருவர் என்ற குடும்ப நலத்திட்டம் இவர்களையும் விட்டு வைக்கவில்லை.

இதேபோல், தாழ்த்தப்பட்டவர்களும் பொதுச் சொத்துக்களை அனுபவிப்பதிலிருந்து ஊராரால் தடுக்கப்படுகின்றனர். இவர்கள் சொற்ப நிலங்களை வைத்துக்கொண்டு வறுமையில் வாழ்கின்றார்கள். தமிழகத்தில் உள்ள 36 வகை பழங்குடியினருக்கும் இதே நிலைதான்!

* அடுத்து தாழ்த்தப்பட்டவர்கள்/பழங்குடிகள் மீது நிகழ்த்தப்படும் வன்கொடுமை! அவர்களின் குடிசைகள் அவ்வப்போது தீயிட்டுக் கொளுத்தப்படு கின்றன. பல்வேறு கொடூரச் சம்பவங்கள் காலந் தோறும் நிகழ்ந்து கொண்டுதான் உள்ளன. சாதியாளர் கள் குறித்த அச்சத்துடன் வாழ்கிறார்கள் இவர்கள்.

* உலகெங்கும் நடந்தது போலவே இங்கும் தலித்துகளும், பழங்குடிகளும் அடிமைகளாக்கப் பட்டனர். இதற்கு இந்து மதம். வர்ணாசிர தர்மம் மற்றும் சாதி ஒடுக்கு முறைகளை கற்பித்து வளர்த்து வருகிறது. பைபிள் போலவே கீதையிலிருந்தும், புரா ணங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி சாதி அடுக்கு முறைக்கு சமாதானம் கற்பித்தவாறு உள்ளனர்.

இதுவன்றி பூர்வக்குடிகளின் பழக்க வழக்கங்கள் இங்குள்ளவர்களின் பழக்க வழக்கங்களில் சிலவற்றோடு பொருந்துகின்றன. குறிப்பாக, பெண்கள் சுதந்திர நிலை யின் எச்ச சொச்சங்கள் தாழ்த்தப்பட்டவரிடையேயும், பழங்குடி சமூகத்திடையேயும் உள்ளது. இவை விரி வான ஆய்வுக்குரியவை.

மேற்கண்ட ஒற்றுமைகள், இந்திய வரலாற்றில் தாழ்த்தப்பட்டவர்கள் மீது தீண்டாமை சுமத்தப்பட் டது அவர்கள் இம்மண்ணின் பூர்வக்குடிகள் என்பதா லேயே என்பதை நிரூபிக்கும் வகையில் உள்ளன. இதையே மாமேதை அம்பேத்கர் அவர்களும் தனது நூல்களில் கூறியுள்ளார். எனவேதான் தலித்துகளின் விடுதலை என்பதை இந்நாட்டின் பூர்வக்குடிகள் என்ற அடிப்படையில், நிலவுரிமை மற்றும் வாழ்வாதாரங் களில் பங்கு என்ற நிலையிலிருந்து நாம் துவங்க வேண்டி உள்ளது.

◆

துணை நின்ற நூல்கள்

"A People's History of the United States" by Howard Zinn - 2003-ஆம் வருடப் பதிப்பு

அம்பேத்கர் எழுத்தும் பேச்சும் - தொகுதி 13



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி - பதில்

■ முனிமா

விமரிசிக்கக் கூடாத நீதித்துறையை விமரிசியுங்கள் என்று அனுமதி தந்துள்ளார் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கட்ஜூ. இதை எல்லா செய்தித்தாள்களும் கொட்டை எழுத்தில் வெளியிட்டுள்ளன. புதிய கோடாங்கியும் விமரிசிக்கலாம்தானே?

**- ராமு, மதுரை.**

சமுதாயப் பிணிகளை இனங்கண்டறிந்து, ஆய்வுக் குட்படுத்தி, விமரிசனம் செய்ய புதிய கோடாங்கி எப் போதும் தயங்கியதில்லை. இனியும் தயங்காது.

■

லால்குடி ஆர்.டி.ஓ. அலுவலகம் முன்பு திரு. கருப்பன் இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையில் இரண்டாயிரம் மக்கள் ... வாழையூர் பஞ்சமி நிலங்களை மீட்க ஆர்ப் பாட்டம் நடத்தினார்கள். விளைவு என்ன?

**- முத்துராமன், திருச்சி.**

இன்னும் ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுப் பதாக லால்குடி ஆர்.டி.ஓ. வாக்களித்திருப்பதாக அறி கிறோம். பொறுத்திருந்து பார்க்கலாம்.

■

பழங்குடி மக்களின் நிலவுரிமை குறித்த ஆய்வுக் கட்டுரையை புதிய கோடாங்கியில் எதிர்பார்க்கிறோம். எப்போது வரும்?

**இ.பா. சங்கர், கடலூர்.**

ஜூலை 27-ஆம் தேதி இருளர் பாதுகாப்பு சங்கம். பழங்குடி மக்களின் நிலவுரிமையை வலியுறுத்தி கருத் தரங்கம் நடத்துகின்றது. கருத்தரங்கில் பிரதி பலிக்கப் பட்ட கருத்துக்களையும், தீர்மானங்களையும் சேர்த்து கட்டுரை வெளிவரும். அநேகமாக செப்டம்பர் அல்லது அக்டோபரில் எதிர்பாருங்கள்.

■

புதிய கோடாங்கியில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் நிலமில்லாத தலித் குடும்பம் ஒன்றுக்கு தலா 5 ஏக்கர் வழங்குமளவுக்கு போதிய நிலம் இருப்பதாக எழுதப்பட்டிருந்தது. அது சரி, பிறருக்கும் அம்மாதிரி 5 ஏக்கர் வழங்க போதுமான நிலம் உள்ளதா?

**- ஆர். முத்தையன், திண்டுக்கல்.**

தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் விளைநிலங் களை மட்டும் கணக்கிட்டால் விவசாயத்தில் ஈடுபட் டுள்ள அனைவருக்கும் தலா மூன்று ஏக்கர்தான் தேறும் என்று சொல்கிறார்கள். விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ளவர்கள் மற்றும் நேரடி விவசாயத்தில் உள்ள வர்கள் என்று மட்டும் கணக்கிடுவது அவசிய மானது. இதைப்பற்றி விரிவான புள்ளி விவரங்களுடன் பின்னர் பார்க்கலாம். ■

உலக நாடுகளில் பல அணு ஆயுதங்களைச் சேகரிப் பதில் அக்கறை காட்டுகின்றன. இந்தியா பல அணு குண்டு வெடிப்புகளை நிகழ்த்தி சோதனைகளைச் செய்கிறது. இதையெல்லாம் பார்த்தால், விஞ்ஞானிகள் அதிகார வர்க்கத்தின் பிடியில் இருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. உங்கள் கருத்தென்ன?

**- ப. குப்புசாமி, மாமல்லபுரம்**

வேட்டையாடவும், காட்டை அழித்து விவசாயம் செய்யவும்தான் ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன முதலில். அவ்வாறே விவசாயம் அபிவிருத்தி அடைய மக்கள் வாழ்க்கை மேம்பட்டது. ஆனால் அவையே கொலைக் கருவிகளாகவும் பயன்பட்டன. ஆகையால் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மனிதகுல மேம்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற உடன்படிக்கையை யும், அதை மீறாதிருக்கும் வழிகளையும் நோக்கித்தான் போக வேண்டுமே தவிர, விஞ்ஞானிகளைக் குறை கூறுவது சரியாகாது. இந்த உடன்படிக்கையை யாரொ ருவர் மீறினாலும் மனித குலத்துக்கே ஆபத்து என்பதால் இதைக் கட்டுப்படுத்தும் வேலைகள் non-proliferation of nuclear arms என்ற பெயரில் நடக்கிறது. இதில் என்ன விசேஷமென்றால் அணு ஆயுதங்களைக் குவித்து அதன் மேலேறி அமர்ந்துகொண்டு இதைக் கட்டுப்படுத்து வதைப் பற்றி அமெரிக்கா பேசுவதுதான்.

■

கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் இடைத் தேர்தலுக் குப் பிறகு அரசியல் கணக்குகள் மாறி வருகின்றனவா?

**- முனுசாமி, அரக்கோணம்.**

ராமதாஸ் மத்திய அரசில் தனது ஆட்களை அமர்த் தியதுபோல் மாநில அரசிலும் ஆட்களை அமர்த்தப் பார்க்கிறார். இந்தக் கணக்குகளுக்கு தோதாக திருமா வளவனை தனது பக்கத்தில் பூஜ்யமாக இருத்திக் கொள் கிறார். பூஜ்யங்களை சாதாரணமாக எடை போடுவ தில்லை கணக்குத் தெரிந்தவர்கள். மதிப்பைக் கூட்டவும் குறைக்கவும் வல்லது. பெரிய்ய கட்சிகளுடன் பேரம் பேசியவாறிருக்கிறார்.

■

சமீபத்தில் நீங்கள் படித்த புத்தகம் ஏதாவது?

**- பிரிட்டோ, சென்னை.**

டான் பிரவுன் எழுதிய 'டாவின்சி கோட்' என்கிற புதினம் படித்தேன். யேசு, மேரி மதலேனாவைத் திரு மணம் செய்து கொண்டிருந்தார். அவரது குழந் தையை வயிற்றில் சுமந்திருந்த மதலேனாவை யேசு சிலுவையில் அறையப்பட்டதும் ஒளித்து வைக்கின்றனர். மதலேனா விஷயம் வெளியில் வந்தால் யேசு பற்றிய புனிதம் கெட்டு விடும் என்று மதலேனா மறைவிடங்களில் வாழ்ந்து இறக்கிறார். அவரது கல்லறை, யேசுவின் ரத்த வழி வாரி


படிப்பகம்

www.padippakam.com

சுகள் இன்றும் வாழ்வதாக, இவையெல்லாம் பரம ரகசியமாக இருப்பதாக Holy Grail என்ற பெயரில் வழி வழியாக கதைகள் வழங்கிக்கொண்டு வருகின்றன. இந்நிலையில் யேசுவின் வாரிசாக ஒரு பெண், அவர் தான் யேசுவின் வாரிசு என அறிந்து கொள்வதுதான் இக்கதையின் கரு. தொடர்ச்சியாக, படுவேகத்துடன், நிற்காத ஓட்டத்துடன் உள்ளது புதினம். அங்கங்கே வரலாற்றுக் குறிப்புகள், தத்துவத் தெறிப்புகள் என்று எழுதப்பட்டுள்ள புதினம் Best Seller வரிசையில் இடம் பிடித்ததில் ஆச்சரியமொன்றும் இல்லை. அது சரி, இந்தப் புதினத்துக்கு இப்படி ஒரு தலைப்பு ஏன்? லியா னார்டோ டாவின்சி என்னும் ஓவியர் Holy Grail (மத லேனா கல்லறை)யின் ரகசியத்தைத் தெரிந்தவர். அத னால்தான் Last Supper என்ற உலகப் புகழ்பெற்ற தனது ஓவியத்தில் யேசுவுக்கு இடப்புறத்தில் அமர்ந்திருப்பவர் மதலேனா என்று சுட்டிக்காட்டும் வகையில் மார்பக வளைவுகள் எடுப்பாகத் தெரியும் வண்ணம் வரைந் திருக்கிறார். மேலும் அவரின் அப்படம் அந்த நாவலில் பொதிந்துள்ள ரகசியம் பாதுகாக்கும் இடமாக இடம் பெற்றுள்ளது என்பதாலும் இத்தலைப்பு.

■

தமிழகத்தில் பழங்குடிகளின் நிலப்போராட்டம் ஒன்றும் புதிதல்லவே. இனிமேல்தான் அது நடைபெறப் போகிறது என்பது போன்ற அறிவிப்புகள் சரிதானா?

**- இருளப்பூ, இருளர் இனத் தலைவர், கடலூர்.**

தமிழ்நாட்டில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தூவைப்பதி என்னும் நிலப்பகுதியை, கோவையைச் சேர்ந்த தொழிலதிபர் வளைத்துப்போட்டு அங்கு சுற்றுலாவாசிகளுக்கான விலங்குகள் சரணாலயம் அமைக்க முயற்சி செய்தார். அது தங்களது நிலம் என்று பெரிய போராட்டம் நடத்தினார்கள் அப்பகுதி இருளர்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பாக அவர் கள் சிறையிலடைக்கப்பட்டனர். பிறகு கேரளாவின் C.K. ஜானு தலைமையில் தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது. இன்னும் இழுபறியிலுள்ளது பிரச்சினை.

அதேபோல், கொடைக்கானலைச் சேர்ந்த பலி யர்கள், ஆதிவாசிகள் சங்கம் மூலமாக திண்டுக்கல் ஜேஸி நாடார் வளைத்துப் போட்டிருந்த பழங்குடி நிலங்களை மீட்கப் போராடி வருகின்றனர்.

மேலும் கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த காணிக்காரர் எனும் பழங் குடியினர் தங்கள் வனப்பகுதியை மீட்கப் போராடிய போது கடுமையாக ஒடுக்கப்பட்டனர்.

மலையாளி மக்கள் வேலூர், சேலம் மாவட்டங் களில் தங்கள் நிலங்களை பிறர் அபகரிக்கக்கூடாது என்பதற்காக கொல்லி மலையில் வெளியார் நிலம் வாங்க தடைசெய்யுமாறு நடத்திய போராட்டத்தில் வெற்றி கண்டனர். ஏலகிரி மலையிலும் இதே போன்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் சிதறி வாழும் எல்லாப் பழங் குடியினருக்கும் குடும்பம் ஒன்றுக்கு ஐந்து ஏக்கர் நிலம் வழங்குமாறு இருளர் பாதுகாப்பு சங்கம் போராட் டத்தை முன்னெடுத்துள்ளது புதிய முயற்சிதான். ஆனால் இப்போராட்டங்கள் யாவும் ஒருங்கிணைக் கப்பட்ட பெரிய போராட்டமாக உருவெடுக்கவில்லை என்பதையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

■

ஹூண்டாய் நிறுவனத்தில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தொழிலாளர்கள் போராடியபோது தடியடி நிகழ்த்தப்பட்டது. தனியார் துறையில், அதுவும் பன்னாட்டுக் கம்பெனிகளில் வேலை செய்வோர் இம்மாதிரி வேலை நிறுத்தம் செய்யும்போது, அரசு நிர்வாகம் கடுமையாக நடந்து கொள்கிறது என்று சொல்லலாமா?

**- சாரதா, பூவிருந்தவல்லி.**

எல்லாத் தொழிலாளர் வேலை நிறுத்தங்களும் இதே வகையில் எதிர்கொள்ளப்படுகின்றன. கீழவெண் மணியில் தனியாருடன், நிர்வாகமும் கூட்டு வைத்த தினால்தான் மிகப்பெரிய இனப்படுகொலை நடந்தது. ஹூண்டாய் தொழிலாளர்கள் எனும்போது அதிகப் படியான பப்ளிசிட்டி கிடைத்திருக்கிறது - எல்லாம் காரணமாகத்தான்!

■

வயது, அனுபவம் காரணமாக தான் பக்குவம் அடைந்துவிட்டதாகவும், கூட்டணிக்கு தான் தயார் என்றும் தமிழக முதல்வர் அறிவித்துள்ளார். அதுவும் டெல்லியில். ஏனிப்படி?

**- ஜெயப்பிரகாஷ், பம்மல்.**

தேர்தல் நெருங்கி வர வர ஒரு மாதிரியாக பக்கு வம் வருவது அரசியல்வாதிகளுக்கு இயல்பு. ஆனால் யார் யார் எப்படி என்ற பக்குவம் மக்களுக்கு வரவில் லையே, என்ன செய்யலாம்?

■


அனிஸ்ரா அறக்கட்டளை மற்றும்
தென்னிந்திய தலித் எழுத்தாளர்கள் மற்றும்
கலைஞர்கள் பேரவை இணைந்து நடத்தும்,

**கலை வழியில் விடுதலை அரசியல்**
**பயிற்சிப் பட்டறை**

**இடம் : தீனபந்து பயிற்சி நிலையம்**

**தேதி : 25.8.2005 - 29.8.2005**

தொடர்புக்கு :
இன்பகுமார் (94434-48979),
மணிமாறன் (98940-21677)

குறிப்பு : முன்னதாக தொடர்பு கொண்டு பதிவு செய்பவர்களுக்கு, இப்பயிற்சிப் பட்டறையில் பங்கேற்க முன்னுரிமை அளிக்கப்படும்.




படிப்பகம்

www.padippakam.com

# ஜூலை நிகழ்வுகள்

சோளிங்கர் :

தலித் நிலவுரிமை கூட்டமைப்பும் புதிய கோடாங்கியும் இணைந்து ஜூலை 3 அன்று தலித் நிலவுரிமை கருத்தரங்கை நடத்தியது. கருத்தரங்கிற்கு இன்பகுமார், RPI செந்தில், DPF வாணிதாசன், புதிய கோடாங்கி கௌதம சன்னா ஆகியோர் பங்கேற்க, திருவள்ளூர்–திருவண்ணாமலை பகுதிகளிலிருந்து தலித் இயக்கங்களும், தலித் பெண்கள் இயக்கப் பிரதிநிதிகளும் திரளாகக் கலந்து கொண்டனர்.

தலித் சிந்தனையாளர் கனலி சிறப்புரை ஆற்றினார்.

தீனபந்துபுரம் :

சித்தூர் மாவட்டம் V.R குப்பம் தாலுகாவில் இயங்கும் அனித்ரா அறக்கட்டளை அலுவலகத்தில் அதோகாம் பின்னகத்தின் தொடர்பிலுள்ள பதினைந்து தலித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ஜூலை 1 முதல் 3 வரை பல்வேறு களப்பணிகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமை லலிதா ஒருங்கிணைத்தார். புதிய கோடாங்கி எருத்தாளர் குழு நில உரிமை குறித்த பயிற்சி அளித்தது.

வாழையூர் மற்றும் சமைங்கலம்:

திருச்சி மாவட்டம் மண்ணச்ச நல்லூர் வட்டம், சமைங்க லம் கிராமத்தில் 1927–ஆம் ஆண்டு தலித்துகளுக்கு ஒதுக்கப்பட்ட பஞ்சமி நிலத்தை, சட்ட விரோதமாக தலித்தல்லாதார் கைப்பற்றி இருப்பதை மீட்கும் பொருட்டு ஜூலை 6–ஆம் நாள் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு இவ்விரு கிராமங்களிலிருந்தும் நூறு தலித்துகள் திரண்டிருந்தனர். இன்பகுமார், லலிதா (அதேகாம்), பி.கே சண்முக சுந்தரம் (தலித் நிலவுரிமை இயக்கம்), முகமது அலி (தலைவர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம்) ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர் (ஜூலை 211 ஆம் நாள் லால்குடி R.D.O. அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்துவதென முடிவெடுக்கப்பட்டது.)

கோவில் எசனை :

பெரம்பலூர் மாவட்டம், கோவில் எசனை கிராமத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பு நடுவில் சாதி இந்துக்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமணம் செய்ததோடு அவர் களுக்கு பொதுப்பாதையை அடைத்து அடிப்படை உரிமைகளை மறுத்து வந்த செயல்பாடு களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதென ஜூலை 6–ஆம் தேதி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரபா. கல்விமணி, லலிதா, இன்பகுமார், தங்கவயல் வாணி தாசன் ஆகியோர் கலந்து கொண்டனர் இக்கூட்டத்தை கோவில் எசனை கிராமத்தைச் சேர்ந்த சமுத்திரம், சுந்தரம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

கரியமாணிக்கம் எதுமலை, பெரகம்பி:

ஜூலை 6–ஆம் தேதி அன்று மாலை திருச்சி மாவட்டம் மண்ணச்ச நல்லூர் தாலுக்காவிலுள்ள கிராமங்களாகிய கரியமாணிக்கம், எதுமலை, பெரகம்பி ஆகிய கிராமங்களில் பஞ்சமி நிலங்கள் இருப்பது கண்டறியப்பட்டு, தலித் நிலவுரிமை இயக்கத்தின் திருச்சி மாவட்டத் தலைவரான சண்முகசுந்தரம் தலைமையில் (லீட்) வேலுச்சாமி, வாழையூர் சுபாஸ் மற்றும் எதுமலை முத்துச்சாமி இவர்களுடன் புதிய கோடாங்கிக் குழுவும் இணைந்து தலித் நில உரிமை பிரச்சாரம் மேற்கொண்டனர்.


படிப்பகம்

www.padippakam.com

நெடுங்கூர்,
நெய்க்குளம்,
பி.கே. அகரம்:

ஜூலை 7 அன்று அதே குழு நெடுங்கூர், நெய்க்குளம், பி.கே அகரம் ஆகிய கிராமங்களில் உள்ள பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து, நில உரிமை பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஜூலை 21 –ஆம் தேதி லால்குடி கோட்டாட்சியர் அலுவலகத்தின் முன் நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் வாழையூர் தலித் மக்களுக்காக தாங்களும் ' ல் கொடுப்போம் என இக்கிராமங்களில் உள்ள தலித் மக்கள் உறுதியளித்தனர். லீட் நிறுவனம் ராதாவும் இப்பிரச்சாரத்தில் கலந்து கொண்டார்.

தேவக்கோட்டை :
(சிவகங்கை)

தலித் நில மீட்புக்குழு கருத்தரங்கு 9.7.2005 அன்று காலை பத்து மணிக்கு இராம ஏகம்மை திருமண மண்டபத்தில் துவங்கியது. Y.S.S நிறுவனத்தலைவர் இராஜேந்திரன் தலைமை ஏற்க, தேவக்கோட்டை Dr. சுப்ரமணயம் சிறப்புரையாற்ற, இமானுவேல் பேரவையைச் சேர்ந்த ரஞ்சித், விடுதலைச் சிறுத்தைகள் ஒன்றியத் தலைவர் மாதவன், ஜான்சி மேரி, பாக்கியம் குப்பம்மாள் (தலித் பெண்கள் விடுதலை இயக்கம்), கணேசன் (தலித் கூட்டமைப்பு), ராக்கமுத்து, வழக்கறிஞர் லூயி சித்தார்த், தேவகோட்டை நகராட்சித் தலைவர் சாந்தா அரிமா மற்றும் புதிய கோடாங்கி எழுத்தாளர் குழு பங்கேற்க, விடியல் நிறுவனத் தலைவர் ரோணிக்கா இக்கருத்தரங்கை மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்தார்.



சிவகங்கை மாவட்டத்தில் கிராமம் சென்ற தலித் பெண்கள் குழு. *(இடமிருந்து)* ரோணிக்கா, லூசி, சிவகாமி, சாந்தா அரிமா, ஜான்சி

இஸ்திரிக்கோட்டை
துடுப்பூர், ஆலங்குடி,
செட்டியேந்தல் :

9.72005 அன்று மாலை ரோணிக்கா, சாந்தா அரிமா, ஜான்சி மேரி மற்றும் புதிய கோடாங்கி எழுத்தாளர் குழு இஸ்திரிக் கோட்டை கிராமத்தில் நில உரிமைப் பிரச்சாரத்தை மேற்கொண்டது அக் கிராமத்தில் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த துடுப்பூர், ஆலங்குடி செட்டியேந்தல் ஆகிய கிராமங்களிலிருந்து தலித் பெண்கள் திரளாகக் கலந்து கொண்டனர்

நல்லாங்குடி :

தலித் பெண்களுக்கான தையல்பயிற்சி வகுப்பு ஒன்றை விடியல் நிறுவனம் நல்லாங்குடியில் நடத்தி வருகிறது. புதிய கோடாங்கிக் குழு அம்மாணவிகளுடன் உரையாடிவிட்டு, போன படிப்பைத் தொடர ஆலோசனைகள் வழங்கியது.

புலியடிதம்மம்,
தாஸ்புரம்,
திட்டுக்கோட்டை,
சீமைங்கலம்,
பள்ளச்சேரி :

10-7-2005 ஞாயிறு அன்று நில உரிமை பிரச்சாரக் குழு ரோணிக்கா தலைமையில் தேவக்கோட்டை நகராட்சித் தலைவர் சாந்தா அரிமா அவர்களுடன் சிவகங்கை மாவட்டத்திலுள்ள புலியடிதம்மம், தாஸ்புரம், திட்டுக்கோட்டை, சீனமங்கலம், பள்ளச்சேசி ஆகிய கிராமங்களிலுள்ள தலித் மகளிர் குழுக்களை புலியடிதம்மம் கிராமத்தில் சந்தித்தது. அவர்களுக்கு அங்கே சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நில உரிமை பிரச்சாரத்துடன், தலித் மகளிர் குழுக்களுக்கான செயல்பாடுகள் விவாதிக்கப்பட்டன.

காளையார்கோவில் :

செங்கல் சூளைகளில் வேலை செய்த நூற்று நாற்பது கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் சொசைட்டியாக பதிவு செய்யப்பட்டு காளையார்கோவிலில் கூடியிருந்தனர். அவர்கள் அனைவரும் தலித்துகள். SC/ST அலுவலர் சங்கச் செயலாளர் முத்து, அவர்களுக்கான 1.5 லட்சம் பெறுமான 5 ஏக்கர் நிலத்தை செங்கற்சூளைக்காக ஒதுக்கிக் கொடுத்தார்.

ரோணிக்கா தலைமையிலான புதிய கோடாங்கி குழு அவர்களைச் சந்தித்து அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

கூட்டாக செங்கற்சூளையை அமைக்க முன்வர வேண்டும், இதற்காக அரசாங்கம் கொடுக்கும் ரூ.20,000-த்தில் ரூ.10,000-ஐ ஒதுக்கி சொசைட்டியில் செலுத்துமாறும், இன்னபிற ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

**சென்னை LIC கேன்டீன் ஹால்:**

"பள்ளிக்கல்வி – கிராமப்புற மாணவர்களின் நிலை" என்ற தலைப்பில் 14-7-2005 அன்று சென்னை LIC கேன்டீன் ஹாலில் இன்பகுமார் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. பேரா கல்யாணி (பிரபா. கல்விமணி), சோபகன், சிவகாமி ஆகியோர் கருத்துரையாளர்களாக பங்கேற்றனர் பல எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும் கலந்து கொண்டனர்.

LIC SC/ST ஊழியர் சங்கமும், பன்னாட்டு தலித் கல்வி மய்யமும் இணைந்து நடத்திய இக்கருத்தரங்கை பாரதிதாசன் (LIC) ஒருங்கிணைத்தார்.

**சென்னை (இக்சா மய்யம்):**

நேசா தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் 50 தொண்டு நிறுவனங்களுக்கான, 'குழந்தைகள் நலம் – ஆரம்பக் கல்வி' என்ற தலைப்பில் நடந்த பயிற்சிப் பட்டறையில் 15-7-2005 அன்று சிவகாமி கலந்து கொண்டு தலித் மக்களின் 100 சதவிகிதம் ஆரம்பக் கல்வி பற்றிய ஆலோசனைகளை வழங்கினார்.

கடலூர் மாவட்டம்

**காட்டு மன்னார் கோவில்:**

L.இளையபெருமாள் அவர்களின் பிறப்பிடமும், இழிவான வேலைகளை தலித்துகள் செய்யக் கூடாது என்று அவர் விதித்த தடை பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய இடமுமான சிதம்பரம் மாவட்டம் காட்டு மன்னார் கோவிலில் புதிய கோடாங்கியும், திராவிடன் குழுமமும் இணைந்து Eradication of Untouchability and Poverty என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தியது.



தீண்டாமை – வறுமை ஒழிப்பு கருத்தரங்கில் பங்கேற்றோர்

இதற்கு எண்பத்தியிரண்டு வயதான எல். இளையபெருமாள் அவர்கள் தலைமை தாங்க, சுமார் முன்னூறு படித்த தலித்துகள் குழுமியிருந்தனர். பலர் அவர் காலில் விழுந்து அவர் சேவையைப் போற்றினர்.

நீல கங்காதரன் (தலைவர், புதுவை சுற்றுலா மற்றும் போக்கு வரத்து வளர்ச்சிக் கழகம்), பேராசிரியர் அரங்க சுப்பையா, பேரா. P. சீனிவாசன், K. நாக ராஜன் (பொதுச்செயலாளர், SC/ST பணியாளர் நலச் சங்கம், NLC), அண்ணாமலை பல்கலைக்





தீண்டாமை – வறுமை ஒழிப்பு கருத்தரங்கம் பங்கேற்பு – ட. இளையபெருமாள்





தீண்டாமை – வறுமை ஒழிப்பு கருத்தரங்கில் சன்னா உரையாற்றுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

கழக விரிவுரையாளர்கள் விஜயராணி, பூவிழியன், ஆறு. அன்பரசன், துரை ஆகியோரும், புதிய கோடாங்கி எழுத்தாளர்கள் கௌதம சன்னா, ப்ரதிபா ஜெயச்சந்திரன் போன்றோரும், கு.மு. ஜவஹர், எழுத்தாளர் இமயம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எழுத்தாளர் சிவகாமி சிறப்புரையாற்றினார்.

சிறப்புமிக்க இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்தவர் காட்டு மன்னார்கோவிலைச் சேர்ந்தவரும், அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளருமான M. ஆறுமுகம் ஆவார்.

## சென்னை ராணி மேரி கல்லூரி:

சென்னை ராணி மேரிக் கல்லூரியின் ஆங்கிலத் துறை அந்தக் கல்லூரியின் தலித் மாணவிகளுக்கு ஐ.ஏ.எஸ். மற்றும் பல போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி ஒன்றை ஆரம்பிக்கின்றது.

அதன் துவக்க விழா 22-7-2005 அன்று அக்கல்லூரியில் நடைபெற்றது. முன்னூறு தலித் மற்றும் பழங்குடி மாணவிகள் கலந்துகொண்டனர். துவக்க விழாவிற்கு திருமிகு சிவகாமி ஐ. ஏ.எஸ். அவர்களை அழைத்தது.

ஆங்கிலத் துறையைச் சேர்ந்த மீனாட்சி, கல்லூரி முதல்வர் ரெஜினா மற்றும் தலித் மாணவிகளின் ஒருங்கிணைப்பாளர் துவக்க விழாவில் கலந்து கொண்டனர். போட்டித் தேர்வுகள் பற்றிய அறிமுகம், அதற்குத் தயாராகும் விதம் பற்றியும் தன்னுடைய அனுபவங்களைச் சொல்லி துவக்க உரை ஆற்றினார் சிவகாமி.

## தொட்டித்தோப்பு, கடலூர் மாவட்டம்:

பழங்குடி இருளரின் நிலவுரிமை மற்றும் கோரிக்கைகள் கருத்தரங்கை புதிய கோடாங்கியில் அறிவித்தபடி 27-72005-இல் இருளர் பாதுகாப்பு சங்கமும், புதிய கோடாங்கியும் இணைந்து நடத்தின.

இக்கருத்தரங்கிற்கு க. ஆறுமுகம், பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கத்தின் பொதுச் செயலாளர் தலைமை ஏற்றார். . இதில் புதிய கோடாங்கி ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ப்ரதிபா ஜெயச்சந்திரன், இன்பகுமார், அதேகாம் பின்னகம் லலிதா, எழுத்தாளர்கள் தய். கந்தசாமி, விழி.பா. இதயவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

சி. துரைக்கண்ணு, அருட்தந்தை ஜோஸ், லூசி (வழக்கறிஞர்), விழுப்புரம் செல்வி, சிஸ்டர் லூசினா ஆகியோருடன் எழுத்தாளர் சிவகாமி அவர்களும் இருளர் நிலவுரிமை ஆதரவாளர்களாகப் பங்கேற்றனர்.

பிரபா. கல்விமணி அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். புதிய கோடாங்கி மூலம் அறிமுகமான இருளர் சமூகத்தைச் சேர்ந்த எழுத்தாளர், கவிஞர் கா.வ. கன்னியப்பன் வரவேற்புரையாற்றினார். ■

## அறிவிப்பு

புதிய கோடாங்கி இதழுக்கு ஆண்டுச் சந்தா செலுத்திய சந்தாதாரர்கள், தங்களுடைய சந்தா முடிவடைந்தவுடன் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம். புதிய சந்தாதாரர்களை அறிமுகப்படுத்தும் படியும் கேட்டுக்கொள்கிறோம்.

– ஆசிரியர்


படிப்பகம்

www.padippakam.com

# தச்சூர் - சாதித் தேரோட்டம்

2

■ கௌதம சன்னா

மதுராந்தகத்திற்கு தென்கிழக்கே சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தச்சூர் கிராமத்திற்கு போகும்போது தூரத்திலேயே அக்கிராமத்தை யாரும் கண்டுகொள்ள முடியும். உயரமான தச்சூர் தேவாலயக் கோபுரம் அவ்வூரை அடையாளம் காட்டுகிறது. செங்கல் பட்டு மாவட்டத்திலேயே உயரமான கோபுரம் கொண்ட தேவாலயம் இதுதான். இப்போது இவ்வூரை நோக்கி போகும் யாருக்கும் தேவாலய கோபுரம் தேவனின் ராஜ்யத்தை காட்டுவதற்குப் பதில், சாதித் திமிரையும்-வெறியையும் ரத்தத்தில் ஊறிக்கொண்டு திரியும் கிறித்துவ ரெட்டியார்களின் இருப்பிடத்தைக் காட்டுகிறது. எனவே பிரச்சினையின் மூலத்தை பார்ப்போம்.

**கோயில் கட்டியதிலிருந்து அதன் திருவிழா பணிகளுக்கான உடலுழைப்பு பணிகளை கூலியின்றி தலித்துகளே செய்து வந்தனர். தலித்துகளின் உழைப்பை மலிவான கூலிக்கு சரண்டிய ரெட்டியார்கள் தேவாலய பணிக்கும் கொஞ்சம் பணம் கொடுத்து அதிகாரத்தை தொடர்ந்து அனுபவித்து வந்தனர்.**

**தச்சூர் அமைப்பு**

மதுராந்தகத்திலிருந்து போகும் யாரையும் தூரத்தில் கோபுரம் முதலில் அழைப்பதைப்போல, கிராமத்தினுள் முதலில் வரவேற்பது சேரிப்பகுதிதான். சேரிப்பகுதியில் பறையர்கள் மற்றும் அருந்ததியர்கள் வசிக்கின்றனர். பறையர்களின் குடியிருப்புக்கு மேற்கே அருந்ததியர்களின் குடியிருப்பு உள்ளது. பறையர்களின் குடும்பம் சுமார் 175. இவர்களின் மக்கள் தொகை சுமார் 675. அருந்ததியர்கள் 85 குடும்பங்களாக, சுமார் 325 மக்கள் தொகையுடன் இருக்கிறார்கள்.

பறையர்களில் 39 குடும்பத்தினரிடம் மட்டும் தான் விவசாய நிலம் இருக்கிறது. இதில் 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் 5 குடும்பத்தினர். 3-4 ஏக்கர் வைத்திருப்பது 5 குடும்பங்கள். மீதமுள்ளவர்கள் 40 சென்ட் முதல் அதிகமாக 2 ஏக்கர் வரைதான் நிலம் வைத்திருக்கின்றனர். இவர்களிடம் உள்ள மொத்த நிலம் 51 ஏக்கர் புன்செய் நிலங்கள். இந்த நிலங்கள் குடும்ப பாகப்பிரிவினைக்குள் வரும்போது அதிகபட்சம் 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பது பெரிய விஷயமாகப்படும்.

அதேபோல அருந்ததியர்கள் 20 பேரிடம் நிலம் இருக்கிறது. இந்த நிலமும் சுமார் 20-25 ஏக்கர்தான். 85 குடும்பங்கள் உள்ள அருந்ததியரிடம் 20 பேரிடம்தான் நிலம் இருக்கிறது. பறையர், அருந்ததியர் இரு சமூகத்திலும் பெரும்பாலும் கூலி விவசாயிகள். நிலம் வைத்திருக்கும் அந்த தலித் மக்கள்கூட கூலி விவசாயம் செய்ய வேண்டும். ஏனெனில் குறுநிலத்தை வைத்துக் கொண்டு ஆண்டு முழுவதும் இவர்கள் ஜீவனத்தைப் பார்க்க முடியாது. பறையர்களிடம் உள்ள நிலங்களில் சிலருக்கு நீரிரைக்கும் பம்ப் செட் உள்ளது. ஆனால் அருந்ததியர்களுக்கு உள்ள நிலம் அனைத்தும் மானாவாரிதான்.

பறையர்களிடையே சுமார் 20 முதல் 25 வரை பட்டதாரிகள் இருக்கிறார்கள். இவர்கள் பணி நிமித்தம் வெளியில் வசிக்கிறார்கள். 2 பேர் கிறித்துவ சாமியார்களாகவும், 5 பெண்கள் சிஸ்டர்களாகவும் இருக்கிறார்கள். 10 பேர் கட்டிட பணி செய்பவர்களைத் தவிர, மீதியுள்ளவர்கள் விவசாயக் கூலிகள் தான். அருந்ததியர்களில் இந்த அளவுகூட முன்னேற்றம் காணப்படவில்லை. அவர்களில் பெரும்பாலோர் இன்னும் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள்.

தச்சூர் ஊர்ப் பகுதியில் வசிக்கும் ரெட்டியார்களின் பின்புலத்தைக் கண்டால் தலித்துகளின் பொருளாதார அவலம் புரியும்.

தச்சூர் ரெட்டியார்கள் மொத்தம் 145 வீடுகளாக இருக்க, மக்கள்தொகை சுமார் 725 பேர்தான். இதில் நிலம் வைத்திருப்போரின் பட்டியல் கீழே தரப்படுகிறது. இத்தகவல் கிராமத்தில் ரெட்டியார்களிடம் கூலி வேலை செய்த தலித்துகளிடமிருந்து திரட்டப்பட்டவை

| பெயர் | நில அளவு | பம்ப் செட் | இதர கருவிகள் |
|---|---|---|---|
| என்னய்யா (அ) சின்னய்யா | 70 | 8 | டிராக்டர் - 1<br>டில்லர் - 2<br>மாடுகள் - 40 |
| சாலமன் 40 ரெட்டி | 5 | | டிராக்டர் - 1<br>டில்லர் - 2<br>ரைஸ் மில் - 1<br>மருந்துக் கடை - 1<br>சிமெண்ட் கடை - 1 |
| மெல்கியூர் ரெட்டி | 50 | 5 | டிராக்டர் - 1<br>டில்லர் - 1<br>மாடுகள் - 20 |



படிப்பகம்

www.padippakam.com

| பெயர் | நில அளவு | பம்ப் செட் | இதர கருவிகள் |
|---|---|---|---|
| லாரன்ஸ் | 50 | 5 | டில்லர் - 1 |
| சிவன், சின்னப்ப ரெட்டி | 20 | 3 | |
| அந்தோணி (பஞ். தலைவர்) | 40 | 5 | டிராக்டர் - 1 டில்லர் - 1 |
| கமலம்மா ஆரேக்யசாமி | 30 | 4 | |
| பாலு ரெட்டியார் | 40 | 4 | |
| ஹென்றி | 10 | 1 | டில்லர் - 1 |
| அல்போன்ஸ் | 15 | 1 | |
| சவுரி ரெட்டி | 50 | 5 | டிராக்டர் - 1 டில்லர் - 1 |
| சின்னப்பா (பாதிரியார்) | 28 | 6 | டில்லர் - 1 ரூ.50 லட்சம் வீடு |
| மரியன்ன ரெட்டி | 10 | 1 | |
| தனிஸ்லால் | 15 | 1 | |
| குண்டுமணி சவுரி | 15 | 4 | |

இவர்களைத் தவிர மீதியுள்ளவர்கள் சிறு நில உடைமையாளர்கள். ஏழைகள் என்று எவரும் இல்லாத அளவிற்கு வளமானவர்கள்.

தச்சூரின் நிலம் வளமான புன்செய் நிலங்களும், குறைந்தளவே நன்செய் நிலங்கள். முன்பு முப்போகம் விளைந்த இந்நிலங்கள் இன்று இரு போகங்கள் மட்டுமே விளைகிறது என்றாலும் 1 ஏக்கருக்கு 30 மூட்டை நெல் இருக்கிறது என்பதால் நிலத்தின் மூலமான வருமானத்திற்கு குறைச்சலில்லை.

ரெட்டியார்களின் குடியிருப்பு நேர்த்தியாகவும், அனைத்து வீடுகளும் ஓடு வேயப்பட்டு அல்லது மாடி வீடுகளாகவோ இருக்கின்றன. வீடுகளின் அமைப்பு - அவற்றின் பழமை அவர்களது கடந்த கால வறுமையை இன்னும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

ரெட்டியார்கள் அனைவரும் கிறித்துவர்கள். இவர்களில் 2 பேர் பேராயர்(Bishop)களாக ஆந்திராவில் பணியாற்றியுள்ளனர். இன்று இவர்களில் 36 பேர் பாதிரிகளாகவும், 58 பெண்கள் அருட் சகோதரிகளாக(Sisters)வும் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர கல்வி கற்ற பெரும்பாலோர் ரோமன் கத்தோலிக்க கல்லூரிகள், பள்ளிகள், விடுதிகள் ஆகியவற்றில் ஆசிரியர்களாகவும், கத்தோலிக்க நிறுவனங்களில் குறிப்பிடத்தக்க அதிகாரமுள்ள பணியாளர்களாகவும் இருக்கிறார்கள். மிகச் சிலரே அரசு பணிகளில் இருக்கிறார்கள். எனவே ரெட்டியார் கிறித்துவர்களின் பொருளாதார வளமை, அவர்கள் கிறித்துவ அருட்பணியில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ளதால் அவர்களது தியாகத்தால் குறைந்து போயிருக்கும் என்று நினைத்துவிட முடியாது. ஏனென்றால் 'அருட்பணி'தான் ரெட்டியார்களின் வருமானத்திற்கு முதலீடு.

உதாரணத்திற்கு "சின்னப்பா" - இவர் ஆந்திராவில் பாதிரியாராக இருப்பவர். ரோமன் கத்தோலிக்க பாதிரி ஒரு துறவி என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆனால் இவர் முற்றும் துறந்தவரல்ல. இவர் துறவியாவதற்கு முன்பு வெறும் 5 ஏக்கர் விளைநிலமும், சிறிய ஓட்டு வீடும்தான் வைத்திருந்தார். இன்றைக்கு நிலைமை வேறு. 28 ஏக்கர் நிலமும், 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டிய பளிங்கு பங்களாவும் சின்னப்பா துறவியின் சொத்து.

இப்படி துறவியானவர்கள் இவ்வூரிலேயே சொத்துக்களை குவிக்கவில்லையென்றாலும், ஆந்திரா, செங்கல்பட்டு உட்பட பல இடங்களில் குவித்துள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

**ரெட்டியார்களின் சாதிப்பணிகள்**

ரெட்டியார்கள் அருட்பணி செய்வது போலவே அவர்கள் செய்த சாதிப் பணியினை தெரிந்து கொள்வது அவ்வூரில் எழுந்துள்ள தேவாலயப் பிரச்சினையை விளங்கிக்கொள்ள உதவும்.

தச்சூர் சேரியில் இன்று வாழும் பெரியவர் அந்தோணி 100 வயதைக் கடந்தவர். ரெட்டியார்களின் பெரும்பாலான வீடுகளில் மாத நெல் கூலிக்காக கொத்தடிமையாக வேலை பார்த்தவர். இவரது தந்தையார் திரு. சவுரிமுத்து. தச்சூர் தேவாலயத்தில் வெள்ளையர் ஒருவர் பாதிரியாராக இருந்தபோது அவருக்கு சாரட் வண்டி ஓட்டியவர். இன்னும் நினைவு தப்பாமல் எந்தெந்த ரெட்டி வீட்டில் எத்தனை வருடம் வேலை செய்தார் எனபதை சரியாக கூறுகிறார்.

கிறிஸ்துவுக்குள் ஐக்கியமான ரெட்டியார்கள் நடத்திய விதத்தை அவர் நினைவு கூர்ந்தார்.

- தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை செய்யும் இடம் தவிர ஊர்ப்பகுதிக்குள் நுழைந்தால் தடியெடுத்து விரட்டுவது, தீட்டு ஒட்டிக்கொள்ளும் எனும் காரணத்தால் இடைவெளியை அனுசரிப்பது.

- கூலி வேலைக்கு ரெட்டிகள் வீட்டிலேயே இருக்க வேண்டும். காலையில் 4 மணிக்கு போனால், ராத்திரி 10 மணிக்கு வீடு திரும்பணும். எப்போதும் பழைய கஞ்சிதான். சாப்பாடெல்லாம் கிடையாது.

- தாழ்த்தப்பட்ட மக்கள் ஏதாவது தப்பு செய்துவிட்டதாக ரெட்டியார்கள் கருதினால், தப்பு செய்த தலித்தை வண்டிச் சக்கரத்தில் கட்டி சுற்றுவார்கள். சுற்றும்போதே புளியம் விளாரினால் விளாசுவார்கள். அது உடம்பில் எல்லா இடத்திலேயும் படும்.

- வெற்றிலை பாக்கு வாங்க சிறிது நெல்லெடுத்து கடையில் கொடுப்பது போன்ற சிறிய தப்புக்குக்கூட பெரிய தண்டனைதான். தரையில் உப்பு கொட்டி அதில் முழங்கால் போடவேண்டும். அதுவுமில்லாமல் பனை மர மட்டையால் அடித்துக் கொண்டேயிருப்பார்கள். உப்புக் கல்லில் முழங்காலிடும்போது கையில் சில நேரம் பெரிய கல்லை பிடிக்க வைப்பார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

**"பத்தாயிரம் கொடுத்து கோயில் பங்கு கேட்பானுங்க, பிறகு பொண்ண வேற கேப்பானுங்க" என்று ஒரு ரெட்டியார் சொல்ல, பேச்சுவார்த்தை வன்முறையாக மாறிவிட்டது**

இதைத்தவிர அடிகள் அப்போதெல்லாம் சர்வ சாதாரணம். நூறு வருடமாக இதெல்லாம் பார்த்துக் கொண்டுதான் வர்றேன் என்று பெரியவர் சொல்லும் போது தச்சூர் ரெட்டியார்களின் கருணை தவழும், கிறித்துவ முகம் நெருட வைக்கிறது. இதுவரை தலித்து களின் பலமும் - பலவீனமும், ரெட்டியார் களின் பலத் தையும் - பலாத்காரத்தையும் பார்த்தோம். இனி, ரெட்டியார்களின் கிறித்துவ முகத்தை வெளிச்சப் படுத் திய தேவாலயத்தையும் அதன் தேர் வரலாற்றை யும் பார்த்தால் பிரச்சினையில் யார் பக்கம் நியாயம் என் பதை உணர்ந்து கொள்ள முடியும்.

**தேவாலய வரலாறு**

1915க்கு முன் தச்சூர் தேவாலயம் சேரிப்பகுதியில் ஒரு கீற்றுக் கொட்டகையில் நடைபெற்று வந்தது. தேலாலயம் ஊரை ஒட்டிய பகுதியில் அமைந்திருந்த தால் ரெட்டியார்கள் வருவதற்கு பிரச்சினை ஏதும் இருந்ததில்லை. அப்போதெல்லாம் வெள்ளை பாதிரி கள்தான் பூசையை நடத்தி வந்தார்கள். பிறகு 1915-இல் ராஜேந்திரன் என்ற பாதிரியார் தேவாலயப் பூசைக்கு நியமிக்கப்பட்ட பிறகு, தேவாலயத்தை கட்டிடமாக மாற்றும் யோசனையை முன்வைத்து தலித் மற்றும் ரெட்டியார்களிடம் பேச இருவரும் சம்மதித்துள்ள னர். தேவாலயம் கட்டுவதற்கான கட்டுமானப் பொருட் களுக்கான செலவில் ரெட்டியார்கள் ஒரு பங்கும், தலித்துகள் கட்டிமுடிக்கும் வரை உடலுழைப்பும், மீதி தேவைப்படும் தொகையை வெளியிலிருந்து திரட்டு வது என முடிவாகி, 1915 கோயில் கட்டும் பணி துவங்கி 1925-இல் நிறைவடைந்தது. 10 வருட காலம் மெதுவாக நடைபெற்ற கட்டுமானப் பணிக்கு தலித்துகளே கூலியின்றி செய்துள்ளனர். கோயிலுக்கு சுண்ணாம்பு அரைப்பதற்கு தலித் சமூகத்தவரின் நிலமே பயன் படுத்தப்பட்டது. இப்படி கட்டி முடிக்கப்பட்ட தேவாலயம் முதன் முறையாக 1925 மே 31-இல் திருவிழா. திருவிழாவிற்கு தீப்பந்தங்கள் தவிர பெட்ரோமாக்ஸ் விளக்குகள் எடுப்பதற்காக தலித்துகள் 15 கி.மீ. தூரமுள்ள 'கருங்குழி'க்கு சென்று எடுத்து வர வேண் டும் என்றும் திருவிழாவில் அவர்களே அதை சுமந்து வரவேண்டும் என்றும் பணியிடப்பட்டதை தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் இவ்வேலையை தலித்துகளே செய்து வந்தனர்.

கோயில் கட்டியதிலிருந்து அதன் திருவிழா பணிகளுக்கான உடலுழைப்பு பணிகளை கூலியின்றி தலித்துகளே செய்து வந்தனர். தலித்துகளின் உழைப்பை மலிவான கூலிக்கு சரண்டிய ரெட்டியார்கள் தேவாலய பணிக்கும் கொஞ்சம் பணம் கொடுத்து அதிகாரத்தை தொடர்ந்து அனுபவித்து வந்தனர்.

இருந்தபோதும் தலித்துகளுக்கு பூசையில் சம உரிமை என்பது இல்லை. உட்காருவதற்கு தனி இடம், பூசையில் தனி ஒதுக்கல், பைபிள் படிக்கும் சம்மா-வில் பங்கில்லை, கோவில் பலிபீட உதவிக்கு இருக்கும் சிறுவரில் (Alterboys) எந்த தலித்தும் சேர்க்கப் படுவதில்லை. அப்பம் வழங்கும் திருவிருந்து நிகழ்வில் தனி ஒதுக்கல், கோயில் நிர்வாகத்தை நடத்தும் பங்கு குழுவில் தலித்துகளுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக திருவிழா சமயத்தில் தலித்து களிடம் பணம் வாங்குவதில்லை என்று அவர்களது உடலுழைப்பை பெற்றுக் கொள்வதும் கோயில் சந்தா விலும் நன்கொடை, பஞ்சாயத்து அபராதத் தொகை யைக் கொண்டும் நடத்தப்பட்ட திருவிழாவிற்கு தலித்துகளுக்கு உரிய மரியாதை இல்லை. தேர்வலம் ஊர்வலமாகவே போய்விடும், சேரிவலம் வருவதே கிடையாது.

இவைதான் கோயில் கட்டியதிலிருந்து தலித்து களுக்கு கிடைத்த மரியாதைகள். இதுவே கோயில் துவங்கிய வரலாறு.

**பிரச்சினைக்குள்ளான கோயில் வரலாறு**

கோயில் - பிரச்சினை புதிதாக துவங்கியதா என வாசகர் ஆச்சரியப்படத் தேவையில்லை. அக்கட்டிடத் தின் துவக்கமே பிரச்சினையோடுதான் துவங்கியது என்பதை யூகிக்க பெரிய அருள் தேவையில்லை. எனினும் பிரச்சினை - பிரச்சினையாக வெளிப்பட்ட காரணத்தை பார்ப்பது சுவாரஸ்யமானது.

கோயில் கட்டி நீண்ட காலத்திற்குப் பிறகு 1971-ஆம் ஆண்டு மேற்பூச்சு பழுதடைந்ததால் அதை சரிசெய்ய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு முயற்சி கள் துவங்கியது. பிறகு தேவாலயப் பணத்தில் பூச்சு வேலை துவங்கியது. இதில் உடலுழைப்பு முழுவதும் தலித்துகளே அளித்தனர். 1978-இல் உள்பூச்சு வேலை யோடு பணி முடிந்தது. பின்பு தலித்துகள் தங்களுக்கு தேவாலயத்தில் சம உரிமை வேண்டும் என கோரிக் கையை முன் வைத்தவுடன் ரெட்டியார்கள் வேறு கோணத்தில் இதை திசை திருப்பினார்கள். 1978-இலிருந்து இப்பிரச்சினை புகைந்தபடி இருக்க 1985-இல் கோயில் கட்டுமானப் பணி பங்கிற்காக பத்தாயிரம் ரூபாய் சேரி மக்கள் அளிக்க வேண்டுமென ரெட்டியார் கள் முடிவாக அறிவித்து விட, தலித்துகளோ நாங்கள் உடலுழைப்பையும், மூவாயிரம் ரூபாய் பணத்தையும்

**தலித்துகள் பத்தாயிரம் ரூபாயும், உடலுழைப்பும் தருகிறோம் என உறுதியளித்தவுடன் இதை ரெட்டியார்கள் மறுத்து தொகையை இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தினர். இதனால் தேவாலயத்தின் சீரமைப்புப் பணிகளில் தேக்கம் உண்டானது என்பதை உணர்ந்த தலித்துகள் ரெட்டியார்கள் கேட்ட தொகையை தர மறுபடியும் சம்மதித்தனர்.**



படிப்பகம்

www.padippakam.com

தருகிறோம் என்று சொன்னதை ரெட்டியார்கள் ஏற்க வில்லை. பிறகு 1987-இல் பாதர் அந்தோணி சமரசம் செய்ய முன்வந்தபோது - தலித்துகள் பத்தாயிரம் ரூபாயும், உடலுழைப்பும் தருகிறோம் என உறுதியளித்தவுடன் இதை ரெட்டியார்கள் மறுத்து தொகையை இருபதாயிரம் ரூபாயாக உயர்த்தினர். இதனால் தேவாலயத்தின் சீரமைப்புப் பணிகளில் தேக்கம் உண்டானது என்பதை உணர்ந்த தலித்துகள் ரெட்டியார்கள் கேட்ட தொகையை தர மறுபடியும் சம்மதித்தனர். இப்படி இந்த பங்குத்தொகை ஏலத்தில் உயர்த்துவதைப்போல ரெட்டியார்கள் உயர்த்திக்கொண்டே போனார்கள். இது உயர்ந்து ஒரு லட்சம் ரூபாயாக நின்றது. இப்படியாக தலித்துகள் சுயமரியாதைப் பிரச்சினை பணப் பிரச்சினையாக 1994-ஆம் வருடம் வரை தள்ளிப் போடப்பட்டது.

இனியும் பொறுக்க முடியாது என்று தலித்துகள் அன்றைக்கு பேராயராக இருந்த அருள்தாஸ் ஜேம்ஸ் அவர்களிடம் புகார் அளிக்க அவர் பங்குத்தந்தை பி. அந்தோணிக்கு கடிதம் எழுதி பிரச்சினையை சரி செய்யும்படி கூறினார். எனவே எல்லா கிறித்தவர்களும் சமமாக இணைந்து பணிகள் மேற்கொள்ள வேண்டுமென முடிவாகியது. அதன்படி பறையர், அருந்ததியர், ரெட்டியார் ஆகிய மூன்ற பிரிவுகளிலும் தலா 6 பேர்கள் அழைக்கப்பட்டு கூட்டம் போடப்பட்டது. மொத்தம் 20 நாற்காலிகள் போடப்பட்டு கூட்டம் துவங்கியது. ரெட்டியார்கள் தாங்கள் உட்கார்ந்தால் பறையர்களும், அருந்ததியர்களும் நாற்காலியில் உட்கார்ந்து விடுவார்கள் என்பதால் நாற்காலியில் உட்காராமலேயே நின்று கொண்டு பேசினார்கள். இதனால் தலித்துகளும் நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது. அவர்களும் நின்று கொண்டே கூட்டம் நடந்தது.

தேவாலய சீரமைப்புப் பணிக்கு நன்கொடைப் புத்தகம் போட்டு ஆந்திராவில் வசூலிக்க வேண்டிய அவசியம் ஏன் வந்தது என்று தலித்துகள் கேள்வி தொடுத்தனர். இதைத் தொடர்ந்து தங்களுடைய கோரிக்கைகளை ஒன்றன்மேல் ஒன்றாக தலித்துகள் முன்வைக்க, ரெட்டியார்கள் கொதிக்க ஆரம்பித்தார்கள். "பத்தாயிரம் கொடுத்து கோயில் பங்கு கேட்பானுங்க, பிறகு பொண்ண வேற கேப்பானுங்க" என்று ஒரு ரெட்டியார் சொல்ல, பேச்சுவார்த்தை வன்முறையாக மாறிவிட்டது. இதனால் அந்த அமைதிக் கூட்டம் அமைதியின்றியே முடிந்தது. கிறித்துவர்களிடையே ஒற்றுமை இல்லை என்பதை பேராயர் இதன் மூலம் கண்டுபிடித்து 1995-இல் தேர்த்திருவிழா நடத்தக் கூடாது என்று பிஷப் உத்தரவிட்டார்.

மத நிறுவனமே தடைசெய்த திருவிழாவை ரெட்டியார்கள் எப்படி 1995-இலிருந்து நடத்தினார்கள், தலித்துகள் அதை எப்படியெல்லாம் எதிர்த்து முறியடித்தார்கள் என்பதுதான் தச்சூர் கதை.

இந்த சாதி வேஷக் கதையின் வன்கொடுமை வடிவம் எப்படியெல்லாம் வளர்ந்தது, அதன் நாயகர்கள் யார்? யார்? என்பதையும் - சட்டப் பூர்வமான மத ரீதியான நடவடிக்கையையும் அடுத்த இதழில் காண்போம். ◆

■ கு. உமாதேவி

கல்லூரி முடித்ததோடு சரி
பிறகு ஒவ்வொரு நாளும்
நாம் சந்தித்துக் கொள்வது
பெரும் விஷயமாகிவிட்டது.

வாள் பழகாத குட்டி இளவரசனைப்போல
என் சேரியை அடைவது உனக்கும்
உன் வீட்டை அடைவது எனக்கும்
சிரமம்தான் - வேண்டுமெனின்
சொல்லிக்கொள்ளலாம்
நேரமில்லை என்று.

பிரதோஷத்தின்போது
அருணாச்சலீஸ்வராலயத்தில்
சந்திப்போமென
டவுனுக்கு வந்த அப்பாவிடம்
(நீ) சொல்லியனுப்ப
தொடர்ந்த நிகழ்வுகள் மலர்த்தின
நம் உள்ளார்த்தங்களை.

உன் நட்பால்
காற்றின் பிசுபிசுப்பில்
கண்கள் களவாடப்பட்டது.

பிரஹாரங்களை சுற்றிக் கிடந்த
நந்தியாவட்டங்களில்
மூச்சு திணறியதும்
முதன்முதலாய் அன்றுதான்.

சிங்காரிக்கப்பட்ட நந்தியை
நெரிசலில் குமைந்து
வணங்கிவிட்டு வருகிறாய்
பாவம் தொலைந்ததா தேவீ?

முந்தைய மாதம்
அம்மையொடு ஐயனுக்கு
ஐம்பொன்தாலியைச் சாற்றினேனென (நீ)
பெருமிக்கையில்
நினைவுறுத்துகிறாள்

எட்டணா கற்பூரத்திற்கே வழியற்று
தூரநின்று வணங்கிச் செல்லும்
என் பக்கத்து வீட்டு
ஹூன பறச்சி ஒருத்தி. ◆



படிப்பகம்

www.padippakam.com



# அழகு

அன்பாதவன்

'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...'

அயர்ந்த தூக்கத்தில் காதில் ஒலித்தது தொலைபேசி அழைப்பு.

"யாருங்க" - மனைவியின் வினவல்.

....... .......

"இருக்காரு... தூங்குறாரு..."

....... .......

"இருங்க எழுப்புறன்... லைன்லே இருங்க..."

"ஏங்க... ஏங்க... ஒங்களத்தான்ன... எழுந்திருங்க... போன் வந்துருக்கு..."

"யாரும்மா... தூங்க வுடாம..."

"யாரோ அருணாவாம்... அவசர மாப் பேசணுமாம்..."

எழுந்து அமர்ந்து ரிசீவரை அருகே இழுத்தேன்.

"யாரு..."

"வணக்கம் கவிஞர்... ஞாபகமிருக்கா... நான் அருணா... சென்னை அரவாணிகள் சங்க செயலாளர்... முகையூர்ல தலித், பழங்குடி, அரவாணிகள் மாநாட்டுல சந்திச்சோமே..."

"அடடே... வணக்கம் அருணா... மன்னிக்கனும்... இடைவெளி ரொம்ப நாளா ஆயிட்டதால ஒடனே ஞாபகம் வர்ல. எப்டி இருக்கீங்க... அருணா... என்ன விஷயம்..."

"நான் நல்லா இருக்கன் கவிஞர்... இப்போ நீங்க பாம்பேல இருக்கிறதா கேள்விப்பட்டேன்..."

"ஆமா... பதவி உயர்வும் பணி மாற்றமும் மும்பைக்கு தூக்கிட்டு போயிடுச்சு..."

"இதயவேந்தன்தான் நீங்க லீவுல வந்திருக்கிறதா சொன்னாரு. ஒரு உதவி செய்யணுமே... இன்னைக்கு ஃப்ரீதான..."

"இன்னைக்கா... என்ன விஷயம் சொல்லுங்க..."

"இன்னைக்கு சாயந்திரம் அரவாணிகளோட அழகிப் போட்டி நடக்குது... கன்னியாகுளம் ரோட்ல... மங்களம் கல்யாண மண்டபத்துல சரியா ஆறு மணிக்கு... நீங்களும் ஒரு நடுவரா இருக்கணும். முடியுமா..."

"ஒரு நிமிஷம் லைன்லயே இருங்க..."

தொலைபேசியின் ஒலி வாங்கியை சற்றே மறைத்து என் மனைவியிடம் மெதுவான குரலில் வினவினேன்.

"ஏம்மா... இன்னைக்கு சாயந்திரம் ஏதாவது வேல இருக்கா..."

"ஏங்க, என்ன சேதி..."

"அரவாணிங்க அழகிப் போட்டி நடத்தறாங்களாம்.. நடுவரா என்னையும் கூப்புடுறாங்க... போவட்டுமா..."

"போயிட்டு வாங்க... போயிட்டு வாங்க... அவங்களுக்கு நாமதான ஆதரவு கொடுக்கணும்..."

"தேங்ஸ்டா செல்லம்"

"ஓகே அருணா... சாயந்திரம் வந்துடுறேன்... வேற என்ன சிறப்பு நிகழ்ச்சி..."

"ப்ரியா பாபு வர்ராங்க.. 'மனசோட அழைப்பு'ன்னு நாடகமொன்னு நடத்துறாங்க... அப்புறம் மறக்காம உங்க 'அரவான் வாக்கு' கவிதையை எடுத்துட்டு வாங்க..."

"நிச்சயமா எடுத்துட்டு வர்ரன்.. ஓகே வச்சிடவா...

அரவாணிகளின் தெய்வாம்ச தலைவனும், கடவுளுமாகிய அரவான் என்கிற கூத்தாண்டவர் கோயில் திருவிழா விழுப்புரம் அருகே உள்ள கூவாகம் கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் நிகழ்வது வழக்கம். நாடு முழுவதுமிலிருந்து அரவாணிகள் கூத்தாண்டவர் திருவிழாவுக்கு ஒரு வாரம் முன்னரே வந்து விழுப்புரத்தில் தங்குவதும், நடனப்போட்டி, அழகிப் போட்டி எனப் பல்வேறு போட்டிகள் நடத்தி சமூகத்தில் தங்களுக்குமான ஒரு இடத்தை தக்கவைத்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்வதும் சமீபத்திய நிகழ்வுகள்... ஊடகங்களின் கடைக்கண் பார்வையும் அரவாணிகள் மேல் விழுந்ததில்... பெரிய விளம்பரங்கள்.. மிகுந்த வரவேற்பு.

'அவசியம் போக வேணும். மூன்றாம் பாலாய்த் திரிந்தவர்கள். சமூகத் தின் கேவலப் பார்வையிலிருந்து, ஆபாச அருவருப்பான விமர்சனங்களிலிருந்து தங்களை மீட்டெடுத்து புது வாழ்வுக்கான போராட்டங்களை தொடர்பவர்களை பாராட்டவாவது போகத்தான் வேணும்.'

வீட்டிலிருந்து கிளம்பி பிரதான சாலைக்கு வரும் போதே சுவரொட்டிகளில் அரவாணிகளின் அழகிப் போட்டிக்கான அழைப்புகள்.

'யே... யப்பா! ஆறேழு வருஷங்களுக்கு முன்னால இதே அரவானிகள்... இதே ஊர்ல வந்து தங்குறப்போ எவ்ளோ கேலி... எவ்ளோ கிண்டல்...'

"டேய்... எட்டுக்கு அப்புறம் என்னடா..." "மச்சி... பத்துக்கு முன்னாடி..."



படிப்பகம்

www.padippakam.com

"நடையா இது நடையா... ஒரு நாடகமன்றோ நடக்குது"

"சித்தாடை கட்டிகிட்டு... சிங்காரம் பண்ணி கிட்டு... மத்தாப்பு சுந்தரி ஒருத்தி... மயிலாட வந்தாளாம்..."

"பொழுதோட கோழி கூவுற வேள... வாராண்டி பொண்ணே ராசாதி ராசன்..."

'அப்பப்பா! இத்தனைக் கேலிகளைத் தாண்டி... இத்தனை அனுமானங்களைத் தாண்டி இன்னமும் இப்போதும் கம்பீரமாக, குழுகுழுவாக இணைந்து வாழ்வதை நினைத்தால் சந்தோஷமாக இருக்கிறது.'

"வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்"

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு"

கண்ணதாசன் அனுபவக் கவிஞன் அல்லவா!

கன்னியாகுளம் சாலை வண்ணமயமாய் இருந்தது. அதீத அலங்காரங்கள் பெண்களும் பொறாமைப்படும் அதியற்புத நகை வகைகள்.. ஆண்களையும் ஏங்க வைக்கும் நவீன உடையலங்காரங்கள்.. சந்தோஷம் அலையாய் பரவி நகர் முழுக்க வியாபித்து இருந்தது.

அரங்கினுள் நுழைந்தபோது இரண்டு அரவாணிகளின் போட்டி நடனம் நிகழ்ந்துகொண்டிருந்தது.

'சபாஷ் சரியானப் போட்டி'

நிகழ்ச்சித் தொகுப்பாளராக இருந்த அருணா, மேடையில் இருந்து இறங்கி ஓடி வந்தார்.

"வாங்க கவிஞர் வாங்க... வணக்கம். நீங்க வந்ததுல ரொம்ப சந்தோஷம்... ஒக்காருங்க..."

"அடுத்த நிகழ்வாக, காஞ்சிபுரம் ப்ரியா பாபு குழுவினர் வழங்கும் 'மனசின் அழைப்பு' நாடகம். இந்த நாடகத்திற்கான கதை, உரையாடல் உதவி மக்கள் கவிஞர் க. இன்குலாப். நடிப்புப் பயிற்சி திரைக் கலைஞர் கலைராணி. நெறியாள்கை முனைவர் அ. மங்கை" - நாடகக் குழுவினரை அழைத்து விட்டு அருகே அமர்ந்தார் அருணா.

எளிய அரங்கில், புதிய உத்திகளோடு பாடல், இசை, நடனம், அடவுகள் என யாவும் சரிவிகிதக் கலவையில் கலந்த நவீன நாடகம். சிகண்டி, மாலிக்காபூர் எனப் புராண, வரலாற்று பாத்திரங்கள் அரவாணிகளாகஇருந்ததைச் சொல்லி, தற்காலக் கட்டத்தில் தாங்கள் எப்படி நடத்தப்படுகிறோம், எப்படி நடத்தப்பட வேண்டும் என்ற ஆசையோடு முடிந்தது. பிரத்யேகமான உடல்மொழியோடும், குரல், நடிப்பாற்றல் என முழுக்க முழுக்க அரவாணிகளை மட்டுமே கொண்டு 'மனசின் அழைப்பு' இருந்தது மிகச் சிறப்பு.

பலத்த கைதட்டல் அரவாணி களின் ஏக்கத்தையும், ஆமோதிப்பையும் உணர்த்தியது.

"அடுத்து நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் அழகிப் போட்டி நடக்க இருக்கிறது. அதற்கு முன் மும்பையிலிருந்து வந்திருக்கும் விழுப்புரம் நகரைச் சார்ந்த கவிஞர் அன்பாதவன் தனது 'அரவான் வாக்கு' என்ற கவிதையை வாசிப்பார்" - அருணா சைகையால் என்னை எழுந்து ஒலிவாங்கி அருகில் செல்லும்போது கொஞ்சம் சந்தோஷம்... கொஞ்சம் பெருமை... கொஞ்சம் சந்தேகம்... 'கவிதை சரியாகப் போய்ச் சேருமா' - மெல்லச் செருமிவிட்டு கனத்த குரலில் வாசிக்கத் தொடங்கினேன்.

அரவான் வாக்கு

நான் அரவான்
நல்லரவான்

என் தந்தை அர்ச்சுனன்
வேட்டுவ வேடந்தாங்கி
நாகக் கன்னி உலூபியுடன்
நல்லுறவில் உதித்தவன் நான்

அதனால் நான்
பழங்குடி இனத்தவன்

அடர்ந்த கானகத்தின்
குளிர் நிழலில் வளர்ந்ததால்
நான் வனப் புதல்வன்

நான் அரவான்
நல்லரவான்

அம்சங்கள் பலவும் பொருந்திய
ஆணழகன் நானென்பார்

அழகு
என் உயிருக்கு எமனாக வந்தது.

அரசர்களின் ஆதிக்கப் போரில்
என் உயிரும் உடலும் பலியாக

வாடி வரம் கேட்காமல்
சாக வரம் கேட்டவன்
சாப வரம் பெற்றவன்

எவரோ வெற்றிபெற
வாக்களிக்கும் ஏமாளிகளைப்போல
எந்த மன்னனோ வெற்றிபெற
நான் முதல் பலி
வெட்டிய வாளில் வழிகிறது
என் உயிர்த்துளி

ஆண்டவர்களின் கூத்தும்
ஆள்பவர்களின் கூத்தும்
பொறுக்க முடியாமல்
இறக்கத் துணிந்தவனை
கூத்தாண்டவர் எனக்
கொண்டாடும் ஒரு கூட்டம்
இது என்னக் கூத்து...?

இதோ...
கரகரத்த குரலில்
கைதட்டி கும்மியடிக்கும்
என் துணைவிகளைப் பாருங்கள்



படிப்பகம்

www.padippakam.com

வல்லினமும் மெல்லினமுமில்லா
இடையினங்களை
கேலி பேசுகின்றன
சில கடையினங்கள்

எண்ணிக்கையில் உயர்ந்த
ஒற்றைப் பகு எண்ணாய்
எள்ளி நகையாடுகின்றன!
போதும் நிறுத்துங்கள்
இவர்கள் என் மனைவியர்கள்
மனிதர் உருவில் பிறந்திருக்கும்
கடவுளின் குழந்தைகள்

இந்திரனின் மனைவி
இந்திராணி எனில்
அரவானின் துணைவியர்
அரவாணிகள்தானே...!

இனியும் என் குலத்தோரை
இழிவு செய்தால்
கரிய பெரிய என் கண்களின்
நெருப்பு சுட்டு பொசுக்கும்
பொல்லாங்கு சொல்வோரை
நல்லரவம் தீண்டும்
இது அரவான் வாக்கு

எம் குடிகளை ஏளனஞ் செய்வதை
இனியும் பொறுப்பதில்லை

மனிதரென உணருங்கள்
அரவாணிகளும்
மனிதரென உணர்த்துங்கள்

ஒடுக்கப்பட்டவர்களின் கூட்டம்
இது ஒதுக்கப்பட்டவர்களின் கூட்டம்

வேறுவேறு பெயர்களில்
கிடந்தவர்கள்
வீறுகொண்டு எழுகிறோம்.
இனியும் வேண்டாம் களப்பலிகள்
ஆதிக்கம் எதிர்ப்போம்
புதுமைச் சரித்திரம் படைப்போம்

இது அரவான் வாக்கு
நல்லரவான் வாக்கு

கவிதை முடிந்தவுடன் கைதட்டல் அலையடங்க வெகுநேரமாயிற்று. யாரோ ஒரு அரவாணி மேடைமீது ஓடிவந்து கன்னத்தில் முத்தமிட அரங்கம் முழுவதும் ஆரவார சந்தோஷப் பேரொலி.

அழகிப் போட்டிக்காக 'பூனை நடை' நடக்கும் வகையில் மேடையமைப்புகள் சற்றே மாற்றியமைக்கப்பட்டு, வண்ண விளக்குகள் அணைந்து அணைந்து ஒளிர ஒரு புதியச் சூழல்.

என்னோடு உள்ளூர் பெண் மருத்துவர் ஒருவரும், பத்திரிகை யாளர் ஒருவரும் நடுவர்களாக அமர்த்தப்பட, அழகிப்போட்டி தொடங்கியது.

அடேயப்பா! என்னென்ன வகை உடைகள்... நடையழகு... அங்க லட் சணங்கள்... வடிவ அமைப்புகள்...!

"அழகு அழகு
நீ நடந்தால் நடையழகு"

"அழகே அழகு தேவதை..."
"என்ன அழகு... எத்தனை அழகு
கோடிமலர் கொட்டும் அழகு"

அழகு குறித்த பாடல்கள் துண்டு துண்டாய் மனசில் அலையாய் எழும்பின. 'காணக்கண் கோடி வேண்டும்' என்பார்களே அதுபோலத்தான் ஆயிற்று.

கலந்துகொண்ட முப்பத்து மூன்று பேரில் மூவரை தேர்ந்தெடுப்பது எங்களுக்கு மிகச் சிரமமான பணியாக, சவாலாக அமைந்தது. மருத்துவரும், பத்திரிகையாளரும் முடிவுகளை அறிவிக்கும் பெரும் பணியை என் தலையில் கட்டி விட்டார்கள்.

"இதோ நீங்கள் அனைவரும் ஆவலுடன் எதிர் பார்த்த அழகிப் போட்டி முடிவுகளை அறிவிக்க நம் முன்னே வருகிறார் கவிஞர் அன்பாதவன். எல்லோரும் எழுப்புங்கள் கரகோஷம்" - கம்பீரமாய் முழங்கியது அருணாவின் குரல்.

"ஹேய்..." ஆனந்த கரகோஷம் அரங்கமெங்கும் நிரம்பி வழிந்தது.

"எல்லோருக்கும் மறுபடியும் வணக்கம். ரொம்ப சந்தோஷமா இருக்கு... சமூகத்துல புறக்கணிக்கப்பட்ட ஒரு பெரிய குழுவோட நிகழ்ச்சில கலந்துக்கிறதுல மனசுக்கு நிறைவா இருக்கு...

சமீபத்துல ஜப்பான் கடந்த காலங்கல்ல தன்னைச் சுற்றி இருக்குற கொரியா, சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளில் தகாத முறையில் நடந்துகிட்டதுக்கு மன் னிப்பு கேட்டிருக்கு... அதப்போல எங்க ஊருக்கு விருந் தாளிகளா வர்ர உங்களயெல்லாம் எவ்ளோ பேரு கிண் டல், கேலின்னு தாங்க முடியாத அவமானங்கள ஏற்படுத்தியிருக்கிறோம்... நானுங் கூட... அவுங்க சார்புல உங்க எல்லார் கிட்டயும் நான் பொது மன்னிப்பு கேட்டுக்குறன்.

அலி... ஒம்போது... பொட்டை... கீரைவடை...ன்னு காலங்காலமா சமூகத்தால எள்ளி நகையாடி ஏளனப் படுத்தப்பட்டு வந்த இடையினங்களான அரவாணி களின் தன்னம்பிக்கைக்கு நான் தலை வணங்குகிறேன்.

இந்த நேரத்தில் அழகிப் போட்டியில் மூன்றாவது பரிசை வென்றவரின் பெயரை அறிவிக்கிறேன்."

- கனத்த மவுனம் அரங்கில் -

"அழகிப் போட்டியில் மூன்றாம் பரிசு வெல்பவர் விழுப்புரம் சிந்து"

"ஹேய் ஹேய் சிந்து... ஹேய் ஹேய் சிந்து..." கூட்டம் கோஷமிடத் தொடங்கியது.

"அமைதி... அமைதி... இப்படி அழகும், திறமைகள் பலவும் கொண்ட அரவாணிகளில் சிலர் ஏன் பாலியல் தொழிலில் ஈடுபட வேண்டும். அரசின் நலத்திட்டங்க ளும், சமூக அமைப்புகளின் உதவிகளும், பத்தி ரிகைக


படிப்பகம்

www.padippakam.com

ளின் ஆதரவும் உங்களுக்கு சாதகமாக இருக்கும்போது ஏனிப்படி தவறான தொழிலில் இன்னமும் இணைத்துக் கொள்ளத் தோன்றுகிறது. யோசியுங்கள். எப்படியாவது அந்த புதைகுழியிலிருந்து மீண்டு வெளிவர முயற்சியுங்கள்... அதே நேரம் எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கங்கள் யாவுமே அரவாணிகளை மட்டுமே குறை சொல்லுகின்றன... மையங்கொள்கின்றன... குற்றஞ் சொல்கின்றன. இதை வன்மையாக கண்டிக்கிறேன். எந்த நாணயத்திற்கும் இரு புறங்கள் உண்டு. கேட்க நாதியற்றவர்கள் என்று நினைத்து சில அமைப்புகள் அரவாணிகளை எய்ட்ஸோடு தொடர்புபடுத்துகின்றன. இது வருந்தத்தக்கது. கண்டிக்கப்பட வேண்டியது."

"ஷேம் ஷேம்... கண்டிக்கிறோம் கண்டிக்கிறோம்" அரங்கம் எனது கருத்துக்கு ஆதரவாக பதிலுரை தந்தது.

"அழகிப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருப்பவர் சேலம் அகல்யா"

"அகல்யா... அகல்யா..." கூட்டம் ஆமோதித்து கரகோஷம் எழுப்பியது.

"உங்கள் மீது மிகுந்த பரிவும், நேசமும் கொண்ட எனக்கும் மனசில் ஒரு காயமுண்டு. அந்த கசப்பான விஷயத்தை இந்த இடத்துல சொல்லணுமான்னு ஒரு கேள்வியும் எனக்குள்ள எழுது. ஆனா இங்க சொல்லலைன்னா வேற எங்கயும் சொல்ல முடியாதுன்னு நினைக்கிறேன். போன மாசம் மும்பையிலிருந்து சென்னைக்கு வந்தபோது நடந்த சம்பவம் இது."

'யப்பாடி... அலுவலகத்திலிருந்து தப்பித்து சத்ரபதி சிவாஜி டெர்மினல் ஸ்டேஷனுக்கு வந்தாச்சு. மும்பை எக்ஸ்பிரஸ் புறப்பட இன்னும் நேரமிருக்கிறது. 2.10-க்குதான் வண்டி எடுப்பாங்க. கோச் எண்ணைத் தேடி, இருக்கையைக் கண்டுபிடித்து, பெட்டியை சங்கிலி போட்டு கட்டிவிட்டு சாப்பிட அமர்கிறேன். வரும்போது வாங்கிய புலவு சூடாகவே இருந்தது. புலவோடு தந்த அப்பளம், பச்சடி, ஊறுகாய் என பாதி உணவு கழிய, கை தட்டும் ஓசை. ஓங்குதாங்கான ஒற்றை அரவாணியின் குரல்."

"பொட்டைவனுக்கு காசு குடு"

"சாப்புடறன்க்கா... அடுத்த தடவ வாங்க"

"அப்புறம் எப்போ வர்ரது. இப்போ குடு"

"இல்லை... இப்போ சில்றையா இல்ல. அப்புறமா வாங்க"

"நீ பெரிய மயிரு... நீ சொல்லிட்டா நா அப்புறமா வரணுமா... இப்போ குடுடான்னா..."

"தோ பார்ங்க. அதிகமா பேச வேணாம். அப்புறமா வாங்க. சில்ற மாத்தி தர்ரேன்"

"... டேய்... பையா... ஒம்போதுக்கு காசு குடுக்க வக்கில்ல. ஒனக்கு எதுக்கு சோறு" - சட்டென என் மதிய உணவை தூக்கி வீச சன்னல் வழியாக தண்டவாளங்களுக்குள் இரைந்து சிதறியது.

எனக்கும் கோபம் 'சர்'ரென்று ஏற முறைத்தேன்.

"என்னடா நாயே மொறைக்கிற. புடுங்கிடுவியா நீ... பையா... ங்கொம்மாள... பாக்குறான் பாரு" என்றபடியே என் காலணிகளில் ஒன்றை தனது காலால் தள்ளிக் கொண்டு போய் ரயிலுக்கடியில போட்டுவிட்டு இறங்கிப் போய் விட்டார்(ள்).

கோபத்துடன் எழுந்தவனை அங்கங்கே இருந்த பயணிகள் தடுத்துவிட்டனர்.

"போவட்டும் விடுங்க சார்..."

"இத்தோட போச்சேன்னு சந்தோஷப்படுங்க..."

"இதுங்க தொல்லைதான் எப்பவும் எல்லா வண்டியிலேயும் நடக்குதே. நாம என்ன செய்ய முடியும்... ஹூம்..."

வண்டி கிளம்பி வேகமெடுத்தது'.

"தோழர்களே தோழியர்களே, மிகுந்த தன்னம்பிக்கையும், திறமையும் கொண்ட அரவாணி சகோதர சகோதரிகளே... உங்களுடைய தன்மானம் போற்றுதலுக்குரியது. சுய கௌரவம் போற்றுதலுக்குரியது. உங்களுள் இருக்கிற ஒரு சில பதர்களின் அடாவடிகளால் அத்தனை விதைகளுக்கும் அவமானம் ஏற்படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா. உங்களில் பலர் நல்ல பணிகளை மேற்கொண்டிருக்கும்போது, உயர்ந்து வரும்போது இன்னமும் சிலர் யாசகம் வாங்கி பிழைப்பதை சரி என்கிறீர்களா... அநேகமாய் அந்த நபருங்கூட இந்த விழாவில் கலந்து கொள்ள இங்கு வந்திருக்கக்கூடும். அவரை நான் மன்னித்து விட்டேன். முதல் பரிசை வென்ற அரவாணி அழகியை அழைக்கிறேன்.

முதல் பரிசுக்குரிய அழகி மும்பை கனகாமணி... மூவரையும் மேடைக்கு அழைக்கிறேன்."

சிந்து, அகல்யா, கனகாமணி மூவரும் மேடையேற... அது யார் நான்காவதாக ஒருவர்.

நான்காவதாக மேடையேறுபவர் நேரே அருணாவிடம் சென்று மெல்லியக் குரலில் ஏதோ பேச, அருணாவும் அந்த நபரும் மேடையின் மையத்திற்கு வந்தார்கள்.

"சபைல இருக்குற எல்லாருக்கும், மேடைல இருக்குற பெரியவங்களுக்கும் வணக்கம். நான் பாம்பேலயிருந்து வர்ரன். எம்பேரு ராதா. அய்யா இப்போ சொன்னாங்களே... அவுங்க சாப்பாட்டை தூக்கிப் போட்டு செருப்பை தள்ளிவிட்ட கொடுமைய செஞ்சது நான்தான். அதுக்காக நான் வெக்கப்படறேன்... வேதனைப்படறேன். அவமானமா உணர்ரேன். என்னய அய்யா மன்னிச்சிட்டாரு... அவுரு உயரத்துக்கு போயிட்டாரு. நான் அதல பாதாளத்துல உழுந்து கெடக்குறேன். இனி எங்கயும் பிச்சை கேக்க மாட்டேன். அரவாணி சமூகத்துக்கு அவமானம் வர்ர மாதிரி இனி எங்கயும் நடந்துக்க மாட்டேன். அந்த கூத்தாண்டவர் மேல சத்தியம். எல்லாரும் மன்னிச்சுடுங்க... அய்யா நீங்களுந்தான்..." என்றபடியே மேடையிலேயே மண்டியிட்டு வணங்க அருணா ஆதரவாக அவரது தோள் தொட்டு எழுப்ப கண்ணீருடன் இறங்கிப் போய் விட்டார்.

பார்த்துக்கொண்டிருந்த எனக்கும் ஒரு மாதிரியாக ஆகிவிட்டது. அரங்கத்துள் 'கசமுச'வென உரையாடல்கள்.

"வெற்றி பெற்ற அழகிகளுக்கு கிரீடங்களை அணிவித்து பாராட்டும் நிகழ்வு"



படிப்பகம்

www.padippakam.com

"மூன்றாமிடத்தைப் பெற்ற விழுப்புரம் சிந்துவுக்கு முதலிடம் பெற்ற மும்பை கனகாமணி கிரீடத்தை அணி விப்பார்."

"இரண்டாம் இடத்தைப் பெற்ற சேலம் அகல் யாவுக்கு பத்திரிகையாளர் செங்குட்டுவன் கிரீடம் அணி விப்பார்."

"முதலிடம் பிடித்த மும்பை கனகாமணிக்கு மருத்துவர் கலைச் செல்வி கிரீடம் அணிவிப்பார்."

அரங்கத்தின் கைதட்டல் ஆரவாரம் அடங்க வெகு நேரமாக, அரவாணிகளில் சிலர் எழுந்து நடன மாடவும் தொடங்கிவிட அட்டகாச ஆரவாரம்.

அருணாவிடமிருந்து மைக்கை வாங்கினேன்.

"நண்பர்களே... அழகிப் போட்டியின் முடிவுகள் அறிவிப்பது இன்னமும் முடியவில்லை."

அரங்கம் சட்டென அமைதியானது. எல்லோரும் ஆர்வத்தோடு என்னையே பார்த்துக்கொண்டிருந்தார் கள்.

"ஆமாம் தோழர்களே... முடிவுகள் முழுமையாக அறிவிக்கப்படவில்லை. அரவாணிகளின் அழகிப் போட்டி நிகழ்ச்சியில் மூன்று பரிசுகளோடு முக்கியமானதொரு சிறப்புப் பரிசும் அறிவிக்கப்பட இருக்கு."

அருணா என்னைத் திகைப்போடு பார்த்தார்.

"அழகென்பது முகமா... உடலா... உடையா... ஒப்பனைகளா...இவை எதுவுமேயில்லை. மனசு! மனசு தான் அழகு! சரி அப்படி அழகான மனசுக்கு சொந்தக் காரரா யாராவது இங்க இருக்காங்களா... மனசோட அழகை பார்க்க முடியுமா... ரசிக்க முடியுமா... இருக் கிறார்! அப்படி ஒரு அழகான மனசுக்கு சொந்தக் காரராக, தன் தவறுகளை உணர்ந்து தன்னம்பிக்கை மிளிர உங்களோடு இங்கேயே இருக்கிறார்... நம்முடனே இருக்கிறார்... அவருக்குத்தான் சிறந்த அழகிக்கான சிறப் புப் பரிசு..."

"யாரு... யாரு... யாரு... யாரு..." கூட்டம் கேள்வி யலை எழுப்பியது.

"இதோ... ராதா... உங்கள் ராதா... மனசின் அழகால நம்ம முன்னாடி இமய மலையா உயர்ந்து நிற்கும் ராதாவை மேடைக்கு அழைக்கிறேன். அரங்கம் இதை ஒப்புக் கொள்ளும் என நம்புகிறேன்."

"அழகி... அழகி..." "வா... வா... அழகி..."

கண்ணீரைத் துடைத்தபடி ராதா மேடையேறிக் கொண்டிருந்தார். அது அழகு வழியும் ஆனந்தக் கண்ணீர்.

கு. உமாதேவி

# நாங்கள் பெண்ணென்பதால் மட்டுமல்ல



ஒரு பறவையின் சிறகு
காற்றின் மேல்முனையை
பற்றியபடி இருக்க

மீட்பாரற்று - வனாந்ர மணலில்
புதைக்கப்பட்டிருக்கின்றது வாழ்க்கை.

வண்ணத்துப்பூச்சிகளின் வெற்றிடத்தை
அடர்ந்து கருக்கும்
எத்தனை இரும்பு வளையங்களை
உடைத்தெறிந்து மீள்வது.

வாழ்தலின் இரகசியம் புரிந்து
திமிரி மேலெழ முனைகையில்
சிவந்ததும் - கருத்ததும்
கூரிய நகம் கொண்டதுமான
கைகள்
எம்மிருப்பை அழுத்தினபடி

எம்மைத் தாழ்த்தி
முதுகின்மீது விளக்கேற்றி
பிரகாசமடைகின்றன.

பீறிடும் தழலுணராது -
காலகாலமாய் குனிந்தே கிடக்க
தொங்குமெம் நகில்களை
இர(ரு)சித்தவாரே
சுகாதீதமடைகிறான் பண்ணையாள்.

காடுகள் - மலைகள் - தோப்புகள்
ஆற்றோரங்கள் - அந்தப்புரங்கள்
இன்னபிற இடங்களில்
இப்போதும் எங்கேனும் சிதைக்கப்படலாம்
எங்களில் எவளேனும் ஒருத்தியின் உடல்.

நாங்கள் பெண் என்பதால் மட்டுமல்ல
நிகழ்வுகள்
பறச்சி என்பதே ஆதிக்காரணம்.



படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் பகுதி

நான் சிறுவயதிலேயே விதவையானவள். எனக்கு ஒரு குழந்தை உண்டு. கொடிய வறுமையால் துன்பப் படுகிறேன். தையல் தெரியும். எனக்கு இலவசமாக ஒரு தையல் இயந்திரம் வழங்கி உதவி செய்யுங்கள்.

*- அனுசுயா, நெய்க்குளம், புள்ளம்பாடி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.*

குடிசை வீட்டை மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் எங்களுக்கு இந்த வருடமாவது தொகுப்பு வீடு வழங்க ஆவண செய்யுங்கள்.

*- ப. சுப்ரமணி மற்றும் கதிர்வேல், புள்ளம்பாடி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.*

நான் கால் ஊனமுற்றவள். எனது கூரை வீடு பழுதடைந்து இடிந்துவிடும நிலையிலுள்ளது. எனக்கு வீடு கட்ட அரசு மூலம் உதவி செய்யுங்கள்.

*- ஆர். விஜயாம்பாள், நெய்க்குளம், புள்ளம்பாடி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.*

நான் சர்க்கரை வியாதி காரணமாக மூன்று மாதம் திருச்சி பெரியாஸ்பத்திரியில் சேர்ந்து சிகிச்சை பெற் றேன். பிழைப்புக்கு வழி எதுவும் இல்லை. பெட்டிக் கடை லோனுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

*- கே. மணி, த/பெ கருப்பன், நெய்க்குளம், புள்ளம் பாடி ஒன்றியம், திருச்சி மாவட்டம்.*

நாங்கள் ஏழை தலித்துகள். அரசு திட்டத்தின் மூலம் தொகுப்பு வீடு வழங்குங்கள்.

*- எம். பிச்சை, மு. பூஞ்சோலை, அ. கந்தசாமி, த/பெ அய்யாக்கண்ணு மற்றும் செம்பருத்தி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், நெய்க்குளம்.*

எனக்கு காடு, வீடு, ஆடு, மாடு எதுவும் கிடையாது. நான் நேரு ஆண்கள் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். இந்தக் குழு ஆரம்பித்து ஒரு வருடம் ஆகியும் எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. ஆடு மாடு லோன் கிடைக்கவும், விவசாய நிலம் வழங்கவும் ஏற்பாடு செய்யுங்கள்.

*- எ. செல்வம், நேரு ஆண்கள் சுயஉதவிக் குழு, நெய்க் குளம், திருச்சி மாவட்டம்.*

நாங்கள் வசிக்கும் வீதிகளில் சிலர் விதிகளுக்குப் புறம்பாக ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இதனால் போக்குவரத்து, பொது சுகாதாரம் பாதிப்படைந் துள்ளது. சர்வேயரைக்கொண்டு அளந்து ஆக்கிரமிப்பு களை அகற்றுங்கள்.

*- ஆதி திராவிட பொது மக்கள், வடக்குத் தெரு, நெய்க்குளம், திருச்சி மாவட்டம்.*

எனக்கு 55 வயதாகிறது. உடல்நிலை தொடர்ந்து சரியில்லை. எனக்கு முதியோர் உதவித்தொகை வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

*- அ. பிச்சைமுத்து, த/பெ அனஞ்சி, அம்பேத்கர் தெரு, எதுமலை, மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சி .*

நான் கணவனால் கைவிடப்பட்டு நிராதரவான நிலையில் உள்ளேன். எனக்கு விதவை உதவித்தொகை கிடைக்க வழி செய்யுங்கள்.

*- சி. கலைச்செல்வி, த/பெ சின்னசாமி, அம்பேத்கர் நகர், எதுமலை, திருச்சி மாவட்டம்.*

எனக்கு வீட்டுமனைப் பட்டா தந்து பதினாறு வருடங்களாகியும் இதுவரை தொகுப்பு வீடு கட்டித் தரவில்லை. ஆவண செய்யவும்.

*- எஸ். ஆண்டி, அம்பேத்கர் நகர், எதுமலை, திருச்சி மாவட்டம்.*

நான் பி.ஏ. பொருளாதாரம் படித்துள்ளேன். உடல் ஊனமுற்றவன். எனக்கு அரசு வேலை ஏதாவது கொடுக்க வேண்டுகிறேன்.

*- வீ. முருகன், த/பெ வீராசாமி, அம்பேத்கர் தெரு, எதுமலை, திருச்சி மாவட்டம்.*

மூன்று சென்ட் காலி மனையில் வீடு கட்டி வசித்து வருகிறேன். பலமுறை விண்ணப்பித்தும் பட்டா கிடைக்கவில்லை. பட்டா வழங்க ஆவண செய்யவும்.

*- வீ. ராஜமாணிக்கம், த/பெ வீரன், அம்பேத்கர் தெரு, எதுமலை, திருச்சி மாவட்டம்.*



படிப்பகம்

www.padippakam.com

எதுமலை கிராமத்தில் உள்ள கல்லாங்குத்து புறம் போக்கு தீர்வை ஏற்படாத புஞ்சை தரிசு புல எண் 97/2-இல் 11.25.5/ 1.21.5 நிலத்தை கடந்த பத்தாண்டுகளாக விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வேறு விவசாய நிலங்கள் எதுவும் கிடையாது. பலமுறை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பித்தும் பட்டா கிடைக்கவில்லை. பட்டா வழங்கிட உதவுங்கள்.

*- செ. முருகன், த/பெ செல்லமுத்து, அம்பேத்கர் தெரு, எதுமலை, திருச்சி மாவட்டம்..*

ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு சத்துணவு ஆயா லேலை வழங்கி ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*- க. வைஜயந்திமாலா, த/பெ கருயன், கரிய மாணிக்கம், திருச்சி மாவட்டம்.*

காலி மனையில் தொகுப்பு வீடு கட்டித் தர ஏற்பாடு செய்யவும்.

*- பி. சதீஷ்குமார், த/பெ பொன்னுசாமி, அம்பேத்கர் தெரு, எதுமலை, திருச்சி மாவட்டம்.*

எங்கள் ஊருக்கு சாலை வசதி இல்லை. சிமெண்ட் சாலை போட்டுத் தரவும்.

*- எதுமலை கிராமம் அம்பேத்கர் நகர் மக்கள், திருச்சி மாவட்டம்.*

எனக்கு அரசு மூலம் தையல் இயந்திரம் வழங்குங்கள். வறுமையில் வாடுகிறது என் குடும்பம்.

*- தேவி, த/பெ பன்னீர்செல்வம், கரியமாணிக்கம், திருச்சி மாவட்டம்.*

நான் விதவை. எதுமலை கிராமத்தில் கருப்புக் கோவில் அருகில் சுமார் 2 ஏக்கர் புன்செய் நிலத்தை மானாவாரி சாகுபடி செய்து வருகிறேன். வரியும் செலுத்தி வருகிறேன். இதுதவிர வேறு எதுவும் நிலம் கிடையாது. பட்டா கிடைக்க ஆவண செய்யுங்கள்.

*- பி. பெத்தாயி, க/பெ பிச்சை (லேட்), சக்கிலியர் தெரு, எதுமலை, திருச்சி மாவட்டம்.*

நான் +2 வரை படித்துள்ளேன். மிகவும் ஏழையான எனக்கு எவ்வித அரசு வேலையும் கிடைக்கவில்லை. எனக்கு தையல் தெரியும். இலவச தையல் இயந்திரம் கொடுத்து உதவுங்கள்.

*- எஸ். விஜயலச்சுமி, த/பெ சீரங்கன், கரியமாணிக் கம், திருச்சி மாவட்டம்.*

எனக்கு விதவை உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

*- எம். தமிழ்ச்செல்வி, பி.கே. அகரம், லால்குடி வட் டம், திருச்சி மாவட்டம்.*

நான் சக்கிலியர் தெருவில் புல எண் 272/2-இல் 5/62 ஏக்கர் 1616.5 சதுர அடியில் வசித்து வருகிறேன். பட்டா கிடைத்திட ஆவண செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

*- ந. செல்வராசு, த/பெ நல்லு, சக்கிலியர் தெரு, எதுமலை, திருச்சி.*

நாங்கள் 16 வருடங்களாக பள்ளிக்கூடம் பெருக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். மாத சம்பளம் ரூ.300 தான் கொடுக்கிறார்கள். இப்பொழுது சம்பளம் உயர்த்தப் பட்டதாக அறிகிறேன். ஆனால் உயர்த்திய சம்பளத்தைத் தர மறுக்கிறார்கள். உரியவர்கள்மீது நடவடிக்கை எடுப் பதுடன் உயர்த்திய சம்பளத்தை வழங்க வேண்டு கிறோம்.

*- பாலம்மா மற்றும் சசிகலா (நடையனூர்), ஸ்வீப்பர் காலனி, வேலாயுதம்பாளையம், கரூர்.*

எனது குடும்ப வறுமையின் காரணமாக பன்னிரண் டாம் வகுப்பிற்கு மேல் படிப்பைத் தொடர முடிய வில்லை. எனக்கு உதவி செய்யவும்.

*- க. ராஜேஸ்வரி (ஸ்வீப்பர் காலனி), 6 அண்ணா நகர், வேலாயுதம்பாளையம, கரூர்.*

அண்ணா நகரின் வீதியை ஆக்கிரமித்து சிலர் வீடு கட்டியுள்ளனர். உடனே அகற்றுங்கள்.

*- மகளிர் சுய உதவிக் குழு, அண்ணா நகர், வேலா யுதம்பாளையம், கரூர்.*

என் உடலில் ஏற்பட்ட காயத்தினாலும், தழும்பினா லும் என்னால் வெய்யிலில் வேலை செய்ய முடிய வில்லை. ஓய்வூதியம் வழங்கி ஆதரியுங்கள்.

*- பி. பெருமாள், அண்ணா நகர், வேலாயுதம்பாளை யம், கரூர்.*

நாங்கள் உறுதிக்கோட்டை பஞ்சாயத்து நெட ஓடை குரூப் சீனமங்கலம் கிராமத்தில் வசித்து வருகிறோம். நாங்கள் ஒரு முத்துமாரியம்மன் கோவிலை உருவாக்கி சுமார் 60 ஆண்டுகளாக திருவிழா நடத்தி வருகிறோம். இடையில் 5 ஆண்டுகளாக பிற சாதிக்காரர்களும் எங்களுடன் சேர்ந்து திரு விழா நடத்தினார்கள். அதன் பின் 3 ஆண்டுகளாக தாழ்த்தப்பட்ட


படிப்பகம்

www.padippakam.com

எங்களை ஒதுக்க நினைத்து, எங்கள் பூசாரியை தள்ளி வைத்து, சாதிப் பூசாரிக்கு ஏற்பாடு செய்தார்கள். நாங்கள் மறுப்பு தெரிவித்து காவல்துறைக்கும் தாலுக்கா வட்டாட்சியருக்கும் மனுக்கள் மூலமாகவும், நேரடியாகவும் முறையிட்டோம். பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் ஆகாததால் 3 ஆண்டு காலமாக கோவில் பூட்டி வைக்கப்பட்டிருக்கிறது. எங்கள் குல தெய்வத்திற்கு நேர்ந்த கதியை எண்ணி கலங்கி நிற்கிறோம். வழி சொல்லுங்கள்.

*- இந்து பறையர், பள்ளர் மற்றும் சக்கிலியர், சினமங்கலம், சிவகங்கை மாவட்டம்.*

*ஆ.கு. ஊரோடு ஒத்து வாழ் என்பது ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட மக்கள் ஊரை அனுசரித்துப் போக வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பழமொழியோ என்று எண்ணத் தோன்றுகிறது. அறுபது வருடமாக பாத்தியதை உள்ள கோவில் உங்களுக்குத்தான் சொந்தமானது. ஆகையால் தொடர்ந்து கோவிலை மீட்கப் போராடுங்கள். இனிவருங்காலத்தில் சாதி இந்துக்களுடன் சேர்ந்து விழா எடுக்க நினைக்கும் உங்களைப் போன்ற கிராமத்தாருக்கு இது பாடமாக இருக்கட்டும்.*

*உங்கள் மனு நடவடிக்கைக்காக சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.*

எங்களது கிராமம் (சேரி) உருவாட்டி என்ற பஞ்சாயத்தில் பெரியநாயகி அம்மன் கோவில் மெயின் ரோட்டில் இருந்து மாவலிக்கோட்டை வரை சுமார் 2.5 கி.மீ. உள்ளது. சாலை வசதி இல்லாததால், வயல்களிலும் வரப்புகளிலும்தான் நடந்து வருகிறோம். மழைக்காலங்களில் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களுக்கு செல்ல முடியவில்லை. பிரசவ நேரங்களில் பெண்களை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. எத்தனையோ மனுக்கள் கொடுத்தும் கண்டுகொள்வாரில்லை.

*- தலித் பெண்கள் விடுதலை இயக்கம், மாவலிக் கோட்டை, தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம்.*

என் கணவர் ஓடிவிட்டார். பள்ளி செல்லும் குழந்தையை வைத்துக்கொண்டு வாடுகிறேன். தையல் இயந்திரம் ஒன்று கொடுத்தால் பிழைத்துக்கொள்வேன்.

*- எம். சாந்தி, புலியடிதம்மம், சிவகங்கை மாவட்டம்.*

எனக்குத் திருமணமாகவில்லை. என் அப்பா இறந்து விட்டார். 90 வயதுள்ள தாயுடன் வறுமையில் வாழ் கிறேன். தையல் மிஷின் வழங்கவும்.

*- எஸ். சுந்தரம் எப்ஸிபா, புலியடிதம்மம் (தாஸ் புரம்), தேவகோட்டை.*

நாங்கள் சுமார் 100 குடும்பங்கள் இங்கு வசித்து வருகிறோம். எங்களுக்கு எவ்வித சொத்துக்களும் கிடையாது. ஆதிக்க சாதியினரே எல்லா பொது சொத்துக்களையும் அனுபவித்து வருகிறார்கள். இங்கு பஞ்சமி நிலம் இருக்கிறதா என்ற தகவல் தெரிய வேண்டும். உடனே தகவல் தெரிவியுங்கள்.

*- தலித் பெண்கள் விடுதலை இயக்கம், திட்டுக் கோட்டை, குமாரவேலூர்.*

நான் M.A. (Co-op) படித்திருக்கிறேன். வேலைவாய்ப்பு தாருங்கள்.

*- டி. ஜெயமேரி, க/பெ எஸ். ஜோசப், தாஸ்புரம், புலியடிதம்மம்.*

எனது கணவர் கோனார் இனத்தைச் சேர்ந்தவர். ஏற்கனவே திருமணமானதை மறைத்து என்னைத் திருமணம் செய்துகொண்டார். அவர் மூலம் எனக்கு குழந்தை உள்ளது. இப்போது என்னை விட்டுவிட்டார். மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இரண்டு வருடமாகியும் இதுவரை எந்த நடவடிக்கையுமில்லை.

*- வே. தமிழரசி, து/பெ வேதமுத்து, புலியடிதம்மம் (தாஸ்புரம்), சருகனி, சிவகங்கை.*

*ஆ.கு. இந்த ஏமாற்று வேலை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்பதை முதலில் உறுதி செய்யுங்கள்.*

கணவனால் கைவிடப்பட்ட எனக்கு ஆதரவற்றோருக்கான உதவித்தொகை வழங்க ஆவண செய்யவும்.

*- எஸ். புஷ்பம், அழகப்பநகர், உறுதிக்கோட்டை, சிவகங்கை.*

வேலையின்றி இருக்கிறோம். வறுமை போக்க தையல் மெஷின் வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

*- நா. மங்கையர்க்கரசி, செ. ராஜாத்தி, புலியடிதம்மம் (தாஸ்புரம்), சிவகங்கை.*

இறந்தவர்களை அடக்கம் செய்ய தலித் மக்களுக்கு இடமில்லை. மனு கொடுத்தும் பலனில்லை. எங்களுக்கு மயானத் துக்குக்கூடவா இடம் வழங்கக்கூடாது?

*- ருத் மரியாள் மகளிர் மன்றம், புலியடிதம்மம் (தாஸ்புரம்), சிவகங்கை.*

தாஸ்புரம் சேரியில் பிரபல தவில் வித்வான் ஏ. செல்வம் வறுமையில் வாடுகிறார். ஓய்வூதியம் வழங்குக.

*- கலைமாமணி லஷ்மி, கிராமிய கரகம், காவடி கலைக்குழு, 24-னு/4 ராமராயர் மண்டபம், மதுரை-10.*

நாங்கள் தலித் கிறித்தவர்கள் என்பதால் அரசிட மிருந்து எவ்வித சலுகையுமில்லை. காலனி வீடுகளாவது கட்டித் தாருங்கள்.

*- ருத் மரியாள் மகளிர் சங்கம், புலியடிதம்மம் (தாஸ்புரம்), சிவகங்கை.*


படிப்பகம்

www.padippakam.com

கண்டதேவி ஊராட்சியின் கீழ் உள்ளது எங்களது கிராமம் பனிப்புலான்வயல். எந்த அடிப்படை வசதிகளும் கிடையாது. குடிநீர் வசதிகூட கிடையாது. எடுத்துச் சொல்லுங்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு.

*- பனிப்புலான்வயல் சேரி மக்கள், கண்டதேவி அஞ்சல், சிவகங்கை.*

600 பறையர்கள் வசிக்கிறோம். 200 பேர் இந்துக்கள். மீதி கிறிஸ்தவர்கள். தலித் கிறிஸ்தவர்கள் காரணமாக எந்த அடிப்படை வசதியும் இல்லை.

*- 'வாழ்கின்ற மாணிக்கம் சேரி மக்களுக்காக கே. சின்னப்பன், கண்டதேவி அஞ்சல், சிவகங்கை.*

முதுமையில் கிடைக்கும் பென்சனை வழங்கிடுக.

- ஏ. துரைரா.ஜ், புலியடிதம்மம் (தாஸ்புரம்), சிவகங்கை.

மாவட்ட சமூக நலத்துறை மூலம் இலவச தையல் இயந்திரம் வழங்கிடுக.

*- பி, நாகவள்ளி, திட்டுக்கோட்டை, குமாரவேலூர் அஞ்சல்.*

நான் பம்பை-உடுக்கை கலைஞன். வயதாகி விட்டது. கலைஞருக்கான ஓய்வூதியத் தொகை வழங்க ஏற்பாடு செய்யுங்கள்.

*- முனியாண்டி என்ற பொன்னுசாமி, புலியடிதம்மம் (தாஸ்புரம்), சிவகங்கை.*

ஞானஒளிபுரம் சேரியில் 250 குடும்பங்கள் வசிக் கிறோம். வீட்டுமனைப் பட்டா வழங்குங்கள். அடிப்படை வசதி எதுவுமில்லை.

*- ஞானஒளிபுரம் தலித் மக்கள், சிவகங்கை.*

500 தலித் குடும்பங்களுக்கு வீடு கட்ட கடன் வசதி செய்து தாருங்கள்.

*- மாதா மகளிர் சுயஉதவிக் குழு, வாழ்கின்ற மாணிக் கம், கண்டதேவி, சிவகங்கை.*

தொகுப்பு வீடு வழங்குங்கள்.

*- மாதா மகளிர் சுயஉதவிக் குழு, பனிப்புலான்வயல், கண்டதேவி, சிவகங்கை.*

நான் தாழ்த்தப்பட்டவன். புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியுள்ளேன். பட்டா தாருங்கள்.

*- கா. இளங்கோ, கீழ்க்குடி, தேவகோட்டை.*

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரம் வட்டம் தாமல் கிராமத்தில் குடிசை வீட்டில் வசிக்கும்போது Single Line Service மூலம் மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அருகாமையிலிருந்த சாக்கடையின் காரணமாக மின் கசிவு ஏற்பட்டு இரண்டு கைகளிலும் உள்ள நரம்புகள் சுருண்டு கொண்டன. எந்த வேலைக்கும் லாயக்கற்றவனாகிவிட்டேன். பின்பு பள்ளிப்பட்டு வட்டம் வீரமங்கலம் கிராமத்தில் குடியேறி கடந்த ஆறு ஆண்டு காலமாக அரசு உதவி கேட்டு விண்ணப்பித்து வருகிறேன். எந்த பயனுமில்லை. எனக்கு ஏதாவது ஒரு அரசு உதவி பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*- க. சுந்தரம், வீரமங்கலம் கிராமம் மற்றும் அஞ்சல், பள்ளிப்பட்டு வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.*

*ஆ.கு. மேற்கண்ட விண்ணப்பங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளன.*

# கிராமத்து சிறுவர்கள்

கா.வ. கன்னியப்பன்

ஐயப்பன் சோலை
அறமுக தாளம்
எழுவாலிங்கம்
எட்டண கோட்ட
தொட்டிக்க தம்ப
தொலாங்கு ராஜா
ஏய்!
நான்தான் ராஜா
நான்தான் ராஜா
டேய்!
எங்குண்ட
ஒடைச்சிட்ட இல்ல
திருப்பி குடுடா

ஏய்!
நிறுத்துடா
ஆட்டத்துக்கு வந்தா
ஆயிரம் கோலி ஒடையும் போடா
டேய்!
முட்டி தள்ளிட்டு போடா(டி)
இதாஞ்சாக்குனு
போர...
தள்ளுடா தள்ளு
முட்டி தேய்ய தள்ளு.

◆

www.padippakam.com



■ அ. ராமசாமி



# தன் வரலாற்றைச் சொல்லுதலின் அரசியல்

தலித் இயக்கம் இந்தியாவில் அதிரடி மாற்றங்கள் பலவற்றினை நிகழ்த்திக் காட்டியுள்ளது. பிற இயக்கங்கள் இத்தகைய மாற்றங்களை நிகழ்த்திட எடுத்துக் கொண்ட கால அளவைவிட தலித் இயக்கம் எடுத்துக் கொண்ட கால அளவு மிகக் குறைவானது என்பது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. இலக்கியம் அல்லது எழுத்துப் பரப்பில் பிற இயக்கங்கள் தயங்கித் தயங்கி காலடி எடுத்து வைத்த பல பிரதேசங்களில் தலித் இயக்கம் எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் நுழைந்துள் ளது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அப்படித் தயக்கமின்றித் தனதாக்கிக் கொண்ட ஒரு எழுத்து வகை தன்வரலாறு. மகா மனிதர்கள் மட்டுமே தனது சொந்த வரலாற்றைச் சொல்லலாம் என்றிருந்த நிலை யைத் தலித் படைப்பாளிகளும் தனி மனிதர்களும் மூர்க்கமாகத் தகர்த்துவிட்டு தனிப்பாதைகளைப் போட்டுள்ளனர். கடந்த நூற்றாண்டின் கடைசிப் பத்தாண்டுகளின் முக்கிய வெளிப்பாட்டு வடிவமாகத் தன்வரலாற்றை மாற்றியவர்களே தலித் படைப்பாளிகள்தான் எனலாம். இந்திய அளவில் பல்வேறு தன்வரலாறு கள் வந்துள்ளன. அந்த வரிசையில் பேராசிரியரும் நாடகக் கலைஞருமான டாக்டர் கே.ஏ. குணசேகரனின் தன்வரலாற்று நூல் ‘வடு’ சமீபத்தில் வந்துள்ளது.

கே.ஏ.ஜி. என அழைக்கப்படும் கரு. அழ. குணசேகரன் என்னும் பெயர் தமிழ் அறிவுலகில் பல தளங்களில் ஊடும் பாவுமாக வந்துபோகும் பெயர். இயக்கம் சார்ந்த மேடைக் கச்சேரிகளைப் பற்றிய பேச்சுக்களின் போது தவிர்க்க முடியாத பெயர் என்று சொல்லுவது போதாது; அந்தப் பெயர்தான் அந்தத் துறையின் முன்னோடிப் பெயர். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களின் வேலையாக இருந்த தொகுப்புப் பணியை பாடும் பணியாகவும் மாற்றியவர் அவர். தொகுக்கப்பட்ட மனிதர்களிடமே வேறு அர்த்தத்தில் அந்தப் பாடல்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தவர். நாடகத் துறை சார்ந்த பரிசோதனைகள் பலவற்றிலும்அவரது தடங்கள் உண்டு. 1990-களுக்கு முன்பு இடதுசாரி மேடைகளில் அதிர்வுகளை எழுப்பிய அவரது குரல் தொண்ணூறுகளுக்குப் பிந்திய தலித் அலையின் தவிர்க்க முடியாத வீச்சு. செயல்பாட்டுத் தளத்தில் ஒரு பாடும் கலைஞனாக வும் நாடக நடிகராகவும் இயக்குநராகவும் திகழும் அதே நேரத்தில், எழுத்துத் துறையிலும் முழுமையாகக் கவனம் செலுத்தி வருபவர். நாட்டார் வழக்காற்றியல் துறை சார்ந்த தொகுப்புகள், ஆய்வு நூல்கள் என்பனவற்றோடு நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் குணசேகரனிடம் முடியாது என எதையும் ஒதுக்கித் தள்ளி வைக்கும் மனநிலையை பார்க்க முடியாது. மிகச் சரியாகத்தான் எதையும் செய்ய வேண்டும் என்ற தீர்மானங்களும் அவரிடம் இருந்ததில்லை. முன்வைக்கக்கூடிய விமரிசனங்கள் பற்றிய முன்னெச்சரிக்கைகளும் அவருக்கு இருந்ததில்லை. இவையெல்லாம் ஒரு மனிதனின் பலவீனமா...? அல்லது பலமா என்று கேட்டால் பேராசிரியர் குணசேகரனை முன்னுதாரணமாகக் கொண்டு பலம் என்றே சொல்ல வேண்டும். சிந்திப்பதைச் சொல்லிவிடுவதும், நினைத்ததைச் செயல்படுத்தி விடுவதும் அவரது பாணியாக இருந்தது. உச்சபட்ச வெற்றியல்ல அவரது இலக்கு; அடையாளப் படுத்தக்கூடிய தேர்ச்சிகளே அவரது கவனம். இப்படிச் சொல்வதற்குக் காரணம் அவரோடு எனக்கிருந்த அனுபவங்கள்தான். ஆய்வு மாணவராக அவர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இருந்த ஐந்தாண்டுக் காலத்திலும் உடன் பயின்ற மாணவன்; புதுச்சேரியில் அவரோடு ஒரே நாளில் நாடகப் பள்ளியின் ஆசிரியராகச் சேர்ந்து எட்டாண்டுகள் பணியாற்றும் வாய்ப்பும் பெற்றவன். தொடர்ந்து அவரது நாடகம் மற்றும் எழுத்துக்களைக் கவனித்து வரும் நிலையில் அவரது படைப்பு மனநிலைகளை அருகிலிருந்து கவனிக்கும் வாய்ப்புப் பெற்றவன். இந்த வாய்ப்பு அவரது ‘வடு’ என்னும் தன்வரலாற்றுப் பிரதியை ஆவலுடன் வாசிக்கத் தூண்டியது. எனது ஆவலுக்கு அந்தப் பிரதி ஒரு சிறு ஏமாற்றத்தைத் தந்தது. ஏனெனில் இந்த ‘வடு’ நான் அவருடன் பழகிய கால கட்டத்தின் பதிவுகளாக இல்லை. அதற்கு முந்திய கால கட்டத்தின் வெளிப்பாடுகள். அதனால் எனது வாசிப்பு தெரிந்ததை வாசிக்கும் நிலையிலிருந்து ரகசியத்தை வாசிக்கும் வாசிப்பாக மாறிக் கொண்டது. ‘வடு’ என்னும் இந்த நூல் குணசேகரனின் வாழ்க்கையின் செம் பாதிக் காலத்தைச் சொல்லும் ஆவணம். ஏறத்தாழ அவரது படிப்புக் கால நிகழ்வுகள் இதில் பதியப்பட்டுள்ளன. கல்லூரி வாழ்க்கைக்குப் பிந்திய அவரது வாழ்வை அருகிருந்து கவனிக்கும் வாய்ப்புப் பெற்ற நான் இந்த நூலில் இடம் பெற்ற நிகழ்வுகள் பலவற்றை அவரிடம் வாய் வார்த்தையாகவே கேட்டிருக்கிறேன். இன்று ஒரு பல்கலைக் கழகத்தின் துறைத் தலைவராகப் பணியாற்றும் ஒருவரின் இளமைக் காலம் எவ்வளவு வலியும் துயரங்களும் நிறைந்தது என்பதை வாசிக்கும்போது உணரலாம்.


படிப்பகம்

www.padippakam.com

பொதுவாக வாசகர்களின் வாசிப்பு அனுபவம் இது போன்ற தன்வரலாற்றை வாசிக்கும்போது கொள் ளும் மனப்பாங்கு முக்கியமான ஒன்று என நினைக் கிறேன். இந்தியாவின் சாதியப் பின்புலத்தில் வாழ நேர்ந்துள்ள எந்தவொரு வாசகனுமே எல்லாப் பிரதி களையுமே ஆசிரியனின் நோக்கு நிலையிலிருந்தே வாசித்து விடுவதில்லை. அவனவனின் சாதித் தன்னிலை யிலிருந்தே வாசிக்கிறான்; புரிந்து கொள்கிறான்; விளக்கம் சொல்லுகிறான். ஆனால் தன்வரலாறு சொல் லும் எழுத்துக்கள் வாசகனின் தன்னிலையைத் தள்ளி வைத்து விட்டு சொல்பவனின் தன்னிலையிலிருந்து வாசிக்கும்படி வலியுறுத்துகின்றன என்பதுதான் அதன் பலமும் பலவீனமும். இதன் காரணமாகவே சத்திய சோதனை மாதிரியான தன்வரலாறுகள் சொல்பவனை உதாரண மனிதர்களாக முன்னிறுத்துகின்றன. மொத் தச் சமூகப் பின் புலத்தையும் புறந்தள்ளிவிட்டு தனி மனிதனின் சாகசங்களை அடுக்கும் அத்தகைய பிரதி கள் நடைமுறை எதார்த்தங்களைக் கணக்கில் கொண் டவை அல்ல.

இன்று எழுதப்படும் தலித் தன்வரலாற்றுப் பிரதி களிலும் தனிமனிதர்களை முன்னிறுத்தும் அம்சங்கள் உள்ளன என்றாலும் இவற்றில் மிக முக்கியமான வேறு பாடு உள்ளது. இத்தனி மனிதர்கள் சாகசங்கள் நிகழ்த் திய மகா மனிதர்கள் அல்ல; தொடர்ந்து ஒதுக்கு தலுக்குள்ளாகும் சமூகப் பரப்பிலிருந்து கிளர்ந்தெழுந்த வகை மாதிரிகளாக இந்தத் தனி மனிதர்கள் வெளிப் படுகிறார்கள் என்பதுதான் இந்தப் பிரதிகளின் சிறப் பம்சம். வடு என்னும் இந்த நூலை வாசிக்கும் வாசகர் கள் நிச்சயம் ஒற்றைத் தளத்தில் அதனை வாசித்துவிடப் போவதில்லை; வாசித்து விடவும் முடியாது. காரணம் அதன் கூற்றுநிலை அப்படி. தனது வரலாறு இது என நேரடியாகப் பேசும் குணசேகரனின் மொழியின் வசியம் கூட அத்தகைய வாசிப்பை அனுமதிப்பது இல்லை. நம்பகத்தன்மையை உண்டாக்கும் எளிமைதான் அந்த மொழியின் வசியம். தனது வாழ்க்கை சரித்திரத்தைக் கால வரிசைப்படி சொல்ல வேண்டும் என்று நினைக் காத அவரது எழுத்து முறை, தொடர்ந்து படிப்பதில் ஒரு தலித் சிறுவன் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் பிரச்சினைகளையும் ஆழமாகவே வெளிப்படுத்தியுள் ளது. அத்துடன் அவரது வாழ்க்கைப் பரப்பிற்குள் கிறித்துவம், இசுலாம், இந்து என்ற மத அடையாளங் கள் சுயமற்றுக் கலந்து கிடந்தன என்பதையும் விவரிக் கிறது.

பொதுவாகத் தமிழில் தனி மனிதர்களின் கதை களை அல்லது வரலாற்றைப் படர்க்கைக் கூற்றிலிருந்து வாசித்தே பழக்கப்பட்ட வாசக மனோபாவம் இந்த எளிமையும் நேரடித்தன்மையும் கொண்ட மொழியி னூடாக அடையும் மனநிலை மாற்றம் எப்படி இருக் கும் என உறுதியாகக் கூற முடியாது. பேராசிரியர் குணசேகரனின் தன்வரலாறு ஒரு தலித்தின் தன்வர லாறு என்ற அளவில் வாசித்து இந்த சாதியச் சமூகத் தின்மீது கோபம் கொள்ளத் தூண்டக்கூடிய வரலாறு என முடிவு செய்துவிட முடியாது. இதனை வாசிக்கும் போது இந்து மதம் சார்ந்த ஒதுக்குதலின் கொடூரம் அவ் வளவாக வெளிப்படவில்லையென்றே கூறலாம். இதற் கான காரணங்கள் பலவாக இருக்கலாம். மிக முக்கிய மான காரணம் அவரது குடும்பத்தில் அவர் இரண் டாம் தலைமுறைப் படிப்பாளி என்பது. அவரது பெற் றோர்களே பள்ளிக் கல்வியின் பலனை ஓரளவு அனுபவித் தவர்களாக உள்ளனர். இரண்டாவது முக்கியமான காரணம் அவரிடம் உள்ள இசைத்திறமை. பலவித மான மனிதர்களின் சாதிய முகத்தைச் சந்திப்பதற்குக் காரணமாக இருந்த அக்கலையே அவரது இயங்கு பரப் பைத் தொடர்ந்து விரிவாக்கிக் கொண்டே இருந்துள் ளது. பொதுவாக தலித்துகளின் வாழ்விட எல்லையைச் சுருக்கிவிடும் சாதிக்கட்டுமானத்தை மிக எளிதாக மீறி விட குணசேகரனுக்குக் கிடைத்த இந்த வாய்ப்பு எல் லாத் தனி மனிதர்களுக்கும் கிடைக்கக்கூடும் என்ப தில்லை. ஆனால் அவரது வரலாற்றை வாசிக்கும்போது தடுக்கும் வெளிகள் எவை என்பதை அறியவும், எப்படி மீறுவது என்பதை உணரவும் கூடும். அந்த வகையில் வடு விடுதலைப் போராட்டக் கருவிகளுள் ஒன்றாக நிற்கிறது.

## சிந்தனைக்கு

"என் வாழ்வின் இலட்சியம் முழுமையாக நிறைவேறாமல் போயிற்றே என்பதுதான் எனக்குள்ள முதல் வருத்தம்.

ஒடுக்கப்பட்ட செட்யூல்டு இன மக்களுக்கு நிறைய செய்வதற்கு நான் விரும்பினேன்; அந்த மக்கள் அரசியல் அதிகாரங்களை அனைவருடனும் சரிநிகராக பங்கிட்டுக்கொண்டு ஆளும் வர்க்கமாக ஆவதைப் பாக்க விரும்பினேன். என் சொந்த மக்களே என்னை வஞ்சித்து ஏமாற்றாமல் இருந்திருந்தால் இந்த விருப்பம் நிறைவேறி இருக்கலாம்.

என் உழைப்பின் பயன்கள் அனைத்தையும் படித்த ஒரு கூட்டத்தாரே அனுபவிக்க நேர்ந்துவிட்டது. பயன் துய்க்கும் அவர்களோ கடைந்தெடுத்த மூடர்களாக உள்ளனர். படிப்பறியாத பாமரர்களாய் பெருந்திரளாக உள்ள மக்களுக்காக என் கவனத்தைச் செலுத்த இப்பொழுது விரும்புகின்றேன். ஆனால் என் வாழ்நாட்கள் மிகக் குறுகியது என தோன்றுகிறது.

இரண்டாவதாக, ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்தே யாராவது முன்வந்து என் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வார்கள் என விரும்பினேன். அந்த பெரிய பொறுப்பினை தாங்கிக் கொள்ளக்கூடிய ஒருவரையும் காண முடியவில்லை. அனைவரும் சுயநலமும், அற்பத்தனமாக தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்பவர்களாகவும் உள்ளனர்."

*பாபாசாகேப் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்*

(தன் வாழ்வின் இறுதி நாட்களில் மனம் வெறுத்து கூறியவை)


படிப்பகம்

www.padippakam.com

# மக்கள் அறியாத அம்பேத்கர்

## 23

சோபகன்

உள்ளீடற்ற இடிமுழக்கம்(hollow thunder) என்ற
தலைப்பில் அம்பேத்கரின் செயல்பாடுகளை சாரமற்ற
செயல்பாடுகள் என்று லோகர் அலி போன்ற பத்திரிகை
யாளர்கள் 1931-இல் விமர்சனம் செய்தனர். அச்சம் தரும்
இடியின் முழக்கமானது எப்படி உள்ளீடற்று இருக்க
வியலும் என்று இந்த லோகர் அலி அறியவில்லை. எது
குறித்து இந்த ஒப்பீடு? அம்பேத்கரின் வீரியமிகு செயல்
பாடுகளைக் குறித்துத்தான்.

காந்தி வெகுமக்களின் தலைவர். அவரால் நாட்
டின் பெரும்பான்மை மக்களின் உணர்வுகளை தூண்ட
வியலும் என்ற மாயையை பத்திரிகை உலகமும், பிற
அரசியல் தலைவர்களும் வலிந்து புனைந்து கொண்
டிருந்த நேரத்தில், காந்தியை மிகச் சாதாரணமாக ஆய்வு
செய்து அதை வெளிக்கொணர்ந்தவர் அம்பேத்கர்.

இரண்டாம் வட்ட மேஜை மாநாட்டில், அம்பேத்
கரின் அணுகுமுறை உலகமே வியந்து களித்த அணுகு
முறை. காந்தியின் பெரும்பான்மை என்ற மாயையை
அம்பேத்கர் அசைத்துக் காட்டினார். 1931-ஆம் ஆண்டு
பாகிஸ்தான் இந்திய நாட்டுடன் ஒன்றிணைந்த பகுதி
யாக இருந்தது. அதாவது அப்போதைய இந்தியாவின்
மக்கள் தொகை என்பது பாகிஸ்தானின் மக்கள் தொகை
யையும் சேர்த்து இருந்தது. பாகிஸ்தான் முழுவதும்
இஸ்லாமியர்கள் என்பதால், ஒன்றுபட்ட இந்தியாவின்
மக்கள் தொகையில் தற்போதைய இஸ்லாமியர்களின்
மக்கள் தொகையைப்போல இரு மடங்கு இருந்தது.
அதாவது இஸ்லாமியர்களின் தொகை பலம் பொருந்
தியதாக இருந்தது.

ஆங்கில ஆட்சியாக இருந்ததால் இந்திய கிருத்து
வர்களின் தொகையும் கணிசமாக இருந்தது. சீக்கியர்கள்
இந்துக்களின்மீது ஆழ்ந்த அதிருப்தி கொண்டிருந்த
காலம் அது. தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் குடிகள்
நாட்டு மக்கள் தொகையில் கால்பகுதி இருந்தனர்.
இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் அம்பேத்கர்
இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்
பட்டவர்கள் மற்றும் மலைவாழ் குடிகள் ஆகிய மக்
களை இணைத்து அவர்களுக்கான பொதுக் கோரிக்கை
யான (seperate electorate) பாதுகாக்கப்பட்ட வாக்குரிமை
வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார்.

இந்நான்கு மக்களின் மொத்தத் தொகை, நாட்
டின் மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது 55% மக்கள்
தொகையாகவும், இந்துக்களின் தொகை 45% பிரிந்து
நின்றது. காந்தி 45% மக்களின் பிரதிநிதியாகவும், அம்பேத்
கர் 55% மக்களின் பிரதிநிதியாகவும் அது வெளிப்படுத்
தியது. அதாவது காந்தி சிறுபான்மை மக்களின் பிரதி
நிதியாகவும், அம்பேத்கர் பெரும்பான்மை மக்களின்
பிரதிநிதியாகவும் நிலைநிறுத்தப்பட்டனர்.

மக்கள் நன்மையைவிட தன்னுடைய தனிப்பட்ட
புகழ் மட்டுமே இலக்காக காந்தி கொண்டிருந்ததால்,
காந்தியால் இந்த கூட்டணியையும், அதன் உறுதியையும்
காணச் சகிக்க இயலவில்லை.

இஸ்லாமியர்கள், கிருத்துவர்கள், சீக்கியர்களுக்கு
பாதுகாக்கப்பட்ட வாக்குரிமையை தான் ஏற்றுக்
கொள்வதாகவும், தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்
கையை அம்பேத்கர் கைவிட வேண்டும் என்ற சூழ்ச்சி
வெடிகுண்டையும் போட்டார். தாழ்த்தப்பட்ட மக்க
ளின் தேவைகளை புறக்கணிப்பது மூலமாக அவர் களை
ஒரு தனி சக்தியாக வளர்ந்துவிடாமல் தடுப்பதற் கும்,
அதன்மூலம் அம்பேத்கர் ஒரு செல்வாக்கு பெற்ற மனித
ராக வளர்வதை தடுப்பதற்காகவும் காந்தி இந்த முடிவை
எடுத்தார். காந்தியின் இந்த முடிவால் யாரும் கலங்கிட
வில்லை. இஸ்லாமிய, கிருத்துவ, சீக்கிய, தாழ்த்தப்பட்ட,
மலைவாழ்குடிகளோடு காந்தியின் எதிர்ப்புச் சக்திகள்
ஒன்றிணைந்து மிக வலிமையான தலைவராக அம்பேத்
கரை வெளிப்படுத்தினர். காந்தி மிகுந்த கோபம் கொண்
டார். இந்தக் கூட்டணியை மீண்டுமொரு அனாச்சார
கூட்டணி (another unholy alliance) என்று வர்ணித்தார்.
ஆனால் இந்த கூட்டணியை உடைப்பதற்காக இஸ்
லாமிய தலைவர்களுடனும், கிருத்துவ தலைவர்களுட
னும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார். அவர்
கள் அம்பேத்கரின் தலைமைமீது மிகுந்த நம்பிக்கை
தெரிவித்தனர். இஸ்லாமியர்களின், கிருத்துவர்களின்
seperate electorate கோரிக்கையை காந்தி முழுமையாக
ஏற்பதாகவும், அதை ஆதரிப்பதாகவும் உறுதியளித்தார்.

காந்தி தன்னுடைய காங்கிரஸ் கட்சியின் SC/ST
பிரிவு தலைவர்களை முடுக்கிவிட்டார். அவர்கள்
அம்பேத்கரின் நிலைப்பாட்டை மிகவும் கடுமையாக
விமர்சனம் செய்து மக்களிடையே பிரச்சாரம் செய்தனர்.
M.C. ராஜா போன்ற போராளிகள்கூட இந்த நேரத்தில்
மிகத் தவறான நிலைப்பாட்டை எடுத்தனர். காந்தியின்
கருத்தை தூக்கிப் பிடித்தனர். The flaws in seperate electorate
system என்ற நூல் ஒன்றை M.C. ராஜா எழுதி வெளி
யிட்டார்.

அம்பேத்கர் மிகச் சிரமப்பட்டு தன் மக்களை அணி
திரட்டும்போது, M.C. ராஜாவின் செயல்பாடு பெரும்
இடர் அளித்தது. M.C. ராஜாவின் பறையர் சிந்தனை
அம்பேத்கரை ஏற்க மறுத்தது. ரெட்டமலை சீனிவாசன்
ஐயா அவர்களும் அம்பேத்கரின் நிலைப் பாட்டை
முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை.


படிப்பகம்

www.padippakam.com

திருமிகு அன்பு பொன்னோவியம் போன்ற அறிஞர்கள் M.C. ராஜா, ரெட்டமலை சீனிவாசன் பெருமகனார் ஆகியோர்களின் செயல்பாடுகளை அம்பேத்கருக்கும் மற்ற தலைவர்களுக்குமான முரண்பாடு களாக பார்க்க வேண்டும் என்ற நிலையை இன்று முன்வைக்கின்றனர்.

காந்தியை ஏக இந்தியத் தலைவர் என்ற வகையில் சூழல் கருதி குறிப்பிட்ட மக்கள் ஏற்றுக் கொண்டது போல, அம்பேத்கரை சூழல் கருதிகூட ஏக இந்தியத் தலைவர் என்று பல சிறுபான்மை குழுக்கள், தாழ்த்தப் பட்டவர் கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதில் காந்தி குறியாய் இருந்தார். காந்தியின் இந்த குறிப்பிற்கு நேரு உள்ளிட்ட அனைத்து முற்போக்குத் தலைவர்களும் லாலி பாடினர். இந்த பாட்டிற்கு அன்றைய பத்திரிகை கள் நடனமாடின. மக்களின் பிரச்சினையை தங்களின் தனிப்பட்ட பிரச்சினையாக காந்தி பார்த்தார்.

தன்னை மகாத்மா என்று நம்பிய ஒரு மனிதரிடம் இருந்து இத்தகைய முடிவுதான் வரும் என அம்பேத்கர் தெளிந்தே இருந்தார்.

அம்பேத்கர் உறுதிபட கூறினார். நான் seperate electorate முறையில் உறுதியாய் உள்ளேன் என்றார். அதற்கு காந்தி இவ்வாறு பதில் கூறினார்:

கிருத்துவர்கள் seperate electorate மூலம் பலனடைந் தால் அவர்கள் என்றைக்கும் கிருத்துவர்களாகவே இருக்க வேண்டிவரும். இஸ்லாமியர்கள் என்றைக்கும் இஸ்லாமியர்களாகவே இருக்க வேண்டிவரும். சீக்கியர் கள் என்றைக்கும் சீக்கியர்களாகவே இருக்க வேண்டி வரும்.

கிருத்துவர்கள், இஸ்லாமியர்கள், சீக்கியர்கள் என்றும் கிருத்துவர்களாக, இஸ்லாமியர்களாக, சீக்கியர் களாக இருப்பதில் தவறேதும் இல்லை. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் seperate electorate மூலம் சிறப்பு சலுகை பெற்றால், அவர்கள் நிரந்தரமாக தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க வேண்டிய மோசமான சூழல் உருவாகும். ஒரு சமூகத்தை நாம் எப்படி தொடர்ந்து தாழ்த்தப்பட்ட சமூகமாக வைத் திருப்பது? அது நான் வணங்கும் ராமனுக்கும், ராமனின் பெயரால் நான் உருவாக்க நினைக்கும் ராம ராஜ்ஜியத் திற்கும் ஒவ்வாது என்றார்.

ஒருவேளை இஸ்லாமியர்கள் தங்களின் seperate electorate மூலம் முன்னிருத்தி தனி இஸ்லாமிய நாடு வேண்டும் என்று போராடி 'தனி நாட்டின் இஸ்லாமி யர்கள்'-ஆக்க் கூட நாளை உருவாகலாம். அது குறித்து நான் கவலைகொள்ளப் போவதில்லை. ஆனால் அது போல் தாழ்த்தப்பட்டவர்கள் தனியாக தொடர்ந்து தனித்திரட்டாக இருந்தால், தீண்டாமை எப்படி அகலும்? என்று மக்களிடையே பிரச்சாரம் செய்தார். காந்தியின் பிரச்சாரத்தில் எல்லோரும் மகிழ்ந்தனர். தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பெரும்பான்மைப் பிரதி நிதிகள்கூட காந்தியின் கருத்தால் ஈர்க்கப்பட்டு காந்தி கொட்டிலில் அடைக்கப்பட்டனர்.

அம்பேத்கர் "இந்த நாட்டில் சாதி இருக்கிறது. அதன் பன்முக வெளிப்பாட்டின் ஒரு கூறாக தீண்டாமை உள்ளது. சாதியின் கொடூரத்தை எதிர்த்து போராடும் போதும் அல்லது சாதியின் இருப்பிடமான இந்து மதத்தைவிட்டு விலகி அம்மதத்தை தனிமைப் படுத்துவ தன் மூலமாகத்தான் தீண்டாமையின் கொடுமையை தணிக்கவியலும். மாறாக, தீண்டாமையின் ஊற்றுக் கண்ணாக உள்ள இந்து மதத்தின் பிரதிநிதி காந்தி கண்ட ராம ராஜ்ஜியம் இன்றைய சாதி-தீண்டாமை ராஜ்ஜியத்தைவிட கொடூரமானதாக இருக்கும்" என்றார்.

காந்தி தான் பெரும்பான்மை மக்களின் பிரதிநிதி என்பதை தொடர்ந்து தக்கவைக்க பல யுக்திகளைக் கையாண்டார். அதில் முதன்மையானது 'சாகும் வரை உண்ணாவிரதம்.' காந்தி உணவு உண்ணாமல் இருப் பதை சாதி வெறியர்களால் காணச் சகிக்கவில்லை. நாட்டில் பாதிக்குமேல் உணவு கிடைக்காமல், உழைத்து, களைத்து, அந்த உழைப்பின்பால் ஏற்பட்ட அசதியில் தூங்கிய மக்கள் வாழும் நாட்டில், காந்தி என்ற தனிப் பட்ட ஒரு மனிதர் உணவு உண்ணாமல் இருப்பதை மாபெரும் நிகழ்வாக பத்திரிகைகளும், காந்தியச் சிந்தனையாளர்களும் காட்டினர்.

உணவு இருந்தும் பட்டினிப் போர் நடத்தும் காந்திக்காக, உணவு இல்லாமல் பசியேறிய வயிறுடன் களைத்திருந்த சேரிகளில் இந்த சாதியர்கள் வெறியாட் டம் நடத்தினர். தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை என்றால் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் என்ற பாரதியின் வார்த்தைப்படி, அந்த தனிமனிதனை காந்தி என பத்திரிகைகளும், இந்தியத் தலைவர்களும் கண்ட னர். பாவம் தீண்டத்தகாத மக்கள் தாங்கள் எதற்காக அடிவாங்குகிறோம் என்பதைக்கூட அறியாமல் தொடர்ந்து அடிவாங்கினர்; தாக்கப்பட்டனர்.

தாங்கள் தாக்கப்படுவதற்கு அம்பேத்கர்தான் காரணம் என்று தாழ்த்தப்பட்டவர்கள் நம்ப வைக்கப் பட்டனர். காந்தி சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருப் பதற்குக் காரணம் அம்பேத்கர் என்பதையும் இந்த மக்கள் நம்பினர். ஒரு மனிதன் உணவு சாப்பிடாமல் இருப்ப தற்கு காரணமாக, உணவு கிடைக்காதது மட்டும்தான் இருக்கும். அம்பேத்கர் எப்படி காரணமாக இருக்க முடி யும்? என்று மூக்நாயக் பத்திரிகை செய்தி வெளியிட் டிருந்தது. இந்த நையாண்டிச் செய்திக்காக, அந்த பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டது. காந்தியத்தின் கொடூரம் இவ்வாறாக அம்பலப்பட்டது.

ஹரிஜன சேவா சங்கம் காந்தியால் கட்டமைக்கப் பட்டது. இது பல நிகழ்ச்சிகளை நடத்தியது. அதில் மிகக் குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி தீண்டாமை ஒழிப்பு இயக்கம். இதற்கு அன்றைய டாடா குடும்பத்தினர் ஆதரவளித்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பணிக் காகவே படைக்கப்பட்டுள்ளனர். ஒருவன் தோட்டி வேலை செய்பவனானால் அவன் தன் பணி மூலம் சிறப்பாகச் செயல்பட்டு, மிகச் சிறந்த தோட்டியாக வரவேண்டும். இதுதான் பகவான் ராமன் விரும்புவது என்று காந்தி செய்தி தந்தார். ராமனின் விருப்பம் பூர்த்தி யானால் ராம ராஜ்ஜியம் உருவாகும் என்று காந்தி தொடர் பிரச்சாரம் செய்தார். காந்தியின் கனவுக்காக தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் நினைவுகளை இழந்தனர். ஹரிஜன சேவா சங்கத்தின் மூலம் தாழ்த்தப் பட்டவர் கள்கூட தீண்டாமைக்கு எதிராக தீண்டாமை பாவம் எனத் தெரிவித்தனர்.


படிப்பகம்

www.padippakam.com

1935-களில் தாழ்த்தப்பட்டவர்கள் தங்களை ஹரிஜன சேவா சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகோள் விடுத்தனர். காந்தி மிகவும் மனம் வருந்தினார். நான் நடத்துவது ஹரிஜன சங்கம் அல்ல. இது ஹரிஜன சேவா சங்கம். இதில் ஹரிஜனங்கள் உறுப்பினர்களாக முடியாது. ஹரிஜனங்கள் அல்லாதவர்கள் கூடி ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய முடிவு செய்துள்ளோம் என்ற விவரமான பதிலைத் தந்தார். இந்த ஹரிஜன சேவா சங்கத்தில் ரூ.50 கோடி அன்றைய காலத்தில் நிதி குவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தகுந்தது. அந்த பணத்தை பகிர்ந்து உண்டு வாழ - ஒருபொழுதுபோக்கு நிறுவனமாக, சாதி இந்துக்களின் அமைப்பாக இது விளங்கியது. ஹரிஜனங்கள் உறுப்பினர்களாக இல்லாத அமைப்பு எப்படி ஹரிஜனங்களுக்கு உதவ முடியும் என்ற கேள்வியை காந்தி புறந்தள்ளினார்.

இங்கு நாம் மூக் நாயக் பத்திரிகையின் செய்திக் குறிப்பை ஒப்பிடும்போது, 1927-இல் சைமன் குழு இந்தியா வந்தது. அது இந்திய மக்களுக்கு எந்தெந்த வகையில் நன்மை செய்யலாம் என்ற பரிந்துரைகளைத் தர வந்தது. ஆனால் அதில் இந்தியர் ஒருவர்கூட உறுப்பினர் இல்லை. இந்தியர்கள் ஒருவர்கூட உறுப்பினர் இல்லாத சைமன் குழு இந்தியர்களுக்கு எப்படி நன்மை செய்யவியலும் என காந்தி அக்குழு வினை புறக்கணித்தார். Simon Go Back என்ற முழக்கத்தை முன்வைத்தார்.

சைமன் குழுவிற்கு ஒரு நீதியையும், தான் நடத்தும் ஹரிஜன சேவா சங்கத்திற்கு வேறு வகை நீதியையும் பின்பற்றிய காந்தியை அன்றைய மூக்நாயக் பத்திரிகை அம்பலப்படுத்தியிருந்தது. ஹரிஜனங்கள் உறுப்பினர்கள் இல்லாத ஹரிஜன சேவா சங்கம் எப்படி ஹரிஜனங் களுக்கு நன்மை செய்ய முடியும்? ஹரிஜன சேவா சங்கமே Go back என்று செய்தி வெளியிட்டிருந்தது. இவ்வாறாக சேரிகளில் ஹரிஜன சேவா சங்கம் நுழைவதை மூக்நாயக் கண்டித்தது.

காந்தியின் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டில் 'சாதி ஒழிப்பு' போராட்டம்தான் முதன்மையானது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்றுகூடி தீண்டாமைக்கு எதிராக போராட முடிவு செய்தனர். காந்தி அந்த தன்னெழுச்சிப் போராட்டக் குழுவை வரவழைத்து பேசினார். தீண்டாமை என்பது சாதி இந்துக்கள் செய்த பாவம். பாவம் செய்தவன்தான் பரிகாரம் செய்ய வேண்டும். நீங்கள் ஏதுமறியா அப்பாவிகள். பாவம் செய்த சாதி இந்துக்கள் தீண்டாமையை எதிர்த்துப் போராடுவார்கள் என்றார். காந்தியின் குயுக்தியான பதிலால் மனம் நிறைந்து இந்த மக்கள் கலைந்தனர். காந்தி இதை தன்னுடைய ஹரிஜன் பத்திரிகையில் எழுதி மகிழ்ந்தார்.

மூக்நாயக் அதற்கு பதில் தந்தது. தீண்டாமை என்பது சாதி இந்துக்கள் செய்த பாவம். பாவம் செய்தவன்தான் பரிகாரம் செய்ய வேண்டும். எனவே தீண்டாமையை எதிர்த்து சாதி இந்துக்கள் போராடுவார்கள் என்று அரிஸ்டாட்டில் தத்துவம் கூறும் காந்தியே, ஆங்கிலேயர்கள் இந்திய நாட்டை கைப்பற்றியுள்ளனர். இந்திய நாடு அடிமைப்படுத்தப் பட்டது ஆங்கிலேயர்கள் செய்த பாவம். பாவம் செய்தவர்கள்தான் பரிகாரம் செய்ய வேண்டும் என்று நீங்கள் ஏன் கூறவில்லை. மாறாக, சுதந்திரம் வேண்டும் என்று ஏதுமறியா அப்பாவிகளான நீங்கள் ஏன் கூக்குரலிடுகிறீர்கள். அல்லது நீங்கள் என்ன பாவிகளா? என்று செய்தி வெளியிட்டிருந்தது.

கம்கர் மைதானத்தில் 2,500 சீருடை அணிந்த ICP (Independent Labour Party) உறுப்பினர்கள் இராணுவத்தைப்போல அணிவகுப்பு நடத்தினர். இதில் 20,000 தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். இளைஞர்களின் அணிவகுப்பைத் தொடர்ந்து அம்பேத்கர் பேசினார். நமது சமூகம் பல காலங்களாக போராடும் சமூகமாக இருந்து வருகிறது. நம் மீதும், நம் கலாச்சாரத்தின் மீதும் தொடர் வன்முறை நிகழ்த்தப்படுகிறது. நாம் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பாய் போராட வேண்டிய தேவையுள்ளது. எங்கெல்லாம் நமது மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனரோ, அங்கெல்லாம் நம்முடைய தலையீடு அவசியமாகிறது. நாம் வீரியமிகு நீதியின் அடிப்படையில் அமைந்த போராடும் முகாம்கள்.

நீங்கள் உறுதியாக கவனத்தில் கொள்ள வேண்டியது இதுதான். நாம் ஒரு கும்பலோ அல்லது வெறும் மக்கள் திரட்சியோ அல்ல. நாம் நன்கு அணி வகுக்கப்பட்ட போராடும் படை. நம்மால் எத்தகைய பலம் பொருந்திய கூட்டத்தையும் கட்டுப்பாட்டில் கொண்டு வர இயலும். நமக்கும் மற்றைய அமைப்பு களுக்காக திரளும் கூட்டங்களுக்கும் மாபெரும் வித்தியாசம் உள்ளது. நாம் நீதியின் அடிப்படையில் அணிவகுத்துள்ளோம். மனிதத்தின் அடிப்படையில் போராடுகிறோம்.

இந்த அணிவகுப்பின் உட்படைத் தலைவர்களாக முன்னாள் ராணுவத்தினர் நியமிக்கப்பட்டனர். திரு. D.V. பிரதான் உச்ச அதிகாரியாகவும், கட்டுப்பட்டாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தாழ்த்தப்பட்டவர். இராணுவத்தில் பல சிறப்பு போர்களில் பங்கெடுத்து வெற்றி கண்டவர். நாடு முழுவதும் இளைஞர்களை பெரும் அளவு இப்படையில் இணைத்திட வேண்டும் எனவும், அதற்கான பணியை தாமே தலைமையெடுத்து அம்பேத்கரின் வழியில் பாடுபடப் போவதாகவும் முழங்கினார்.

இதைத்தொடர்ந்து அவுரங்காபாத்தில், கிழக்கு கந்தேசில் தாழ்த்தப்பட்டவர்களின் மாநாடு ஒன்று நடைபெற இருந்தது. இந்த மாநாட்டிற்கு நிஜாம் அனுமதி அளிக்க மறுத்து விட்டார். மேலும் தன்னு டைய எல்லைக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது தீண்டத்தகாதவர்கள் என்ற அடையாளத்தோடு மாநாடு நடத்துவதற்கு நான் அனுமதி வழங்க மாட்டேன் என்று நிஜாம் அறிவித்தார். நிஜாமின் இந்த அறிவிப்பால் மாநாடு நடத்த தாழ்த்தப்பட்ட மக்கள் இடம் கிடைக்காமல் அவதிப்பட்டனர். பின்னர் இம்மாநாடு அதே பகுதியில் மகரன்பூர் என்ற இடதநில் நடைபெற்றது. மாநாடு மூன்று நாட்கள் நடந்தது. முதல் நாள் மாநாட்டை அம்பேத்கர் துவக்கிவைத்து பேசினார். பின்னர் இரண்டு நாட்களும் மாநாட்டில் பலர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர். அம்பேத்கர் Gokhale School of Economics கல்லூரியில் 'கூட்டாட்சி தத்துவத்தில் பொருளாதாரம்' என்ற தலைப்பில் பேச வேண்டியிருந்ததால் மாநாட்டின் மீதமிருந்த இரண்டு நாட்கள் பங்கெடுக்க இயலவில்லை. ஆனால் மாநாடு மிகச் சிறப்பாக நடந்தேறியது. மாநாட்டின் இறுதியில் நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


படிப்பகம்

www.padippakam.com

1. தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாட்டன் நலங்களை அரசு வழங்க வேண்டும்.

2. தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைகளை அங்கிகரிக்கும் வகையில் இட ஒதுக்கீட்டை உருவாக்க வேண்டும்.

3. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14-ஆம் நாளை அம்பேத்கர் நாளாக கடைப்பிடிக்க வேண்டும்.

4. தாழ்த்தப்பட்ட மக்கள் 'ஹிந்து மகா சபை, ஆரிய சமாஜம், இந்து மதம் மற்றும் காங்கிரசு' அமைப்புகளில் இருந்து முழுமையாக விலகி அம்பேத்கரின் வழியில் நடக்க வேண்டும்.

இந்தத் தீர்மானங்களை பம்பாய் உளவுத்துறை ரகசியக் குறிப்பெடுத்து தன்னுடைய கண்கானிக்க வேண்டிய நிகழ்வுகளோடு இணைத்துக்கொண்டது. ஜூலை 1939 - பம்பாய், பரேல்-இல் R.M. பட் உயர் நிலைப் பள்ளியில் ரோகிதாஸ் சிக்ஷான் சமாஜ் அமைப்பு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சிக்கு திரு. தோந்தே தலைமை தாங்கினார். இதில் அம்பேத்கர் சிறப்புரை நிகழ்த்தினார். தீண்டத்தகாத சமூகத்தில் உள்ள உட்சாதிப் பிரிவுகள் குறித்த கருத்தரங்கு இது. இதில் பேசிய அம்பேத்கர், நம்மை மகர் என்றும் சமார் என்றும் பிரித்துப் பேதப்படுத்துவது இந்து மதம்தான். உட்சாதியின் அடிப்படையில் பிளவு பட்டு செயல்படுவது அல்லது உட்சாதி பிரிவுகளின் அடிப்படையில் சண்டையிட்டுக் கொள்வது இந்துமத உளவியல்தான். நாம் இந்துக்கள் அல்ல என்னும்போது நாம் இந்த மண்ணின் ஆதிக்குடிகள் என்ற உணர்வை மட்டுமே முழுமையாகப் பெற வேண்டும்.

நான் வெளிநாடுகளில் என்னை இந்த மண்ணின் பூர்வகுடி என்றுதான் அடையாளப்படுத்திக் கொண்டேன். என்னை மகர் என்று அவர்கள் கணக்கிடவில்லை. மாறாக இந்த நாட்டின் தீண்டத்தகாத மக்களின் பிரதிநிதி என்றுதான் அனுகினர். நாம் இந்த மண்ணின் பூர்வகுடிகள் என்பது எவ்வளவு உண்மையானதோ, பெருமையானதோ அதைப்போல நம் உட்சாதிப் பிரிவுகளால் கூறுபடுத்தப்பட்டுள்ளோம் என்பது இழிவானது. நாம் உட்சாதி பிரிவுகளின் அடிப்படையிலான தீண்டாமையை ஊக்குவிப்பது (சமார்கள், மகர்களை தங்களினும் கீழானவர்கள் என்று ஒடுக்குவது) நம்மிரு சமூகத்தின் மீதும் திணிக்கப்பட்டுள்ள தீண்டாமையை பாதுகாக்கவும், நியாயப்படுத்தவும் வழி கோலும். கடவுள், மதம், சாதி ஆகிய பிரிவுகளின் அடிப்படையிலான கற்பனைக் கோட்பாடுகளை நாம் காலங்காலமாய் எதிர்த்ததால் மட்டுமே நாம் இன்று தீண்டத்தகாத - தாழ்த்தப்பட்ட சமூகமாக அடையாளப் படுத்தப்படுகிறோம் என்பதை உணர வேண்டும். நாம் மனிதத்திற்கு எதிரான கருத்தியலை புறக்கணித்து அதை எதிர்த்து தொடர்ந்து போராடி வருவதால் மட்டுமே நாம் தீண்டத்தகாதவர்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளோம். மனித குலத்தை - உண்மையை நேசிக்கும் நாம் பொய்யான கற்பனை கருத்துக்களால் பிளவுபட்டு, நம் சொந்தங்களோடு பேதப்படுவது, நம் விடுதலையை, மக்கள் விடுதலையை கைக்கொள்வதில் கால தாமதமேற்படுத்தும் என்று அம்பேத்கர் முழங்கினார். இதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட சமூகத்தின் பல்வேறு உட்பிரிவுகளைச் சேர்ந்த திரு. K.R. பவேகர் தலைவராகவும், B.J. தேவ்ருக்கர், B.G. வாக்மார் செயலாளர்களாகவும், மேலும் 40 கமிட்டி உறுப்பினர்களும் உட்சாதிகளின் பிரிவுகளைக் கடந்து நியமிக்கப்பட்டனர். இதன் காரணமாக Independent Labour Party-இல் செயல் நோக்கம் மிகுந்த வீரியமடைந்தது.

இன்றைய தலித் தலைவர்கள், சிந்தனையாளர்கள், போராளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அம்பேத்கர் அன்றும் எதிர்கொண்டார். அதற்கான தீர்வாக அவர் செய்ததென்ன என்பதை வரும் கட்டுரையில் காண்போம்.


# சிறந்த நாவலுக்கான தஞ்சை ப்ரகாஷ் இலக்கிய விருது

எழுத்தாளர் தஞ்சை ப்ரகாஷ் மறைவு நாளையொட்டி இலக்கிய விருதுக்கான நாவல் போட்டி இரண்டாவது ஆண்டாக நடைபெறவுள்ளது. தேர்ந்தெடுக்கப்படும் நாவலுக்கு ரூ.3,000 பரிசும், விருதும் வழங்கப்படும்.

## விதிமுறைகள்

அ. நாவல் 2000-2004 ஆண்டுகளுக்கிடையே முதல் பதிப்பாக வெளிவந்ததாக இருக்க வேண்டும்.

ஆ. போட்டிக்கான நாவலின் நான்கு படிகள் அனுப்பப்பட வேண்டும்.

இ. போட்டி தொடர்பாக எவ்வித தகவல் தொடர் பும் மேற்கொள்ளப்படலாகாது. தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.

ஈ. நாவல்களை அனுப்ப வேண்டிய முகவரி: தஞ்சை ப்ரகாஷ் இலக்கிய விருதுக் குழு, மிஷன் ஆலமரத்துத் தெரு, மகர்நோன்புச் சாவடி, தஞ்சாவூர் 613001.




படிப்பகம்

www.padippakam.com

# கணிதம் நம் உடைமை

## 11

■ சோபகன்
nalanda1956@yahoo.co.in

அசோகரைப் பற்றி பல்வேறு புகழ்ந்துரைகள் நமக்கு கிடைக்கின்றன. இவர் சாலை ஓரங்களில் மரம் நட்டார். குளம் வெட்டினார். Sea to sea அதாவது இயற்கை எல்லைகளான இந்தியப் பெருங்கடல், வங்காள விரிகுடா, அரபிக்கடல் மற்றும் பிரம்மபுத்திரா (ஆறு) ஆகியவற்றை வரையறையாகக் கொண்டு நாட்டை ஆட்சி செய்தார். இவர் தன்னுடைய மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும் கடல் கடந்து சென்று பவுத்தம் பரவ வழி வகுத்தார். இவரது மகளான சங்கமித்திரை இலங்கை சென்று அங்கு பவுத்தம் பரப்பினார் என்று வரலாறு நமக்குச் சொல்லுகிறது.

அசோகர் கலிங்கப் போர் புரிந்ததாகவும், அந்தப் போரில் மடிந்த எண்ணற்ற உயிரினங்களைக் கண்டு மனம் வெறுத்து புத்த மதம் ஏற்றதாகவும் இந்திய வரலாறு நமக்குத் தெரிவிக்கிறது.

போர் மற்றும் அதன் பாதிப்பு ஒரு மன்னனை பவுத் தம் ஏற்க வைத்துள்ளதாக இந்திய வரலாறு இதுவரை பதிவு செய்துள்ளது. இதையொட்டி நமக்கு சில கேள்வி கள் இந்திய வரலாற்றின் மீது எழுகின்றன.

1. அசோகரால் போரில் வெற்றிகொள்ளப்பட்ட கலிங்க மன்னன் யார்? அவரின் பெயர் என்ன?

2. இது குறித்து அசோகரின் கல்வெட்டுகள் ஏதும் சான்றுகள் தருகின்றனவா?

3. எந்த ஆண்டு இந்த போர் நடைபெற்றது? இப்பொழுது அந்த கலிங்கப் பகுதி என்னவாக உள்ளது? சிலர் தற்போதைய ஒரிசா என்று குறிப்பிடுகின்றனர். ஆனால் இந்தப் பகுதியில் போர் நடந்ததாக இதுவரை எவ்வித சான்றும் கிடைக்கவில்லை. மாறாக பண்டைய கலிங்கம் இன்றைய ஒரிசா பகுதியுடன் வரையறை அளவில் ஒத்துப் போவதாக மட்டுமே புவியியல் நில அமைப்பு தெரிவிக்கிறது.

இந்த வினாக்கள் மட்டுமன்றி வேறு அடிப்படை வினாக்களும் நமக்குள் எழுகின்றன.

கன்ஃபியூசியஸ் சீன நாட்டின் சிந்தனையாளர். ஆனால் செளவ் வம்சத்தின் ஆழ்ந்த பற்றாளர். இதனால் தன்னுடைய பெரும் பகுதி நாட்களை அரசர் லு-வுக்கு ஆலோசனை வழங்கியதிலேயே கழித்துவிட்டார். அரசனுக்கு நாட்டில் எழுந்த சிக்கலின் தீர்வுகளுக்கு உதவுவதையே முழுமையாக இவர் மேற்கொண்டதால் இவரால் நாடு கடந்த அளவில் ஒரு தத்துவ படைப்பாளி யாக உருவாக இயலாமல் போய்விட்டது. கி.மு. 650 முதல் கி.மு. 450 வரை, அதாவது 200 ஆண்டுகளில் உலகம் தத்துவ விளைச்சலால் குளிர்ச்சியடைந்தது. முதலாளித்துவம், தனி நபர் சர்வாதிகாரம், சிந்தனைக்கு எட்டாத இறை கோட்பாட்டின் மூலம் நடைபெற்ற சுரண்டல் கேள்விக்குட்படுத்தப்பட்டன.

- கன்ஃபியூசியஸ், புத்தர், மகாவீரர், ஜொராஸ்டர் ஆகிய தத்துவ அறிஞர்கள் தோன்றியது இந்த 200 ஆண்டு கால இடைவெளியில் மட்டுமே.

- இந்த இடைவெளியில்தான் கி.மு. 538 பாபிலோனியா பர்சியர்களினால் எட்டப்பட்டது. பர்சிய மன்னர் தாரியஸ் கி.மு. 512-இல் இந்தியாவில் ஊடுருவினார். கி.மு. 480-இல் கிரேக்கர்கள் மற்றும் அலெக்சாண்டரின் கி.மு. 330 மாபெரும் வெற்றி.

கி.மு. 273 முதல் 232 வரை இந்தியாவை அசோகர் ஆண்டதாக உலக வரலாறு பதிவு செய்கிறது. மாறாக கி.மு. 500 முதல் கி.மு. 200 வரை இந்திய நாடு வடிவமைக்கப்பட்ட ஆண்டுகளாக உலகம் நம்புகிறது. பவுத்தம் மற்றும் சமணம் ஓங்கிய காலமாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பெர்சியா நாட்டோடு தொடர்பு ஏற்பட்டது. மௌரியர் பேரரசு குறிப்பாக அசோகர் பவுத்தத்தை பரவலாக விரிவாக்கம் செய்தார்.

முரணாக வேத கணிதம் இதற்கு முன்னர் இருந்ததாகவும் அத்தக் காலங்களில்தான்.

எடை, வடிவங்கள், வேதாந்தம், சமய சூத்திரங்கள், வான சாத்திரங்கள், கூட்டல், கழித்தல் மற்றும் அவைகளின் அடுத்த கட்ட வரைவு மிகவும் குறிப்பாக வேதவடிவ கணிதம் தோற்றுவிக்கப்பட்டதாக இந்திய வரலாறு பதிவு செய்கிறது.

பவுத்யாயனர், அப்ஸ்டம்பர் மற்றும் காத்யாயனர் தோன்றி சாதனை படைத்ததாக இந்திய வரலாறு பதிவு செய்துள்ளது.

ஆனால் கி.மு. 500 முதல் 200 வரையுள்ள ஆண்டுகளில்தான் யாகங்களில் பலியிடுதல் தடைசெய்யப்பட்டன. (இதைச் செய்தவர் அசோகர் என்றும் இந்திய வரலாறு பதிவு செய்கிறது.) சமணர்களின் உயர்வுகளான எண் கணிதம் மற்றும் வரையறை, வகைகளின் சேர்ப்பு, விரிவாக்கம், வான அறிவு மற்றும் ஆய்வு பற்றி மக்கள் பெருமளவு செயல்பாட்டில் கொண்டிருந்தனர்.

இந்தியாவில் வடக்கே குஷானர்களின் வம்சமும், தெற்கே தத்துவங்களும், பாக்டீரியன் (பர்சியர்களின்) வம்சம் பஞ்சாப்பிலும் விரிந்தது. பவுத்தம் சிற்பங்களையும், ஓவியங்களையும் மிகப்பெரிய அளவில் உருவாக்கின.

பக்ஷாலி வரி வடிவம், கணித செயல்களுக்கான விதி கள் (குறிப்பாக இரட்டை $+ \chi = \chi$ ), தசம எண்கள், முதன் முதலாக பூஜ்ஜியம் உருவாக்கப்பட்டது, இயற்கணிதத்தில் எளிய, இருபடிச் சமன்பாடுகள், வர்கமூலம் போன்றவை உருவம் பெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

χ என்ற தெரியாத தேவைகளுக்குப் பெயரிடுதல், பின்னர் அவற்றை செயலிகள் மூலம் அறிதல், எதிர்மறை குறியான (-) மைனஸ் என்ற குறியோடு எண்கள் இந்தக் காலத்தில்தான் பயன்படுத்தப்பட்டன.

நாம் கட்டுரையின் துவக்கத்திற்கு வருவோம். ஆதி மனிதன் காட்டை அழித்து நாட்டை ஆக்கினான். அடுத்த மனிதன் விண்வெளியில் விமானம் செலுத்தினான் என்று இந்து என்ற கூட்டு மதம் குறிப்பிடுகிறது.

ஆனால் 2075 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மன்னன் சாலையோரங்களில் மரம் நடுகிறான் என்றால் நமது அறிவியல் பார்வை அசோகரை மாறுபட்ட வகையிலே யோசிக்கத் தூண்டுகிறது. முதன் முதலாக நாட்டில் பொதுச் சாலைகள் அமைத்தவர் அசோகர். சாலையின் இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள் நட்டவர் அசோகர். நாட்டில் நீர்த்தேவைக்காக குளங்களை வெட்டியவர் அசோகர்.

சித்தார்த்தன் புத்தனானது இயற்கையையும், மக்களையும் மிகவும் நேசித்ததுதான். ரோகினி நதி நீர் சிக்கல் காரணமாக சித்தார்த்தன் துறவறம் கொண்டான். ஆனால் வரலாறு சித்தார்த்தன் ஒரு நோயாளியைக் கண்டான், ஒரு முதியவரைக் கண்டான், ஒரு பிணத்தைக் கண்டான், இதனால் சித்தார்த்தன் புத்தன் ஆனான் என்று பதிவு செய்துள்ளது.

இது எப்படி அறிவியல் முரணோ, அதைப் போலவே அசோகர் - கலிங்கப்போர் என்பதும் அறிவியல் முரணே. இந்த முரணுக்குக் காரணம் வரலாற்றை பதிவு செய்தவர்களின் சுயதேவை.

அசோகர் தன் மகள் சங்கமித்திரையை இலங்கைக்கு அனுப்பியபோது அவள் கையில் தந்தனுப்பியது ஓர் அரச மரக்கன்று. இன்றும் இந்த மரம் இலங்கையில் மிகப் பெரிய மரமாக வளர்ந்துள்ளது.

அசோகரின் கல்வெட்டில் என்னதான் குறிப்பிட்டுள்ளார். இதை நாம் ஆய்வு செய்தால் பல புதிர்களுக்கு விடை கிடைக்கும்.

| தற்போதைய வடிவம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கரோஸ்தி வடிவம் | I | II | III | X | IX | IIX | IIIX | XX | | ? |
| பிரம்மி வடிவம் | − | = | ≡ | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| குவாலியர் வடிவம் | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

கரோஸ்தியின் ஒன்பது என்ற எண்ணுக்கான வடிவம் இதுவரை யாது என்று கண்டுபிடிக்கப்படவில்லை.

பிரம்மி வடிவ எண்கள் அசோகரின் கல்வெட்டில் காணப்படுகின்றன. இந்தியாவின் பல பாகங்களில் இந்த எண்கள் காணப்படுகின்றன. அசோகரின் ஆட்சி விரிந்த பகுதிகளில் இந்த எண்கள் காணப்படுகின்றன.

புத்தர் தன்னுடைய கோட்பாட்டில் கடவுள் கோட்பாட்டை மறுதலிக்கிறார். ஆத்மா இல்லை என்கிறார். மனிதனை சொந்தமாக சிந்திக்கச் சொல்கிறார்.

இந்த தத்துவங்களை நடைமுறைப்படுத்தி ஒரு மன்னனால் sea to sea கடல் முதல் கடல் வரை ஆட்சி செய்ய இயன்றது.

இதில் பிழை என்னவென்றால் புத்தரையும், அசோகரையும் பதிவு செய்த வரலாற்று ஆசிரியர்களின் பிழை உலகம் முழுவதும் இவ்விரு மாமனிதர்களின் துவக்கத்தை தவறாகக் காட்டுகிறது.

இதன் உச்ச கட்டமாக, வரலாற்றின் மீது நிகழ்ந்துள்ள கொடூரம், இந்த நூற்றாண்டின் கொடூரம். அம்பேத்கர் என்பது பார்ப்பன பெயர் என்ற மோசடி குற்றச்சாட்டு.

அதை செய்துள்ளவர் தனஞ்செய் கீர் என்ற பார்ப்பனர். இவர்தான் வீரசாவர்கர் பற்றி முதலில் நூல் எழுதியவர். பின்னர் அகிம்சையின் தூதுவன் என்ற காந்தியைப் பற்றி நூல் எழுதியது.

இந்தப் பார்ப்பனரின் பொய்யை தமிழில் மொழி பெயர்க்க என்ன தேவை வந்ததோ, நமக்குத் தெரியவில்லை. வீரசாவர்கர் பற்றி நூல் எழுதிய பார்ப்பனர், காந்தியை அகிம்சையின் தூதுவராகக் கண்ட பார்ப் பனர், நமது அம்பேத்கரை பார்ப்பன ஆசிரியரின் மாணவர் என்று பொய் பரப்புவதை நம்மால் தெரிந்து கொள்ள இயலுகிறது.

புரட்சியாளர் அம்பேத்கரின் பல அரிய நூல்கள் இருக்க இந்தப் பொய்யை ஏன் மொழி பெயர்த்தனர்.

புத்தருக்கும், அசோகருக்கும் நிகழ்ந்ததை அம்பேத்கருக்கும் நிகழ நாம் அனுமதிக்கலாமா? வரலாற்றை திரிக்க அனுமதிக்காதீர்.

தனஞ்செய் கீர்-ன் புத்தகத்தில் பக்கத்திற்குப் பக்கம் அம்பேத்கரை வீரசாவர்கரோடு ஒப்பிடுதல் ஒரு சுரணையுள்ள மனிதரால், ஒரு சுய மரியாதை உள்ள மனிதரால் எப்படி சகித்துக்கொள்ள முடியும்!

அருண்சோரி பார்ப்பனன் நேரடியாகச் செய்ததை மறைமுகமாக செய்த தனஞ்செய்கீரின் நூலை அம்பேத்கரிஸ்டுகள் படித்தபின் ஒரு முடிவுக்கு வரட்டும். வரலாற்றை தெரிந்து கொள்ளட்டும்.

விளக்கில் சுடர்
அறை முழுதும் வெளிச்சம்
வெளிச்சமும் சுடரே
சுடரின் பொருட்டு வெளிச்சமெனில்
உயர்ந்த கட்டிடத்தின் மூலம்
மஞ்சள் விளக்க
என் வரை வரவில்லை
ஆனால் அங்கு வெளிச்சம்
எனக்குப் புரியும்
எரி பிழம்பின் ஒளி
அதன் தொடர்களே.
நான் நிலவு ஒளியில்
நட்சத்திரமோ கோடி நிலவுகள்
அதுவும் என்னை நனைக்கிறது.
விடியலில் மறையும் விண்மீன்கள்
விடியல் சூரியனினும்
மடங்கு ஒளியுடையதாம்.
கூடுதல் ஒளி குறைந்த ஒளியில்
மடிந்து விடுமா என்ன?
அருகாமை மடிதலையும்
உயிர்ப்பித்தலையும் இறுதி செய்கிறது.
என் பயணம்
நட்சத்திரத்தை நோக்கி. ◆


படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றை முன்மொழிதல்



■ ஸ்டாலின் ராஜாங்கம்

தலித்துகளுக்கு வரலாறு உண்டா?

கடந்த கால வரலாற்றை மீட்டெடுப்பது தலித்து களுக்கு தேவையா?

இந்த இரண்டு கேள்விகளும் தலித்துகள் மத்தி யிலேயும் எழ வாய்ப்புண்டு. இதனை தலித்துகளின் தவறு என்று சொல்லக்கூடாது. பொது சமூகம் அப்படித்தான் கற்றுத் தந்திருக்கிறது. தலித்துகளுக்கு வரலாறு இல்லை என்பதை உற்பத்தி செய்து வைத்திருக்கிறார்கள். அதற் கேற்பவே இன்றைய சரித்திர நூல்களில் தலித்துகளுக் கென எந்த பங்கும் இல்லாமல் செய்யப்பட்டு இருக் கிறது. பொதுவாக வரலாற்று தொடர்புடைய நூல் களைப் படிக்கிறபோது தலித்தின் மனநிலை என்னவாக இருக்க முடியும்? பாடநூல்களை படிக்கிறபோது தலித் தாகிய ஒருவர் தன்னை எப்படி உணர்ந்து கொள்வார்? இந்த இடத்தில் தலித்தாகிய ஒருவர் இரண்டு முடிவு களுக்கு வருவார். ஒன்று தனக்கென வரலாறு என்று எது வும் இல்லை. அப்படியேயிருந்தாலும் அத்துணை பெரு மிதமான வரலாறு இல்லை, மிகவும் இழிவானது தான் என்பது மற்றொன்று.

ஒரு சமூகத்தின் பூர்வக் குடிகள் நிலமற்ற, வாழ் வற்ற ஏதிலிகளாக காலங்காலமாக எப்படி இருந்திருக்க முடியும்? இந்த மண்ணிற்கு இடையிலே குடிப் பெயர்ந்த, படையெடுத்த சமூகப் பிரிவுகள் நிலத்தோடும், அதிகாரத் தோடும் வாழ்வதெங்ஙனம்? (அதுவும் பூர்வீக பெருமை யோடு) இது இயல்பானது தானா?

பூர்வக்குடிகள் வீழ்த்தப்பட்டமை, தலித்துகளை இன்றைய நிலைமைக்கு ஆளாக்கியமை இடையிலே நடந்த ஒன்றாகவே இருந்திருக்க முடியும். மறைக்கப் பட்ட வரலாற்றுப் பதிவுகளும் அதையே கூறுகிறது. இத்தகு மாபெரும் சமூக சிக்கலைப்பற்றி வரலாற்றில் ஒரு வரிகூட பார்க்க முடிவதில்லை. நேர்மறையாக வோ, எதிர்மறையாகவோகூட வரலாற்றில் இதனை பார்க்க முடிவதில்லை. என்றால் நிலவும் வரலாறுகளின் தந்திரங் களை புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தலித்துகள் இன்றைய நிலைமைகளுக்கு ஆளாக்கப் பட்ட விதத்தை கண்டடைய வேண்டியிருக்கிறது. இந்த இடத்தில் வர லாறு வெறுமனே கடந்த கால சம்பவங் களை பேசுவ தாக நின்று விடாமல் நிகழ்கால அரசியல் போராட்டங் களுக்கான நியாயங்களை பெற்றுத்தருவதாக மாறி விடு கிறது. அதோடு ஆதிக்க சமூகத்தினர் தங்கள் ஆதிக்கத்தை வரலாற்றை கையகப்படுத்துவதன் மூலம் காப்பாற்றிவிட முடியும் என்று தெரிந்து கொண்டமையால்தான் வர லாற்றில் தலித்துகளுக்கான இடத்தினை காலி செய் துள்ளனர். அதோடு வரலாற்றில் மறைக்கப் பட்ட பதிவு களை கண்டடையும் எந்த ஒரு சமூகக் குழுவும் உளவியல் ரீதியான பலத்தை போராட்ட ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் பெற முடிகிறது. வரலாறு அற்றவர்கள் என்னும் பதிவு உளவியல் ரீதியாக குறிப்பிட்ட சமூகக் குழுவின் போராட்ட உள்ளீட்டை பின் தங்க செய்து விடுகிறது. எனவே சாதியதிகாரத்திற்கு எதிரான போராட் டத் தினை முன்னெடுக்கும் தலித் சமூகம் வரலாறு பற்றி யும் அக்கறை கொள்கிறது; கொள்ள வேண்டும்.

இன்றைக்கு அரசியல் தளத்திலே தலித்துகளுக் கான தனித்துவமான இயக்கங்கள் உருவாகியிருக்கிறது. அதேபோல இலக்கியம், கலை, பிற துறைகளிலும் தனித்த அடையாளங்களை உருவாக்கி வருகிறார்கள். தனித்துவமான பண்பு எல்லா தளத்திலும் உருவாகி விட்ட பிறகு சிந்தனைத் தளத்திலும், வரலாற்றுத் தளத் திலும் மற்றவற்றை சார்ந்து அவைகள் இயங்க முடியாது அவைகளுக்கிணையான வரலாற்றையும், கருத்தியலை யும் தலித்துகள் முன் வைக்க வேண்டியவர்களாகிறார் கள். அப்போதுதான் தனித்துவம் உள்ளதாக மாறும்.

இங்கே ஒரு கேள்வி எழலாம். வரலாறு என்பது பழையதை சொல்வதுதானே, அதனால் பழமையை பேசுவது என்று கொள்ளலாமா? பிற வரலாற்றை அணு குவதைப்போல ஒடுக்கப்பட்டோர் வரலாற்றை அணுக முடியாது. தங்கள் போராட்டத்தின் ஒரு பகுதி யாக, அப்போராட்டத்திற்கான நியாயத்தினை நிறுவு வதாக, கடந்த காலத்திலிருந்து தொடர்ச்சியினை பேணுவதற் காக இந்த வரலாறு மீட்டெடுக்கப் படுகிறது. மீட் டெடுக்கப்படும் வரலாறு களிப்பைத் தருவதாக அமை வதில்லை. மாறாக அர்த்தமுள்ளதான கடந்தகால வாழ்வு பறிக்கப்பட்ட அவலத்தை, அதனை எதிர்த்து போராடிய முன்னோடிகளின் ஆற்றலை பேசுவதாகவே இருக்க முடியும். இதிலிருந்து நிகழ்கால மனிதன் போராட்ட பண்பை தொடர்ச்சி யாக பேணிக்கொள்ள முடிகிறது. தமிழக தலித் முன் னோடிகளின் வரலாறு களில் அவர்களின் வீரபிர தாபங்களை காணவே முடிகிறது. அவர்கள் ஏற்படுத்திய இயக்கங்கள், பேசிய சிந்தனைகள், போராட்டங்கள் இவைகளையே பார்க்கி றோம். இதிலிருந்து தலித்தாகிய ஒருவர் போராட்ட பண்பினை பெறுகிறார்.

தமிழகத்தில் அயோத்திதாச பண்டிதர், ரெட்டை மலை சீனிவாசன், எம்.சி ராஜா, என். சிவராஜ், மீனாம் பாள், இம்மானுவேல் சேகரன் போன்றோரின் வரலாறு களும், நடத்திய இயக்கங்களும் பழமை பண்பை உற் பத்தி செய்வதில்லை. சமத்துவத்திற்கான விழைவினை மறு உற்பத்தி செய்கிறது. நவீன சிந்தனையாளர்கள் வரலாறு என்பதே புனைவுதான், கட்டமைக்கப்பட் டதுதான், வரலாற்றை எழுதுபவர் கருத்தியல் சார்ந்து அது உருவாகிவிடுகிறது என்பர். இது உண்மைதான். அதனால்தான் தாழ்த்தப்பட்டோர் வரலாறு எழுதும் போது அதுவரை புறக்கணிக்கப்பட்ட தன் வரலாற்றை மீட்டெடுக்கிறார்கள். ஆனால் இந்த வாதத்தினை பயன் படுத்தி சிலர் தாழ்த்தப்பட்டோரால் உருவாக்கப்படும் வரலாற்றை ஏற்றுக்கொண்டாலும் புனைவு என்ற



படிப்பகம்

www.padippakam.com

முடிவுக்கு வருகின்றனர். இதனால் அவ்வரலாற்றிற்கு ஆதாரம் இல்லாததுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றனர். தங்களுக்கு நெருக்கடி ஏற்படும்போது சாதி உணர்வாளர்கள் அதனை பொய் என்றும் பேசத் தயங்குவதில்லை. சான்றாக அயோத்திதாச பண்டிதரின் பல்வேறு கருத்துகளை ஒடுக்கப்பட்ட ஒருவரின் புனைவு என்ற பெயரில் தமிழ் விமர்சகர்கள் 'சலுகை' யென் பதாகப் பேசி வந்தார்கள். இது அடிப்படையில் அவை வரலாற்று ஆதாரமானவையா? இல்லையா? என்பதை பேசுவதிலிருந்து தப்பவைத்து விடுகிறது. இப்போது தமிழக தலித் வரலாற்று மீட்சியினால் பின்னங்கால் பிடரியில்படும் விமர்சகர்கள் அயோத்திதாசரை மௌனமாக பேசாமல் விடுதல், அவரது பார்வையை நாசூக்காக மறுத்தல் என்பதான உத்திகளில் ஈடுபடு கின்றனர். ஆனால் அயோத்திதாச பண்டிதரின் பல்வேறு கருத்துகள் யூகமானவை அல்ல. வரலாற்றுக்கு நெருக்க மானதாக இருப்பதை அண்மைக்கால மறுவாசிப்புகள், கல்வெட்டியல் போன்ற தொல்லியல் சான்றுகள், ஆவணங்கள், மொழி சார்ந்த தரவுகள், ஆய்வுகள், இலக் கியப் பிரதிகள் காட்டுவதை அறியும்போது வியப்பு மேலெழுகிறது. எனவேதான் வரலாற்றை மீட்பதிலும், அதற்கான நிகழ்கால அர்த்தத்தை உருவாக்குவதிலும் சமரசமில்லாமலும், தன்னுணர் வோடும், விழிப்போடும் செயற்பட வேண்டியிருக்கிறது. புதிய வரலாற்றினை உருவாக்குவதிலும், எழுதப்பட்ட வரலாற்று நூல்களின் பதிவுகளை சரி பார்ப்பதிலும் ஈடுபட வேண்டியிருப் பதை உணருகிறோம். இந்த வகையில் வரலாற்றைப் பற்றிய சில தக வல்களை பகிர்ந்துகொள்ள முனைகிறது இக்கட்டுரை. இதுபற்றிய மாற்று உரையாடல்களுடன் முன்நகரலாம்.

அரசியல் வாசிப்புடையவர்கள் வரலாற்றைப் பற்றிப் பேசும்போது மைய நீரோட்ட வரலாறு (ஆளும் வர்க்க வரலாறு, ஒடுக்குவோர் வரலாறு), முற்போக்கான வரலாறு என்று பேசுவதை கேள்விப்பட்டிருக்க முடியும். தலித்துகளுக்கான வரலாற்றை உருவாக்கு வதில் ஆதிக்க வகுப்பாருக்கும், முற்போக்கு சக்திகளுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை என்று சொன்னால் யாரும் வியப் படையக்கூடும். ஆனால் அதுதான் உண்மை. மைய நீரோட்ட வரலாறுகள் தலித்துகள் பற்றிய எவ்வித குறிப் புகளும் இடம் பெற்றுவிடாதபடி உருவாக்கப்பட்டி ருக்கிறது என்றால், பல்வேறு வகைகளில் முற்போக் கானது என்று கருதப்படும் வரலாறுகள் (தேசிய/ திராவிட/இடதுசாரி) தலித்துகளை சுயசார்பற்றவர் களாக சித்தரிக்கிறது. தலித்துகள் வாழ்வு இழிநிலைமை யில் இருந்ததையும், அவர்களுக்காக பாடுபட்ட 'பிறரை'யும் அவைகள் காட்டுகிறது. இத்தகு 'இழி' மக்களை கை தூக்கிவிட்டவர்கள் என்று சில வரலாற்று பாத்திரங் களை கட்டமைப்பதின் மூலம் தலித்துகளின் சுய எழுச்சியின்போது பாதிக்கப்படும் தங்கள் தரப்பை காத்துக்கொள்வதோடு, தங்களுக்கு அவர்களை விசு வாசமானவர்களாக இருக்க வேண்டிய 'வரலாற்று விதி'யினை முன்வைப்பதும் யுத்தியாகிப்போகிறது. அடிப்படையில் இம்மனோபாவம் தங்கள் நலனை காத்துக் கொள்வதற்கான உத்தியாக அவர்களுக்கு பயன்படுகிறது. இது ஒரு கண்ணுக்கு புலனாகா அதி காரம். இதன் உச்சபட்ச வேலையாக தலித்து களையே தலித்துகளுக்கு எதிராக சித்தரிப்பதும் இவ் வரலாறு களில் காணக் கிடைக்கிறது. இவ்வாறு தலித்து களுக்கு வரலாறு இல்லை என்பது மத இந்துக்களின் உளறலாக இருக்க, இருக்கக்கூடாது என்ற கருத்து அரசியல் ஈடு பாடு கொண்ட சாதி இந்துக்களுக்கு மிகவும் பிடித் திருக்கிறது.

சாதி மறுப்பிற்காக அழைத்த தலித் அல்லாதோர் எல்லோரும் நிராகரிக்க வேண்டியவர்கள்தானா? என்கிற கேள்வி எழலாம். அப்படி நிராகரிப்பது சாதி ஒழிப்பின் நோக்கமாய் இருக்க முடியாது. அப்படியான பாத்திரங்களை தேடத்தான் வேண்டியிருக்கிறது.

ஆனால் சாதியத்தை ஒழிக்க புறப்பட்ட பலரும் தலித் மக்களிடம் பணியாற்றியிருப்பதையே பார்க்க முடிகிறது. சாதியத்தை வெளிப்படுத்தும் தலித்தல்லாத ஆதிக்க சாதியினரிடம் சாதி ஒழிப்புக்காக பாடுபட்ட தாக சொல்ல முடிவதில்லை. அம்பேத்கர் சொன்ன "தீண்டாமை ஏதோ தீண்டாதோரின் தவறினால், குறை பாட்டினால் ஏற்பட்டதைப் போலவும் தீண்டாதவர்தான் தன் நிலைமைக்குக் காரணம் என்பது போலவும் பேசுவது வழக்கம்" (நூல்தொகுதி:9, பக்.143) என்பதுதான் உண்மையாக இருக்கிறது."ஏதாவது இயக்கம், பணி தேவைப்படுகிறதென்றால் அது தீண்டாதோருக்குத் தான் தேவை. இந்துவைப் பொறுத்தவரை அவனுக்கு செய்ய வேண்டியது எதுவுமில்லை. அவன் மனம் பழக்க வழக்கம் மற்றும் ஒழுக்க ரீதியாக மிகவும் நன்றாக இருக்கிறான். அவன் முழுமை படைத்தவன். அவனிடம் எந்தக் குறையும் இல்லை. அவன் பாவி அல்ல" என்று மேலும் இம்மனோபாவத்தை அம்பேத்கர் விவரித்திருக் கிறார்.

தலித் அரசியல், இலக்கியம் சார்ந்து இக்காலம் திருப்பத்தை அடைந்துள்ள காலம் என்று சொல்லலாம். அதாவது சுயமரியாதையின் காலம் என்றும் துணிந்து கூறலாம். கடந்த காலத்தை நிகழ்கால அர்த் தத்திலிருந்து நோக்கும் இப்போக்கை தனக்கு முற்றிலும் எதிரான சக்திகளையும், தனக்கு ஆதரவானது என்று நம்பப்பட்ட பல்வேறு அடையாளங்களையும் பரிசிலனைக்கு உள்ளாக்கியிருக்கிறது. இதன் மறுபோக்காக கடும் விமர்சனங்களையும், தனிமைப்படுத்தல்களையும், அவதூறுகளையும் சந்திக்க துவங்கியுள்ளது. வரலாற் றின் இது போன்ற தருணங்களில் இப்போக்கு தவிர்க்க முடியாத ஒன்றுதான். தன் வரலாற்றை தானே எழுதும் போதும், தன்னைப் பற்றிய பிறரின் மதிப்பீடு களை பரிசிலனை செய்யும்போதும் உருவாகும் தலித் ஒருவரின் சுய அடையாளம் எது? எத்தன்மையது? என் பதையும் இந்த வரலாற்றுப்போக்கு உறுதிசெய்யும். உறுதி செய்ய வேண்டும். ஆதிக்கவாதிகளின் வரலாறு கடந்தகாலத் தேவையாக இருக்க, முற்போக்கு வரலாறு சமகாலத் தவையாக இருக்கிறது. வரலாற்றை நுட்பமாக அணு கும் பணி இங்கு கூடுதலாகிறது. தலித்தாக நின்று அவை களை மறுக்கத் தொடங்கும்போது சமகால எதிர் வினைகளையே அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக் கும். ஏனெனில் 'அதுவரை பல்வேறு பெயர்களில் மறைந்து கிடந்த நபர்களின் அடையாளங்களை கண்டு ணரும்போது தங்கள் மீதான முற்போக்கு அடையாளம் பரிசீலிக்கப்படுவதை தம் காலத்திலேயே காண நேரி டும்போது அவைகளிடமிருந்து கடும் எதிர்வுகள் தோன்றுவது இயல்புதான். அப்போது எடுத்ததற்


படிப்பகம்

www.padippakam.com

கெல்லாம் 'தலித்' பிரச்சினையைக் காட்டி பிற அம்சங்களை சாதித்துக்கொள்ள முடியாமல் தடுமாறிப் போவார்கள். எனவேதான் சாதியம் பொதுப்புத்தி சார்ந்தது என்பதோடு, அறிவு சார்ந்து வெளிப்படுவதையுமே புரிந்து கொள்கிறோம். அறிவு சார்ந்த சாதியத்தை வரலாற்றின் துணைகொண்டு எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படி தீண்டப்படாதவர் பற்றி ஏராளமான பதிவுகள் உண்டு. அத்தகு பதிவுகள் உண்மைகள்தானா? இன்றைய காலக்கட்டத்தில் சில குற்றச்சாட்டுகளும் உண்டு. அவைகளின் நோக்கம் என்ன?

தலித்துகளுக்கு தனியான வரலாறு கிடையாது, தத்துவம் இல்லை, பார்ப்பன எதிர்ப்பு இல்லை, தற்காப்புக்கானதே தவிர மாற்றத்திற்கானதில்லை, அயோத்திதாச பண்டிதர் இயக்கம் இல்லை, பூனா ஒப்பந்தத்தின்போது அம்பேத்கர் தடுமாறினார் - பெரியார் உறுதியாக நின்றார், இரட்டை வாக்குரிமை திராவிட இயக்கத்தினரால் தரப்பட்டதுதான் - இப்படியாக நம் சம காலத்திலேயே வசைகளும், முன்முடிவுகளுமாக ஏராளமான வினாக்கள்.

- தொடரும்.

# முகத்தில் முகம்

கோடாங்கி ஜூலை இதழ் பெற்றேன்; படித்தேன். நண்பர்களும் ஆவலுடன் இதழைப் படித்து வருகின்றனர். தலையங்கத்தில், ஒரு வரி மிகமிக முக்கியமானது "தேர்தல் கூட்டணிகளில் ஆர்வம் காட்டுவதைத் தவிர்த்து, அடிப்படைப் பிரச்சினைகளில் தலித் இயக்கங்கள் மய்யம்கொள்ள வேண்டும்." தலித்துகளுக்கு நிலம், கல்வி, வேலை வாய்ப்பு - இவையே இன்று முன்னணியில் நிற்கும் முக்கியப் பிரச்சினைகள்; இவற்றைப் பெறுவதற்குத் தலித் இயக்கங்கள் ஒன்றுபட்டு கடுமையாக உழைக்க வேண்டும். தலித் மக்களிடம் விழிப்புணர்வையும், கிளர்ச்சி நிலையையும் உருவாக்க வேண்டும்; ஒன்றுபட்ட போராட்டமே, உருப்படியான பலன் தரும்; தலித் மக்களின் உயர்வுக்கு வழிவகுக்கும்; ஒட்டு மொத்தச் சமுதாயம் முன்னேற வழி செய்யும்.

*- தி.க.சி., நெல்லை.*

புதிய கோடாங்கி ஜூலை 2005 இதழில் மா. வேலுச்சாமி 'பெரியார் மற்றும் திராவிட அரசியலார் தலித்துகளுக்குச் செய்ததென்ன?' என்று எழுதியுள்ள கட்டுரைக்கு ஆதாரபூர்வமாக பல செய்திகளைச் சுட்டிக்காட்டி ஏற்கனவே பதில் எழுதிவிட்ட நிலையில், மீண்டும் மீண்டும் பெரியார் மீது அதே குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருவது அசல் 'கோயாபல்ஸ்' தனம். பதில் அளிக்கத் தயாரான நிலையிலே உள்ளோம். ஏனெனில் வரலாற்றில் நேர்மையாக, உண்மையாக மக்கள் முன்னேற்றத்துக்கு உழைத்தவர் பெரியார். எப்போதும் திறந்த புத்தகமாக செயல்பட்டவர். யாரையும் தாழ்த்தியோ, யார் தோளிலும் சவாரி செய்தோ பழக்கப்பட்டவர் அல்ல பெரியார். அப்படிப்பட்ட பெரியாரை கோயாபல்ஸ் தனத்துடன் எழுதுவது சரியல்ல. மா. வேலுச்சாமி வைத்துள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் பொய் என்பதோடு, திட்டமிட்ட திரிபுவாதம் என்பதை கீழ்க்கண்ட நூல்கள் உணர்த்தும். படித்து விட்டு பதில் எழுதினால் நன்றாக இருக்கும். அதை விட்டுவிட்டு அரைத்த மாவையே அரைக்க வேண்டாம் என்பதே எங்களது பணிவான வேண்டுகோள்.

*1. திராவிட இயக்கம் தலித்துகளுக்கு எதிரானதா? (க. திருநாவுக்கரசு); 2. இந்துத்துவா வேரறுக்கும் உயிராயுதமும் முதற்குடிகளும் (ஏ.பி. வள்ளிநாயகம்); 3. பெரியாரைத் திரிக்கும் புரட்டுகளுக்கு மறுப்பு (வ.மா.ஓ. புனித பாண்டியன்); 4. சுயமரியாதை இயக்க செயல்பாடுகளும் சாதனைகளும் (வ. கீதா).*

*- த. தமிழரசி, பழனி.*

ஜூலை இதழ் ஒரு புதிய கோணத்தில் கட்டமைக்கப்பட்டு சிறப்புமிக்க இதழாக வந்திருக்கிறது. குறிப்பாக இதழ் நிறைந்த சிறுகதைகள், வீச்சுமிக்க கட்டுரைகள், கவிதைகள், திறந்த மடல் ஆகியன எளிய, வலிய வாசிப்பு தளத்திற்கு வாசகனை இட்டுச் செல்கின்றன. சிவகாமியின் 'அரிய மலர்' சிறுகதையை நுகர்ந்து வாசித்தேன். அரசுப் பணிகளின் உயர்மட்ட போக்குகளை, அதிகார துஷ்பிரயோகங்களை, சக பணியாளரை விகல்பங்களுடன் நடத்துவது போன்ற செய்திகளை சித்தரிக்கும் இந்த கதை வெகு அருமை.

*- மு. ஹரிகிருஷ்ணன், ஏர்வாடி.*

ரோஜாபூ மகளிர் சுய உதவிக்குழு பஞ்சமி நில மீட்பு பற்றிய கூட்டத்தினை 15-5-2005 அன்று தலைவர் வே. புஷ்பவள்ளி அவர்கள் தலைமையில் நடத்தியது. நமக்குச் சொந்தமான பஞ்சமி நிலங்களை மீட்டெடுப்பதே நமது பிரதான லட்சியம் என சூளுரைக்கப்பட்டு அதற்காக போராட அனைவரும் தயார் என்று உறுதி மொழி எடுத்துக்கொள்ளப்பட்டது.

*-ரோஜாபூ மகளிர் சுய உதவிக்குழு*
*கரியமாணிக்கம்.*


படிப்பகம்

www.padippakam.com

# ஆண்களே சிந்தியுங்கள்!
# பாவம் ஓரிடம், பழி ஓரிடம்.



என் போன்ற தவறேதும்
செய்யாத பெண்களுக்கு
எச்.ஐ.வி. வருவது மிகவும்
வருந்ததக்க ஒன்று.
இவ்வாறு எச்.ஐ.வி.
வருவதற்கு காரணம்,
சமுதாயத்தில்
விழிப்புணர்வு
இல்லாமையே!

பெரும்பாலும் **80%**
ஆண்கள் மூலமாகத்தான்
பெண்களுக்கு எச்.ஐ.வி.
பரவுகிறது.


**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**
**சென்னை 600 008.**

படிப்பகம்

www.padippakam.com

# TNPL COPIER
## FOR HASSLE-FREE COPYING

ISO 9001-2000 ISO 14001




**TNPL VALUEPACK - OFFERS TRUE VALUE FOR MONEY**

- High brightness and opacity
- Dimensional stability and stiffness
- Enhanced electrostatic properties
- Reel cut & packaged using world's best technology
- Indispensable for clear & fast copies
- Offers you absolute copying freedom

Now improved in a new pack




***India's largest paper mill providing the most viable solution for the future generation***

TNPL

**Tamil Nadu Newsprint and Papers Limited**
(A Govt. of Tamil Nadu Enterprise)
67, Mount Road, Guindy, Chennai- 600 032, India Off : 2230 1094 97, 2235 4415 16
Fax : 2235 4614, 2235 0834 Web: tnpl.co.in, E- mail : response@tnpl.co.in

Postal Regn No. TN/PMG/CCRV/842/03-05 Registrar of Newspapers for India Regn. No: TNTAM/2001/4026
படிப்பகம்